வெளியீடு 22-2-99 Issued 22-2-99

882/99

15 செப் 1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 6, 1998 – தொகுதி 51 – எண் 1

Wednesday the 6th May, 1998 – Volume 51 – No. 1

பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

V21,31'N98
N98-51.1
219095

[Price Rs. 3.00

6-5-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| 1. வினாக்கள்-விடைகள்-- | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-57 |
| 2. சிறப்புக் கவன ஈர்ப்பு-- | |
| (அ) தங்கவேல் பொறியியல் கல்லூரி மாணவர் ஸ்ரீகாந்தன் மர்மமான முறையில் விடுதியில் இறந்து கிடந்தது | 57-60 |
| (ஆ) மதுக்கடைகள் ஏலம் நடைபெறும் முன்பு பல்வேறு மாவட்டங்களில் உள் ஏலம் நடைபெற்று வருவது | 61-65 |
| (இ) விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரச் சலுகை இரத்து குறித்து மத்திய அரசின் அவசரச் சட்டம் | 65-87 |
| (ஈ) புதிய இரயில் திட்டங்கள் குறித்து மாநில அரசு கோரிக்கை அளிக்காததால் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு பாதிக்கும் என்ற பத்திரிகைச் செய்தி | 87-95 |

| | பக்கங்கள் |
|---|---|
| **3. அறிவிப்புகள்--** | |
| (அ) வீட்டு வசதித் துறை மானியக் கோரிக்கையை வேறு ஒரு நாள் எடுத்துக் கொள்ளுதல் | 95-97 |
| (ஆ) நிகழ்ச்சி நிரலில் உள்ள கவன ஈர்ப்பு ஒத்திவைத்தல் | 97 |
| (இ) மானியக் கோரிக்கை விவாதத்தின்போது உறுப்பினர்களுக்கு மதிய உணவு | 142 |
| **4. அறிக்கை அளித்தல்--** | |
| மதிப்பீட்டுக் குழு | 97-98 |
| **5. தகவல் கோரல்--** | |
| உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை | 98 |
| **6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி** | |
| கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 98-209 |
| *மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் | 99,103,194-207 |
| திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் | 104-111 |
| திரு. ம. முத்துராமலிங்கம் | 111-116 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 116-118 |
| திரு. ஜி.கே. மணி | 118-128 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 128-143 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 144-156 |
| *டாக்டர் வை. இராமசாமி | 156-160 |
| திரு. [illegible] வல்லரசு | 160-176 |

219095



| | பக்கங்கள் |
|---|---|
| **மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி** | |
| திரு. எஸ்.வி. கிருஷ்ணன் | 176-178 |
| திரு. மா. இராமச்சந்திரன் | 178-182 |
| திரு. அ. வெங்கடாசலம் | 182-188 |
| திரு. மு. அப்பாவு | 189-193 |
| **7. அரசினர் தீர்மானம்--** | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 210 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்--** | 211 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :
   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :
   தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:
   மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :
   வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கோ.சி. மணி :
   நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

**7. பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

**8. போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :** நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

**10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

**11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு :** உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

**12. பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இட்வசதிக் கட்டுப்பாடு.



**13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

**14. சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

**15. கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

**16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :** பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :** வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

**18. வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

| | | |
|---|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** *கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.* |
| 20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :** *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.* |
| 21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :** *கால்நடைப் பராமரிப்பு.* |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :** *மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம்.* |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :** *ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.* |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.* |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :** *கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.* |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :** *மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.* |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | : | **The Hon. Kalaignar M. Karunanidhi :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. **Minister for Education** | : | **The Hon. Prof. K. Anbazhagan :** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | : | **The Hon. Thiru Arcot N. Veerasamy :** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | : | **The Hon. Thiru Nanjil K. Manoharan :** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | : | **The Hon. Thiru Ko.Si. Mani :** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Agriculture** | : **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. | **Minister for Public Works** | : **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. | **Minister for Transport** | : **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. | **Minister for Highways** | : **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 10. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | : **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. | **Minister for Food, Public Distribution System and Co-operation** | : **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. | **Minister for Milk** | : **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Labour** | : **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. | **Minister for Law** | : **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. | **Minister for Handlooms** | : **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 16. | **Minister for Backward Classes** | : **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. | **Minister for Forest and Printing** | : **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press. |
| 18. | **Minister for Housing** | : **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. | **Minister for Rural Industries and Registration** | : **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. | **Minister for Information and Publicity** | : **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |

| | | |
|---|---|---|
| **21. Minister for Animal Husbandry** | : | **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | : | **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | : | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | : | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | : | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | : | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| 31. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | .. திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |
| 24. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 25. | ஆனந்தன், திரு. பால. | .. வந்தவாசி (செ.வ.) |
| 26. | இரகுமான்கான், திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 27. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. மேலூர் |
| 28. | இராசமாணிக்கம், திரு. பி. | .. ஒரத்தநாடு |
| 29. | இராசன், திரு. வி. பி. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 30. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. ஆண்டிமடம் |
| 31. | இராமசாமி, டாக்டர் வை. | .. பண்ருட்டி |
| 32. | இராமசாமி, திரு. கே. ஆர். | .. திருவாடனை |
| 33. | இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | .. கம்பம் |
| 34. | இராமச்சந்திரன், திரு. சி. இரா. | .. தொண்டாமுத்தூர் |
| 35. | இராமச்சந்திரன், திரு. மா. | .. திருவோணம் |
| 36. | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 38. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 39. | இராமஜெயம், திரு. ந. பூ. | .. மயிலாப்பூர் |
| 40. | இராஜரெட்டி, திரு. ச. | .. தளி |
| 41. | இராஜேந்தர், திரு. டி. | .. பூங்கா நகர் |
| 42. | இளங்கோ, திரு. கோ. | .. அவினாசி (செ.வ.) |
| 43. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 44. | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |
| 45. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 46. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 47. | கணேசன், திரு. கே. சி. | .. ஜெயங்கொண்டம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. பாபநாசம் |
| 51. | கருப்புசாமி, திரு. டி. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 52. | கன்னையன், திரு. க. | .. தொட்டியம் |
| 53. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. கிருஷ்ணகிரி |
| 54. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 55. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. நாங்குநேரி |
| 57. | கிருஷ்ணன், திரு. சி. வெ. | .. வேடசந்தூர் |
| 58. | குண்டன், திரு. டி. | .. உதகமண்டலம் |
| 59. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. குத்தாலம் |
| 60. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 61. | குழந்தை தமிழரசன், திரு. | .. விருத்தாசலம் |
| 62. | கோதண்டம், திரு. ஏ. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 63. | கோபால், திரு. பா. | .. மேட்டூர் |
| 64. | கோபு, திரு. சி. | .. அணைக்கட்டு |
| 65. | கோமதி சீனிவாசன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 66. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராயநகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 212. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 225. வேணு, திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 23, வெகுதான்ய—திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 மே 6, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு"

குற்றமற்றவனாகவும், பழிச்செயல் புரிந்திட அஞ்சி நாணுகின்றவனாகவும் இருப்பவனையே உயர்குடியில் பிறந்தவன் எனத் தெளிவு கொள்ள வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 441, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**441—**

**உதவித் தொகையை உயர்த்துதல்**

*5963—திரு. அ. சுடலைமுத்து:

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 6

ஒரு குடும்பத்திலுள்ள ஒரே ஒரு நபரும் இராணுவத்தில் பணிபுரிந்தால் அக்குடும்பத் தலைவன் அல்லது தலைவிக்கு உதவித் தொகையாக ரூ. 450 வழங்கப்படுவதை உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஒரு குடும்பத்திலுள்ள ஒரே ஒரு நபரும் இராணுவத்தில் பணிபுரிந்தால் அக்குடும்பத் தலைவர் அல்லது தலைவிக்கு உதவித் தொகையாக ரூ. 450 வழங்கப்படுவதை உயர்த்தித்தர அரசு பரிசீலனை செய்ததில் அரசின் நிதி ஆதாரங்களைக் கருத்தில் கொள்ளும்போது இதற்குமேல் ஊக்கத் தொகையோ அல்லது உதவித் தொகையோ வழங்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. சுடலைமுத்து, இருக்கையில் இல்லை. வினா எண் 442, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**442—**

**கனிம வளங்கள் குறித்து நில ஆய்வு**

***6591*—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கனிம வளங்கள் குறித்து நில ஆய்வு செய்ய அதிநவீன அறிவியல் முறைகளை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) புவியியல் மற்றும் சுரங்கத் துறை கனிம வளங்களைக் கண்டறிய அதிநவீன தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி கனிம ஆய்வுகளைச் செய்து வருகிறது.



1998 மே 6]

(ஆ) சமீப காலத்திய தொழில்நுட்பங்களின் அடிப்படையில் புவி பௌதீக மற்றும் புவி இரசாயன ஆய்வு முறைகளைக் கனிம ஆய்விற்கு புவியியல் மற்றும் சுரங்கத் துறை பயன்படுத்தி வருகிறது. அதிநவீன முறைகளைத் தொலையுணர்வு முறைப்படி செயற்கைக் கோளிலிருந்தும், வானூர்தி மூலம் கிடைக்கும் நிழற்படங்களைக் கொண்டும் கனிம வளங்களைக் கண்டறிய விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடைபெற்று வருகிற ஆய்வுகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் இத்தகைய நில ஆய்வு நடத்த வேண்டும் என்பதற்குரிய நம்பிக்கையூட்டுகிற ஆரம்ப அடையாளங்கள் ஏதாவது தென்பட்டு, இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா அல்லது இயல்பாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற முறையில் மேற்கொள்ளப்பட்டதா என்பதை அறிய விரும்புவதோடு இப்போது நடைபெற்ற இந்த ஆய்வின் மூலம் ஏதாவது நம்பிக்கையூட்டுகிற தகவல்கள் கிடைத்திருக்கின்றனவா என்பதையும் பேரவைக்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இத்தகைய ஆய்விற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிற தொழில்நுட்பம் என்பது இந்தியத் தொழில் நுட்பத்தைச் சார்ந்ததா அல்லது அன்னியத் தொழில்நுட்பத்தைச் சார்ந்ததா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில்நுட்பங்களில் இந்தியாவைச் சேர்ந்த தொழில்நுட்பங்களும் உண்டு, வெளிநாடுகளைச் சேர்ந்த தொழில்நுட்பங்களும் உண்டு. நுட்பங்கள் எங்கிருந்து வந்தாலும் அது வெளிநாடா, உள்நாடா என்று பார்க்காமல் அவைகளைப் பயன்படுத்திக்கொண்டு நாம் நலம் பெறுவதே உரியமுறை என்ற வகையிலே பெருந்தன்மையாக நாம் எடுத்துக்கொள்ளலாம் என்றே கருதுகின்றேன். இன்னொரு முக்கியமான கேள்வி கேட்டார்கள். இவைகள் எல்லாம் அதாவது இந்த ஆய்வு எந்தக் காரணம் கொண்டு நடத்தப்பட்டது என்ற ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆய்வுமூலம் தமிழ்நாட்டில் வெங்கக்கல் மற்றும் பில்லைக்கல், கிராஃபைட், களிமண், கனகனிம மணல்களாகிய

[1998 மே 6

**(Heavy Mineral Sands)** கார்னட், இல்மனைட், மானோசைட், சிர்கான், ரூட்டைல், சிலிக்காமணல், ஆபரணக் கற்கள், ரூபி, மூன்ஸ்டோன், கார்டியரைட், வெர்மிகுலைட், எண்ணெய் மற்றும் இயற்கை வாயு, சுண்ணாம்புக்கல், சுண்ணாம்புக் கிளிஞ்சல், ஜிப்சம், பாக்ஸைட், இரும்புத்தாது, பேரைட், மைக்கா, மேக்னசைட், லிக்னைட், கறுப்புக்கல் **(Black Granite)**, பலவண்ண கிரானைட் ஆகிய கனிமங்கள் கிடைக்கின்றன. இவை இந்த இந்த மாவட்டங்களில் இருக்கும் என்று எடுத்துச் சொன்னதன் காரணமாக இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. குறிப்பாக, திருச்சி, திண்டுக்கல், கரூர், ஈரோடு, கோவை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் வெங்கக்கல் மற்றும் பில்லைக்கல்லும், சிவகங்கை மற்றும் நெல்லை மாவட்டங்களில் கிராபைட்டும், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், திருச்சி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் களிமண்ணும், நாகப்பட்டினம், இராமநாதபுரம், நெல்லை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கனகனிம மணல்களாகிய கார்னட், இல்மனைட், மானோசைட், சிர்கான், ரூட்டைல் ஆகியனவும், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் சிலிக்கா மணல்களும், ஈரோடு, கரூர், சேலம், நாமக்கல், நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஆபரணக் கற்களும், வேலூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் வெர்மிகுலைட்டும், கடலூர், தஞ்சை, நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயுவும், கோயமபுத்துர், சேலம், நாமக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, நெல்லை, திண்டுக்கல், திருச்சி, பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் சுண்ணாம்புக்கல்லும், திருவள்ளூர், தஞ்சாவூர், நாகை, தூத்துக்குடி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் சுண்ணாம்புக் கிளிஞ்சல்களும், கோயம்புத்தூர், பெரம்பலூர் மற்றும் திருச்சி, மாவட்டங்களில் ஜிப்சமும், நீலகிரி, சேலம், திண்டுக்கல் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் பாக்ஸைட்டும், சேலம், திருவண்ணாமலை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் இரும்புத் தாதும், வேலூர் பெரம்பலூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் பேரைட்டும், நீலகிரி, சேலம் மற்றும் திருச்சி மாவட்டங்களில் மைக்காவும், சேலம், கோவை, தருமபுரி, வேலூர், திருச்சி, நெல்லை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மேக்னசைட்டும், கடலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் லிக்னைட்டும், காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, தருமபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் கறுப்புக்கல்லும், விழுப்புரம்,



1998 மே 6]

திருவண்ணாமலை, தருமபுரி, திருச்சி, புதுக்கோட்டை, கரூர், திண்டுக்கல், மதுரை, ஈரோடு, சேலம், நாமக்கல். பெரம்பலூர், விருதுநகர், கன்னியாகுமரி, நெல்லை, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் பல வண்ண கிராபைட் கற்களும் கிடைக்கின்றன. இவ்வளவு நீளமான பதிலை முதல் தடவையாக இன்றைக்குத்தான் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவகங்கையில் கிராபைட் தொழிற்சாலை வரும் என்று அங்கே இருக்கின்ற விவசாயிகள் ஏராளமான நிலங்களைக் கொடுத்தும், அந்தத் தொழில் இன்னும் சரியாக அங்கே வரவில்லை என்ற ஆதங்கத்தோடு இருக்கிறார்கள். அந்தத் தொழில் அங்கே எப்போது சிறப்பாக நடைபெறும் என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்களும், நானும் இதைப்பற்றி பல நேரங்களில் விவாதித்து, இன்றைய அந்தப் பகுதியினுடைய அமைச்சரும், அன்றைய சட்டமன்ற உறுப்பினருமான திரு. தா. கிருட்டிணன் அவர்களும் இதிலே ஈடுபாடு கொண்டு பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டதன் காரணமாக அங்கே ஒரு கம்பெனி உருவாக்கப்பட்டிருக்கிறது. அது அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது. ஆனால், அதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. அங்கே கிடைக்கின்ற அந்தக் கிராபைட் கற்கள் போதுமானதாக இல்லை என்ற ஒரு வாதமும், தரத்தைப்பற்றிய சில பிரச்சினைகளும் இருக்கின்றன. அவை குறித்து ஆய்வுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எப்படியும் கிராபைட் தொழிற்சாலை அங்கே நல்ல முறையிலே வரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலே எங்கெங்கே கனிமங்கள் கிடைக்கின்றன என்ற விவரங்களை மிக விரிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். கனிமங்களிலிருந்து

[1998 மே 6

அதிகமான வருவாயை ஈட்டும் வகையில் பிறரும் பயன்படுத்தும் பொருட்களாக அவற்றை மாற்றி அமைத்து ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா? அதற்கான உரிமையை அரசு நிறுவனமான டாமினுக்கு வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிடைக்கின்ற அளவைப் பொறுத்து ஏற்றுமதியைப்பற்றிச் சிந்திக்கலாம். அநேகமாக இவற்றில் பெரும்பகுதியை டாமின்-தான் நிர்வகிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கனிம வளங்கள் குறித்து அதிநவீன அறிவியல் முறைகளைக் கையாளுகின்றபோது, மணவாளக்குறிச்சியிலிருந்து மணல் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதேபோல கறுப்புக்கல் என்று சொல்லப்படுகின்ற ஒரு பகுதி கல் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து பெருவாரியாக ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன்மூலம் நம்முடைய மாநிலத்திலிருந்தும், கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்தும் அன்னியச் செலாவணியாக எவ்வளவு கிடைக்கிறது என்ற விவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கான விவரங்கள் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்களைச் சேகரித்து வழங்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில் நிலக்கரி அதிகமாகக் கிடைக்கின்ற காரணத்தாலே அங்கே ஜெயங்கொண்டம் நிலக்கரி சுரங்கத் திட்டம் வருவதாக இருந்தது. அந்தத் திட்டம் எந்த நிலையிலே உள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அநேகமாக நிறைவுறும் கட்டத்தில்



1998 மே 6]

இருக்கிறது; திட்டம் நிறைவுறும் கட்டத்தில் அல்ல; திட்டத்திற்கான தொடக்க வேலைகளை நாம் இப்போது ஆரம்பிக்க இருக்கிறோம். அது ஓரளவுக்கு இன்றைக்கு நிறைவாகிவிட்டது என்பதைத்தான் குறிப்பிடுகிறேன். மிக விரைவிலே அது ஆரம்பமாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 443, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**443—**

## பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைத்தல்

***10914—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதியில் பெண்களுக்கென தனியாக ஒரு பல்தொழில் நுட்பப் பயிலகம் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் மு. தேவராஜன், இருக்கையில் இல்லை. அடுத்து, வினா எண் 444, திரு கொ.வீ. நன்னன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**444—**

## பொறியியல் கல்லூரியில் தொழில் நுட்பப் பயிலகம்

***11340—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் பொறியியல் கல்லூரியில் தொழில் நுட்பப் பயிலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைய நிதி நிலையில் அரசு பொறியியல் கல்லூரி/ தொழில் நுட்பப் பயிலகம் திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் தொகுதியில் தொடங்குவதற்கான வாய்ப்பு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில் எந்தவிதமான தொழிற்சாலையோ, பொறியியல் கல்லூரியோ இல்லாத காரணத்தால், தொகுதி மக்கள் கல்வித் தரத்தில் உயரவும், தொழில் நுட்பப் பயிற்சிகளில் தேர்ச்சி பெறவும், செங்கம் தொகுதியில் ஒரு பொறியியற் கல்லூரி அல்லது தொழில் நுட்பப் பயிலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுதிவாரியாக பொறியியல் கல்லூரிகள் தொடங்குவது அல்லது தொழில் நுட்பப் பயிலகங்களைத் தொடங்குவது என்பது அரசினுடைய கொள்கை அல்ல. மாவட்ட அடிப்படையில் ஆங்காங்கே போதுமான அளவுக்கு இப்படிப்பட்ட கல்வி நிலையங்கள் அமைகிறதா என்றுதான் கருதிப் பார்க்க முடியும். அந்த வகையிலே திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது 2 சுயநிதிப் பொறியியற் கல்லூரிகளும், 5 சுயநிதித் தொழில் நுட்பப் பயிலகங்களும் நடைபெற்று வருகின்றன. எனவே, அப்படிப்பட்ட மாவட்டத்தில் இயல்பாகவே அரசு இப்படிப்பட்ட கல்வி நிலையங்களைத் தொடங்குவதிலே ஏற்படுகிற இடர்பாடுகள் காரணமாகத் தொடங்குவதில்லை என்ற நிலையில், அரசு அப்படி ஒரு பொறுப்பேற்றுத் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை. பக்கத்தில் இருக்கிற சுயநிதிக் கல்லூரி நடத்துகிற பெருமக்கள் விரும்பி அந்தத் தொகுதியில் கல்லூரி தொடங்க முன்வருவார்களானால் அரசு அதை அனுமதிக்க முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விஜி. தனபால்.





**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படித் தனியார் துறையினர் பொறியியல் கல்லூரி தொடங்க முன்வருவார்களேயானால், அதற்கு என்ன விதி முறைகள் அரசால் கடைபிடிக்கப்படுகின்றன என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அளவு நிலம் அதற்காகக் கிடைக்க வேண்டும்; அந்தக் கல்லூரி நடத்துவதற்கான கட்டட வசதி இருக்க வேண்டும் அல்லது தற்காலிகக் கட்டடம் ஏற்பாடு செய்ய வேண்டும்; அதற்காக ஒரு என்டோமென்ட் ஏறத்தாழ 20 இலட்சம் ரூபாய் அளவுக்கு பொறியல் கல்லூரிக்காக ஏற்படுத்த வேண்டும்; அதற்குமேல் அந்தச் சூழலில் இந்தக் கல்வி நிலையம் தகுந்த முறையிலே நடத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்று அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 445, திரு. அ. மாரிமுத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**445—**

### அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்துதல்

***6532—திரு. அ. மாரிமுத்து:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, வானூர் மற்றும் மரக்காணம் பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. மாரிமுத்து, இருக்கையில் இல்லை. வினா எண் 446, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**446—**

### துணை மின் நிலையம் தொடங்குதல்

***7927*—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதியில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் தாடிக்கொம்பு பேரூரில் துணை மின்நிலையம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(அ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தாடிக்கொம்பில் ஒரு துணை மின் நிலையம் நிறுவுவதற்குண்டான ஒரு வரைவுத் திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) ஆய்வின்படி இத்துணை மின் நிலையம் தேவைப்படின், 9-வது ஐந்தாண்டிற்கான பெருந்திட்டத்தில் 1997 முதல் 2002-க்குள் சேர்க்கப்பட்டு நிறுவப்படும்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்பு மின்வாரிய அதிகாரிகளை அணுகிக் கேட்டபோது, துணை மின் நிலையம் அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருவதாகவும், ஆனால் அதற்குத் தேவையான இடவசதி இல்லாத காரணத்தால் அது காலம் தாழ்ந்து சென்றுகொண்டிருப்பதாகவும் தகவல் கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல்லுக்கு வந்திருந்தபோது, ஒரு மின்வாரியக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். அந்த இடத்தை புகழ் பெற்ற அங்குவிலாஸ் சகோதரர்கள் இனாமாக அளித்தார்கள்.





அதுபோல, அந்த இடத்தை வாங்குவதற்கு—அந்தப் பகுதியிலே நூற்றுக்கணக்கான ஆலை முதலாளிகள் இருக்கிறார்கள். அவர்களிடம் அந்த இடத்தைப் பெற்றுத் தருவதாக, அப்படி ஒரு தகவல் இருப்பதாக —அதிகாரிகள் சொன்னார்கள். அந்த அடிப்படையில் நிலத்தை வாங்கி விரைவில் அந்த மின் நிலையம் அமைத்துத் தருவதன் மூலமாக மின்சாரத் தட்டுப்பாட்டைக் குறைக்க ஏதுவாக இருக்கும் என்ற அடிப்படையில் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திண்டுக்கல் தொகுதியிலுள்ள திண்டுக்கல் நகரிலும், அதுபோல அந்த நகரைச் சேர்ந்த 'அங்கு' நகரிலும் இரண்டு துணை மின் நிலையங்கள் இயக்கத்திலே உள்ளன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற தாடிக்கொம்பு என்கிற இடம் திண்டுக்கல்லிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலேதான் உள்ளது. அங்கே ஒரு துணை மின் நிலையம் தேவை என்பதை அரசும் உணருகின்றது. இருந்தாலும் நான் திண்டுக்கல் சென்றபோது, மாண்புமிகு உறுப்பினரும், அதுபோல மாண்புமிகு அமைச்சர் இ. பெரியசாமி போன்றவர்கள் எல்லோரும் அங்கே துணை மின் நிலையம் ஏன் தேவை என்பதற்கான விளக்கங்களை எல்லாம் தந்தார்கள். அந்த விளக்கங்களை ஏற்றுத்தான், மின்வாரியத்திலே சொல்லி இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே அதைச் சேர்க்கச் சொன்னேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கான இடத்தைத் தருவதாகச் சொல்கிறார்கள். அந்த இடத்தை ஏற்பாடு செய்து தருவார்களேயானால் இந்த ஆண்டே அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடிக்கடி மின் தடை ஏற்படுவது என்பது ஒவ்வொரு கிராமத்திலேயும் இருக்கின்ற டிரான்ஸ்பார்மர்களுடைய சக்தி போதாமை என்கின்ற காரணத்தினாலேதான் ஏற்படுகிறது. ஆகவே, இப்படிப் பழைய நிலையில் இருக்கும், கடந்த 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்பாக வைத்த அந்த டிரான்ஸ்பார்மர்கள் என்பது இப்போது வீடுகளுடைய எண்ணிக்கை வளர்ந்து வருகின்ற நிலையிலே மின் இணைப்புகளுடைய

[1998 மே 6

எண்ணிக்கை அதிகப்படுகின்றபோது, அந்த டிரான்ஸ்பார்மர்களுடைய திறனையும் அதிகப்படுத்தி வைக்காத காரணத்தினால்தான் இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, தமிழகம் முழுவதும் இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்காக டிரான்ஸ்பார்மர்களை கூடுதல் சக்தி உள்ளதாக ஒவ்வொரு இடத்திற்கும் தகுந்தாற்போல வைப்பதற்கான முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொள்ள இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் அழுத்தம் குறைவாக இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதிலே ஒரு காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல டிரான்ஸ்பார்மர்களை மாற்ற வேண்டும் என்பது. ஆனால், பொதுவாக சப்-ஸ்டேஷன்களுடைய எண்ணிக்கை அதிகமானால்தான் மின் அழுத்தத்தில் ஏற்படுகின்ற குறைவைப் போக்க முடியும். எனவேதான், இந்த அரசாங்கம் சப்-ஸ்டேஷன்களை, தமிழ்நாட்டிலே சுமார் 300 சப்-ஸ்டேஷன்களைப் புதிதாக அமைக்க வேண்டும். அந்த 300 சப்-ஸ்டேஷன்களை அமைப்பதற்கு ஒரே நேரத்தில் நிதிநிலைமை அனுமதிக்காத காரணத்தினால், கடந்த ஆண்டு 40 சப்-ஸ்டேஷன்களையும், இந்த ஆண்டு 60 சப்-ஸ்டேஷன்களையும் ஏற்கெனவே திட்டமிட்டு, அவற்றை தொடங்கியிருக்கின்றோம். மீதி இருக்கக்கூடிய 200 சப்-ஸ்டேஷன்களையும் இந்த மூன்று ஆண்டுகளிலே நாம் கட்டிவிடுவோமேயானால் இந்தப் பிரச்சினை தமிழகத்திலே இருக்காது. சப்-ஸ்டேஷன்களைப் புதிதாகக் கட்டினால், டிரான்ஸ்பார்மரில் கொஞ்சம் குறை இருந்தாலும் அது நிவர்த்தி செய்துகொள்ளும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, டிரான்ஸ்பார்மர்களில் எங்கேயாவது குறையிருக்குமானால் அதையும் நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரவு நேரத்திலே எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரு முனை மின் இணைப்பைத் துண்டிக்கக்கூடாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலமுறை இந்த மாமன்றத்திலே உறுதி அளித்தும்



1998 மே 6]

கூட என்னுடைய தொகுதியில் இரவு நேரத்தில் தினசரி ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் மின் தடை ஏற்படுகிறது. இந்த மாதிரியான கோடைக்கால வெப்பத்தில் இவ்வாறு மின் இணைப்பு துண்டிக்கப்படுவதால் கிராமப் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, இரவு நேரத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒருமுனை மின் இணைப்பைத் துண்டிக்கக்கூடாது என்ற உத்தரவை அமல்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக இரவு நேரத்திலே மின்சாரப் பற்றாக்குறை இருந்தது உண்மை. ஆனால் 20 ஆம் தேதிக்குப் பிறகு பெரிய தொழிற்சாலைகளுக்கும், பெரிய வியாபார நிறுவனங்களுக்கும் நாம் மின்வெட்டு அமல்படுத்தியபிறகு இந்தக் குறை நீக்கப்பட்டிருக்கின்றது. நான்கூட சில கிராமங்களுக்கு, சுமார் 20 கிராமங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை சென்று பார்த்தேன். அவர்கள் எல்லாம், முன்பு இருந்ததைவிட ஓரளவுக்கு நிலைமை முன்னேறி இருப்பதாகச் சொன்னார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல இரவு நேரங்களிலே எங்கேயாவது ஒரு மணி நேரம் மின்சாரம் தடைப்படுத்தப்படுமானால்—அப்படிப்பட்ட தடை ஏற்படக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நேற்றையதினம்கூட தமிழகத்திலே உள்ள எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கடிதம் எழுதி, அதன் மூலம் ஒவ்வொரு நாளும் விவசாயிகள் சொல்லுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, மின்சாரத் துறை அதிகாரிகளுடன் கலந்து பேசி இந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கின்றார்கள். அவர்கள் எடுத்த இந்த நடவடிக்கையின் மூலம் எதிர்காலத்திலே இப்படிப்பட்ட குறைகள் நிச்சயமாக நீங்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னதான் அரசு நீண்ட கால திட்டங்களைத் தீட்டினாலும்கூட மக்கள் மனதைத் தொடுகின்ற திட்டங்கள்தான்

மக்களைக் கவருகின்ற திட்டங்களாக அமையும். அந்தவகையிலே ஒரு குடிசைக்கு ஒரு மின் இணைப்பு என்பது இன்றைக்கு சொல்லப்படாத சீலிங்-உச்சவரம்பிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். அரசாங்கத் தரப்பிலே கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்குக்கூட அத்தகைய மின் இணைப்புத் தரப்படவில்லை. ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம் குறை கூறுகின்றார்கள். அந்தக் குறையினை அரசு போக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இதிலே அமைச்சர் அவர்கள் விரிவான பதிலைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசாங்கத்தால் கட்டப்படும் அப்படிப்பட்ட வீடுகளுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, கடந்த ஆண்டு 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற குறைபாடுகள் எங்கேயாவது இருக்குமேயானால், அதை அவர் எழுதிக்கொடுத்தால், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் தொகுதி, ஆழியூர் ஒன்றியத்தில், தென்திருப்பேரை, புரையூர், குரங்கேணி, குருங்காட்டூர், கல்லாம்பாறை, மணத்தி, ராஜபேரி ஆகிய இடங்களிலே மின் அழுத்தம் மிகவும் குறைவாக இருக்கிறது. தயவுகூர்ந்து, அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைத்துதர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். தமிழ்நாட்டிலே இப்படி 300 இடங்களிலே மின் அழுத்தக் குறைவு ஏற்படுவதற்குக் காரணம், போதுமான துணை மின் நிலையங்கள் இல்லாததுதான். அதைப் போக்குவதற்காக, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்





கொண்டவுடன், கடந்த ஆண்டு 40 இடங்களிலேயும், இந்த ஆண்டு 60 இடங்களிலேயும் புதிய துணை மின் நிலையங்களைக் கட்டி வருகிறோம். மேலும் 200 இடங்களில் துணை மின் நிலையங்களைக் கட்டினால்தான் இந்தப் பிரச்சினை தமிழகம் முழுவதிலிருந்தும் நீங்கும். அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 447, திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**447—**

## கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***1187*—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கொள்ளிடம் ஆற்றில் திருவைக்காவூர் அருகே நீர் சேமிப்புக் கிணறு (Collector Well) அமைத்து, வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 222 கிராமங்கள், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 57 கிராமங்கள், 203 வழியோரக் கிராமங்கள், திருத்துறைப்பூண்டி நகராட்சி, வேதாரண்யம் நகரப் பேரூராட்சி மற்றும் தலைஞாயிறு ஊரகப் பேரூராட்சிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொறுப்பை குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுள்ளது.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியினுடைய நீண்டநாளைய தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்க்கின்ற வகையிலே இந்தக் கூட்டுக் குடிநீர்த்

[1998 மே 6

திட்டத்திற்கு அனுமதி அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தினுடைய பணி எப்போது தொடங்கும்? எப்போது முடிவடையும் என்பதையும் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு அனுமதி கொடுத்து விட்டது. இப்போது சில பணிகளுக்கு டெண்டர் போட்டு முடிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் அதற்கான பணிகள் தொடங்கப்படும். ஆனால், கேணி அமைக்கும் பணி இன்னும் ஒரு வார காலத்தில் தொடங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஊரகக் குடிநீர்த் திட்டங்களும், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் ஏராளமாக நடைபெற்று வருகின்றன. ஆனால், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வருவதில்லை என்று அரசு அதிகாரிகள். பொறியாளர்கள் கூறுகிறார்கள். காரணம் என்னவென்று கேட்டால், அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ரேட் கட்டுப்படியாகவில்லை என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். எனவே, அதற்கு அரசு மாற்று ஏற்பாடு ஏதாவது செய்துள்ளதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலை அதிகமாக இருக்கிற நேரத்திலே வருவதற்குத் தயங்குகிறார்கள். வேலை கிடைக்காதபோது தானாகவே வந்து சேருகிறார்கள். எனவே, இப்போதிருக்கிற எஸ்டிமேட் காஸ்ட்டை உயர்த்திக் கொடுப்பதற்கான நிலை இல்லை. காரணம், போதுமான அளவுக்கு அவர்களுக்கெல்லாம் வாய்ப்பு அளித்துத்தான், இப்போது மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. இப்போது வேலைகளை எடுத்துக்கொள்வதற்கு முன்வந்திருக்கிறார்கள். இனி தொடர்ந்து வேலைகள் நடைபெறும்.



1998 மே 6]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரிப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன. அதற்கான காரணங்களை அதிகாரிகளிடத்தில் கேட்டால் மின் மோட்டார் பழுதடைந்து விட்டாலோ அல்லது பைப் உடைந்து விட்டாலோ, பழுதுபார்ப்பதற்கு 100 ரூபாய், 200 ரூபாய் வேண்டுமென்றால், அதற்கு அனுமதி வழங்குவதற்குக்கூட மாவட்டத் தலைநகரில் உள்ள மண்டல அலுவலகங்களிலே போய்க் கேட்க வேண்டியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எனவே, பணிகள் முறையாக நடைபெற, அதிகாரத்தைப் பரவலாக்குவதோடு, கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளில் பணியாற்றக்கூடிய ஆப்பரேட்டர்களுக்கு குறைவான சம்பளம் இருக்கிற காரணத்தினால், மிகுந்த ஆர்வத்தோடு பணிகளைச் செய்ய முன்வருவதில்லை. எனவே, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தி, அதிலே உள்ள நிர்வாகச் சீர்கேடுகளைக் களைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்தில், எந்த அதிகாரி, யாரிடத்திலே அப்படிச் சொன்னார் என்ற விவரத்தைத் தெரிவித்தால், தங்களையும், அவரையும் வைத்துக்கொண்டு விவாதித்து, ஒரு முடிவுக்கு வரலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

முற்பகல் 9-55

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பல இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து உள்ளோம். ஆனால், அதற்கு மின் மோட்டார் வாங்கிக் கொடுப்பதற்கு நாங்கள் நிதி ஒதுக்கவில்லை. அதற்குரிய நிதியும் சட்டமன்ற உறுப்பினர்களிடம் இல்லை. எனவே, நாங்கள் நீர் ஆதாரம் ட்வாட் போர்டு மூலமாகக் கண்டுபிடித்து வைத்து இருக்கின்ற இடங்களில் தற்போது மின் மோட்டார் வாங்கிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா? அங்கு இருக்கின்ற கிராம மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த இடம் என்று குறிப்பிட்டால் இன்றைக்கேகூட அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் செய்த உதவியை ஏற்றுக்கொண்டு இதரப் பணிகளைச் செய்யாமல் இருப்பது தவறுதான். எந்த ஊர், எங்கே கொடுத்தீர்கள், எது எடுக்கப்படவில்லை என்ற விவரத்தை இன்று மாலையில் எழுதிக் கொடுத்தால் நாளை காலையில் அதை எடுத்துக்கொள்வதற்கு உத்தரவு வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 448, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**448—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் சீர்செய்தல்

***2921*—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், அக்கரைகோட்டகம் ஊராட்சி, ராதாநரசிம்மபுரம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், அக்கரைகோட்டகம், ராதா நரசிம்மபுரத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டி சுமார் 3 ஆண்டுகளுக்கு





மேலாகிறது. அங்கெல்லாம் தண்ணீர், கீழ்ஊற்று இருக்கிறது என்றுதான் பரிசீலிக்கப்பட்டு அது கட்டப்பட்டது. ஆனால் தற்போது அந்த மேல்நிலைத் தொட்டி இயங்காமலும், மோட்டார் என்ஜின்கள் பொருத்தப்படாமலும், மின்சார இணைப்புக் கொடுக்கப்படாமலும் இருப்பதால் அந்தப் பகுதியில் இருக்கிற மக்களிடையே ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்வதைவிட, வேதாரண்யம் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் இது இடம்பெறவில்லை; எனவே, இதற்குத் தனிக் கவனம் செலுத்தி உடனடியாக திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் வழியோரக் கிராமங்கள் எவ்வளவு இணைக்கப்பட வேண்டுமோ அவ்வளவும் இணைக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்; ஒருநாள் காலை 9-00 மணிக்குத் தொடங்கி இரவு 10-00 மணி வரை எந்தெந்த ஊர்கள் விடுபட்டு இருக்கின்றதோ அந்த ஊர்களையும் இணைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லோரையும் வைத்துத்தான் இந்தப் பணியைத் தொடங்கி முடித்து இருக்கிறோம். ஆனால், மீண்டும் இப்படிப்பட்ட நிலை வருவதற்குக் காரணம், தண்ணீர் இல்லாத இடங்களில் அதிக தூரத்தில் இருப்பதைத் தவிர்த்து மிக அருகில் இருக்கிற இடங்களில் நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளித்து இருக்கிறோம். அப்படி இருந்தாலும் அதில் இதையும் சேர்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 449, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**449—**

### நீர்ப்பாசனத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்தல்

***7791*—திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 6

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தென்னை பயிரிடும் விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசனம் செய்வதற்கு ஏதுவாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தென்னைப் பயிரிடும் விவசாயிகளுக்குச் சொட்டு நீர்ப்பாசனம் செய்வதற்கு வெள்ள நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்க வழிவகை இல்லை. ஏனெனில் மேற்கூறிய நிதி, வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மட்டும்தான் பயன்படுத்தப்பட வேண்டும்; வேறு இனங்களுக்குப் பயன்படுத்த இயலாது.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சென்ற கூட்டத் தொடரிலேயே நான் போட்ட கேள்வி; இப்போது, சொட்டு நீர்ப்பாசனத்திற்காக விவசாயிகளுக்கு மானிய உதவி கிடைக்கிறது. ஆனால் தனியாக இரண்டு கூறுகளாகப் பிரித்து மானியத் தொகையோடு உள்ள அந்த இயந்திரங்கள் அதற்குரிய பைப் போன்றவைகளை வாங்கச் சென்றால் ஒரு விலையும், சாதாரணமாக நேரடியாகப் பணம் கொடுத்தால் ஒரு விலையும் என இரண்டு விலைகளாக விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். சென்ற ஆண்டு கேள்வி பதிலிலேயே அமைச்சர் அவர்கள் ஆணித்தரமாகச் சொல்லி இருக்கிறார்கள். இதுபோல் அல்லாமல், மானியத் தொகை உள்ள விவசாயிகளுக்கு ஒரு நியாயமான விலையில் ஐ.எஸ்.ஐ. முத்திரையிட்ட கருவிகள் கொடுப்பதற்கு அரசு கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறேன். சென்ற முறையும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். எனவே, அதேபோன்று ஆணையிட்டு எளிய விவசாயிகளுக்கு அந்தக் கருவிகள் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சொட்டு நீர்ப் பாசனத்திற்காக கருவிகள் வாங்குகிறபோது ஐ.எஸ்.ஐ. முத்திரையிட்ட பைப் போன்ற மற்ற கருவிகள் வாங்குவதற்கு நாம் ஒரு விலையை நிர்ணயம் செய்து இருக்கின்றோம். மானியத்துடன் அந்தப் பணியை நிறைவேற்றுகிற



1998 மே 6]

போது இந்த விலைக்குத்தான் தரப்பட வேண்டும் என்று நாம் உத்தரவிட்டுப் பெற முடிகிறது. ஆனால், தனியார் சொட்டு நீர்ப்பாசனம் போடுகிறபோது, பாசனம் செய்வதற்காக விவசாயிகள் இதுபோன்ற கடைகளுக்குச் சென்று அந்தக் கருவிகளைக் கேட்கிறபோது, அவர்கள் கூடுதலாக விலை சொல்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அது அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிலே வராது. இருந்தாலும், வேளாண்மைப் பொறியியல் துறை அதையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு பரிசீலிக்கும்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் அதிக அளவு தென்னை பயிரிடப்பட்டுள்ளது. போதுமான தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசன முறையைத் தேர்வு செய்கின்றனர். ஆனால் அதற்கு வங்கியில் நிதி உதவி கேட்கிறபோது, கிணற்றுக்குக் கிணறு போதுமான இடைவெளி இருக்க வேண்டுமென்று நிபந்தனை விதிக்கின்றனர். இதன் காரணமாகக் கடன் பெற இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. கூடுதலாகத் தண்ணீர் எடுக்கின்ற திட்டங்களுக்குத்தான் இந்த இடைவெளி கணக்கு எடுக்கப்படவேண்டும். ஆனால் சொட்டுநீர்ப் பாசன முறையில் தண்ணீர் மிச்சப்படுத்தப்படுகின்றது. எனவே, இதைக் கருத்தில் கொண்டு இந்த விதிமுறையை இரத்து செய்ய அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை இதுபோன்ற புகார் ஒன்றும் வரவில்லை. கோவை மாவட்டத்திலே தென்னை மரங்களை அதிகமாகப் பயிரிடுகின்றார்கள். அங்கே இருக்கின்ற நீர் ஆதாரங்களைக் கொண்டு அந்தத் தென்னை மரங்களை வளர்த்து நல்ல வருவாய் ஈட்டுவதற்கு சொட்டுநீர்ப் பாசன முறையை அமைப்பதற்கு எல்லா விவசாயிகளும் ஆர்வத்தோடு வருகிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டு காலத்தில் கோவை மாவட்டத்திலே பல கோடி ரூபாய்க்கு இதுபோன்ற சொட்டு நீர்ப்பாசன அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அதைக் கருத்தில் கொண்டுதான் இந்த

[1998 மே 6

1998-99ஆம் ஆண்டுக்கு கோவை மாவட்டத்திற்கு மட்டும் ரூ. 15.21 கோடி மானியமாக வழங்க நிதி ஒதுக்கீடு கேட்டு மத்திய அரசாங்கத்திற்கு நாம் கோரிக்கை வைத்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னை மரம் வைத்திருக்கக்கூடிய பகுதிகளிலே கடந்த ஆண்டு மழை இல்லாத காரணத்தால், 1,000 மரம் வைத்திருந்தால் அதில் பாதிக்குமேல், சொட்டு நீர்ப்பாசனம் போட்டும்கூட, பட்டுப்போய்விட்டன. அப்பேர்ப்பட்ட நிலையில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, சிறிய விவசாயிகள் பெரிய விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல், பட்டுப்போன கன்றுகளுக்குப் பதிலாக மீண்டும் மானியத்தோடு தென்னங்கன்றுகளை வழங்க வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்று தென்னை மரம் பட்டுப்போய்விட்டால், புதியதாகத் தென்னங்கன்றுகள் வைக்க விரும்பி, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டால் மானியத்தோடு கன்றுகள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 450, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**450—**

## சிறு அணைக்கட்டு கட்டும் திட்டம்

***5648—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அட்டவணைப்புதூரில் சிறு அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1998 மே 6]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1-9-1996 முதல் நீர் அளவுகள் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் அட்டவணைப்புதூர் அருகே சிற்றாற்றின் குறுக்கே சில அணைகள் கட்ட சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டினுடைய பாசனப் பகுதி எவ்வளவு? இந்த அணைக்கட்டினுடைய திட்டத்திற்குத் தேவையான நிதி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அட்டவணைப்புதூரில் ஒரு அணை கட்டவேண்டுமென்று முதலிலே தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அந்த அணை கட்டுவதன் மூலமாக அந்த இடத்திலே பயன்பாட்டு விகிதாச்சாரம் மிகக் குறைவாக இருப்பது மட்டுமல்லாமல், தோட்டங்கள் எல்லாம் நீரில் மூழ்கிப்போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவதாக அந்த இடத்தில் இரண்டு ஆதிதிராவிட காலனிகள் நீர்ப் பிடிப்புப் பகுதியில் மூழ்குகின்ற நிலை உருவானதால் அவற்றை விட்டுவிட்டு சிற்றாற்றின் குறுக்கே பூனாச்சாவில் ஒரு சிறு செக் டாம் மற்றும் மாணிக்கம் பாளையத்தில் ஒரு செக் டாம் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. மாணிக்கம்பாளையத்தில் 10 ஏக்கரும், பூனாச்சாவில் 43 ஏக்கரும் இதனால் பாசன வசதி பெறும். ஆனால் தற்போது மாணிக்கம் பாளையத்தில் செக் டாம் கட்டுவதற்கு வசதி இல்லை. அதற்குக் காரணம் காவிரி மேற்குக் கால்வாய்ப் பகுதியிலிருந்து அது தண்ணீர் பெறுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண். 451, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1998 மே 6

**451—**

## போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துதல்

***14067*—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி மற்றும் செங்கோட்டை நகராட்சி முக்கிய சாலையின் வழியாக லாரிகளில் வைக்கோலை கேரள மாநிலத்திற்குக் கொண்டு செல்வதால் போக்குவரத்து நெரிசல் அடிக்கடி ஏற்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) வைக்கோல் பாரம் ஏற்றிய லாரிகள், மதுரை, இராஜபாளையம், இராமநாதபுரம் ஆகிய இடங்களிலிருந்து வருகின்றன. இவ்வண்டிகள் அதிகப் பாரம் ஏற்றி வந்து போக்குவரத்துக்கு நெரிசல் ஏற்படுத்துவதால், தொடர்புடைய வாகன ஓட்டுநர்கள் மற்றும் வாகன உரிமையாளர்கள்மீது வழக்குத் தொடுக்கப்பட்டு நீதிமன்றத்தின் மூலம் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற இடையூறுகள் ஏற்படாதபடி கண்காணிக்க அதிகாரிகளுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

முற்பகல் 10-05

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதிகமான அளவிற்கு வைக்கோலை ஏற்றிக்கொண்டு தினசரி 50-க்கும் மேற்பட்ட வாகனங்கள் அங்கு செல்கின்றன. பெயரளவில் சில வாகனங்கள்மீது மட்டும் எப்போதாவது நடவடிக்கை எடுத்து, செக் போஸ்டிலே மாமூல் வாங்கிக்கொண்டு தினசரி இந்த



1998 மே 6]

வாகனங்களையெல்லாம் அனுமதித்து வருகிறார்கள். கேரளாவிற்குச் செல்லும் சாலை மிகக் குறுகிய சாலையாக இருப்பதாலும், மலைப் பாதையாக இருப்பதாலும் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. சில நேரங்களில் எதிரே வரும் வாகனங்கள் தெரியாததால் விபத்துகளும் நடப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே புளியரை செக் போஸ்டில் இதுபோன்று அதிகமான பாரங்களை ஏற்றிச் செல்லும் லாரிகள் செல்லாத வண்ணம் Iron girders அமைத்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுவரை 1997-98-இல் மட்டும் 95 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 95 வழக்குகளில் தண்டனைகூட அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான தண்டனையாக ரூ.50 தான் ஒவ்வொரு வழக்கிற்கும் நீதிமன்றத் தீர்ப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அபராதத் தொகையை இன்னும் அதிகப்படுத்தினால் இதுபோன்றவைகளைத் தடை செய்ய முடியும். அதற்கும் அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கேரள மாநிலத்திற்கு வைக்கோல் லாரிகள் தினசரி நூற்றுக்கணக்கிலே செல்கின்றன. அந்த வைக்கோல் ஏற்றிச் செல்கிற லாரிகளுக்கு, அரசு ஏதாவது விசேட கட்டணம் வசூலிக்கிறதா? அப்படி கட்டணம் வசூலிக்கப்பட்டால் தினசரி பல இலட்சம் ரூபாய் அரசுக்கு வருமானம் வரும். இதை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுபோன்று எதுவும் சிறப்பு வசூல் செய்வதில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவி அருணன் அவர்கள் சொன்னதுபோல, இதுபோன்று சாலைகளில் போக்குவரத்துக்குத் தடையாக இருக்கின்றது என்ற அடிப்படையிலேதான் அவர்கள்மீது வழக்குகள் தொடரப்பட்டு, அதற்கான தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

[1998 மே 6

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேயிருந்து, கிட்டத்தட்ட பல்வேறு இடங்களிலே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், தென்காசி, தேனி, கோயம்புத்தூர் ஆகிய பல்வேறு பகுதிகளிலிருந்து கேரளா மற்றும் வெளி மாநிலங்களுக்கு வைக்கோல் ஆயிரக்கணக்கான லாரிகளிலே சென்று வருகின்றன. சாதாரணமாக, கடந்த ஆண்டு நல்ல மழை பெய்ததன் காரணமாக, இதை அனுப்புவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் சாதாரண நேரங்களில், விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்ட நேரங்களில் இவை அனுப்பப்படும்போது, தமிழகத்திலே இருக்கின்ற பசுமாடுகளுக்குப் போதுமான அளவுக்கு தீவனம் இல்லாத ஒரு குறை ஏற்படுகிறது. ஆகவே, இதுபோன்ற நேரங்களில் தடை செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதைத் தடை செய்ய ஆரம்பித்தால் மாண்புமிகு உறுப்பினரே கேட்பார். 'விவசாயிகள் எல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். வைக்கோலை விற்றுக் கொண்டிருந்தார்கள், இப்போது அதற்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதே' என்று அவர் கேள்வி கேட்கக் கூடும். ஆகவே இவை போன்றவற்றை தடை செய்கின்ற நோக்கம் அரசிடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கேட்க விரும்பிய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறிவிட்டார்கள். குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து, கேரள மாநிலத்திற்கு அட்டை செய்வதற்காகவும், காகிதம் செய்வதற்காகவும் வைக்கோல் வழங்குகிற காரணத்தால்தான் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது என்கிற ஒரு கருத்து இருக்கிறது. அவர்களுடைய நிலை பாதிக்கப்படாமல் இதுவும் சேர்த்து பரிசீலிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஓர் உறுப்பினர் தடை செய்ய வேண்டுமென்று சொல்கிறார், ஓர் உறுப்பினர் அங்கே அனுப்புவதற்கு வாய்ப்பு கிடைக்குமா என்று கேட்கிறார். அதற்குத்தான் முதலிலே சொன்னேன்,



1998 மே 6]

இவை எல்லாம் வியாபாரிகளையும், விவசாயிகளையும் பொறுத்த சலுகைகள். இவற்றைத் தடை செய்கிற உத்தேசம் அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது நார்வே, ஸ்வீடன் போன்ற நாடுகளில் இந்த வைக்கோலை சிறிது சிறிதாக வெட்டி அதில் மொலாசஸ் போன்ற பொருட்களைக் கலந்து, அதை கம்ப்ரஸ் செய்து, கட்டிகளாக்கி மாட்டுத் தீவனமாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு புது டெக்னாலஜி வந்திருக்கிறது. ஆகவே சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும், பால் வளத் துறை அமைச்சர் அவர்களும் அந்த டெக்னாலஜியைப் பெற்று தமிழகத்திலே அதைத் தெரிவிப்பார்களானால், அந்த வைக்கோலை தமிழகத்திலே நம்முடைய கால்நடைகளுக்கும் பயன்படுத்துகின்ற வாய்ப்பை உருவாக்க முடியும். இந்தக் கருத்தை அரசு பரிசீலிக்குமா என அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வைக்கோல் கிடைக்காத இடங்களில் இதுபோன்று செய்வது சாத்தியக்கூறாக இருக்கும். நம்மிடம் நிறைய வைக்கோல் இருக்கிறது. அதை வாங்குவதற்கும் ஆட்கள் இருக்கிறார்கள். எனவே, தனியார்கள் இவற்றை சேமித்து வைத்து, இவற்றைக் கொண்டு தொழிற்சாலையாக அமைத்துச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள் முன்வந்தால், அதற்கு அனுமதி கொடுப்பதைப் பற்றிப் பரிசீலிக்கலாம். அரசே அதை நடத்துகிற உத்தேசம் எல்லாம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மூலமாக விசேஷ படை அமைத்து, லாரிகளில் வைக்கோல் ஏற்றிச் செல்வதைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அதுமட்டுமல்லாமல், வைக்கோல் லாரிகள் போய்க்கொண்டே இருக்கின்றன. சில விளையாட்டுக்காரர்கள், சினிமாவிலே, மகாதேவி படத்தில் தீ வைத்த மாதிரி வைக்கோல் லாரிகளில் தீயைப்

போட்டுவிடுகிறார்கள்; நெருப்பைப் போட்டுவிடுகிறார்கள். அதனால் லாரிகள் குபுகுபு என்று எரிந்துகொண்டே போகின்றது. இதனால் உயிர்ச் சேதம் மற்றும் பொருட்சேதம் எல்லாம் நிறைய வருகிறது. அதனால், லாரிகளில் வைக்கோலை ஏற்றிக் கொண்டு போவதற்கு - கேரளாவிற்குப் போவது மட்டுமல்லாமல் - தமிழ்நாடு முழுவதும் தடை விதிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? இதுமட்டுமல்லாமல், ரோடு ஓரங்களில் பூராவும் களம் அமைத்திருக்கிறார்கள். நெல் அடிக்கிறார்கள். அதனால் பல விபத்துக்கள் எல்லாம் ஏற்படுகின்றன. ஆகவே, ரோடுகளில் களம் அமைத்து நெல் அடிப்பதற்கு அரசு கடுமையான தடை விதித்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய பல்வேறு யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். பெரும்பாலும் விவசாயிகள் எல்லாம் களம் இல்லாத நேரங்களில் சாலைகளைக்கூட பயன்படுத்துகிறார்கள். இது போக்குவரத்துக்குத் தடையாக இருக்கிறது என்பது உண்மைதான். இருந்தாலும்கூட, நாம் சொல்லித்தான் அவர்களைத் திருத்த வேண்டுமே தவிர, சட்டத்தின் மூலமாகவோ, நடவடிக்கைகளின் மூலமாகவோ திருத்துகிற வாய்ப்புகள் இல்லை. மேலும் வைக்கோலை மற்ற பகுதிகளுக்கு அனுப்புவதைத் தடை செய்கிற நோக்கமும் அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக, மூலக் கேள்வி கேட்ட திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெம்போ போன்ற வாகனங்களில் வைக்கோலை ஏற்றிச் செல்லும்போது, அவ்வளவாகப் போக்குவரத்து பாதிக்கப்படுவதில்லை. ஆகவே, வைக்கோல் பாரங்களை லாரி போன்ற கனரக வாகனங்களில் ஏற்றிச் செல்லக்கூடாது என்ற தடையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவற்றை எல்லாம் ஒவ்வொன்றாகத் தடை செய்கிற நிலைமை வருகிறபோது - நான் முன்பே குறிப்பிட்டதைப்போல - மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, மறுபடியும் வந்து, இந்தத்





தடையை நீக்குவார்களா என்று கோரிக்கை எழுப்பக்கூடிய சூழ்நிலைகள் வரலாம். ஆகவேதான், இவற்றை எடுத்துச் செல்கிறபோது சில கட்டுப்பாடுகளை விதிக்கலாம். முன்பு மணல்கூட செங்கற்பட்டிலேயிருந்து எடுத்து வரப்பட்டது. அதிலே பிரச்சினை எழுந்ததைத் தொடர்ந்து, மணலை மூடித்தான் எடுத்து வரவேண்டும் என்று அறிவிப்புச் செய்தபிறகு, இப்போது ஓரளவிற்கு அவை எல்லாம் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன. அதேபோல், இன்று காவல்துறை மற்றும் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். வைக்கோலை அளவுக்கு அதிகமாக ஏற்றிக் கொண்டு வந்தால், அவற்றைத் தடை செய்யவேண்டும், நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 452, திரு. கோ. தளபதி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**452—**

**குடிசை மாற்று வாரியத்தின் மூலம் விடுகள் கட்டுதல்**

***11500*—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேடப்பட்டி தொகுதி, டி. கல்லுப்பட்டியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டி. கல்லுப்பட்டி என்ற சிறிய கிராமம் வளர்ச்சி அடையாத கிராமம் ஆகும். அங்கே வாழக்கூடிய ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், அந்தப் பேரூராட்சியில் வேலை பார்க்கக்கூடிய சுகாதாரப் பணியாளர்களுக்கும் வீடுகள் கட்ட பேரூராட்சி மூலம் 2 ஏக்கர் இடம் தருவதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். ஆகவே, வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டி. கல்லுப்பட்டி பேரூராட்சிப் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு பேரூராட்சியால் குடிசை மாற்று வாரியத்திற்கு இதுவரை நிலம் ஒப்படைக்கவில்லை. நிலம் ஒப்படைத்தால் கண்டிப்பாக குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற முறை இந்தக் கேள்வி எழுப்பப்பட்டபோது, ஒரு ஏக்கர் நிலம் இருந்தால்தான் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். திண்டுக்கல் போன்ற பகுதிகளிலே அரசுக்குச் சொந்தமான இடங்கள் ஏதும் இல்லை. எனவே, குடிசை மாற்று வாரியமே, தனியாரிடம் இடத்தை விலைக்கு வாங்கி வீடுகள் கட்டித்தருமா? மேலும் நகராட்சித் துப்பரவுப் பணியாளர்கள் வீடுகள் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நகராட்சி நிர்வாகத்தில் போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவே, நிலங்களை விலைக்குப் பெற்று, நகராட்சித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்திற்கு அரசே நிலம் கொடுக்கின்ற வகை இருந்தால், அல்லது நகராட்சியே நிலம் ஒப்படைத்தால், கண்டிப்பாக துப்பரவுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். ஆனால் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்படும் என்று சொன்னால், விலை நிர்ணயம் ஒரு கிரவுண்டுக்கு 5 ஆயிரம் ரூபாய்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 453, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.





**453—**

## துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்குதல்

***6446*—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டிலோ அல்லது திருக்கழுக்குன்றத்திலோ ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டிலோ, திருக்கழுக்குன்றத்திலோ துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தோற்றுவிக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-15

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரம் ஒரு கோடியில் அமைந்திருக்கிறது. செங்கல்பட்டு, அந்த மாவட்டத்திலே ஒரு மையப் பகுதியாக இருக்கிற காரணத்தால், செங்கல்பட்டைச் சுற்றி மதுராந்தகம் தொகுதி, அச்சரபாக்கம் தொகுதி, திருப்போரூர் தொகுதி, தாம்பரம் தொகுதி, செங்கல்பட்டு தொகுதி ஆகியவை அமைந்திருக்கிற காரணத்தால் வேலைவாய்ப்பு அலுவலகத்தை செங்கல்பட்டு நகரத்திலே அமைத்துத் தந்தால் பதிவு செய்வோருக்கு சவுகரியமாக இருக்கும். ஒரு வேலைவாய்ப்பு அலுவலகத்தை அமைக்க முடியவில்லையென்றாலும், துணை வேலைவாய்ப்பு அலுவலகத்தையாவது அமைப்பதற்கு மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டிலே துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க முடியாததற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. ஒரு இடத்திலே துணை வேலைவாய்ப்பு

[1998 மே 6

அலுவலகம் தொடங்கப்பட வேண்டுமானால், அதற்கென்று சில அளவுகோல் இருக்கிறது. 25,000 மக்கட் தொகை இருக்கவேண்டும்; அலுவலகம் போக்குவரத்து வசதி நிறைந்ததாக இருக்கவேண்டும்; அலுவலகம் அமையும் இடம் இரண்டு வருவாய் வட்டாரங்களைத் தன் அதிகார வரம்பின்கீழ் கொண்டதாக இருக்கவேண்டும்; தொழில் வளம் மிக்க பகுதியாக இருக்கவேண்டும்; வேலைவாய்ப்புகள் பெறுவதற்கு உரியதாக இருக்கவேண்டும். அந்த அளவுகோலின்படி செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் அமையவில்லை. ஆகையினாலே துணை வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்பட வாய்ப்பில்லை.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் அறிவித்த அளவுகோலைவிட 10 மடங்கிற்கு மேலே அதிகமான மக்கட்தொகை இருக்கிற செங்கல்பட்டு நகரம் மற்றும் அதைச் சுற்றியிருக்கிற பல்வேறு தொகுதிகளை இணைத்து ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தேவை என்றுதான் நான் கேட்கிறேன். அதனுடைய அளவுகோல் அங்கே பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. எனவே மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அளவுகோல் ஏறத்தாழ 5 பிரிவாகத் தரப்பட்டிருக்கிறது. அவற்றில் ஏதாவது ஒன்று இருக்கலாம், ஒன்று இல்லாமலும் இருக்கலாம். அப்படியிருந்தாலும்கூட, இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே மொத்தம் 13 துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இருக்கின்றன. இப்போது ஒசூரில் மட்டும்தான் செயல்படுகிறது. மற்ற துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் எல்லாம் மாவட்டப் பிரிவினைக்குப் பிறகு அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய வேலைவாய்ப்பு அலுவலகத்தோடு பல இணைக்கப்பட்டுவிட்டன. பல அப்கிரேட்டட் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமாகவே மாற்றப்பட்டு விட்டன. ஆகையினாலே இப்போது அந்தப் பிரச்சினைக்கு இடமில்லை. அம்பத்தூர், திருவள்ளூர், அதைப் போலவே காஞ்சிபுரம் போன்ற இடங்களில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்கெனவே இருந்து, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தோடு இணைக்கப்பட்டு விட்டது. இப்போது திருவள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பல பஞ்சாயத்து யூனியன்களும், கிராமங்களும்



1998 மே 6]

போய்விட்ட காரணத்தினாலே ஓர்க்லோடும் அங்கே கிடையாது. எனவே நடுவிலே இருக்கிறதா என்பதை மட்டும் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு மட்டுமல்ல, மாவட்டத் தலைநகர், நாட்டின் தலைநகர், இந்தியாவின் தலைநகருக்குக்கூட அது பார்க்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தில் வேலைவாய்ப்பு அலுவலகம், அல்லது துணை வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்படுவதற்கு உரிய தகுதிகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியான வாணியம்பாடியில், ஆலங்காயத்தில் ஏற்கெனவே ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் இருந்து, அது திடீரென்று இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டிருக்கிறது. என்னவென்று கேட்டால், அன்றைக்கு இருந்த சம்புவராயர் மாவட்டம் திருவண்ணாமலைக்கு மாற்றப்பட்டது என்று சொன்னார்கள். தயவுசெய்து ஏற்கெனவே இருந்த ஆலங்காயத்தில், அதுவும் ஜவ்வாது மலைப் பகுதியிலே இருப்பது, வெகுதூரம் சென்றுதான் அவர்கள் வேலைவாய்ப்பிற்குப் பதிவு செய்யவேண்டும். எனவே, அதை மீண்டும் ஏற்படுத்தித் தரவேண்டும். ஏற்பட்டுவிட்ட அநீதிக்கு நீதியை அளிக்கவேண்டுமென்ற வகையில் ஏற்கெனவே நான் கோரிக்கை விடுத்திருக்கிறேன். எனவே, தயவுசெய்து ஆலங்காயத்திலிருந்து மாற்றப்பட்ட அந்த அலுவலகத்தை மீண்டும் அங்கே ஏற்படுத்துவதற்கு அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலங்காயத்திலிருந்த துணை வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்கெனவே மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தோடு இணைக்கப்பட்டுவிட்டது. அதைப்போலவே உங்களுடைய ஆலங்காயம் மட்டுமல்ல. சங்கராபுரத்திலிருந்த துணை வேலைவாய்ப்பு அலுவலகம் விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தோடு இணைக்கப்பட்டு விட்டது. வெறும் மாவட்டத் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் என்று பெயருக்கு தொகுதியிலே வைத்துக் கொண்டால் பிரயோசனப்படாது. வேலைவாய்ப்புகள் இருக்க வேண்டும். அதோடு தொழில் வளம் இருக்க வேண்டும். ஓர்க் லோடும் இருக்க வேண்டும். நாங்கள் சொல்லியிருக்கக்கூடிய நார்ம்ஸ்களும் இருக்க வேண்டும்.

[1998 மே 6

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடும்பொழுது அதிக ஓர்க் லோட் இல்லை என்று சொன்னார்கள். ஆனால், நான் அடிக்கடி அந்த அலுவலகத்திற்கு சென்று வருபவன். அங்கே ஓர்க் லோட் அதிகம்தான் இருக்கிறது. ஆகையால், ஆலந்தூர், தாம்பரம், செங்கல்பட்டு போன்ற மத்திய பகுதிகளில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைத்தால் அதில் வேலைவாய்ப்புக்கு அதிகமாக வாய்ப்பு உண்டு. அப்படி இல்லை என்று சொன்னால், காஞ்சிபுரம் மாவட்டத்தினுடைய ஒரு பகுதியாக இருப்பதால், எல்லோருக்கும் பயன்படும் வகையில் மையப்பகுதியான ஒரு பகுதியில் அதை மாற்றியமைப்பதிலே போக்குவரத்து வசதியும் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கு ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைப்பது குறித்து, கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய நார்ம்ஸில் மாவட்டத்தின் மையத்தில் இருக்க வேண்டும் என்ற கருத்து எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் எனக்குக் கொடுத்திருக்கக்கூடிய தகவலின் அடிப்படையில் காஞ்சிபுரம் தலைநகரமாக ஆக்கப்பட்டு, அங்கே வேலைவாய்ப்பு அலுவலகம் உருவாக்கப்பட்டதற்குப் பிறகு, காஞ்சிபுரத்திலேயே வேலைவாய்ப்பு அலுவலகம் அதோடு மெர்ஜர் ஆகிவிட்டது. ஆகையினாலே, திருவள்ளூர் வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்பட்டதற்குப் பிறகு, காஞ்சிபுரம் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் எல்லைக்கு உட்பட்டு பல கிராமங்கள், பல பஞ்சாயத்து யூனியன்கள் திருவள்ளூர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டு விட்டன. எனவே, இயற்கையிலேயே அங்கே வேலைவாய்ப்பு இல்லாத நிலையில் பெயருக்குத் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் வைப்பதில் அர்த்தம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியுள்ள



1998 மே 6]

அளவுகோலின்படி நாகை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு வருவாய்க் கோட்டங்களை உள்ளடக்கியது. நாகை, மயிலாடுதுறை. இரண்டிற்கும் இடையில் புதுவை மாநிலத்தினுடைய காரைக்கால் பகுதி நெடுந்தூரம் பிரிக்கிறது. எனவே, ஒரு இலட்சம் மக்களுக்கு மேலாக இருக்கிற மயிலாடுதுறை நகரத்தில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். வெறும் மக்கள் தொகை மட்டுமோ, போக்குவரத்து வசதி மட்டுமோ, இரண்டு வருவாய் வட்டங்கள் தனி அதிகார வரம்பிற்குள் இருக்க வேண்டும் என்பதினால் மட்டுமோ, தொழில் வளம் மட்டுமோ, வேலைவாய்ப்பு மட்டுமோ அல்ல; மொத்தத்தில் இவற்றில் ஒன்றிரண்டு ஒவ்வொரு பகுதிகளில் இருக்கலாம். மையம் என்பது பிரச்சினையே கிடையாது. நான் ஏற்கெனவே சொல்லியதைப்போல மாவட்டப் பிரிவினை புதியதாக ஏற்பட்டதற்குப் பிறகு, ஏற்கெனவே இருக்கக்கூடிய துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இரண்டு நிலையில் மாற்றப்பட்டிருக்கின்றன. ஒன்று அப்கிரடேஷன். இன்னொன்று மெர்ஜர். ஆகையினாலே, சில துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தோடு இணைக்கப்பட்டுவிட்டன. சிலவற்றிற்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக அந்தஸ்து கொடுக்கப்பட்டுவிட்டன. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன், கோவை மாவட்டம் பிரிக்கப்படாதபோது, கோயம்புத்தூரிலே ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் இருந்தது. ஈரோட்டிலே ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகம் இருந்தது. இப்போது ஈரோடு மாவட்டம், கோவை மாவட்டம் என்று இரண்டாக, பிரிந்ததற்குப் பிறகு ஈரோட்டில் இருந்த துணை வேலைவாய்ப்பு அலுவலகம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமாக மாற்றப்பட்டுவிட்டது. That is called upgradation. ஆகையினாலே, துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அந்த அடிப்படையிலேதான் உருவாக முடியும். இப்போது தமிழ்நாட்டில் எங்கும் கிடையாது. ஒசூரில் மட்டும் தொழில் வளத்தின் காரணமாக, வேலைவாய்ப்பின் காரணமாக அந்த இடத்தில் இருக்கிறது. தருமபுரியில் கூட இல்லை, கிருஷ்ணகிரியில்தான் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இருக்கிறது. இது திரு. மனோகரனுக்கும் தெரியும். மாண்புமிகு அமைச்சர் முல்லைவேந்தன் அவர்களுக்கும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக, திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூரில் வேலைவாய்ப்பு அலுவலகம் இருக்கும்போதுதான் ஆலங்காயத்தில் ஒரு சிறப்பு ஏற்பாடாக இது செய்யப்பட்டிருந்தது. இப்போது கல்வராயன் மலையிலே சங்கராபுரத்திற்குத் தனியாக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதைப்போல ஜவ்வாது மலைப் பகுதியிலே மலைவாசிகள் ஏறக்குறைய 70 சதுர மைல் பரப்பிற்குப் பரவி இருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கென்று சிறப்பாக அது கொடுக்கப்பட்டது. திருவண்ணாமலையிலே பிறகு அது ஏற்படுத்தப்பட்டது. மாவட்டத் தலைநகரத்திலே ஒன்று ஏற்படுத்தப்பட்டது, அது தேவையானது. ஆனால், இங்கே ஏறக்குறைய 300 ஊர்கள், பல நாடுகள், புங்கம்பட்டு, புதிய புதூர் நாடு, நெல்லிவாசல் நாடுகள் பிரிந்திருக்கிற ஜவ்வாது மலைப் பகுதி முழுவதும் 300 ஊர்கள் இருக்கின்றன. வேலூரே அவர்களுக்குத் தெரியாது. பல ஊர்களிலே இதுவரை வேலூரே தெரியாது. எனவேதான், ஆலங்காயத்திலே அந்தச் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனவே, இதை மறு ஆய்வு செய்து சங்கராபுரத்திற்குக் கொடுத்திருப்பதைப் போல ஆலங்காயத்திற்கு அதைத் திரும்ப ஏற்படுத்தித் தர ஏற்பாடு செய்யப்படுமா என்பதை நான் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட துணை வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்குவதற்கு இருக்கக்கூடிய விதிகளை அல்லது நார்ம்ஸ்களைப் பற்றிச் சொன்னேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்களும் மற்றவர்களும் தங்களுடைய தொகுதியின் பல்வேறு இடங்களில் உள்ள நிலைமையினைச் சுட்டிக்காட்டி மாவட்ட வேலைவாய்ப்பு துணை அலுவலகம் வேண்டும், இப்போது இருக்கக்கூடிய நிலைமைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்தை அரசு கவனத்தில் கொள்ளும். அத்துடன் நம்முடைய முதல்வர் அவர்களோடு கலந்து இதுகுறித்து உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 454, திரு. கு. மனோகரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.



**454—**

### நெசவாளர் கூட்டுறவுச் சங்க சொத்துக்கள்

***4688*—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சொத்துக்களைத் தனியார் ஆக்கிரமித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமித்துள்ள நிலத்தினை மீண்டும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மீட்டுத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான நிலத்தை கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவர்களே ஒரு புதுமையான ஏற்பாட்டைச் செய்து அவர்களே அந்த நிலத்தைப் பிரித்து தமதாக்கிக்கொண்டார்கள். அதோடுமட்டுமல்லாமல் ஏற்கெனவே அந்தச் சங்கத்திற்குச் சொந்தமான நிலங்களை அங்கு ஒரு தனியாருக்கு பெட்ரோல் பங்கிற்கு வாடகைக்கு விட்டு அவர் மேலும் பல இடத்தை வளைத்து அங்கு பவர் ஸ்டேஷன் எல்லாம் கட்டியுள்ளார். பல தனியார்களுக்கு வாடகைக்கு விட்டு அந்தச் சங்கத்தினுடைய சொத்துக்கள் மேலும் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு கடைகள் கட்டி வீடுகள் கட்டி சொந்தம் கொண்டாடி பட்டா வாங்கிவிட்டார்கள். இந்த நிலையை அறிந்து பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்தச் சங்கத்தினுடைய சொத்துக்களை மீண்டும் மீட்டு சங்கத்திற்குச் சொந்தமாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தினுடைய சொத்து 1950ஆம் ஆண்டு 12 ஏக்கர் 60 சென்ட். 1992-லே 100 வீடுகள் கட்டப்பட்டது போக மீதி இருந்தது 1.55 ஏக்கர். ஆனால் இந்த 1.55 ஏக்கரில் 1992 ஆம் ஆண்டிலே இருந்து பல பேர் தவறான அணுகுமுறையிலே ஆக்கிரமிப்பு செய்து பல இடங்களிலே 1.55 ஏக்கருக்குள்ளே ஆக்கிரமிப்பு செய்துவிட்டனர். இதைச் சங்கம் அன்று கண்டுகொள்ளாமல் அவர்களுக்குத் துணையாக அந்த நேரத்திலே இருந்திருக்கிறது. இதெல்லாம் நமக்கு எப்படித் தெரிந்தது என்றால் மீண்டும் நம்முடைய ஆட்சி வந்த பின்பு ஏற்பட்ட நிலையிலே ஒரு நாள் ஒரு மிகப் பெரிய போஸ்டர் எனக்கு அனுப்பப்பட்டது. அந்தப் போஸ்டரிலே இருக்கிற விஷயத்தைத் தெரிந்து நான் உடனடியாக என்னுடைய கைத்தறித் துறை இயக்குநரை அனுப்பிப் பார்த்ததில் அந்த 1 ஏக்கர் 55 சென்ட் இடம் பல இலட்சம் பெறுமான இடம். அதைத் திட்டமிட்டுச் சில பேர் நீண்ட கால வாடகை என்ற பெயரிலே குறுகிய விலைக்குக் குறைந்த வாடகைக்கு ஏற்பாடு செய்து பெருமளவிலே அதிலே பகடி பெற்றதாகத் தெரிய வந்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கையையும் பெற்று அந்தச் சங்கத்தையும் இன்று கலைத்து விதி 81-ன்படி அவர்கள் மேல் கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே இன்று சங்கம் கலைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரிலே இருக்கக்கூடிய தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்பது அதனுடைய பதிவு எண் 473. 1938 ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டு 1957-லே வீடு கட்டுவதற்காக நிலம் 12 ஏக்கர் 60 சென்ட் வாங்கப்பட்டு அதிலே 100 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1960-லே கட்டி உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த எண்ணிக்கை இதனுடைய அளவுகள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அதிகாரிகள் தவறுதலாகக் கொடுத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே மீதி இருக்கக்கூடிய 2 ஏக்கர் 60 சென்ட் நிலத்திலே அந்த நிர்வாகப் பொறுப்பிலே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவர்





மற்றும் நிர்வாகஸ்தர்கள் அவர்களுடைய உறவினர்கள் பெயரிலே பிரித்து பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கான ஆவணங்கள் எல்லாம்கூட இங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகளிடத்திலே சொல்லுகின்றபோது அது வேறு யாருக்கோ கொடுத்திருக்கிறார்கள் அவர்களுடைய உறவினர்களுக்கு இல்லை என்று சொல்கிறார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவராக இருக்கக்கூடியவருடைய மனைவி திருமதி திலகம், கணவர் பெயர் ஆறுமுகம். தலைவருடைய மனைவி பெயரிலே 351 சென்ட். அடுத்ததாக பார்வதி என்பவர், கணவர் பெயர் அருணாசலம் இப்படி . . . . . .

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கிறபோது எந்த ஆண்டில், எந்தச் சங்கத்தினுடைய நிர்வாகிகள் என்று, யார், யார் என்று, அதையும் சொல்லவேண்டும். இல்லையென்றால் ஏதோ இப்போது இருக்கிற ஆட்சியில் இப்போது கூட்டுறவுத் தேர்தல் நடந்து இப்போது இருக்கக்கூடிய நிர்வாகிகள் தவறு செய்த மாதிரி அது பொருள் ஆகிவிடும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்கூட அதைச் சொல்ல வேண்டாம் என்று நினைத்து இருந்தேன். அவர் சமீபத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்த கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றவர். அவர்கூட திராவிட முன்னேற்றக் கழக கிளைச் செயலாளர், அந்தக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், அவர்தான் அவர்களுடைய உறவினர்கள் பெயரில் எல்லா இடங்களையும் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள், பத்திரம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கே விளக்கமாக நான் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இப்படிக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருக்கக்கூடியவர் வேலியே பயிரை மேய்கிற மாதிரி . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

[1998 மே 6

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனக்குச் சொந்தக்காரர்கள் பெயரில் பட்டா போட்டதை மீண்டும் அந்த நிர்வாகத்திற்குப் பெற்றுத் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கம் இப்படி முறைகேடாக வாடகைக்கு விட்டக் காரணத்தால் உடனடியாக கலைக்கப்பட்டு விட்டது. நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்னதைப்போல எந்தக் கட்சி, யார் என்று எல்லாம் நான் பார்க்கவில்லை. எல்லாக் கட்சியினரும் இதிலே இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் இல்லை. எல்லாக் கட்சிக்காரர்களும், இன்னும் சிலபேர் கூட சேர்ந்து இதிலே ஒரு சதி நடந்து இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை கிடைத்த பின்பு நடந்த தவறுகள் முற்றிலும் நீக்கப்படும் விதத்தில் சூப்பர்சீடு செய்யப்பட்டது. விதி 81-ன்கீழ் கிரிமினல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கவர்ன்மெண்டு பிளீடருக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதுபற்றி நேரடியாகவே கைத்தறித் துறை அமைச்சர் சென்று பார்த்து விட்டு இதை விட்டு விட முடியாது, இது பல இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள சொத்து, அதோடு மட்டுமல்ல, இதில் ஒரு வேலி போட்டு அடைப்பதற்குக் கூட வாய்ப்பு இல்லாமல் இடையிலே ஒவ்வொருவர் ஆக்கிரமித்து இருக்கிற காரணத்தால் நம்மால் அதற்கு ஒரு பாதுகாப்பு செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விட்டது என்பதை எல்லாம் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, எந்த விதத்திலும் இந்த ஆட்சி யாருக்காகவும் விட்டுக் கொடுக்கின்ற ஆட்சி அல்ல. ஒரு போஸ்ட்டரை வைத்தே இந்த அளவுக்கு நான் நடவடிக்கை எடுத்து இருக்கிறேன். நீங்கள் எல்லாம் அங்கே மாவட்ட அளவில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் கடந்த 6 மாத காலமாக இதைப்பற்றிப் பேசவில்லை. ஆனால் இந்தச் செய்தியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் தனியாக ஒரு செய்தியாக அனுப்பிவிட்டு எனது நடவடிக்கைகளிலிருந்து சிறிதும் பின்வாங்காமல் மாண்புமிகு அமைச்சர் திரு. முல்லைவேந்தன் அவர்களிடம்கூட நான் இதுவரை சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்களிடமும் இதைப்பற்றி நான் சொல்லவில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மட்டும் ஒரு அறிக்கை அனுப்பிவிட்டு



1998 மே 6]

உடனடியாக அந்தச் சங்கத்தினைக்கூடக் கலைத்து இருக்கிறேன். நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *455*, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**455—**

**வாகனங்களை ஏலம் விடுதல்**

***975*—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டு இலாகாவால் பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை, உடனடியாக ஏலம் விட்டு, பணம் அரசுக் கணக்கில் செலுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வன இலாகாவினால் பிடித்து வைக்கப்பட்டிருக்கிற வாகனங்கள் 10, 15 ஆண்டுகளாக வெய்யிலிலும், மழையிலும் ஒரே இடத்தில் இருந்து அழிந்து போகக்கூடிய நிலையில் இருக்கின்றன. அதை உடனடியாக ஏலம் விட்டால் ஒரு நல்ல தொகை கிடைக்கும். ஆகவே, அதை உடனே, பிடித்த 10 நாட்களுக்குள்ளாகவே—அந்த வாகனங்களை ஏலம் விட்டாலோ அல்லது விற்பனை செய்தாலோ அரசாங்கத்திற்கு நல்ல வருமானம் கிடைக்கும். காலதாமதம் செய்வதால் 3 இலட்சம் ரூபாய்க்குப் போகக்கூடிய ஒரு வாகனம் கிட்டத்தட்ட 10 ஆயிரம் ரூபாய்க்குத்தான் போகின்றது. மேலும், அப்படி ஏலத்தில் எடுக்கிற வாகனங்களுக்கு ஆர்.சி. புக் கிடையாது. அப்படி ஆர்.சி. புக் கிடைக்காத சூழ்நிலையில் அதை மீண்டும் ரிப்பேர் செய்து மறு பதிவு செய்வதால், அதற்கான தொகையைச் செலவழிப்பதால், அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, உடனடியாக, அந்த வாகனத்தை, பிடித்த

[1998 மே 6

*10 நாட்களுக்குள்ளாக ஏலம் விட அரசு முன்வருமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு வனத் திருத்தச் சட்டத்தின்படி, வனம் மற்றும் மரம் சம்பந்தப்பட்ட வனக் குற்றச் செயல் செய்யப்பட்டு இருப்பதாகத் தெரிந்தால், அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அலுவலர், மாவட்ட வன அலுவலர், உதவி வனப் பாதுகாவலர் அச்சொத்தை கைப்பற்றுவதுடன், குற்றச் செயல் செய்வதில் பயன்படுத்தப்பட்ட கருவிகள், வாகனங்கள், மற்றும் கால்நடைகள் ஆகியவற்றோடு சேர்த்துப் பறிமுதல் செய்ய ஆணையிடலாம். மேற்காணும் அடிப்படையில், வனத் துறையால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள், அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள வனத் துறை அலுவலரால் பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டு, விற்பனை மூலம் கிடைக்கும் தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது. அதன்படி 1-10-1992 முதல் 31-3-1998 வரை வனக்குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்டமைக்காக கைப்பற்றப்பட்ட வாகனங்கள் மொத்தம் 3,628. அதிலே ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட மொத்த வாகனங்கள் 1,186. அதன் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூபாய் 2,17,09,908 கைப்பற்றப்பட்ட வாகனங்களில் சில போலியான பதிவெண்களைக் கொண்டிருப்பதால் அவற்றின் உரிமைதாரர்கள் மற்றும் உண்மையான பதிவெண்களைக் கண்டு பிடிப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இதனைச் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலருடன் தொடர்பு கொண்டு, அதற்கான விவரங்களைப் பெற்று, பறிமுதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வாகனங்களைப் பொது ஏலத்தில் எடுத்தவர்களுக்கு, விரைவில் அந்த வாகனங்கள் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்து கொடுக்க, போக்குவரத்துத் துறை மூலம் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந.பூ. இராமஜெயம்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வன இலாகாவால் பறிமுதல் செய்யப்படும்



1998 மே 6]

*வாகனங்களை, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளைப் பார்க்கச் செல்ல வசதியாக இருக்கும் வகையில், சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பினால், குறைந்த விலையில் அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வனத் துறை மூலம் ஏலத்தில் விடும்போது சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தப் பொது ஏலத்தில் கலந்து கொண்டு அந்த வாகனங்களை ஏலத்தில் எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினால் அந்த ஏலத்திற்குரிய நாட்கள் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 456, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**456—**

### செய்தியாளர்களுக்குக் கூடுதல் வசதி

***9241*—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட, வட்ட அளவில் பணிபுரியும் நாளிதழ், பருவ இதழ் செய்தியாளர்களுக்கும் அடையாள அட்டை வழங்கி, பேருந்து, இரயில் பயணச் சலுகையும், அரசு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் வீடும் ஒதுக்கிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாவட்ட அளவில் பணிபுரியும் நாளிதழ் செய்தியாளர்களுக்கு, செய்தியாளர் அங்கீகார அட்டை (Press Accredition Card) வழங்கப்பட்டு, இலவசப் பேருந்துப் பயண அட்டை, அரசு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பின் ஒதுக்கீடு ஆகிய சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசினால் வழங்கப்படும் இரயில் கட்டணச் சலுகை தற்போது மாவட்டச் செய்தியாளர்களுக்கும்

நடைமுறைப்படுத்துவது நடவடிக்கையிலுள்ளது. வட்ட அளவில் பணிபுரியும் செய்தியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் சலுகைகள் வழங்குவது குறித்த நடவடிக்கைகள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வட்ட அளவில் பணி புரிகிற செய்தியாளர்களுக்கும் அந்தச் சலுகைகளை வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, மாவட்ட அளவில் அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற செய்தியாளர்களுக்குப் பேருந்து வசதி, மற்ற வசதிகள் செய்து கொடுப்பது, குறிப்பாகப் பேருந்து வசதி மாநில அளவிலே அவர்களுக்கு நீட்டிக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, அண்டை மாநிலமான கேரளா போன்ற மாநிலங்களில் அப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய அரசு மாநில அளவிலே அவர்களுக்குப் பஸ் பாஸ் வசதி செய்து கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா? அதேபோல, கடந்த இரண்டு வருஷங்களாக வீடு ஓதுக்கீடு செய்வதிலே தாமதம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதுபற்றியும் அரசு பரிசீலனை செய்து அவர்களுக்கு அந்தச் சலுகைகளை அளிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாவட்ட அளவில் 58 பேருக்குச் செய்தியாளர்கள் அட்டை வழங்கப்பட்டு அவர்களெல்லாம் பேருந்து வசதியைப்பெற்று வருகிறார்கள். அதேபோல, இரயில் கட்டணச் சலுகையும், இரண்டாம் வகுப்பில் 25 சதவீதமும், முதல் வகுப்பில் 50 சதவீதமும் என்கிற அடிப்படையில் சலுகைகளைப் பெற்று வருகிறார்கள். இரயில் கட்டணத்தைப் பொறுத்தவரையில், 2,500 கிலோமீட்டர் வரையில் இந்தியா பூராவும் எங்கு வேண்டுமானாலும் போகின்ற வாய்ப்பு இருக்கிறது. அதேபோல, சென்னையில் 355 பேர் அங்கீகார அட்டைகளைப் பெற்றிருக்கிறார்கள். அதில் 232 பேர் இலவச பஸ் பாஸ் வசதியைப் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு பத்திரிகைக்கும், சென்னையைப் பொறுத்தவரையில் 9 செய்தியாளர்களுக்கும், 2 புகைப்படக்காரர்களுக்கும் அங்கீகார அட்டை வழங்கப்படுகிறது. மாவட்ட அளவில் 2 செய்தியாளர்களுக்கும், ஒரு புகைப்படக்காரருக்கும் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அந்தப் பத்திரிகை ஆசிரியர் யாருக்கு அங்கீகாரத்தை வழங்க வேண்டுமென்று ஒப்புதல் அளித்துக்



கடிதம் அனுப்புகிறாரோ அவர்களுக்கு மாத்திரம்தான் அந்த அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவிலே மாத்திரம் பத்திரிகைகள் செய்திகளைச் சேகரிக்கிற வேலை இருக்கிற காரணத்தால்தான் அவர்களுக்கு மாவட்ட அளவிலே மாத்திரம் அந்தச் செய்தியாளர் அட்டை வழங்கப்படுகிறது. அதேபோல, பத்திரிகையாளர்களுக்கு வீடு ஓதுக்குவதிலே காலதாமதமாவதாக உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அரசு அளித்த சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு வீடுகளைச் சொந்தமாகக் கட்டிக் கொண்டிருக்கிற பத்திரிகையாளர் நண்பர்கள், வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அவர்களுக்கான ஓதுக்கீடான 3 சதவீதத்தைப் பெற்றுக் குடியிருக்கிற சில பேர், இன்னமும்—சொந்த வீடு கட்டியதற்குப் பின்னாலும்—அந்த வீடுகளைக் காலிச் செய்யாத காரணத்தால் மற்றவர்களுக்கு வீடு வழங்குவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது.

*முற்பகல் 10-40*

எனவே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களின் கேள்வியின் மூலம், சொந்த வீடு கட்டிக் கொண்டு அரசு ஓதுக்கிய வாடகை வீட்டிலே குடியிருக்கின்ற பத்திரிகையாளர் நண்பர்கள் எல்லோரையும், நீங்கள் சொந்த வீடுகளுக்குச் சென்றுவிட்டு உங்கள் தொழிலைச் செய்கின்ற மற்ற பத்திரிகையாளர் நண்பர்களுக்கு அதிலே இடம் பெறுவதற்கான வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது செய்தியாளர்கள் மாவட்ட அளவில் அவர்களுடைய செய்திகளைச் சேகரிக்கச் செல்ல வேண்டியிருக்கிற காரணத்தாலே மாவட்ட அளவில்தான் பஸ் பாஸ் வழங்கப்படுகிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இப்போதெல்லாம் செய்திகள் மிகவும் பரபரப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், அதிலே இன்வெஸ்டிகேட்டிவ் ஜர்னலிசம் வேண்டும் என்ற காரணத்திற்காகவும், அது கோயம்புத்தூராக இருந்தாலும் சரி, அல்லது வேலூராக இருந்தாலும் சரி, திருநெல்வேலியாக இருந்தாலும் சரி, பத்திரிகையாளர்கள் ஓடோடி சென்று செய்திகளைச் சேகரிக்க வேண்டிய ஒரு கட்டாய நிலையில் இருக்கின்றார்கள். அந்த மாவட்டச் செய்தியை மட்டும் போட்டால்

பத்திரிகைகள் ஓடாது. ஆகவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம், தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, இருக்கக்கூடிய செய்திகளைச் சுடச்சுட தரக்கூடிய காரணத்தாலே, இந்தப் பத்திரிகையாளர்கள் மீது கருணை வைத்து, மாநில அளவில், எந்தப் பேருந்தாக இருந்தாலும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் செய்திகள் எல்லாம் தினமும் வந்து விடுகின்றன.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்தாலோசித்து, அவர்களுக்கு மாநிலம் முழுமையிலும் இலவசமாகப் பயணம் செய்யக்கூடிய அளவிற்கு பஸ் பாஸ் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு கம்ப்யூட்டர் யுகம். ஆங்காங்கே இருக்கிற செய்திகளை அந்தந்தப் பகுதியிலே இருக்கிற பத்திரிகையாளர் நண்பர்கள் சேகரித்து உடனுக்குடன், சென்னையாக இருந்தாலும், அல்லது உலகத்திலே எந்த மூலையாக இருந்தாலும் அங்கு அனுப்புகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தாலும், அதே நேரத்தில்—சேலத்தில் இருப்பவர் கன்னியாகுமரிக்குப் போய் செய்திகள் சேகரிக்க முடியாது; போவதற்குள் பல செய்திகள் வந்துவிடும். எனவே ஆங்காங்கே இருப்பவர்களே, செய்திகளைச் சேகரித்து உடனுக்குடன் அந்தப் பத்திரிகையின் தலைமையகத்துக்கு அனுப்பி, அந்தச் செய்திகளை வெளியிடுகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அவரவர்கள் எல்லைக்குள் அந்த பஸ் பாஸ் வழங்கப்படுகிற திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போதுதான் நீங்கள் துணை வினாவைக் கேட்டீர்கள் (குறுக்கீடு) சரி, திரு. சி.ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கம்ப்யூட்டர் யுகம் என்று சொல்லி மாவட்ட அளவில் கொடுக்கக்கூடிய பஸ் பாஸை



கேன்சல் செய்யக்கூடிய அளவிலே பதில் சொல்லியிருக்கிறார்கள். என்னதான் கம்ப்யூட்டராக இருந்தாலும், அதில் ஃபீடு செய்தால்தான் வரும். தானாகவே கம்ப்யூட்டரிலேயிருந்து வந்து விடாது; எல்லாவற்றையும் அது எடுத்துக் கொண்டு வந்து விடாது. எனவே, ஒரு நிருபர் நேரிடையாகச் சென்றால்தான் உண்மையிலேயே அங்கே என்னென்ன நடக்கின்றன என்பதை நிச்சயமாக அவர்களால் கண்டறிய முடியும். மேலும், சில பேரை நம்பிவிட முடியாது என்கிற காரணத்தாலே பத்திரிகைத் துறை மீது கருணை வைத்து, கம்ப்யூட்டர் என்றெல்லாம் பதிலைச் சொல்லி தாங்கள் இருப்பதையும் கெடுத்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையைக் கேட்டால், பத்திரிகை அதிபர்கள் மாவட்டந்தோறும் இருக்கும் நிருபர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிடுவார்கள். ஏனென்றால், மாநில அளவிலே பஸ் பாஸ் என்கிற காரணத்தால், சேலத்திலிருந்து கன்னியாகுமரிக்கு உடனடியாகப் போய் செய்தியைச் சேகரிப்பதற்கு திரு. ஞானசேகரனே உதவியிருக்கிறார் என்று கூறி, பல பத்திரிகையாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிடக் கூடும். எனவே, அவர்களுடைய எண்ணிக்கை குறையாமல் இருப்பதற்காக மாவட்ட அளவிலே (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வசதி செய்தால் போதும் என்று கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *457*, திரு. மீ. அ. வைதியலிங்கம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**457—**

**திருமண உதவித் திட்டம்**

***6110*—திரு மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தில் பதிவுத் திருமணம் செய்ய வேண்டும் என்று இருப்பதை,

முஸ்லிம்களுக்கும், கிறித்தவர்களுக்கும் விதிவிலக்களிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1997-98ஆம் ஆண்டிலிருந்து சமூக நலத் துறை மூலம் செயல்படுத்தும் அனைத்து திருமண நிதி உதவித் திட்டங்களிலும் நிதியுதவி பெறும் பயனாளிகள் பதிவுத் திருமணச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையை நீக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நிபந்தனையை தளர்த்துவதற்கு முன்பாக போடப்பட்ட கேள்வி இது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதேநேரத்தில் அந்தக் காசோலைகளைச் சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து வழங்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்குப் பின்னரும் காஞ்சிபுரம் மாவட்ட சமூக நலத் துறை அலுவலர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களைக் கலக்காமலேயே இன்றைக்குக் காசோலைகளை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு இயக்குநர் மூலமாகத் தகவல் தரப்பட்டுள்ளது. அதைச் செயல்படுத்துவதில் அவர்களுக்கு என்ன தயக்கம் இருக்கிறது என்று அறிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும், இந்த மன்றத்தில், மன்ற உறுப்பினர் எழுப்பிய கேள்வியையே, இனி அனைத்து மாவட்டங்களிலே இருக்கின்ற சமூக நலத் துறை அலுவலர்களும் அந்த உத்தரவை கண்டிப்பாக நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.





*முற்பகல் 10-45*

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற பேரறிஞர் பெருந்தகையின் எண்ணத்தைச் செயல்வடிவில் நடைமுறைப்படுத்தும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான திட்டம், இராமாமிர்தம் அம்மையார் அவர்களின் திருப்பெயரால் நடைபெறுகின்ற திட்டம். இந்தத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் நம் அரசு புதிதாக தற்பொழுது பொறுப்பேற்றவுடன் தமிழகத்தில் எத்தனை பேருக்கு 10 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு மாவட்டத்திலும் வழங்கியிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புவதோடு இந்தத் திட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது செயல்படுத்தப்படுகின்றதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திருமண உதவித் திட்டம் 1989-90 மற்றும் 1990-91 ஆம் ஆண்டுகளில் ரூ.5 ஆயிரம் என்று அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தது. அந்த இரண்டு ஆண்டுகளிலும் கிட்டத்தட்ட 35 ஆயிரம் பெண்கள் அதிலே பயனடைந்திருக்கிறார்கள். அதன் பிறகு வந்த பெண் ஆட்சியில் பெண்களுக்கான இந்தத் திட்டத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் போட்டார்கள். பல்வேறு நிபந்தனைகளை விதித்து, பல பெண்கள் இந்த உதவித் தொகையை பெறாமல் கண்ணீரும் கம்பலையுமாக இருந்த காட்சி தொடர்ந்து இருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நினைவுபடுத்தி, கவர்னர் பேருரையிலேயே 10 ஆயிரம் ரூபாய் என்று அறிவிப்பு செய்தார்கள். இதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால் கடந்த 1996-97ஆம் ஆண்டு மட்டுமே கிட்டத்தட்ட 31,680 பெண்கள் இதிலே பயனடைந்திருக்கிறார்கள். 1997-98 ஆம் ஆண்டில் இதுவரை 37,225 பெண்கள் தலா 10 ஆயிரம் ரூபாயைப் பெற்றிருக்கிறார்கள். மாவட்ட வாரியாக என்னிடத்திலே புள்ளி விவரங்கள் இருக்கின்றன. அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இங்கே அறிவிக்க இருக்கின்றேன்.

| | |
|---|---|
| சென்னை மாவட்டம் | 1,264 பேர் |
| காஞ்சிபுரம் மாவட்டம் | 1,409 பேர் |
| திருவள்ளூர் மாவட்டம் | 1,478 பேர் |
| வேலூர் மாவட்டம் | 1,761 பேர் |
| திருவண்ணாமலை மாவட்டம் | 1,785 பேர் |
| விழுப்புரம் மாவட்டம் | 1,490 பேர் |
| கடலூர் மாவட்டம் | 1,278 பேர் |
| கோவை மாவட்டம் | 1,775 பேர் |
| நீலகிரி மாவட்டம் | 535 பேர் |
| தஞ்சாவூர் மாவட்டம் | 1,403 பேர் |
| கரூர் மாவட்டம் | 706 பேர் |
| இராமநாதபுரம் மாவட்டம் | 1,182 பேர் |
| புதுக்கோட்டை மாவட்டம் | 1,735 பேர் |
| மதுரை மாவட்டம் | 1,086 பேர் |
| சிவகங்கை மாவட்டம் | 1,213 பேர் |
| விருதுநகர் மாவட்டம் | 1,164 பேர் |
| சேலம் மாவட்டம் | 1,876 பேர் |
| தருமபுரி மாவட்டம் | 1,453 பேர் |
| ஈரோடு மாவட்டம் | 1,615 பேர் |
| தூத்துக்குடி மாவட்டம் | 850 பேர் |
| திருநெல்வேலி மாவட்டம் | 1,434 பேர் |
| நாகப்பட்டினம் மாவட்டம் | 1,200 பேர் |
| திண்டுக்கல் மாவட்டம் | 1,115 பேர் |
| நாமக்கல் மாவட்டம் | 1,070 பேர் |
| பெரம்பலூர் மாவட்டம் | 1,089 பேர் |
| திருவாரூர் மாவட்டம் | 1,266 பேர் |
| திருச்சி மாவட்டம் | 1,439 பேர் |
| தேனி மாவட்டம் | 690 பேர் |
| கன்னியாகுமரி மாவட்டம் | 1,164 பேர் |





ஆக, கடந்த ஆண்டில் மட்டும் 37,225 பெண்களுக்குத் தாலி பாக்கிய உதவியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. முபாரக் அவர்கள் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்று கேட்டார்கள். கடந்த ஆண்டு நம்முடைய குஜ்ரால் அமைச்சரவையில் மனிதவள மேம்பாட்டு அமைச்சராக இருந்த திரு. பொம்மை அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட நேரத்தில், இதுகுறித்த தகவலைத் தெரிவித்தபோது, வேறு எந்த மாநிலத்திலும் கடந்த ஆண்டு வரை இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று அறிந்து கொண்டேன். எனவே, இந்தியாவிலேயே பாதிக்கப்பட்டிருக்கின்ற, ஏழைப் பெண்களுக்கான வாழ்க்கைத் துணையைத் தேடிக் தருவதிலே இந்தத் தமிழக அரசுதான் முன்னிலை வகிக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுந்தர்.

**திரு. கே. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஐந்து பெண்களை பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்பது பழைய மொழி. இந்தக் காலத்திலே ஒரு பெண்ணைக் கட்டிக் கொடுப்பதே மிகுந்த சிரமம். நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி நல்ல முறையில் நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால் ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்குதான் இந்த உதவி வழங்கப்படுகிறது. ஆகவே, இரண்டு பெண்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அறுபதாயிரம் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். எனவே, பல குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைய வேண்டும் என்பதே அரசின் கருத்தாக இருக்கின்ற காரணத்தினாலும், எட்டாம் வகுப்புப் படித்த பெண்களுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படுகின்ற காரணத்தினாலும், குடும்பத்திற்கு ஒரு

[1998 மே 6

பெண்ணிற்காவது அந்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்ற அரிய நோக்கோடுதான், ஒரு பெண்ணிற்கு மட்டுமே திருமண உதவி வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. இதை மறுபரிசீலனை செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களின்படி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எத்தனைப் பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூறினார்கள். அதிலே எங்களுடைய மதுரை மாவட்டம், மற்ற மாவட்டங்களைக்காட்டிலும் அதிகப்படியான ஜனத் தொகையும், பரப்பளவும் கொண்ட மாவட்டம். அங்குதான் குறைவாக வழங்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எனவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எந்த அடிப்படையிலே திருமண உதவி வழங்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்று குறியீடு கடந்த காலத்திலே அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையிலேதான் 10,000, 20,000 என்று 1996ஆம் ஆண்டிலும், 1997ஆம் ஆண்டிலும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், பல மாமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பொது மக்களுடைய வேண்டுகோளுக்கிணங்க தாயுள்ளம் கொண்ட நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், குறியீடு எதையும் நிர்ணயிக்க வேண்டிய அவசியமில்லை என்று அறிவிப்பு செய்து, எத்தனைப் பெண்கள், தகுதி படைத்தவர்கள் விண்ணப்பிக்கின்றார்களோ, அவர்கள் அத்தனை பேருக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, வந்துள்ள விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு, வழங்கப்பட்ட பயனாளிகளுடைய எண்ணிக்கையைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். மேலும், பல விண்ணப்பங்கள் நிலுவையில் இருக்கின்றன. எனவே, அந்த விண்ணப்பங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்குகின்ற நிதியின் மூலமாக உதவித் தொகை வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மே 6]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 458, திரு. ச. நாகரத்தினம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**458—**

**தாட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைத்தல்**

***7812*—திரு. ச. நாகரத்தினம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதியில் 'தாட்கோ' மூலமாக புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 459, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**459—**

**சாலையோர உணவகம் அமைத்தல்**

***4338*—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளியில் சுற்றுலாத் துறையின் மூலம் சாலையோர உணவகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1998 மே 6

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளியில் சாலையோர உணவகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை. தனியார் நிறுவனம் ஏதாவது முன்வந்தால் தேவையான உதவிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. மகேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் நாட்ராம்பள்ளியில் இதுபோன்றதோர் உணவகம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் மகேந்திரன் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். வேலூரிலும், அதேபோல, நாட்ராம்பள்ளியிலும் இதுபோன்ற உணவகம் கண்டிப்பாக அமைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். காரணம், அந்த இடம் National Highwayஇல் இருக்கின்றது. பெங்களூர் செல்லக்கூடியவர்களும், அதேபோல கோயம்புத்தூர் செல்லக்கூடியவர்களும் அந்த இடத்தைப் பயன்படுத்துகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, வேலூரில் ஒரு மோட்டலையும், நாட்ராம்பள்ளியில் ஒரு மோட்டலையும் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, இதுகுறித்துக் கண்டிப்பாக வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 460, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.



1998 மே 6]

**460—**

### தமிழக மீனவர்களைப் பாதுகாத்தல்

***9586*—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக மீனவர்களைப் பாதுகாக்கும் வகையில் அண்டை மாநிலம் ஆந்திராவில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களையும், மீன்பிடி படகுகளின் எண்ணிக்கையையும் குறிப்பெடுத்துக்கொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆந்திராவில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களையும் மீன்பிடி படகுகளின் எண்ணிக்கையையும் குறிப்பெடுத்துக்கொள்ள அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து மீனவர்கள் தொழில் செய்யவும், மீன் பிடிக்கவும் ஆந்திர மாநிலத்திற்கு மட்டுமல்லாமல், கேரள மாநிலத்திலுள்ள கொச்சி, எர்ணாகுளம், கோழிக்கோடு, ஆலப்புழை, கொல்லம் போன்ற இடங்களுக்கும் செல்கின்றார்கள். அதேபோல, கர்நாடக மாநிலம், மங்களூர் போன்ற பகுதிகளுக்கும் சென்று மீன்பிடித் தொழிலும், வியாபாரமும் செய்து வருகின்றார்கள். அவர்களுடைய எண்ணிக்கையையும், பயன்படுத்தப்படுகின்ற படகுகளின் எண்ணிக்கையையும் குறிப்பெடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புவதோடு, சில நேரங்களில் மொழி காரணமாகவும், சிறிய தொழில் பிரச்சினை காரணமாகவும் சில பிரச்சினைகள் உருவாகி, அங்குள்ள மீனவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதிலிருந்து அவர்களைக் காப்பாற்றி, அந்த மாநில அரசுகளோடு தொடர்பு கொண்டு, தக்க நடவடிக்கை எடுத்து, மீனவர்களின் துயரைத் துடைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படும்போதெல்லாம், அங்கே மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அதில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களும், மீன் வளத் துறை உதவி இயக்குநர் அவர்களும், சண்டைகள் ஏற்படும் இரண்டு கிராமங்களைச் சார்ந்த ஊர்த் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து அந்தப் பிரச்சினையை அவ்வப்போது தீர்த்துக் கொள்கிறார்கள். சில இடங்களில், அதாவது தமிழகத்தின் எல்லைப் புறமான ஆந்திரா போன்ற இடங்களில் மட்டும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் இதுபோன்ற குழுக்கள் பயன்படுகின்றன. சில கிராமங்களைப் பொறுத்தவரை, அங்கு பிரச்சினை வந்தால், அந்த ஊரிலுள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் மூலமாகவே தீர்த்து வைக்கப்படுகின்றன. அது முடியாதபட்சத்தில், மீன்வளத் துறை இயக்குநர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சேர்ந்து அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மீனவர்கள் பிற மாநிலங்களுக்கு மீன் பிடிக்கச் செல்கிறபோது காணாமல் போவதும், அங்கே ஏற்படுகின்ற கலவரங்களினால் கொலை செய்யப்படுவதும், அவர்களுடைய பொருட்கள் இழக்கப்படுவதும் ஒரு வாடிக்கையான நிலையாக உள்ளது. ஆகவே, அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், அவர்களுடைய இழப்புக்கு அரசு நஷ்ட ஈடு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும் பிற மாநிலங்களுக்கு அவ்வாறு செல்கிறபோது, அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற முறையிலே அதை அளிப்பதற்கு ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படும்போது, அந்த இரண்டு குழுக்களைத் தவிர, துயர் துடைப்பு நிதி மேலாண்மைக்



குழு என்ற ஒரு குழுவும் இருக்கிறது. அந்தக் குழுவின் மூலமாக, அவர்களுக்கு இழப்புத் தொகை நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) தங்கவேல் பொறியியல் கல்லூரி மாணவர் ஸ்ரீகாந்தன் மர்மமான முறையில் விடுதியில் இறந்து கிடந்தது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து சிறப்புக் கவனஈர்ப்பு, தங்கவேல் பொறியியல் கல்லூரி மாணவர் ஸ்ரீகாந்தன் என்பவர், விடுதியில் மர்மமான முறையில் இறந்து கிடந்தது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லை சேர்ந்த தில்லைபுரம் எம்.எஸ் பொன்னப்பன் அவர்களுடைய மகன் ஸ்ரீகாந்தன் என்பவர், செங்கல்பட்டு மாவட்டம் துரைப்பாக்கத்தினுடைய காவல்நிலைய எல்லைக்குட்பட்ட காரம்பாக்கத்தில் உள்ள தங்கவேல் பொறியியல் கல்லூரியிலே, மூன்றாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தார். சமீபத்திலே, 3-4-1998 அன்று வெள்ளிக்கிழமை இரவு மர்மமான முறையிலே அவர் தங்கியிருந்த விடுதி அறையில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அன்றைக்கு இரவே, அவருடைய தந்தையார் பொன்னப்பன் அவர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் நேரடியாக வந்து பார்த்தபோது, அவர் மகனின் பிரேதம், சென்னை மருத்துவமனையிலே இருந்திருக்கிறது. அந்த தங்கவேல் பொறியியல் மருத்துவக் கல்லூரி என்பது முன்னாள் மத்திய அமைச்சரும் ஒரு கட்சியினுடைய தலைவருமான ஒருவர், இருந்து நடத்தக் கூடியது. அந்தக் கல்லூரிக்கு ஒரு கெட்ட பெயர் வந்துவிடுமோ என்ற அச்சத்தோடு, அவர்

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மே 6

தற்கொலை செய்து கொண்டார் என்கிற அடிப்படையில், அந்தப் பிரேதத்தை எரித்து விட்டார்கள். ஆனால், அன்றையதினம், அவனுடைய தந்தையார் வந்து பார்க்கிறபோது, அந்த body-யைப் பார்க்கிறபோது, அதன் இரண்டு கைகளும் கட்டப்பட்டிருந்ததைப் பார்த்திருக்கிறார். தற்கொலைக்கு எந்த ஒரு காரணமும், அறிகுறியும் இல்லாத நிலையில், அவர்மீது Acid ஊற்றப்பட்டு அதற்குப் பின்னால் எரித்திருக்கிற ஒரு துயரமான செய்தி, பின்னர் தெரிந்திருக்கிறது.

மேலும், ஆறு மாதங்களுக்கு முன்பே அங்கிருக்கக்கூடிய கல்லூரி மாணவர்கள், அவரை சைக்கிள் செயினால் அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள். அப்போது, கல்லூரி நிர்வாகம் அடித்தவர்களைக் கூப்பிட்டு மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கி, அவர்களை மீண்டும் அந்தக் கல்லூரியிலே சேர்த்திருக்கிறது. இதிலே என்ன ஒரு முக்கியமான சம்பவம் என்று சொன்னால், இறந்துபோன மாணவரின் பிரேத பரிசோதனைக்குப் பின்னர், அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்ட காரணத்தால் அவருடைய தந்தையார், காவல்துறைக்கு ஒரு புகார் மனுவைக் கொடுத்திருக்கிறார். தன்னுடைய மகனின் இரண்டு கைகளும் கட்டப்பட்டிருந்தன என்று தனது மனுவில் கூறியிருந்தும், காவல் துறையினர், ஸ்ரீகாந்தன் என்பவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும், விஷம் அருந்தி இறந்திருக்கிறார் என்றும் விசாரணையின்றி, அவர் தற்கொலை செய்து கொண்டதாக 'சர்டிபிகேட்' வழங்கியிருக்கிறார்கள். அது தற்கொலை இல்லை என்று அந்தப் பையனின் தகப்பனார் கூறியிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலேயும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலேயும் அது சம்பந்தப்பட்ட புகைப்படங்களை நான் கொடுக்கவிருக்கிறேன். இரண்டு கைகளும் கட்டப்பட்ட சூழ்நிலையில் எப்படி அவர் தற்கொலை செய்து கொண்டார்? காவல் துறையினர் இதை மூடி மறைப்பதற்கு என்ன காரணம்? இப்படிப்பட்ட துயரமான சம்பவம் அந்தக் கல்லூரியிலே நடந்திருக்கிறது. அந்தக் கல்லூரிக்குக் கெட்ட பெயர் வந்துவிடுமோ என்ற அச்சத்திலேதான் அந்தப் பையன் பெயரிலே காதல் விவகாரம் இருந்தது, அதன் காரணமாகத்தான் அவன் இறந்திருக்கிறான் என்ற ஒரு பொய்யான கதையைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதன்மீது உரிய விசாரணை நடத்த ஆவன செய்து, அந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கிற மாணவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.



1998 மே 6]

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதே பொருள் குறித்து திரு. சி. ஞானசேகரன் அவர்களும் பேச அனுமதி கேட்டிருக்கிறார்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.பழனிசாமி அவர்கள் ஏற்கெனவே இந்தப் பொருள் குறித்த உண்மை நிலையினை எல்லாம் சொல்லிவிட்டார்கள். நான் சில சட்ட நுணுக்கங்களை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே அவர் எழுப்பிய வினா, கைகள் கட்டப்பட்ட சூழ்நிலையில் இருந்திருக்கக்கூடிய நபர் எப்படி தற்கொலை செய்து கொண்டு இறந்திருக்க முடியும் என்பதுதான். அதற்கு காவல்துறையினர் சரியான விளக்கத்தை அளிக்க வேண்டும். Post-Mortem Report-லேகூட என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்றால் கைகள் கட்டப்பட்ட நிலையில் இருக்கக்கூடியவர்கள் நிச்சயமாகத் தற்கொலை செய்து கொள்ள வாய்ப்பே இல்லை என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நாவரசு என்கிற மாணவன் இறந்து அந்த சுவடுகூட இன்னும் மறையவில்லை. கல்வி ஸ்தாபனங்களில் இதுபோன்ற நிலை ஏற்படுவதற்கான காரணம் என்ன? ஏற்கெனவே 'ராகிங்' என்ற கொடுமையைத் தடுப்பதற்காக நாம் சட்டத்தை எல்லாம்கூட கொண்டு வந்தோம். ஆனால், 'ராகிங்' கொடுமை இன்னும் பல கல்லூரிகளிலும், கல்வி நிலையங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதிலேகூட காவல்துறை உண்மையை மறைப்பதற்கு உடந்தையாக இருந்திருக்குமானால் யாரிடம் போய் நாம் நீதி கேட்பது? காவல்துறை இதையெல்லாம் கண்டுபிடித்து நாட்டுக்கு உண்மையான விளக்கத்தைத் தரவேண்டும். நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பைத் தரக்கூடியவர்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்கள். அதே காவல் துறையினர் இன்று கைகள் கட்டப்பட்டு போட்டோ எல்லாம் எடுத்துவிட்ட பின்னாலும்கூட அதை அவர்கள் தற்கொலை என்று சொல்லி வழக்கை முடிக்கப் பார்க்கிறார்கள். அதாவது அந்த வழக்கை 'டிராப்' செய்கிறார்கள் என்று சொன்னால், அது மிகவும் வேதனையான விஷயம் மட்டுமல்ல, மன்னிக்க முடியாத ஒன்றாகும். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், காவல்துறையினர் இந்த வழக்கை முடித்திருந்தாலும்,

[திரு. சி. ஞானசேகரன்] [1998 மே 6

Re-Investigation-க்கு தாங்கள் உத்தரவிட்டு அதிலே உண்மை என்ன என்பதைக் கண்டறிந்து குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு அதிகாரப் பூர்வமாகத் தரப்பட்டுள்ள குறிப்புகளுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி. பழனிசாமி அவர்களும், திரு. சி. ஞானசேகரன் அவர்களும் இங்கே எடுத்து விளக்கியுள்ள விவரங்களுக்கும் இடையிலே பெரும் வேறுபாடு மாத்திரம் அல்ல, முரண்பாடே இருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். எனவே, அதிகாரிகள் கொடுத்ததுதான் சரி என்று சொல்லி நான் எந்த முடிவையும் அவசரமாக எடுக்கத் தயாராக இல்லை. அதிகாரிகள் கொடுத்த இந்தக் குறிப்பின்படி பூச்சி மருந்து சாப்பிட்டதன் காரணமாக அவர் இறந்துள்ளார் என்றும், ' உடலில் எந்தவித காயமும் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த ஸ்ரீகாந்தன் அதே கல்லூரியிலே தன்னோடு படிக்கும் ஒரு மாணவியைக் காதலித்தான் என்றும், அது ஒருதலைப்பட்சமான காதலாகி விட்டது என்றும், அதன் காரணமாக அவர் பூச்சிக் கொல்லி மருந்து சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொண்டு இறந்தார் என்றும் தகவல்கள் தெரிய வந்ததாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல; இறப்பதற்குமுன் ஸ்ரீகாந்தன் தன் மரணத்திற்கு யாரும் காரணம் அல்ல என்றும், தான் தற்கொலை செய்து கொள்வதாகக் கடிதம் ஒன்றையும் எழுதி வைத்துள்ளார் என்றும் எனக்குக் குறிப்புத் தரப்பட்டுள்ளது,, வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது, என்றாலும்கூட இந்த மன்றத்தினுடைய இரண்டு உறுப்பினர்கள், அதிகாரிகள் தந்துள்ள தகவல்களுக்கு மாறான செய்திகளைச் சொல்லியிருக்கின்ற காரணத்தினால், முறைப்படி எந்த அளவுக்கு இதை விசாரித்து உண்மையை அறிய முடியுமோ, அந்த அளவுக்கு உண்மையை அறிய அரசு முயற்சிகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்து, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன்.



1998 மே 6]

**(ஆ) மதுக்கடைகள் ஏலம் நடைபெறும் முன்பு பல்வேறு மாவட்டங்களில் உள் ஏலம் நடைபெற்று வருவது**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் மதுக்கடைகள் ஏலத்திற்கு முன்பு உள் ஏலம் நடைபெறுவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் திரு. கே. சுப்பராயன்.

*முற்பகல் 11-05*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நேற்றையதினம் இது குறித்து முதலமைச்சர் அவர்களிடம் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு கொடுத்திருந்தேன். சில பத்திரிகைகளில் தமிழ்நாட்டில் மதுபானக் கடைகள் ஏலம், அதிகாரப் பூர்வமான ஏலம் நடைபெறுவதற்கு முன்னர், ஆங்காங்கே, சில இடங்களில் உள் ஏலங்கள் நடைபெற்று அரசுக்கு வரவேண்டிய வருமானம் குறைக்கப்படுகிறது என்ற செய்தி வந்திருக்கிறது. இந்தச் செய்தியைப் பார்க்கிறபோது, அரசுக்கு வருகின்ற வருமானத்தைக் குறைக்கின்ற நடவடிக்கைகள் பரவலாகத் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருவதாகப் பொதுமக்கள் மத்தியிலும் ஒரு கருத்து உருவாகி இருக்கிறது. அத்தகைய ஒரு கருத்து உருவாவதற்குக் காரணம். கடந்த காலங்களில் நடைபெற்ற மதுபானக்கடை ஏலங்களில் ஏறத்தாழ உள் ஏலம் நடைபெற்று, அதிகாரப்பூர்வமான ஏலம் முடக்கப்பட்டு, அரசுக்கு வரவேண்டிய வருமானம் பல்வேறு சாராயக் கடை அதிபர்களால், குறிப்பாக சமூக விரோதிகளால் எடுத்துக் கொள்ளப்படுகின்ற ஒரு வாய்ப்பு நிலவியதை நாம் பார்த்தோம். அத்தகைய நிலை இன்றைக்கும் நிலவுகிறதோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, தங்கள் மூலமாக நான் முதலமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, இப்போது நடைபெற்று வருகின்ற ஏலங்களில் அதிகாரப் பூர்வமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற தொகைக்கு மேல் எங்கெங்கே ஏலம் போய் இருக்கிறது என்றும், தற்போது ஏலம் போய் இருப்பதற்கும், கடந்த காலங்களில் ஏலம் போனதற்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு என்ற விவரங்களையும் இந்தப் பேரவையின்மூலம் நாட்டுக்குத் தெரிவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பொருள் குறித்து நான் ஏற்கெனவே கவன ஈர்ப்புக் கொடுத்திருக்கிறேன். தேனி மாவட்டத்தில் உள் ஏலம் நடைபெற்றது (குறுக்கீடு) சாராயக்கடை உள் ஏலத்திலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை வழங்கி இருந்தார்கள். இதுகுறித்துச் சில விவரங்களை நேற்றைக்கே, உடனடியாக, அவசரப்பட்டுச் சொல்ல விரும்பாமல் சில விவரங்களைச் சேகரித்து இந்த அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே ஒன்றை எழுதி இருக்கிறார்கள். 'தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் மதுக் கடை ஏலத்திற்கு முன்பு ஒரு உள் ஏலம் நடைபெற்று வருவது குறித்து' என்று எழுதியிருக்கிறார். அதை இப்படியும் எடுத்துக்கொள்ளலாம். ஏலத்திற்கு, முன்பு என்றும் எடுத்துக்கொள்ளலாம், முன்பு ஒரு உள் ஏலம் நடைபெற்று வருவது என்பது குறித்து என்றும் எடுத்துக் கொள்ளலாம். அது முன்புதான் நடைபெற்றது என்பதை முதலில் நான் அவருக்கு விளக்க விரும்புகிறேன், இப்போது நடைபெறவில்லை என்பதையும் விளக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசு, 1989ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபான சில்லரை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறையைக் கடைப்பிடித்து வந்துள்ளது. சிறப்பாகச் செயல்பட்டு வந்துள்ள இந்த முறையில் ஏலம் கேட்பதில் உள்ள போட்டியைத் தடுப்பதற்காக, சிலர் சேர்ந்து குழுக்களாகச் செயல்படுவதன்மூலம் உண்மையாக ஏலம் கேட்பவர்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுவதாகவும், அதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதாகவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.





ஏற்கெனவே, 1989-க்கு முன்பு அப்போது இருந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் இந்த ஏலம் விடுகின்ற முறையே இல்லாமல், ஒவ்வொருவருக்கும் அரசே லைசென்ஸ், உரிமம் கொடுத்து கடைகள் வைக்கப்பட்டன. அப்படியே ஏன் இப்போதும் உரிமம் தரக்கூடாது என்று பலபேருக்கு ஒரு வருத்தம்கூட என்மீது உண்டு, அப்படி உரிமம் கொடுத்தால் எங்களுக்குக் கொடுக்கலாமே என்று. உண்மை என்னவென்றால், எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் அப்படிக் கொடுக்கப்பட்ட அந்த உரிமங்கள் தவறானவை என்று உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று உச்ச நீதிமன்றமும் அப்படித் தனிப்பட்ட முறையிலே உரிமங்கள் கொடுக்கக்கூடாது, ஒப்பந்தப்புள்ளி அல்லது ஏலம் என்ற முறையிலேதான் இருக்க வேண்டுமென்று ஆணையிட்டுவிட்டது. இந்த அரசு, அது சிறந்த முறை, சிலாக்கியமான முறை என்ற காரணத்தால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதைத் தடுக்கின்ற வகையில் இந்தக் குறைபாடுகளை எல்லாம் களைவதற்காகக் கடந்த ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகை, கிடைத்த உரிமைத் தொகை ஆகியவைகளை விரிவாக ஆய்வு செய்தும், சம்பந்தப்பட்டவர்களோடு விரிவாக விவாதித்த பின்னரும் நடைமுறையிலிருக்கும் ஏல முறைக் கொள்கையில் அரசு சில மாற்றங்களைச் செய்தது. சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் ஏலதாரர்களுக்கிடையிலே போட்டிச் சூழலை உருவாக்கி ஏலத்தை நடத்துவதன் மூலம் அரசுக்கு அதிக வருவாய் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது.

முற்பகல் 11-10

முந்தைய மூன்றாண்டுத் தொகுதியில் 4,500 மதுபானக் கடைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. தற்போது 1998-2001 மூன்றாண்டுத் தொகுதியில் மாவட்ட ஆட்சியர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் மொத்தம் 4,700 மதுபானக் கடைகளை அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் கிடைத்த குறுமத் தொகைகளின் சராசரியின் அடிப்படையில் இந்த மூன்றாண்டுத் தொகுதி 1998-2001-க்கான குறுமத் தொகை (அப்செட் பிரைஸ்) நிர்ணயிக்கப்பட்டது. இந்தக் குறுமத் தொகை மதுபான சில்லரை விற்பனைக் கடைகளின் உண்மையான விற்பனை வாய்ப்பினைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. இப்படி குறுமத் தொகைகள் நிர்ணயிக்கப்படுவதன்

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 6

மூலம் குழுக்கள் அமைத்துக் குறைந்த ஏலம் கேட்பது பெருமளவுக்குத் தடுக்கப்பட்டுள்ளது.

உண்மையான ஏலதாரர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்கின்ற வகையில், பிணை வைப்புத் தொகை குறிப்பிடத்தக்க அளவில் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டு தொகுதியில் பிணை வைப்புத் தொகை நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளுக்கு ரூபாய் 10,000 எனவும், மற்றப் பகுதிகளுக்கு ரூபாய் 7,500 எனவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது பிணை வைப்புத் தொகை பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஊரக ஊராட்சி மற்றும் பேரூராட்சிகள் ரூ.1.00 இலட்சம்; நகரப் பேரூராட்சிகள்/இரண்டாம் நிலை/மூன்றாம் நிலை நகராட்சிகள்/ நகரியங்கள்-ரூ.1.50 இலட்சம்; சிறப்பு நிலை/தேர்வு நிலை மற்றும் முதல் நிலை நகராட்சிகள்-ரூ.2.00 இலட்சம்; மாநகராட்சிகள் - ரூ.3.00 இலட்சம்; சென்னை மாநகரம்—ரூ.4.00 இலட்சம்.

எந்த ஒரு மதுபான சில்லறை விற்பனைக் கடையின் உரிமமும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு நியமன முறையிலே வழங்கப்படமாட்டாது என அரசு ஆணையிட்டுள்ளது. ஏனென்றால், கூட்டுறவுக்கு என்று சொல்லி தனியாரே அப்போது இதிலே பல தவறுகளைச் செய்து கொண்டிருந்தார்கள். எனவே, எந்த ஒரு மதுபான சில்லறைக் கடையின் உரிமமும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நியமன முறையிலே வழங்கப்பட மாட்டாது என ஆணையிடப்பட்டுள்ளது.

விற்கப்படாத மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மீண்டும் ஏலமுறையிலே விற்பனைக்குக் கொண்டுவரப்படும். ஏல விதிகளை உறுதியுடன் கடைப்பிடிப்பதற்கு ஏதுவாக காப்புத் தொகை (Security Deposit) மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளுக்குச் சில்லறை விற்பனைக் கடைகளுக்கு ரூபாய் 7,500 எனவும் மற்ற பகுதியில் அமையும் கடைகளுக்கு ரூபாய் 5,000 எனவும் இருந்து வந்ததை மாற்றி அனைத்துப் பகுதிகளுக்கும் ஒரே சீராக ரூபாய் 25,000 என நிர்ணயிக்கப்பட்டது.



1998 மே 6] [கலைஞர் மு. கருணாநிதி]

ஏற்கெனவே நடைமுறையிலே இருந்த ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறைகளில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திருத்தங்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் ஏலத்தை நடத்துவதற்கும் ஏலம் கேட்போர் எந்தவிதமான அச்சமோ, பாதிப்போ இல்லாமல் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்திலே கலந்து கொள்ளவும் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. இதன் பயனாக, இதுவரை முதல் இரு நாட்களில் 4-5-1998 மற்றும் 5-5-1998 ஏலம் விடப்பட்ட 2,809 கடைகளில் - மொத்தக் கடைகள் 4,700 - ஏலம் விடப்பட்ட கடைகள் 2,809. அதிலே அரசுக்குக் கிடைத்த மொத்த வருவாய் 295 கோடி ரூபாயாகும். இந்த 2,809 கடைகளுக்கு குறுமத் தொகை (அப்செட் பிரைஸ்) ரூ.162 கோடிதான் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. குறுமத் தொகையைவிட 82 விழுக்காடு கூடுதலாக வருவாய் கிட்டியுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த 4,700-லிருந்து 2,809 கடை போக கிட்டத்தட்ட 1,890 கடைகள் மீதம் இருக்கின்றன. அவை மூலமாக வருகின்றதையும் சேர்த்தால் இந்த ஆண்டு சுமார் 400 கோடி இந்த ஏலத்திலே நமக்கு வருமானம் கிடைக்கும் என்று தெரிகின்றது. கடந்த ஆண்டு 4,348 கடைகளுக்கு மொத்த வருமானம் 220 கோடிதான். இந்த ஆண்டு இதுவரையிலே கிடைத்துள்ளதே 295 கோடி மொத்தமாக 400 கோடி ரூபாய் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (இ) விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரச் சலுகை இரத்து குறித்து மத்திய அரசின் அவசரச் சட்டம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. விவசாயிகளுக்கு, இலவச மின்சாரச் சலுகையை இரத்து செய்ய மத்திய அரசு வலியுறுத்தியது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. கே. சுப்பராயன், திரு. ஜி. பழனிசாமி, திரு. இரா. தாமரைக்கனி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. லா. சந்தானம், திரு. ஐ. கணேசன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோர் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு அறிவிப்பு கொடுத்து இருக்கின்றார்கள். கட்சிக்கு ஒருவர் வீதம் பேசுகின்றவர்கள் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 11-15*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு திடீரென்று ஓர் அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்து இருக்கிறது. ஏற்கெனவே தமிழக அரசு 1989 ஆம் ஆண்டிலிருந்து தமிழக விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு நல்ல திட்டத்திற்கே முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய அளவிலே, மக்களுக்கு விரோதமான ஓர் அவசரச் சட்டமாக அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அவசரச் சட்டம் கொண்டு வந்ததைப் பற்றி நேற்று இந்த அவையிலே விவாதித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக ஆணித்தரமாக, எக்காரணத்தைக் கொண்டும் தமிழக விவசாயிகளுக்கு அளிக்கப்படக்கூடிய இலவச மின்சாரத்தை இரத்து செய்யமாட்டோம் என்கிற உத்திரவாதத்தை இந்த மன்றத்திலே தந்தார்கள்.

ஏற்கெனவே, கடந்த கால அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான், ஜாடை மாடையாக அவர்கள் இதை இரத்து செய்வதற்கு உலக வங்கியிடம் ஒத்துக்கொண்டு வந்து விட்டார்கள் என்கிற கருத்தையும் சொன்னார்கள். ஆனால், முன்னாள் முதல்வர் அவர்கள் இன்றைக்குப் பத்திரிகைகளிலே, நாங்கள் தமிழக விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய இலவச மின்சாரத்தை இரத்து செய்வதற்கு நிச்சயமாக ஒத்துகொள்ளவே இல்லை என்று சொல்லி, தமிழக விவசாயிகள் மத்தியிலே நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்பதற்காக இப்போது அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

ஆனால், மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் சொல்கிறபோது, இந்த அவசரச் சட்டம் குறித்து விவாதிக்க மத்திய அமைச்சரவைக் கூட்டம் (Cabinet meeting) நடந்தது. அந்தக் கூட்டத்திலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மத்திய சட்டத் துறை அமைச்சர் கலந்து கொண்டார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சட்டத் துறை அமைச்சருக்குத் தெரியாமல் இதுபோன்ற அவசரச் சட்டம் எதுவும் வெளிவரவே முடியாது. ஆகவே, மாண்புமிகு திரு. தம்பிதுரை அவர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கலந்துகொண்டு, அதற்கு அவர்கள் இசைவு தெரிவித்திருக்கிறார்கள். Central and State Regulatory Commission-இல் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒத்துக்கொண்டு வந்துவிட்டு, இப்போது திடீரென்று நேற்று அவர்கள் மாற்றிப் பேசி,



ஒரு பெரிய மோசடியை இங்கே உருவாக்க முற்படுகிறார்கள். மத்திய அமைச்சரவைக் கூட்டத்திலே ஒத்துக்கொண்டு வந்தவர்கள், இப்போது திடீரென்று புரட்டிப் பேசி, நாங்கள் அப்படிக் கூறவே இல்லை என்று சொல்வதற்கான காரணம் என்ன என்பது விளங்கவில்லை.

மாண்புமிகு திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே வந்திருக்கின்றது. டெல்லியில் நடந்த மீட்டிங்கிலே, தமிழக அரசு சார்பாக அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள்கூட இதுபோன்ற Regulatory Commission இல் ஒரு சட்டம் கொண்டுவருவதற்கு ஒத்துக் கொண்டு வந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், தமிழக சட்டத் துறை அமைச்சர் அப்படி ஏதாவது ஒத்துக்கொண்டு வந்திருக்கிறாரா என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, தமிழக விவசாயிகள் மத்தியிலே இந்த அவசரச் சட்டம் காரணமாக பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழக அரசு இதை ஒத்துக்கொள்ளக்கூடாது என்பதோடு, எக்காரணத்தைக் கொண்டாவது அதை முறியடித்தே ஆகவேண்டும். அதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதாக ஒத்துக் கொண்டுவிட்டார்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைய அரசு ஓர் அவசரச் சட்டம் வெளியிடுகிறது என்று சொன்னால், அதன்மூலம் ஒரு நோக்கத்தை நிலை கொள்ளச் செய்கிற காரியத்திற்காகத்தான் அது வெளியிடப்படுகிறது என்று சொல்ல வேண்டும். அது மாநில அரசு ஆனாலும் சரி, மத்திய அரசு ஆனாலும் சரி அப்படிப்பட்ட நிலைதான். அப்படியானால், மத்திய அரசாங்கம் இந்த அவசரச் சட்டத்தின் மூலம் என்ன சாதித்துக் கொள்ள விரும்பி வெளியிட்டது என்பது அம்பலமாக்கப்பட்ட நிலையில்தான், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் நம்முடைய மாநில சட்டமன்றத்தில் அனைத்துத் தரப்பினரும் இந்தப் பிரச்சினையைக் கிளப்பி, இலவச மின்சாரம் இரத்து செய்யப்படக்கூடும்; இரத்து செய்யப்படுவதற்குரிய நடவடிக்கைகளுக்குத்தான் இந்த அவசரச்

[திரு. கே. சுப்பராயன்] [1998 மே 6

சட்டம் வந்திருக்கிறது என்று எதிர்ப்புத் தெரிவித்ததற்குப் பின்னர். 'ஆப்பு அசைத்து மாட்டிக் கொண்ட குரங்கைப்போல' இன்றைக்கு ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டு, மத்திய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வேறு சில விஷமத்தனமான கருத்துக்களை விதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழக அரசு குழப்பம் விளைவிப்பதாகவும், தப்பு அர்த்தம் கற்பிப்பதாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்தச் சட்டம் மத்தியிலும் சரி, மாநிலத்திலும் சரி, மின் சீரமைப்புக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அந்தக் கமிஷன் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டது? அதன் நோக்கமே, மின் துறையில் இருக்கிற பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்காக மின் கட்டணத்தைச் சீரமைக்க வேண்டுமென்ற நோக்கத்தை அடைவதற்காகத்தான் இந்த அவசரச் சட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த அவசரச் சட்டத்திலும் நாம் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். இந்தச் சட்டத்தின்படி, ஒரு மாநில அரசு, மின் கட்டணத்தில் சலுகை அளிக்க வேண்டுமானால், அதுவும் குறிப்பாக விவசாயிகளுக்குச் சலுகை அளிக்க வேண்டுமானால், 50 சதவிகிதம் சலுகை அளிக்க வேண்டுமானால், ஸ்பெஷல் பெர்மிஷன் இந்த மின் சீரமைப்புக் கமிஷனிடம் பெற்றிருக்க வேண்டும். அப்படியென்றால் என்ன அர்த்தம்? விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுக்கக் கூடாது என்பது understood. அது உள்ளடக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு இலவசக் கட்டணம் கிடையாது என்பது உள்ளடக்கப்பட்ட ஒரு சட்டம்தான் இந்த அவசரச் சட்டம் என்பதை எதன் பெயராலும் மூடி மறைக்க முடியாது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். எனவே, இந்த அவசரச் சட்டத்தின் மையமான நோக்கம் நான் திரும்பத் திரும்ப அழுத்தமாக வலியுறுத்துவது, மின் கட்டணத்தை;ச் சீரமைக்க வேண்டும்; மின் கட்டணத்தைச் சீரமைக்க வேண்டுமென்றால், மின் பற்றாக்குறை ஒழுங்கு அமைக்க வேண்டும்; மின் பற்றாக்குறை ஒழுங்கு அமைக்க வேண்டுமானால், இலவச மின்சாரத்தை இரத்து செய்ய வேண்டும் என்று சொல்லாமல் மௌனமாக—நான் தெளிவாகச் சொல்கிறேன்—மத்திய அரசு மௌனமாக மாநில அரசை நிர்ப்பந்தித்து, ஓர் அரசியல் நெருக்கடி ஏற்படுத்த விரும்புகிறது.



1998 மே 6] [திரு. கே. சுப்பராயன்]

முற்பகல் 11-20

நான் இறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, திரு ரங்கராஜன் குமாரமங்கலம் சொல்லியிருக்கின்றார். இந்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை என்றால், அந்த மாநில அரசு 356-க்குப் பலி தீர்க்கப்படும் என்று சொல்லி இருக்கிறார். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இலவச மின்சாரத்தை நாங்கள் இரத்து செய்ய மாட்டோம் என்பதற்காக இந்த ஆட்சி பறிபோகுமானால், அதை இந்த மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நான் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய மின்சார சீரமைப்புக் குழு, மாநில சீரமைப்புக் குழு என்ற இந்தக் குழுக்கள் எல்லாம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்திலும், பாரதீய ஜனதா ஆட்சிக் காலத்திலும்தான் இருக்கிறதே தவிர, இப்போது பாரதீய ஜனதா ஆட்சிக் காலத்திலே மட்டும் இந்தக் குழு ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, 1989 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியிலே இலவச மின்சாரம் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த புரட்சித் தலைவி ஆட்சியிலேயும் 5 வருடமாக இலவச மின்சாரம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது. மத்திய அரசு எவ்வளவோ தூரம் வற்புறுத்தியும், இலவச மின்சாரம் கொடுக்கக் கூடாது என்று சொல்லி வற்புறுத்தியும், புரட்சித் தலைவி ஜெயலலிதா அரசு 5 வருஷமாக இலவச மின்சாரம் கொடுப்பதை இரத்து பண்ணவில்லை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இடையிலே அந்த ஐந்தாண்டு காலத்திலே, ஆரம்பக் கட்டத்திலே இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டு, அதை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகமும், மற்றக் கட்சிகளும், விவசாயிகளும் போராடிய பிறகுதான், மீண்டும் அந்த இரத்து வாபஸ் பெறப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இலவச மின்சாரம் இரத்து பண்ணிய பின்னர்தான் திராவிட முன்னேற்றக் கழகம் போராடியது; இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போராடியது; இன்றைக்கு உடன்பாடு வைத்து இருக்கிற பாட்டாளி மக்கள் கட்சி தூக்குக் கயிறு போராட்டமே நடத்தியது. (மேசையைக் தட்டும் ஒலி). அதை இல்லை என்று மறுப்பது சரி அல்ல.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆனாலும் சரி, தமிழ் மாநில காங்கிரஸ் ஆனாலும் சரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆனாலும் சரி, பாட்டாளி மக்கள் கட்சி ஆனாலும் சரி, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதில் எந்தவித கருத்துவேறுபாடும் கிடையாது. விவசாயிகள் போராட்டம் பண்ணினார்கள். விவசாயிகள் கோரிக்கையை ஏற்று இலவச மின்சாரம் புரட்சித் தலைவி அவர்கள் கொடுத்தார்களே தவிர, உங்கள் கட்சிதான் போராடி இந்த இலவச மின்சாரம் கொடுத்ததாகச் சொல்வது அது வந்து அரசியல்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றை மாற்றிடக் கூடாது. 1989ஆம் ஆண்டு ஆட்சியிலே இருந்தது நாம்; புரட்சித் தலைவி அல்ல; அவருடைய புரட்சித் தலைவி அப்போது ஆட்சியிலே இல்லை. 1989-90-லே தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோதுதான் இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. அதுவரையில் இந்தியாவிலே எந்த இடத்திலும் இலவச மின்சாரம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுதும் இந்தியாவிலே தமிழ்நாட்டிற்கு அடுத்து, சமீபத்திலே புதிய ஆட்சி பஞ்சாபிலே வந்த பிறகு, பஞ்சாபிலே இப்பொழுது இலவச மின்சாரம். முதன் முதலாகத் தமிழ் நாட்டிலேதான் இலவச மின்சாரம் வழங்கப்பட்டது, வழங்கியது அவருடைய தலைவி அல்ல.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 வருஷமாகப் புரட்சித் தலைவி ஆளும்போது இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்கினார்களா, வழங்கவில்லையா? அதை



மட்டும்தான் நீங்கள் நினைக்க வேண்டுமே தவிர, போராட்டம் பண்ணினோம், அதனாலேதான் இலவச மின்சாரம் வழங்கினார்கள் என்று சொல்லி, சும்மா வந்து eye wash பண்ணுவதிலே எந்தவித அர்த்தமும் கிடையாது. ஆகவே, இன்றையதினம் தமிழ்நாட்டில் தங்குதடையின்றி விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க முடியவில்லை. இது சம்பந்தமாக உங்களுடைய தோழமைக் கட்சித் தலைவர் அய்யா மூப்பனார் அவர்கள் குறைப்பட்டுப் பேசி இருக்கிறார்கள். அதை வந்து திசை திருப்புவதற்காக, தமிழ்நாட்டு மக்களிடத்திலே பீதியை உண்டு பண்ணுவதற்காக நீங்கள் வந்து இலவச மின்சாரம் கிடையாது என்று சொல்லி, அரசியல் பண்ணுவதற்காகத்தான் நீங்கள் சொல்லுகிறீர்களே தவிர வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. மூப்பனார் எதற்கோ சொன்ன ஒன்றை வைத்துக்கொண்டு, இப்போது அவரைக் கேடயமாகப் பயன்படுத்திக்கொண்டு ஜெயலலிதா தப்பித்துகொள்ள முடியாது. அவர், அப்படியெல்லாம் கேடயமாக ஆகமாட்டார் என்பதை நான் திரு. தாமரைக்கனிக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். மூப்பனார் அவர்கள் சொல்வது வேறு விஷயத்திற்காக, கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களுக்காகச் சொன்னது. இந்தச் சட்டத்தைப்பற்றி மூப்பனார் அவர்கள் எதுவும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

*முற்பகல் 11-25*

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில மின்சார சீரமைப்புக் குழுக் கூட்டம் அங்கே நடக்கிறபோது, இப்போது மத்திய சட்ட அமைச்சராக இருக்கிற தம்பிதுரை அவர்கள் கலந்துகொண்டதாகவும் சொன்னார்கள். அவர் மந்திரிசபையில் இருப்பதால் கலந்து கொண்டிருக்கிறார். ஆனால் கொள்கை முடிவு எடுக்கும்போது அது எங்களுடைய புரட்சித்தலைவியைத்தான் சாரும். இதைப் பொறுத்தவரையில் மத்திய

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 மே 6

சர்க்கார் எங்கள் தலைவியைக் கேட்கவே இல்லை. ஆகவே அதற்காகக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் இலவச மின்சாரம் என்பது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை முடிவு எடுப்பது புரட்சித் தலைவி என்று சொல்கிறார்கள். அப்போது எதற்கு அந்த மந்திரிசபையில் இவர்கள் எல்லாம் கேபினட் அமைச்சர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது இந்தியா முழுவதும் இருக்கிற பிரச்சினை, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இப்போது பஞ்சாபிலும் இலவச மின்சாரம் கொடுக்கிறார்கள். ஆகவே கொள்கை முடிவு எடுப்பதில் ஒரு பார்மாலிடிக்கு வந்து எங்கள் தலைவியைக் கேட்டிருக்கவேண்டும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தாமரைக்கனி அவர்களுக்கு வக்காலத்து வாங்கி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இனிமேலாவது பிரதமர் வாஜ்பாய் அவர்கள், கேபினட் மீட்டிங் நடக்கும்போது ஒரு "ஹாட்-லைன்" டெலிபோன் வைத்துக் கொண்டு, எடுக்கிற முடிவுகளுக்கு ஏற்ப அ.தி.மு.க. அமைச்சர்கள் அந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டாலும்கூட, ஹாட்லைன் மூலமாக போயஸ் கார்டனுக்கும் பேசி, நீங்கள் சம்மதிக்கிறீர்களா என்று கேட்டுவிட்டு, கேபினட்டிலே முடிவு செய்யவேண்டுமென்று நான் வாஜ்பாய் அவர்களுக்கு அவருடைய பழைய நண்பர் என்ற முறையில் அறிவுரை கூற விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் என்பது எந்த மாநிலத்திலும் கொடுக்கவில்லை. நம்முடைய மாநிலத்தில்தான் கொடுக்கிறோம். அதனால் நமது வரவு செலவுக்கு ஏற்றமாதிரிதான் நமது செலவினங்களைப் பண்ணமுடியும். இது வந்து **கிடையாது எதற்கெடுத்தாலும் இலவசமாகக் கொடுப்பதற்கு. ஆகவே கன்சல்ட் செய்யவேண்டும். பாரதப் பிரதமரானாலும் சரி, யாராக இருந்தாலும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 மே 6] [திரு. இரா. தாமரைக்கனி]

சரி, கன்சல்ட் பண்ணியிருக்க வேண்டும். அவர்கள் கன்சல்ட் பண்ணாமல் இருந்தது தப்புதான். **தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள். அதை அவை குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள். இதை வைத்து அரசியல் பண்ணினாலும் பண்ணுவீர்கள். அதை எடுத்துவிடுங்கள், பயமாக இருக்கிறது. அதை எடுத்துவிடுங்கள் (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசியதில் எதையெதை எடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அரசாங்கம் வரவு செலவு செய்யும் போது எதற்கெடுத்தாலும் இலவசமாகக் கொடுக்கமுடியாது. இதில் ** என்று சொன்ன மாதிரியான வார்த்தையை மட்டும் நீங்கள் எடுத்துவிடுங்கள். பிறகு தவறாகப் போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி வேண்டுகோள் ஏற்கப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேமாதிரி மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் சொல்லியிருக்கிறார். இலவச மின்சாரம் வழங்குவது என்பது மாநில அரசுக்குள்ள அதிகாரம். இலவச மின்சாரத்தை இரத்து செய்வதற்கு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று அவர் கூறுவது தவறு என்று கூறியிருக்கிறார். நம்முடைய சட்ட அமைச்சர் ஆலடி அருணா அவர்கள் 1996 ஆம் ஆண்டு இந்தச் சீரமைப்புக் குழுவிற்கான முதலமைச்சர் மாநாட்டில் கலந்துகொண்டு அதில் சம்மதம் தெரிவித்து வந்திருக்கிறார். இது எல்லாம் இப்படி இருக்கும்போது நீங்கள் மத்திய சர்க்காரைக் குறை கூறுவது தப்பு. ஆகவே இது உங்களுடைய கடமை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் திரு. ஆலடி அருணா அவர்கள் 1996 ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு இலவச மின்சாரத்தை இரத்து செய்ய சம்மதம் தெரிவித்தார் என்று மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் சொன்னதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். இதைப்பற்றி சில விஷயங்களை நான்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக இதைப்பற்றி விளக்கமாக நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர், பிறகு கருத்துக்களைச் சொல்ல இருக்கிறார். இடையில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் இன்னொன்றையும் கூறியிருக்கிறார். ஏதோ இலவச மின்சாரம் பறிபோகிறது என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு பிரச்சாரம் செய்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். இது அவருடைய நிலைக்கு உகந்ததல்ல. நான் அவரிடத்திலே வைத்திருக்கின்ற மரியாதைக்கும், மதிப்புக்கும் இது ஏற்றதல்ல. இந்த அவையிலே இருக்கிற எல்லோருக்கும் தெரியும். நாட்டுக்கும் தெரியும். செய்தியாளர்களுக்கும் தெரியும். பத்திரிக்கைக்காரர்களுக்கும் தெரியும். இந்தச் சட்டத்தைப்பற்றிய இந்தப் பிரச்சினை பத்திரிகைகளிலே வெளிவந்தவுடன் அதைப் படித்துணர்ந்த நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இந்த அவையிலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அதிலே அவர்கள் உரையாற்றும்போது, இலவச மின்சாரம் இரத்து செய்யப்படக்கூடிய அபாயம் வந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதற்கு முதலமைச்சரும் ஒத்துக்கொள்கிறாரா என்று அவர்கள் என்னைப் பார்த்துக் கேட்டபோது, இலவச மின்சாரம் இரத்துச் செய்யப்படுவதற்கு நான் இன்றல்ல, ஏற்கெனவே மறுப்பைத் தெரிவித்திருக்கிறேன். ஐக்கிய முன்னணி அரசு நடைபெறுகின்றபொழுதே மறுப்புத் தெரிவித்திருக்கிறேன் என்று குறிப்பிட்டிருக்கிறேன், அவ்வளவுதான். நாங்களாக எடுத்துப்போட்டுக் கொண்டு, இலவச மின்சாரத்தை இரத்து செய்யப் போகிறார் மத்திய அமைச்சர், திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் என்று யாரும் பிரச்சாரம் செய்யவில்லை.

முற்பகல் 11-30

இங்கே பிரச்சினை எழுப்பப்பட்டது. அக்கறை உள்ளவர்கள், ஆர்வம் உள்ளவர்கள், எதிர்க்கட்சியினுடைய கடமை என்ன என்பதை உணர்ந்தவர்கள், இலக்கணம் என்ன என்பதைத் தெரிந்தவர்கள் தங்களுடைய கடமையை அன்றைக்கு ஆற்றினார்கள். பொறுப்போடு இருக்கின்ற ஓர் ஆளும் கட்சி அதற்குரிய பதிலை அன்றைக்குச் சொன்னது விவசாயிகளுக்கு எந்தவிதத்திலும் வேதனையை ஏற்படுத்த மாட்டோம், இலவச மின்சாரம் இரத்துச் செய்யப்படாமல் மாநில அரசு நடந்து கொள்ளும் என்று நான் அன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறேன்.





அடுத்து, இப்போது நம்முடைய திரு. தாமரைக்கனி சொன்னால்கூடப் பரவாயில்லை. திரு. இரா. தாமரைக்கனி எத்தனையோ வேடிக்கையான விஷயமெல்லாம் பேசுவார். ஆனால் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், ஆலடி அருணா, சட்ட அமைச்சர், இந்த இலவச மின்சாரத்தை இரத்து செய்வதை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்ற ஒரு தவறான, உண்மைக்கு மாறான செய்தியைக் குறிப்பிட்டிருக்கின்றார். என் கையில் இருப்பது 'தினத்தந்தி' பத்திரிகை, 6-12-1996. திரு ரங்கராஜன் குமாரமங்கலம் குறிப்பிடுகிற அந்த மாநாட்டையொட்டி வெளிவந்த அந்த 'தினத்தந்தி' பத்திரிகை. 'தினத்தந்தி' மாத்திரமல்ல, என்னிடத்திலே ஆங்கிலப் பத்திரிகையினுடைய செய்திக் குறிப்பும் இருக்கிறது. 6-12-1996இல் 'தினத்தந்தி' யிலே தலைப்பு - 'விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை இரத்து செய்ய மாட்டோம், டெல்லி மாநாட்டில் ஆலடி அருணா அறிவிப்பு'. இதற்குப்பிறகும் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் திரு. தாமரைக்கனி பாணியிலே பேசினால், அது முறையா என்பதைப் பெரிய இடத்திலே இருக்கின்ற, பெரிய வீட்டுப் பிள்ளையான மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தக் கூட்டத்தில், டெல்லியில் நடைபெற்ற அந்த மாநாட்டில் நான் சென்று கலந்துகொள்ள முடியவில்லை. அன்றுதான் நானும், மின்சாரத் துறை அமைச்சரும் சென்னா ரெட்டி அவர்கள் காலமாகிவிட்டதைத் தொடர்ந்து ஐதராபாத் சென்றுவிட்ட காரணத்தால், அன்றைக்குச் சட்ட அமைச்சர் கலந்து கொண்டார். அதிலே பேசும்போது, சட்ட அமைச்சர் சொல்லிய விஷயங்கள் அப்படியே பத்திரிகையில் வந்திருக்கின்றன. 'நிகழ்ச்சி நிரலில் உள்ள பல பிரச்சினைகளில் எங்களுக்கு உடன்பாடு உள்ளது, உதாரணத்திற்கு மின் திட்டங்களைச் சீர்படுத்துதல், நவீனப்படுத்துதல், கணிசமான அளவுக்கு மின் இழப்புகளைத் தவிர்த்தல், மின் உற்பத்திக்கு ஊக்கம் அளித்தல் போன்றவைகளில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை.

ஆனால் சில பிரச்சினைகளில் எங்களுக்கு மாறுபாடு உண்டு. ஒன்று, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதை இரத்து செய்ய முடியாது. விவசாயப் பம்பு செட்டுக்குக் கட்டணம் விதிப்பதை எங்கள் மக்கள் எதிர்க்கிறார்கள். 1972ஆம் ஆண்டு விவசாய பம்பு செட்டுக்குக் கட்டணம் யூனிட்டுக்கு 11 காசு என்று இருந்ததை ஒரு காசு அதிகமாக உயர்த்தி, 12 காசாக ஆக்கியபோது, அந்த ஒரு காசு உயர்த்தியதைக்கூட விவசாயிகள்

ஏற்கவில்லை, எதிர்த்தார்கள், போராடினார்கள். அதற்குப் பின்னர் எல்லா விவசாய பம்புசெட்டுகளுக்கும் இலவச மின்சாரம் அளிக்கும் திட்டம் அமலுக்கு வந்தது. இலவச மின்சாரம் அளிப்பதால் உணவு உற்பத்தி அதிகரித்தது. இலவச மின்சாரம் அளிப்பதைத் திரும்பப் பெற்றால் உணவு உற்பத்தியும் பாதிக்கும், சட்டம்-ஒழுங்கிற்குக் குந்தகம் ஏற்படும். எனவே, விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்ற கொள்கையை ஏற்க இயலாது, அதுமாத்திரம் அல்ல, அவருடைய பேச்சின் முடிவில், 'இந்த மாநாட்டில் நான் எதை வற்புறுத்த விரும்புகிறேன் என்றால், இதுபோன்ற பிரச்சினைகளில் மாநில அரசுகளே சூழ்நிலைக்கேற்ப முடிவுகளை மேற்கொள்ள அனுமதியுங்கள், இந்தப் பிரச்சினைகளில் மத்திய அரசின் அரிய ஆலோசனைகளை வரவேற்கிறோம், ஆலோசனைகளை வழங்குங்கள், ஆணையிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்' என்று ஆலடி அருணா பேசியிருக்கிறார். அதுதான் தி.மு.க.-வின் நிலை, தி.மு.க. அரசின் நிலை. அன்றைக்கிருந்த அரசின் நிலை அதுதான், இன்றைக்கு இருக்கும் அரசின் நிலை இதுதான். மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு ஆலோசனைகளை வழங்கலாம், ஆனால் ஆணையிடாதீர்கள் என்பதுதான். மாநில சுயாட்சியினுடைய தத்துவமே அதிலேதான் அடங்கியிருக்கிறது. அந்தத் தத்துவத்தினுடைய அடிப்படையிலேதான் சட்ட அமைச்சர் ஆலடி அருணா அவர்கள் அன்றைக்குப் பேசினார்கள். அதே செய்தி *6-12-1996* 'இந்து' பத்திரிகையிலும் வெளியாகியிருக்கிறது.

முற்பகல் *11-35*

அதிலேகூட, 'It opposed the levy of any charge for the supply of power to the farm sector. The State Government was not in a position to withdraw the policy of free power supply to farmers. Because of the free power supply, food production had increased. Withdrawal of the concession would only create a law and order problem and lead to decline in food production. So, we are unable to endorse the policy of fixing tariff for the power consume by the farmers.'

அதிலே இறுதியாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'In all these items, we welcome your advisory opinions and not mandatory directions, he said.'

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' *6-12-1996*-அதிலேயும் அருணா பேச்சு வந்திருக்கிறது.



'The Tamil Nadu Government has stated that it is not in a position to withdraw the policy of free power supply to pumpsets of farmers and disagreed on the policy of fixing tariff for the power consumed by the farmers.

Law Minister Aladi Aruna deliberating at the Chief Ministers Conference on power held on December 3, said on Thursday the Government and the people were against levying any charge for the supply of power to the pumpsets of farmers.

Because of the free power supply, the State was able to increase its food production. If the concession was withdrawn, it would create only law and order problem and led to decline in food production, he said.'

இவ்வளவுக்குப்பிறகும், திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், செல்வி ஜெயலலிதா மாதிரியே உண்மைக்கு மாறாகத்தான் பேசுவது என்று ஒரு முடிவு எடுத்துக்கொண்டு பத்திரிகைகளுக்குச் செய்திகள் அறிவிக்கிறார் என்றால், உள்ளபடியே வருத்தப்படுகின்றேன், மிகவும் வருத்தப்படுகின்றேன். திரு. ஆலடி அருணா எங்கே ஒத்துக்கொண்டிருக்கிறார்? புழுதிவாரி இறைப்பதைப்போல எது சொன்னாலும், தாங்கள் பெரிய இடத்திலே இருக்கின்ற காரணத்தால், எது சொன்னாலும் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணுகிற ஓர் அவநம்பிக்கையின் காரணமாக இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். இதை நான் வன்மையாக மறுக்கிறேன். சட்ட அமைச்சர் திரு. ஆலடி அருணா கழக அரசின் சார்பாக அங்கே கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் இலவச மின்சாரம் இரத்து செய்வதைக் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளவில்லை; இரத்து செய்தால் என்னென்ன ஏற்படும், அதனுடைய விளைவுகள் என்னென்ன என்பதையும் எடுத்துரைத்திருக்கின்றார். இத்தனைக்கும் ஆதாரங்களை நான் காட்டியிருக்கிறேன். ஆதாரம் இல்லாமல் பேசுவார்கள்; எதையாவது பேசுவார்கள். சிக்கிக் கொண்டுவிட்டு, நேற்றைக்கு சிக்கிக் கொண்ட பிறகு, திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் கடிதம் எழுதுகிறார். நான் கேட்கிறேன், இவ்வளவு பெரிய சபையிலே நாம் பேசியிருக்கிறோம். முதலமைச்சர் பேசி இருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பேசி இருக்கிறார், மற்ற பொறுப்புள்ள கட்சிகளிலேயிருந்து பேசியிருக்கிறீர்கள். ஏன் அந்தக் கடிதத்தை முதலமைச்சருக்கு எழுதி இருக்கக் கூடாது? வியாக்கியானத்தை அவர்... என்ன செய்வது பாவம்... அங்கே

எழுதாவிட்டால், அங்கே ஆட்சி நிலைக்குமா, நிலைக்காதா என்கிற அந்த அச்சம் இருக்கின்ற காரணத்தால், அங்கே எழுதுகின்றார். எங்கே வேண்டுமானாலும் எழுதட்டும். ஆனால் உண்மை நிலை என்ன என்பதை அவையிலே இருக்கின்ற உங்களுக்கும் நாட்டு மக்களுக்கும், குறிப்பாகத் தமிழ்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் தெரிவிப்பது எங்களுடைய கடமை என்ற காரணத்தால், இந்த விளக்கத்தை அளித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி. (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, நீங்கள் பேசிக்கொண்டே போகிறீர்கள். நேரமில்லை, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் என்பதில் நீங்கள் ஆட்சிக்கு வந்தாலும் சரி, நாங்கள் ஆட்சிக்கு வந்தாலும் சரி, எங்களுக்குக் கருத்து வேற்றுமை கிடையாது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுப்பதை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால், சீராக விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கவேண்டும். இதிலே மக்கள் மத்தியிலே தமிழக அரசே 'இலவச மின்சாரம் இரத்து என்று' ஒரு பீதியை ஏற்படுத்தக்கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் மத்திய அரசு கொண்டு வந்த மின்சார அவசரச் சட்டத்தினுடைய காரணமாக தமிழக விவசாயிகள் மத்தியிலே ஒரு பதற்றம் தொடர்ச்சியாக நிலவிக் கொண்டிருக்கிறது. அதை இந்த அரசு கவனத்திலே கொண்டு, இலவச மின்சார சலுகை இரத்தாகாது என்று அறிவித்தாலும்கூட, இன்னும் மத்திய அரசினுடைய அவசரச் சட்டம் அமுலில் இருக்கின்ற காரணத்தால் விவசாயிகள் மத்தியில் தோன்றி இருக்கக்கூடிய பதற்றத்தை நாம் போக்கியாக வேண்டிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் மத்திய அரசு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கூட்டணியாக இருக்கக்கூடிய அ.இ.அ.தி.மு.க.-வும் ஒத்துக் கொண்டது என்று அவர் அறிக்கை கொடுக்கிறார். அதிலே பங்கு இல்லை என்று அ.இ.அ.தி.மு.க. அறிக்கை கொடுக்கிறது. எனவே, இந்தக் குழப்பம் எப்படி இருந்தாலும்கூட





என்னைப் பொறுத்தவரையில், இந்த மாமன்றத்திலே வேண்டிக்கொள்வது, மத்திய அரசின் இந்த அவசரச் சட்டத்தை எதிர்த்து, அந்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும் என்று புதிய தமிழகத்தினுடைய சார்பாக நான் கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

*முற்பகல் 11-40*

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்மையிலே மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்ற மின்சாரம் தொடர்பான இந்த அவசரச் சட்டமானது தமிழகத்தினுடைய நலனுக்கும், ஒட்டுமொத்த விவசாயிகளினுடைய நலனுக்கும் எதிரானது என்ற காரணத்தினாலே பாட்டாளி மக்கள் கட்சி-2-ன் சார்பிலே நாங்கள் அதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அவர்களுக்கு ஓட்டு போட்ட பாவத்தினாலே அவர்களுடைய கூட்டணியிலே இருக்கின்றவர்கள் இன்றைக்கு இலவச மின்சாரமானது தமிழ்நாட்டிலேதான் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. எனவே தமிழ்நாட்டை **இந்த இலவச மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிற விவசாயிகளைப் **பேசுவது உண்மையிலேயே மிக மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது, வேதனை தரத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே திரும்பப் பெற்றுவிட்டேன். அது நடவடிக்கைக் குறிப்பில் இல்லை. ஆகவே இவர் சொன்னதையும் எடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, அவர் அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டதால், அதெல்லாம் வேண்டாம்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருந்தாலும், இன்றைக்கு விவசாயிகளுக்குத் தரப்படுகின்ற . . .

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அதற்குத்தான் அப்போதே கேட்டேன். எதையெதை எடுக்கவேண்டுமென்று பட்டியல் போட்டுச் சொல்லிவிடுங்கள் என்று கேட்டேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் சொன்ன வாசகம் அப்படியே வந்துவிட்டது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் தாமரைக்கனியைப்பற்றி எப்போதும் - இப்போதும் - பேசியதில்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் தன்னுடைய பெருந்தன்மையின் காரணமாக இதைப் பொருட்படுத்தாமலே இருக்கலாம். ஆனால் தமிழகத்தின் விவசாயிகள் இதைப் பொருட்படுத்துவார்கள். இதை எப்படி அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்? அதனாலேதான் நான் இதனைக் குறிப்பிட்டுச் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் அல்ல.

இன்றைக்கு விவசாயத்திற்குத் தரப்படுகின்ற மின்சாரமானது ஒரு 10 சதவீதமாக இருக்கலாம். அதிலே குறிப்பாக இன்றைக்கு மத்திய அரசாங்கமானது அறிவித்திருக்கின்ற இந்த அவசரச் சட்டத்தின் காரணமாக, குறைந்தது யூனிட்டிற்கு 50 காசு வீதமாவது வசூலிக்க வேண்டுமென்ற ஒரு நிர்ப்பந்தத்தை அதன் மூலமாக அவர்கள் திணிக்க விரும்புகிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு எதிராக உள்ள இந்த அவசரச் சட்டத்தை நாம் இந்த மாமன்றத்தின் மூலமாக அனைத்துக் கட்சிகளினுடைய ஒட்டு மொத்தக் கருத்தோடு ஒரு தீர்மானத்தை இயற்றி, இதனை ஏற்க இயலாது, ஏற்க முடியாது என்பதை மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை ஒரு காரணமாக வைத்து 356-ஐ எது எதற்குப் பயன்படுத்த வேண்டுமென்றுகூட மத்தியிலே ஆட்சியிலே இருப்பவர்கள் அறிந்துதான் பேசுகிறார்க்ளா அல்லது அறியாமல் பேசுகிறார்களா என்று தெரியவில்லை. இந்த அவசரச் சட்டத்தை மாநில அரசுகள் ஏற்க மறுக்குமேயானால், 356 பாயும் என்று சொல்வது மீண்டும் மீண்டும் தமிழக மக்களை, தமிழக மக்களின் உணர்வுகளுக்கு எதிராக ஒரு சதி வலையைப் பின்னக்கூடிய ஒரு சூழ்ச்சியாக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லி, உடனடியாக





அனைத்துக் கட்சிகளினுடைய ஒட்டுமொத்தக் கருத்தை—இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட மாட்டாது என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உறுதிபட அறிவித்திருந்தாலும், அனைத்துக் கட்சிகளினுடைய ஒட்டுமொத்தக் கருத்தைத் தொகுத்து, மத்திய அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இன்றைக்கு மின் துறையிலே ஏற்படுத்தியுள்ள அவசரச் சட்டத்தின் மூலமாகத் தமிழக விவசாயிகள் தங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் இலவச மின்சாரம் பறிக்கப்பட்டு விடுமோ என்கின்ற ஒரு அச்சத்தோடு சென்ற இரண்டு நாட்களுக்கு முன்னால் இந்த அவையிலே எழுப்பப்பட்ட நிலையிலே தமிழக அரசு தன்னுடைய நிலையிலே மிகவும் உறுதியாக இருக்கிறது என்பதை மக்களுக்கு வெளிப்படுத்திக்காட்டியிருக்கிறது. தமிழகத்திலே ஒரு பழமொழி உண்டு. 'பூனைக்கும் தோழன், பாலுக்கும் காவலன்' என்று சொல்வார்கள். அதுபோல இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்தியிலே ஆளுகின்ற கட்சிக்குத் தோழமையாக இருந்துகொண்டு, இங்கே இருக்கின்ற விவசாயிகளையும் காப்பாற்றுவேன் என்கின்ற முறையிலே அவர்களுடைய அறிக்கைகள் இருக்கின்றன. இருந்தாலும், நமது அரசைப் பொறுத்த அளவிலே அவர்கள் என்ன நிலையை எடுததாலும், விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்ற இந்தச் சலுகையை எந்த முறையிலும் இரத்து செய்வதில்லை என்கின்ற உறுதியான எண்ணத்தை தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை வரவேற்று, அந்த நிலையிலே இந்த அரசு உறுதியாக இருக்கவேண்டும். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு என்றைக்கும் தோழனாக இந்த அரசு இருக்க வேண்டுமென்று கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

முற்பகல் 11-45

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி நெம்பர்-1 என்ற முறையிலே நேற்றைக்கு முன்தினம் எங்களுடைய நிலைப்பாட்டினை

[திரு. ஐ. கணேசன்] [1998 மே 6

பற்றி மிகத் தெள்ளத் தெளிவாக இந்த அவையிலே எடுத்துச் சொன்னேன். அதைச் சொல்லும்போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நடித்த ஒரு பாடலின் வரியைக்கூட சொன்னேன். ஆனால், நண்பர் பழனிசாமி அதைக் கேட்காமல் பாட்டாளி மக்கள் கட்சி என்று ஏளனமாக எண்ணிச் சொல்லிவிட்டார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன், பாட்டாளி மக்கள் கட்சி . . . . . (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய கை அசைவைப் பார்த்தால் பணிவாகத் தெரிவிப்பதுபோல் தெரியவில்லை.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள், கவலையில்லை. எந்த நிபந்தனைக்கும் கட்டுப்படாமல் எங்களுடைய டாக்டர் ஐயா இராமதாஸ் அவர்கள், இலவச மின்சாரத்தை இரத்து செய்யும்போது, தூக்குக் கயிறு போராட்டத்தை மேற்கொண்டு பல்லாயிரக்கணக்கான பாட்டாளி மக்கள் கட்சியினர், திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சிறையில் இருந்ததை மார்தட்டி சொல்லி நான் பெருமை அடைகிறேன். ஏழை, எளிய விவசாயிகள், பாட்டாளிகள் அந்தச் சேற்றிலே கை வைத்தால்தான் நாம் வாயிலே சோற்றைப் போட முடியும். இதை மறந்து யாரோ, எங்கேயோ கோடீஸ்வரர் பரம்பரையிலே இருந்தவர்கள் இலவச மின்சாரத்தை இரத்து செய்ய வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னதை நேற்றைக்கு முன்தினம் இந்த அவையிலே நாங்கள் கண்டிக்கிறோம் என்று சொன்னேன். ரங்கராஜன் குமாரமங்கலம் சொன்னதை நான் கண்டிக்கிறேன் என்று நான் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஏன் மறந்துவிட்டு எங்களைக் குத்தி, வேடிக்கை பார்க்கிறீர்கள் என்பதை மட்டும் இந்த அவையிலே சொல்லி, நேற்றைக்குச் சொன்ன அதே நிலையைத்தான் இன்று அல்ல, நாளை அல்ல, என்றுமே பாட்டாளி மக்கள் கட்சி விவசாயிகளுக்காகப் போராடும் கட்சி, இலவச மின்சாரத்தை யார் இரத்து செய்தாலும் நிச்சயமாக நாங்கள் போராடுவோம் என்று சொல்லி அமைகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர், ஐயா டாக்டர் இராமதாஸ் அவர்கள்மீது மிக்க மரியாதை வைத்திருக்கிறவன்.



1998 மே 6] [திரு. ஜி. பழனிசாமி]

அவர்களோடு நெருக்கமான பழக்கம் உண்டு. நடத்தியிருக்கிற போராட்டத்தை பெருமைப்படுத்தக்கூடிய விதத்திலேதான் அதை ஞாபகப்படுத்தினேனே தவிர குற்றம் சொல்ல வேண்டும் என்கிற நோக்கத்திலே இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கொண்டு வந்த மின்சாரம் சம்பந்தப்பட்ட ஒரு அவசரச் சட்டத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. சி. ஞானசேகரன், திரு. கே. சுப்பராயன், திரு. இரா. தாமரைக்கனி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. லா. சந்தானம், திரு. ஐ. கணேசன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோர் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த இலவச மின்சாரம் இரத்து ஆகுமா என்பது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்றைக்கு முந்தைய தினம் 'இந்து' பத்திரிகையிலே வந்த முன்பக்கச் செய்தியை வைத்து இங்கே எழுப்பிய பிரச்சினையையொட்டி, இந்த அவையிலே விவாதம் நடைபெற்றது. மாண்புமிகு உறுப்பினர், மத்திய அரசு கொண்டு வந்த அவசரச் சட்டம் குறித்து இங்கே கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்கள். எங்கே இந்தப் பிரச்சினை வருகிறது என்று படித்துக் காட்டினால் இந்த அவையிலே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், வெளி உலகத்திற்கும் தெளிவாகும் என்ற எண்ணத்தினாலே இதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இலவச மின்சாரம் நீடிக்க வேண்டுமா, இல்லையா என்பது ஒன்று. அந்த இலவச மின்சாரத்தை நீடிக்க விடாமல் செய்வது எப்படி என்பது மற்றொன்று. இப்போது மத்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இந்த அவசரச் சட்டத்தில் 29-ஆவது பிரிவில் 3-ஆவது செக்‌ஷனில் என்ன சொல்லப்படுகிறது என்று கேட்டால் "No consumer or class of consumers shall be charged less than 50 per cent of the average cost of supply of energy . ." அதாவது மின்சார உற்பத்தியில் செலவு எவ்வளவு ஆகிறதோ

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 மே 6

அதிலே குறைந்தபட்சம் 50 சதவிகிதமாவது விவசாயிகள் கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்பதுதான் இந்தப் பிரிவினுடைய நோக்கம்.

அதிலே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். " . . provided that if the State Commission considers it necessary, it may allow consumers in the agricultural sector to be charged less than 50 per cent subject to the condition that the charges less than the said 50 per cent shall not be allowed after the expiry of a period of three years from the commencement of this Ordinance."

*முற்பகல் 11-50*

இப்போதைக்கு வேண்டுமானால் அந்த 50 சதவிகிதத்திலிருந்து கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாம். ஆனால் 3 ஆண்டுகளுக்குப் பிறகு உற்பத்திச் செலவு எவ்வளவோ அதிலே 50 சதவிகிதம் கட்டாயமாக வசூல் செய்ய வேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத்தினுடைய பிரிவு. உதாரணத்திற்கு 3 ஆண்டுகள் கழித்து ஒரு யூனிட் விலை 3 ரூபாய் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு யூனிட்டுக்கு. 1 ரூபாய் 50 காசு விவசாயிகளிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்பது இந்தச் சட்டத்தினுடைய நோக்கம். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள், இது ஐக்கிய முன்னணி ஆட்சியிலேயே கொண்டு வந்தார்கள். அப்போது அதைப்பற்றியெல்லாம் பேசினார்கள் என்று. ஐக்கிய முன்னணி ஆட்சியிலே இப்படி ஒரு சட்டமுன்வடிவு வந்தபோது அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் "The State concerned may, subject to the provisions of sub-Section 2 allow cross-subsidisation of the charges for use of energy between different categories of consumers, subject to the condition that no category of consumers is required to pay less than 50 per cent of the average cost of the supply of energy—என்று சொல்லிவிட்டு, provided that the consumers of energy in the agricultural sector may be required to pay, within a period of three years, from the date on which the charges for every year fixed for the first time after the commencement of this Act, not less than the said 50 per cent of the cost of supply of energy but in any case the said charges shall be less than 50 paise per unit" என்று சொல்கிறார்கள். அவர்கள் கொண்டு வந்த சட்டமுன்வடிவில் 50 சதவிகிதம் வசூல் செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டு, ஆனால் குறைந்தது 50 பைசாவாவது ஒரு யூனிட் மின்சாரத்திற்கு வசூல் செய்ய



1998 மே 6] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டிற்கும் இருக்கக்கூடிய வேறுபாடு. முன்பிருந்த அரசாங்கம் சொன்னது குறைந்தது 50 பைசாவாவது வசூல் செய்ய வேண்டும் என்பது. அது ஒரு சட்டமுன்வடிவு. இப்போது கொண்டு வந்திருக்கின்ற அவசரச் சட்டத்தில் சொல்வது குறைந்தது 50 சதவிகிதம் மின் கட்டணம் வசூல் செய்ய வேண்டும் என்பது. ஆக இந்த வேறுபாடு இருக்கிறது. இன்னொன்று, ஐக்கிய முன்னணி ஆட்சியில் கொண்டு வந்த அந்தச் சட்டத்தில் "the State Government may, on the request of the State Commission, allow cross-subsidisation between any category of consumers in such a manner.......... என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது நுகர்வோரில் ஒரு பிரிவுக்குக் கூடுதலாகவும் ஒரு பிரிவுக்குக் குறைத்தும் வசூல் செய்ய மாநில அரசு கேட்டுக்கொண்டால் மாநில ஆணையம் அனுமதிக்கலாம் என்ற பிரிவும் ஏற்கெனவே கொண்டு வந்த சட்டத்தில் இருக்கிறது.

ஆகவே இப்படிப்பட்ட ஒரு முறை இருக்கின்ற காரணத்தினால் இன்று தமிழக அரசினுடைய நிலைமை என்ன என்று கேட்டால் இலவச மின்சாரம் விவசாயிகளுக்குக் கொடுப்பதன்மூலம் இப்போது தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னுடைய வருவாயைக் கொண்டும் மாநில அரசு கொடுக்கும் ஓரளவு மானியத் தொகைமூலமும் சமாளித்து வருகிறது. ஆனால் மத்திய அரசு கொண்டு வந்துள்ள அவசரச் சட்டத்தின்மூலம் மாநில அரசு மின்சார வாரியத்திற்கு முழு மானியம் கொடுத்தால்தான் இலவச மின்சாரம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்போது மாநில அரசு 500 கோடி ரூபாய் மானியம் தருகிறது என்றால் இந்தச் சட்டத்தின் மூலம் 2,000 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு கொடுக்க வேண்டிய கட்டாயம் மாநில அரசுக்கு ஏற்படும். இதுதான் இந்தச் சட்டத்திலே நமக்கு இருக்கக்கூடிய ஆபத்து. அதனால்தான் நாம் இதைப்பற்றி இங்கே பேசிக்கொண்டு இருக்கிறோம். அதுமட்டுமல்ல. இங்கே இந்தச் சட்டத்திலே மாநில அரசு நினைத்தால் கொடுக்கலாம் என்று சொன்னால் எங்கேயிருந்து கொடுப்பது? 500 கோடிக்கும் 2,000 கோடிக்கும் இருக்கக்கூடிய வித்தியாசத்தை யார் கொடுப்பது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இதன் மூலம் மாநில அரசுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டு இலவச மின்சாரத்தை இரத்து செய்ய வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை நிச்சயம் ஏற்படும் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

*ஐக்கிய முன்னணி அரசு 1996-இல் கொண்டு வந்த இப்படிப்பட்ட சட்டமுன்வடிவில் விவசாயிகளுக்கு — ஏற்கெனவே அந்தச் சட்டத்திலே குறிப்பிட்டுக் காட்டியதைப்போல அப்படி அந்தச் சட்டமுன்வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒரு கடிதம் வந்தபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் குடிசைவாசிகளுக்கும், விவசாயிகளுக்கும் இதனால் இடையூறு வராமல் இருப்பதற்காக இந்த புதிய சட்டமுன்வடிவில் விதி 16, 24, 36 ஆகியவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதாகப் பதில் எழுதலாம் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அந்த ஆணையை ஏற்று நம்முடைய மின்சாரத் துறைச் செயலாளர் அவர்கள் மத்திய அரசுக்கு — முதலமைச்சர் இப்படிப்பட்ட ஒரு ஆணையைப் பிறப்பித்தது 13-11-1997. உடனே 14-11-1997ல் நம்முடைய தமிழக அரசு மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதியது. அந்தக் கடிதத்தில் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால்,* 'I am to state that at present this Government provides free supply of electricity to agriculturists and hut-dwellers for one bulb per hut. I am to request that the clauses listed above, i.e., 16, 24 and 36 may kindly be reviewed by the Government of India so that the policy of the Government is not adversely affected' *என்று இதையும் நம்முடைய அரசு தெளிவாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. எனவே இப்போதுள்ள சட்டத்தில் 50 சதவிகிதத்திற்குக் குறைவாக மின் உற்பத்திச் செலவில் விவசாயிகளிடமிருந்து மின் கட்டணம் வசூல் செய்யவேண்டும் என்றும், 3 ஆண்டுகளுக்குப் பிறகு மின் உற்பத்திக் கட்டணத்திலே 50 சதவிகிதம் வசூலிக்க வேண்டும் என்றும் இருப்பதால் நிச்சயமாக மீண்டும் சொல்கிறேன் இந்த அரசுக்கு நிதி நெருக்கடி ஏற்படும். எனவேதான் இலவச மின்சாரத்தை இரத்து செய்யக்கூடிய சூழ்நிலை இங்கே ஏற்பட்டுவிடுமோ என்று இந்த அரசு அஞ்சுவதால் இதுகுறித்து முடிவு எடுப்பதற்கு முன்னால் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி முடிவு செய்யலாம் என்ற கருத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததையொட்டி நான் இந்த அவையிலே நேற்றைக்கு முன்தினம் அறிவித்து இருக்கிறேன். எனவே, இதுகுறித்து அனைத்துக் கருத்துக்களையும் விவாதிக்க*





*நம்முடைய தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டி முடிவு செய்யலாம் என்று நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். எது எப்படி இருந்தாலும் இந்த அரசைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாகச் சுட்டிக்காட்டியதைப்போல இந்த அரசு இருக்கின்ற வரையில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை (மேசையைத் தட்டும் ஒலி) கொடுத்துக் கொண்டே இருக்கும் என்பதைத் தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.*

**(ஈ) புதிய இரயில் திட்டங்கள் குறித்து மாநில அரசு கோரிக்கை அளிக்காததால் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு பாதிக்கும் என்ற பத்திரிகைச் செய்தி**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அடுத்த சிறப்பு கவன ஈர்ப்பு, மத்திய இரயில்வே பட்ஜெட்டில் தமிழ்நாட்டின் புதிய இரயில் திட்டங்களுக்கு ஒதுக்கீடு பாதிக்கப்படும் நிலை குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு திரு. லா. சந்தானம் அவர்களும், மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன் அவர்களும் அறிவிப்பு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுருக்கமாகப் பேசும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று 'தினமலர்' பத்திரிகையில் ஒரு விரிவான செய்தி நம்முடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. தமிழகத்தின் இரயில்வே திட்டங்கள் தொடர்பாக இதுவரை திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையில் உள்ள தமிழக அரசோ அல்லது மத்திய அரசில் இடம் பெற்றுள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ இரயில்வே அமைச்சகத்திடம் எந்தக் கோரிக்கையையும் கொடுக்கவில்லை. இதனால் தமிழகத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் என்பது மத்திய அரசால் செயல்படுத்த முடியவில்லை என்ற ஒரு செய்தி வந்திருக்கிறது. இது தமிழகத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக நம்முடைய தென் மாவட்டங்களில் இரயில் போக்குவரத்து இப்போது மிக மோசமாக இருக்கிறது. திருச்சியிலிருந்து சென்னை வரை இப்போது அகல இரயில்*

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1998 மே 6

பாதை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். திருச்சிக்குத் தெற்கே இருக்கின்ற மாவட்டங்களில் எல்லாம் மணிக்கணக்காக 4 மணி நேரம், 5 மணி நேரம் தாமதமாகச் சென்னைக்கு வரவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய தமிழக அரசு இதுவரை மத்திய அரசுக்கு இரயில்வே துறையில் என்ன என்ன திட்டங்கள் கொடுக்கவேண்டும் என்று கொடுக்காவிட்டாலும்கூட உடனடியாக இன்றைக்கே ஒரு 'பேக்ஸ்' செய்தி மூலம் மத்திய இரயில்வே துறைக்கு தகவல் கொடுத்து குறிப்பாக நம்முடைய தென் மாவட்டங்களில் மதுரையிலிருந்து இராமேஸ்வரம் வரை ஒரு அகல இரயில் பாதை ஏற்படுத்துவதற்கு 150 கோடி ரூபாய் ஏற்கெனவே நம்முடைய ஐக்கிய முன்னணி அரசு இருந்தபோது அனுமதிக்கப்பட்டுள்ளது. சர்வே எல்லாம் நடந்தது. அது இப்போது என்ன நிலை? எப்போது தொடங்குவார்கள் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்துகின்ற வகையில் செயற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு திருச்சி வரைக்கும் இன்னும் 2, 3 மாதங்களில் அகல இரயில் பாதையில் இரயில் விடுவார்கள் என்று அறிவித்து இருக்கிறார்கள். திருச்சிக்குத் தெற்குப் பகுதியில் காரைக்குடி, மானாமதுரை, விருதுநகர் வரை அகல இரயில் பாதை போடாவிட்டால் அந்தப் பகுதி மக்கள் எல்லாம் நம்முடைய சென்னைக்கு வருகின்ற சூழ்நிலையே மிகுந்த சோகமான சூழ்நிலையாகி விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலையில் புதிதாக, கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை, தூத்துக்குடி, இராமநாதபுரம் பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் வழியாக ஒரு கடற்கரைப் பாதை இரயில்வே துறையில் போடுவதற்கு நம்முடைய அரசு விரைவில் முயற்சி செய்யவேண்டும். இந்தத் துறைகளுக்கு எல்லாம் நம்முடைய மாநில அரசு மத்திய அரசுக்கு விரைவாக தகவல் கொடுத்து இன்றே பேக்ஸ் மூலம் கொடுத்துவிட்டு அதிகாரிகளை அனுப்பி அதோடு நம்முடைய அமைச்சரவையிலிருந்து முக்கியமான அமைச்சர்களை எல்லாம் அழைத்துக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூட டெல்லிக்குச் சென்று இந்தத் துறையில் கவனம் செலுத்தி நம்முடைய இரயில்வே துறையில் தென் பகுதியில் பாதிப்பு இல்லாமல் இருப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



1998 மே 6]

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்குப் பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்தியின் மூலம் இரயில்வே பட்ஜெட் மத்தியிலே கொண்டுவருவதற்கு முன்னால் இங்கே தமிழகத்தினுடைய இரயில்வேயிலே என்னென்ன திட்டங்களை எடுத்துச் செய்ய வேண்டும் என்கின்ற நிலையினைத் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்க்கட்சியாக இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் எந்தவிதப் பரிந்துரையும் செய்யவில்லை என்கின்ற காரணத்தினால் தமிழகத்திற்கு வழங்கப்படுகின்ற அந்த நிதித் திட்டத்தினுடைய ஒதுக்கீடு குறையுமோ என்கின்ற ஒரு கேள்வியினை இன்றைக்குப் பத்திரிகைகள் எழுப்பியிருக்கின்றன. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது அகல இரயில் பாதைத் திட்டம் என்பது தமிழகத்திலே மிகக் குறைவாக இருக்கிறது. கர்நாடக மாநிலம், கேரள மாநிலம் போன்றவைகளில் எல்லாம் இந்தத் திட்டங்கள் ஏற்கெனவே நிறைவாகவே அமல்படுத்தப்பட்டு இருக்கின்றன. இன்னும் நமது தமிழகத்திலே தென் பகுதியிலே இந்த அகல இரயில் பாதைத் திட்டம் என்பது மிகக் குறைவான நிலையிலே அமல்படுத்தப்பட்டிருக்கிறது. வருகின்ற காலத்தில் அவைகளையெல்லாம் நிறைவாகச் செயல்படுத்துவதற்காகத் தமிழக அரசின் சார்பிலே உடனடியாக இந்த இரயில்வே திட்டங்களுக்கான பரிந்துரையினை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். அனுப்பி இருக்கிறதா? அனுப்பவில்லை என்றாலும் உடனடியாக அனுப்புவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தினமலரில், தமிழகத்தில் இரயில்வேத் திட்டங்கள் தொடர்பாக இதுவரை தி.மு.க. தலைமையிலான தமிழக அரசு எந்தக் கோரிக்கையும் கொடுக்கவில்லை என்று கூறியிருப்பது

தவறான செய்தியாகும். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, முதலமைச்சரே இதிலே முக்கிய ஆர்வம் காட்டி, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்ற செய்திகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அப்பொழுது மத்திய அமைச்சராக இருந்த மாண்புமிகு பஸ்வான் அவர்கள் சென்னைக்கு வந்தபொழுது இந்தச் செயலகத்திலே இருக்கிற அமைச்சரவையிலேயே அந்தத் துறை அதிகாரிகளோடு ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். 9-7-1996இல் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டு, 6-7-1996 - மன்னிக்கவும் 4-7-1996இல் அனுப்பப்பட்டு, 6-7-1996இல் அந்தக் கூட்டம் நடைபெற்றது. 6-7-1996இல் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் முதலமைச்சரவர்களும், மத்திய இரயில்வே அமைச்சரவர்களும், அமைச்சரவைக் கூட்டத்திலேயே கலந்து கொண்டு, அதோடு இரயில்வே போர்டைச் சார்ந்த அதிகாரிகள், அப்பொழுது சேர்மனாக இருந்த, Khan என்பவர், Member (Electrical) Santhanam என்பவர், Member (Mechanical) Sinha, Adviser Srivathsava, Ramachandran, K.P. Singh போன்ற மத்திய இரயில்வேத் துறை அதிகாரிகளும், மத்திய இரயில்வே அமைச்சரும் கலந்து கொண்டு, முதலமைச்சரவர்களும், தலைமைச் செயலர் அவர்களும் கலந்து கொண்டு, போக்குவரத்துத் துறை அமைச்சர் என்ற முறையிலே நானும் அதிலே கலந்துகொண்டு, அதிலே தமிழகத்தின் புறக்கணிக்கப்பட்ட செய்திகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, அதிலே மினிட்டிலேயே இருக்கிறது, எந்தெந்தக் கருத்துக்கள் அதிலே வாதிடப்பட்டன என்று.

Negligence shown by Railway Administration in release of funds to Tamil Nadu, lowest broad gauge net work in Tamil Nadu, Dindigul-Tambaram conversion project pending for the last 4 years, adequate funds may be provided for immediate completion, the Railway Administration should also take up conversion projects between Vridhunagar-Quilon, Tenkasi-Ambasamudram, Tirunelveli-Tiruchendur, Villupuram-Chidambaram-Kumbakonam-Thanjavur-Tiruchirappalli, Tiruchirappalli-Karaikudi-Aruppukkottai-Vridhunagar, Cuddalore-Salem and Madurai-Bangalore. These projects are vital for the economic development of the





backward regions of the State. Mass Rapid Transit System project. அதையும் மூன்று கட்டங்களையும் உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது.

Suburban section between Beach and Tambaram should be converted into broad gauge, double line should be provided between Sholapur and Guntakkal to accelerate freight traffic between Madras and Bombay. Integral Coach Factory should be modernised and production capacity to be increased. Daily Express trains between Bombay and Kanyakumari to be introduced. Direct train services to be introduced between Delhi and Kanyakumari.

இந்தக் கோரிக்கைகள் எல்லாம் அப்பொழுது மத்திய அமைச்சரோடு விவாதிக்கப்பட்டு, அவர்கள் எதையெதை ஏற்றுக் கொண்டார்கள் என்ற குறிப்புகளையும் அங்கே மத்திய இரயில்வே அமைச்சரவர்களும் சுட்டிக்காட்டினார்கள்.

முதலமைச்சரே, இதுவரையில்லாத அளவிற்கு மத்திய இரயில்வே அமைச்சரோடு தமிழகம் புறக்கணிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி இந்தத் திட்டங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இதோடு அவர் விட்டுவிடவில்லை. இதனுடைய தொடர் நடவடிக்கையாக 23-11-1997லே இதே திட்டங்களை வலியுறுத்தி மாண்புமிகு இரயில்வே அமைச்சரவர்களுக்கு நேரிடையாக ஒரு கடிதமும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, கடிதம் எழுதியது மட்டுமின்றி, நேரிடையாக என்னை அனுப்பி இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசைப் பொறுத்த வரையில், தொடர் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, புதிய அரசு வந்ததற்குப் பிறகுகூட, அதனுடைய வற்புறுத்தலின் காரணமாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாகத்தான் சேலம்-கரூர் புதிய இரயில் பாதை துரிதப்படுத்தப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

[டாக்டர் க. பொன்முடி] [1998 மே 6

பிற்பகல் 12-05

இந்தப் பத்திரிகைகளிலேகூட எழுதியிருக்கிறார்கள். அகல இரயில் பாதை அமைக்கும் பணி கடந்த 10 ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நடந்துகொண்டிருந்தது, இப்போதுதான் சூடு பிடித்துள்ளது என்று எழுதியிருக்கிறார்கள். இந்தச் சூடு பிடித்ததற்கு யார் காரணம் என்பதைப் பற்றி பத்திரிகைகளுக்கு எழுத மனது வரவில்லை, 'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பதுபோல்' இப்போது எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளைச் சொல்லி, இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா என்று கேட்டுவிட்டு எழுதியிருந்தால் நன்றாக இருக்கும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகத்தான் அந்த இரயில் பாதை அகலப்படுத்தும் பணிகூட ஜூன் மாதமே முடிக்கப்படும் என்று இங்கே மத்திய அமைச்சர் அறிக்கை தந்தபோது பத்திரிகைகளுக்கே உறுதியளித்து, அந்தப் பணியும் விரைவுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

திருச்சி-தஞ்சாவூர் பாதைகூட அகல இரயில் பாதையாக்க 11 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய முயற்சியின் காரணமாக இன்று நிறைவேற்றப்பட்டு முடிவுற்றிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் புதிய அரசு வந்ததற்குப் பிறகுகூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறபோது ஃபேக்ஸ் அனுப்ப வேண்டும் என்று சொன்னார்கள். ஃபேக்ஸ் முதலிலேயே அனுப்பப் பட்டிருக்கிறது என்பதையும் அவருக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், அவர் என்னையும் நேரிடையாக மத்திய இரயில்வே துறை அமைச்சரைச் சந்தித்து இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் உடனடியாக நானும், அடுத்த வாரம் அவரிடம் தேதி கேட்டு, மத்திய இரயில்வே அமைச்சரிடம் தேதி கேட்டு நேரிடையாகச் சென்று இந்தத் திட்டங்களைப் பற்றி வலியுறுத்தவிருக்கிறேன். இந்தக் கடிதங்களின் மூலமாக வலியுறுத்தப்பட்டிருக்கின்ற திட்டங்களைப் பற்றி மட்டும் இங்கே சுருக்கமாகச் சொல்லி விடைபெறுகிறேன்.

இதிலே, குறிப்பாக இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற திட்டங்கள்தான் அனுமதி அளிக்கப்பட்டு, திட்டங்கள் இன்னும் தொடங்கப்படாமல் இருப்பதை விரைவுபடுத்த வேண்டும் என்று



1998 மே 6] [டாக்டர் க. பொன்முடி]

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். கரூர்-சேலம் அகல இரயில் பாதைத் திட்டத்தையும் விரைவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

செங்கல்பட்டு-அரக்கோணம், இந்தப் பகுதியையும் இணைத்துத் தரவேண்டும் என்றும், உடனடியாக அகல இரயில் பாதையாக அமைத்துத் தருகின்ற பணியை துரிதப்படுத்த வேண்டும் என்றும் எழுதியிருக்கிறார்கள்.

திருச்சிராப்பள்ளி-நாகூர், இதிலே திருச்சிராப்பள்ளி-தஞ்சாவூர் வேலை முடிவு பெற்றாலும், தஞ்சாவூர்-நாகூர் அகல இரயில் பாதை போடும் பணியை விரைவுபடுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

லஸ்ஸியிலிருந்து வேளச்சேரிக்கு, இரண்டாவது கட்டத்திற்கான நிதியை ஒதுக்கி உடனடியாக அந்தப் பணியை விரைவுபடுத்த வேண்டும் என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

சென்னை-விழுப்புரம் எலெக்ட்ரிஃபிகேஷன் — பாதை அகல இரயில் பாதையாக மாற்றப்பட்டாலும் அதை மின்மயமாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

சென்னை பீச்-தாம்பரம், சுபர்பன் டிரெயின், இதற்காக அந்தப் பொது மேலாளரே மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து, தமிழக அரசு 50 சதவீதம் நிதியைக் கொடுத்தால் உடனடியாக அதைச் செய்வோம் என்று சொன்னார். மாண்புமிகு முதல்வர் அவர்களும் மத்திய அரசாங்கத்தினுடைய கோரிக்கையை ஏற்று இந்த சுபர்பன் இரயில் பாதையை அகலப்படுத்துவதற்காக இந்த ஆண்டு 30 கோடி ரூபாயை ஒதுக்குகிறேன் என்று சொல்லி கடிதம் கொடுத்து, உடனடியாக அந்தப் பணியைத் துவக்குமாறு சொல்லி அவர்களுக்கு ஒத்துழைப்பையும் கொடுத்திருக்கிறவர்தான் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். ஆகவே அவைகளையெல்லாம் மறந்துவிட்டு, இந்த அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிற தவறான தகவலுக்காக, இந்தப் பதிலையாவது சொல்லி விளக்கம் அளிக்க வேண்டும். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், இந்தப் பணியை விரைவுபடுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது.

[டாக்டர் க. பொன்முடி] [1998 மே 6

அதுமட்டுமின்றி, குயிலான்-திருநெல்வேலி-திருச்செந்தூர் மற்றும் திருநெல்வேலி-விருதுநகர், இந்தப் பாதைப் பணிகளையும் துவக்க வேண்டும் என்று கூறியிருக்கிறோம்.

இராமேஸ்வரம்-மதுரை, இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல அதற்கும் சாங்ஷன் செய்யப்பட்டாலும், 1997-98-இல் நமக்குக் கொடுத்திருக்கிற இந்தத் திட்டங்கள் எல்லாம், இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் அடிப்படையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் அடிப்படையிலே, மத்திய இரயில்வே துறை அமைச்சரும் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் அடிப்படையிலே, அப்போது மத்திய தொழில் துறை அமைச்சராக இருந்தவரும், நிதியமைச்சரும் இதற்கு ஆதரவு கொடுத்ததன் விளைவாகத்தான் இந்தத் திட்டங்கள் எல்லாம் நமக்குக் கிடைத்தன. 1997-98லே இராமேஸ்வரம்-மதுரை திட்டத்திற்கு 240 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இன்னும் பணி தொடங்கப்படவில்லை.

அதைப்போலவே, விழுப்புரம்-தஞ்சாவூர், கடலூர், சிதம்பரம் வழியாகச் செல்லும் பாதை அகல இரயில் பாதையாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. கடலூர்-சேலம், விருத்தாச்சலம் வழியாக சேலம் செல்லும் பாதையையும் அகலப்பாதையாக ஆக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

விருதுநகர்-கொல்லம், பாதையை அகல இரயில் பாதையாக ஆக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. காட்பாடி-விழுப்புரம், அந்த இரயில் பாதையையும் அகலப்பாதையாக ஆக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

Mass Rapid Transit System இங்கே, சென்னையிலே இருக்கிற அந்தத் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தினுடைய மூன்றாவது கட்டமான, வேளச்சேரியிலிருந்து கிண்டி வரைக்கும், கிண்டியிலிருந்து கோயம்பேடு வரையிலும், கோயம்பேட்டிலிருந்து வில்லிவாக்கம், வில்லிவாக்கத்திலிருந்து திருவொற்றியூர் இந்த நான்கு திட்டங்களையும் மிகவும் விரைவுபடுத்த வேண்டும் என்றும் இன்னொரு முனையிலிருந்தும் இந்தப் பணி தொடங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறோம்.



1998 மே 6] [டாக்டர் க. பொன்முடி]

அதுமட்டுமின்றி, மேம்பாலங்கள், கண்டம்பாக்கம், உளுந்தூர்பேட்டை, திருவள்ளூர், தென்னூர், பாலக்கரை, ஸ்ரீரங்கம், விழுப்புரம் ஆகிய இடங்களிலே தேசிய நெடுஞ்சாலைகளுக்கு மேலாக இரயில் - பாலங்களை அமைக்க வேண்டும் என்றும் இந்த அரசு அவர்களை வலியுறுத்தி வருகிறது. ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், இரயில்வே துறையுடன் தொடர்பு கொண்டு இந்தப் பணிகளை விரைவுபடுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது. பத்திரிகைகள் இந்தக் கோரிக்கைகளையும் வலியுறுத்துகிறபோது, அதோடு சேர்த்து அவர்கள், பொதுமக்களுடைய கோரிக்கைகளையும் வலியுறுத்தினால் நம்முடைய மாநிலத்திற்கு வேண்டிய திட்டங்களைப் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, இந்த அரசு அனைத்துத் திட்டங்களையும் எடுக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது என்ற விளக்கத்தைச் சொல்லி அமர்கிறேன்.

பிற்பகல் 12-10

## 3. அறிவிப்புகள்

### (அ) வீட்டு வசதித் துறை மானியக் கோரிக்கையை வேறு ஒரு நாள் எடுத்துக் கொள்ளுதல்

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் பிற்படுத்தப்பட்டோர் மானியம் விவாதிக்கப்பட்டு, அமைச்சர் பதில் சொல்லவேண்டும் என்பது குறிப்பு. ஆனால் அது பிற்படுத்தப்பட்ட காரணத்தாலோ (சிரிப்பு) வேறு என்ன காரணத்தாலோ, இந்த மானியம் பிற்படுத்தப்பட்ட நிலைக்கு இன்றைக்கு ஆளாகியிருக்கிறது. எப்படி ஆதிதிராவிடர் நலத் துறையிலே எனக்கு அக்கறை இருக்கிறதோ அதுபோல, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலும் அக்கறை உண்டு என்ற காரணத்தால், இந்த மானியம் இப்பொழுது எடுத்துக்கொள்ளப் பட்டாலும்கூட, 1-30 மணியளவில் அதை நிறைவு செய்துவிட்டு, வீட்டு வசதி மானியக் கோரிக்கையை இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய அளவில், பேரவைத் தலைவர் அவர்கள் வந்த பிறகு,

அலுவல் ஆய்வுக் குழுவில் அதுபற்றி யோசித்து, இன்னொரு நாள் வீட்டுவசதி வாரிய மானியத்தை வைத்துக்கொள்ளலாம்; வீட்டு வசதியை பிறகு பார்ப்போம்; இன்று பிற்படுத்தப்பட்டோரை முன்னேற்றுவோம் என்பதற்கு ஏதுவாக, தாங்கள் அவையிலே உள்ள கட்சிக்காரர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து ஆணையிட வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மானியத்தை இன்னொரு நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கோரிக்கையின்படி இன்று மாலையும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டம் மே 15ஆம் தேதியுடன் முடிவதாக இருந்தது. இப்பொழுது 29 வரைக்கும் நீட்டித்திருக்கிறீர்கள். பிற்படுத்தப்பட்டோர் மானியத்தில் பேசுவதற்கு நேரம் ஆகிவிட்டது என்று சொல்லி, வீட்டு வசதி மானியத்தை இன்னொரு நாள் எடுத்துக்கொள்வதாகச் சொல்கிறீர்கள். இப்படி நீடித்துக்கொண்டே போகும்போது எங்களுக்கு சந்தேகமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களே பல்வேறு அறிவிப்புக்களைக் கொடுக்கிறீர்கள். ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்பு என்று கொடுக்கிறீர்கள். அவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ளா விட்டால் அதற்கும் சங்கடப்படுகிறீர்கள்.





**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை, மாலையில் வீட்டுவசதி மானியத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இன்னொரு நாளைக்கு நீட்டிக்காதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுதே மணி 12-12 ஆகிவிட்டது. எல்லா உறுப்பினர்களும் பேசி, அமைச்சர் பதில் சொல்லி 1-30 மணிக்குள் முடியாது. அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வீட்டு வசதி மானியக் கோரிக்கையை இன்னொரு நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீட்டித்துக்கொண்டே போவதால், மக்கள் மத்தியில் 356-க்காக நீட்டிக்கிறார்களோ என்ற சந்தேகம் வருகிறது. அந்த சந்தேகத்தைப் போக்குங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது நீடித்துக் கொண்டிருக்கும். கவலைப்பட வேண்டாம். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படுகிறது.

### (ஆ) நிகழ்ச்சி நிரலில் உள்ள கவன ஈர்ப்பு ஒத்திவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கவன ஈர்ப்பு வருகின்ற 12ஆம் தேதி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. இரா. ஆவுடையப்பன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர். (குறுக்கீடு) திரு.டி. மணி, கொஞ்சம் இருங்கள், அவர் அறிக்கையை அளித்துவிடட்டும்.

[1998 மே 6

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'சமுதாய நல வளர்ச்சி' குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைமீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் பதினொன்றாவது (பதினோராவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையினைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடசேரி பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக 2 ஆயிரத்திற்கும் அதிகமான கைத்தறித் தொழிலாளர்கள் பட்டினியில் இருக்கிறார்கள் என்ற அறிவிப்பு . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே நேரம் ஆகிவிட்டது. அதனால்தான் மானியக் கோரிக்கையையே இன்னொரு நாளைக்கு மாற்றி வைத்திருக்கிறோம். இதை அடுத்த நாள் எடுத்துக்கொள்ளலாம்.

## 6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### கோரிக்கை எண் 31-பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998-99ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 31-பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.



1998 மே 6]

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.89,44,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2668, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் பி.சி. நலத் துறைமூலம் விரைந்து கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.89,44,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 218, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,44,65,000 -ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2904, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,44,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3073, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,44,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1696, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,44,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1033, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2504, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதியில் பிற்பட்ட மாணவர் விடுதி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,44,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2029, திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2266, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் மறவர் சமுதாய மக்களுக்கு மற்ற மாவட்டங்களில் அளிப்பதுபோல சீர்மரபினருக்கான சலுகைகளை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,44,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3276, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி ஒன்றும், மாணவியர் விடுதி ஒன்றும் தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,44,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2314, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வேளாங்கன்னியில் பிற்பட்டோர் துறை சார்பில் மாணவர் விடுதி ஒன்றை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



219095

[திரு. ஜி. நிஜாமுதீன்] [1998 மே 6

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,44,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 238, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர், பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கும் கடனில் ஏழை மக்களின் நலன் கருதி பயனாளிகளின் பங்கை 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,44,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1832, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to declare the Vokkaliga Community as Most Backward Class in the State", I move—

"That the allocation of Rs. 89,44,65,000/- under Demand No.31 - Welfare of the Backward Classes, Most Backward Classes and Denotified Communities be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 629, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2593, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி நகரில் பிற்பட்டோருக்கான பெண்கள் விடுதி ஏற்படுத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



1998 மே 6] [திரு. வை. சிவபுண்ணியம்]

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,44,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3944, திரு. பி.ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1359, திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி அவற்றை சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. விவாதத்தில் பங்கேற்கிற உறுப்பினர்கள் காலத்தின் அருமை கருதி தங்களுடைய உரையை சுருக்கமாக அமைத்துக்கொள்ள வேண்டும். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

@ 213 முதல் 245 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[1998 மே 6

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு அனுமதி அளித்தமைக்காக நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் ஆகிய இந்த மூன்று சமுதாயத்தினருக்கும் என்று தனியாக மானியம் கொண்டு வந்ததற்காக நான் மிகவும் பாராட்டுகிறேன். இப்போது நாம் படிப்பு வசதிகளை அதிகமாகச் செய்கிறோம். அவர்களின் கல்விக்காக நாம் நிறைய உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இப்போது நாம் கொடுத்து வருகின்ற 10 ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி என்பதை பிளஸ்-2 வரைக்கும் இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்லாமல், அவர்களுக்கு புத்தகங்களை இனாமாகக் கொடுக்கின்றோம். அப்படிக் கொடுக்கின்றபோது, அவர்களுடைய பெற்றோர்களுடைய ஆண்டு வருமானம் 25,000 ரூபாய்க்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அரிசன மாணவர்களுக்கு சீருடைகளை நாம் இனாமாகக் கொடுப்பதைப் போன்று, இவர்களுக்கும் சீருடைகளை நாம் இனாமாகக் கொடுக்கிறோம். அந்தத் துணிகளை நாம் ஆண்டுக்கு இரண்டு முறை கொடுக்கும்போதும், அவர்களுடைய பெற்றோர்களுடைய ஆண்டு வருமானம் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு மிகைப்படாமல் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. இப்படி வருமான அடிப்படையிலே பார்க்காமல், எங்கெல்லாம் ஏழை மக்கள் இருக்கின்றார்களோ, அவர்களுக்குத் துணிகளையும், புத்தகங்களையும் இனாமாக வழங்குவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, புத்தகம் கொடுப்பதில் மிகவும் காலதாமதம் ஏற்படுகின்றது. அதற்கு என்ன காரணம் என்று பல இடங்களில் விசாரிக்கின்றபோது, அந்தப் பள்ளிகளின் த்லைமையாசிரியர்கள் 'இன்டென்ட்' கொடுப்பதிலே காலதாமதத்தை ஏற்படுத்துகிறார்கள். ஆகையினால், புத்தகம் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகின்றது என்று சொல்கிறார்கள். ஆகவே, ஜூன் மாதம் முதல் வாரத்திற்குள் அந்த மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டிய புத்தகங்களை, நோட்டுப்



1998 மே 6] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

புத்தகங்களைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சீருடை கொடுப்பதைப் பொறுத்தவரையில், சமூக நலத் துறையினர்தான் சரியான முறையிலே அளவெடுத்து, தைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்து வருகிறார்கள். அப்படி அளவெடுத்துத் தைக்கும்போது, ஆண் பிள்ளைகள் என்றால், டிரவுசர், சட்டை போட்டுக்கொண்டு வரும்போது ஒன்றும் தெரியவில்லை. ஆனால், பெண் பிள்ளைகள் பாவாடை சட்டை போட்டுக்கொண்டு வரும்போது, சுருக்கமே இல்லாமல், ஏதோ முண்டு கட்டிக்கொண்டு போவதைப்போல, மலையாளத்துக்காரர்கள் கட்டுகிறார்கள் இல்லையா, அந்த மாதிரி இருக்கிறது. இப்போது, இங்கு மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்கூட இருக்கிறார்கள். அவர்கள் தைத்துத் தருகின்ற துணி அளவோடு இருக்க வேண்டும். குழந்தைகள் யூனிஃபார்ம் போட்டுக் கொண்டு, வெளியே வந்தால் பார்ப்பதற்கு இலட்சணமாக இருக்க வேண்டும். ஆகையினால், இந்தத் துணிகளைத் தைத்துக் கொடுப்பதிலே ஜாக்கிரதையாக, அளவெடுத்துத் தைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்லாமல், பல இடங்களில் ஹாஸ்டல்கள் வைத்து இருக்கிறோம். அவற்றில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 512 மாணவர் இல்லங்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 430 மாணவர் இல்லங்களும் வைத்திருக்கிறோம். இதில் இருக்கின்ற குழந்தைகளுடைய எண்ணிக்கை 48,819 என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. எனவே, எங்கெல்லாம் மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இவர்களுக்கு கட்டாயமாக ஹாஸ்டல் வசதி வேண்டும். காரணம் என்னவென்றால், மிகுந்த எண்ணிக்கையுள்ள ஏழ்மை நிலையிலே இருக்கக்கூடியவர்களுக்கு இதை நாம் செய்து கொடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-20

1989-90 ஆம் ஆண்டிலே, இந்த மாமன்றத்திலே நானும் ஒரு உறுப்பினர். அப்போது நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான், இங்கே முதலமைச்சராக இருந்தார்கள். அன்றையதினம் நான் சொன்னேன். அதாவது அரிசன மக்களுக்கு

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1998 மே 6

வீட்டடி மனைகளை இனாமாக நாம் வாங்கிக் கொடுக்கிறோம்; அவர்களுக்கு இனாமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம்; ஆனால், பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் உள்ள மக்களுக்குக் கட்டாயமாக, அவர்கள் எந்த சாதியாக இருந்தாலும், மதமாக இருந்தாலும், வீடு இல்லாமல் இருப்பவர்களுக்கு 3 சென்ட் இடம் அரசாங்கமே வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். அதோடு மட்டுமல்லாமல், வீடு கட்டும்போது, அவர்களுக்கு முழுக்கவும் மானியமாகவே கொடுக்க முடியாவிட்டாலும், மூன்றிலே ஒரு பங்கு மானியமாகவும், மூன்றிலே இரண்டு பங்கு கடனாகவாவது கொடுக்க வேண்டுமென்று அன்றையதினம் கூறினேன். அப்போதே, முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்: மாண்புமிகு அம்மையார் அவர்கள் சொன்னதை நானும் உள்ளபூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். மனம் குளிரக் கேட்டுக் கொண்டிருந்தேன் என்று சொல்லி, அதற்குப் பிறகுதான் எல்லா மக்களுக்கும், ஏழையாக இருக்கக்கூடிய எல்லா சாதி மக்களுக்கும், எல்லா சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கும், இடம் இல்லாதவர்களுக்கு 3 சென்ட் இடம், வீட்டடி மனை இனாமாக வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு சட்டத்தை நாம் கொண்டு வந்தோம். ஆனால், அது கிராமப்புறங்களில் இன்னும் சரிவர நிறைவேற்றப்படவில்லை. காரணம், அது அவர்களுக்குத் தெரியவில்லை. கிராமப்புறங்களில் எங்கேயோ மூலையிலே இருக்கிற மக்களுக்கெல்லாம் வீடுகள் இல்லை. இதுகுறித்து பரவலாக அவர்களுக்குத் தெரியப்படுத்தவில்லை. ஆகவே, அத்தனை மக்களுக்கும் அதுகுறித்து தெரியப்படுத்தி, அத்தனை மக்களுக்கும் நாம் வீட்டடி மனைகளை வாங்கிக் கொடுப்போமேயானால், சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ரா. சேதுநாதன் தலைமை)*

அடுத்து, இப்போது படித்துவிட்டு வெளியே வருகிறார்கள். அவர்கள் தொழில்களைத் தொடங்குவதற்கு பயிற்சி மையங்கள் 3 இடங்களில் நாம் வைத்திருக்கிறோம். மதுரையிலே செக்கானூரணி, இராமநாதபுரத்திலே முதுகுளத்தூர், திருநெல்வேலியிலே வீரகேரளம்புதூர் என்ற மூன்று இடங்களிலே வைத்திருக்கிறோம். அவ்வாறு ஐ.டி.ஐ. படித்துவிட்டு வெளியிலே வருபவர்களுக்கு — இவ்வாறு படிப்பவர்கள் பத்தாவது அல்லது பிளஸ்-2 படித்துவிட்டு, கல்லூரியிலே சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு இல்லாதவர்கள்; இப்படிப்பட்டவர்களுக்கு—



1998 மே 6] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

தொழில் தொடங்க, மூன்று இடங்கள் என்று மட்டுமல்லாமல், ஒவ்வொரு ஜில்லாவிலேயும் ஏற்படுத்தி, அவர்களை நிறைய ஊக்குவிக்க வேண்டும். அதற்கு என்ன காரணம் என்பதை நான் சொல்கிறேன். என்னுடைய பழைய தொகுதி சோழவந்தான் தொகுதி. அங்கே நான் சென்று பார்க்கிறபோது, லக்கம்பட்டி என்ற ஊர், அது மாண்புமிகு மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சந்தானம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்போது அவர்களுடைய தொகுதி. அந்த ஏரியாவிலே, நான் பத்தாண்டுகளாக சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். அந்த லக்கம்பட்டியிலே கம்பளத்து நாயக்கன்மார்கள்தான் அதிகமாக இருப்பார்கள். அந்த ஊருக்குச் செல்லும்போது, 'என்னப்பா, அக்காளுக்கு என்ன கொடுப்பீர்கள் சாப்பிடுவதற்கு' என்று கேட்கும்போது, 'அக்காள், எங்கள் வீட்டிலே கூழ்தான் இருக்கிறது; அதை நீங்கள் குடிப்பதா?' என்று கேட்பார்கள். 'அதைக் கொடுங்கள்' என்று சொல்லி, அந்தக் கூழையும், வெங்காயத்தையும் வாங்கி, நான் குடித்திருக்கிறேன். அப்படி இன்னும்கூட, அந்தக் கிராமங்களிலே இருக்கக்கூடிய நாயக்கன்மார்கள், தொட்டிய நாயக்கன்மார்கள் போன்றவர்கள் எல்லாம், மிகவும் பின்தங்கிய நிலையிலே வீடுகள் இல்லாத நிலையிலே, நல்ல ஆகாரம் சாப்பிட முடியாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், அவர்களுக்கெல்லாம், வீடு கட்டிக் கொடுப்பதிலே, எப்படி அரிசன மக்களுக்கு நாம் வீடுகள் கட்டிக் கொடுக்கிறோமோ அதேபோன்று கட்டிக் கொடுக்க வேண்டும். முழுப் பணமும் மானியமாகக் கொடுக்காவிட்டாலும்கூட, பாதிப் பணம் — 30 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு வீடு என்றால், அதிலே 15 ஆயிரம் ரூபாய் — மானியமாகக் கொடுங்கள். பாக்கி 15 ஆயிரம் ரூபாய் கடனாகக் கொடுங்கள். இவர்களுக்காக, மூன்றாண்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைப் போடுங்கள். அந்த மூன்று ஆண்டுகளுக்குள்ளாக, தமிழகத்திலே இருக்கக்கூடிய பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய மக்கள், சீர்மரபினர், அரிசன மக்கள் அத்தனைப் பேர்களுக்கும் வீடு கட்டிக் கொடுப்பதற்கு, 'தாட்கோ' மூலமாக இருந்தாலும் சரி, ரிசர்வ் வங்கி மூலமாக இருந்தாலும் சரி, கடனை வாங்குங்கள். கடனை வாங்கி, அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுங்கள். அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்துவிட்டு, அந்தப் பணத்தை கொஞ்சம் கொஞ்சமாக, பாதிப் பணம் மானியமாகவும், பாதி கடனாகவும் கொடுக்கக்கூடிய பணத்திலே, நாம் திரும்ப வாங்கிக் கொள்ளலாம். இந்த நிலைமையை நாம் உருவாக்கினால்தான், மூன்றாண்டுகளுக்குள்ளாக எல்லா மக்களுக்கும் நாம் இடம் கொடுத்தோம் என்ற நிலை உருவாகும்.

இப்போது நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். நிலப்பரப்பு விரியவில்லை. நிலப்பரப்பு குறுகிக் கொண்டே வருகிறது. இப்போதுள்ள நிலத்திலேதான் ரோடு போடுகிறோம்; கட்டடங்கள் கட்டுகிறோம்; வீட்டுமனை கொடுக்கிறோம். ஆகவே, நிலப்பரப்பு குறுகிக் கொண்டே வருகிறது. அவர்களுக்கெல்லாம் மூன்றாண்டுத் திட்டம் என்ற அளவில் கிராமங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது, 'அப்பார்ட்மென்ட்ஸ்' — அதாவது 4 அடுக்கு மாடி வீடுகளாக, 5 அடுக்கு மாடி வீடுகளாக, அவற்றைக் கெட்டியான முறையிலே கட்டிக் கொடுத்து, நீண்டநாட்களாக நிற்கக்கூடிய அளவிலே அவர்களுக்கு அந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும் மேற்கொள்ள வேண்டுமென்று நான் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஐடிஐ. பற்றி சொல்லும்போது, அதிலே ஃபிட்டர்கள், வெல்டர்கள், தகடு மடிப்பவர்களுக்கான பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்து வருகிறார்கள். அவர்கள் படித்து வெளியிலே வந்தபிறகு, எல்லா ஃபிட்டர்களுக்கும் வேலை கிடைப்பதில்லை. எல்லா வெல்டர்களுக்கும் வேலை கிடைப்பதில்லை. ஆகையால் அப்படி தொழில் படிப்பை முடித்துவிட்டு வெளியே வரக்கூடியவர்களுக்கு நாம் தொழில் நடத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

உண்மையிலேயே சாதிச் சான்றிதழ் வாங்குவதிலே நிறைய சிரமங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். நாம் குடும்ப அட்டைகள் கொடுக்கின்றோம். அந்தக் குடும்ப அட்டை கொடுக்கும்போது அதில் குடும்பத்திலுள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்கள், அவர்களுடைய வயது இவற்றையெல்லாம் பதிந்து கொடுக்கிறோம். அதுபோலவே அதில் இவர் இந்தச் சாதியைச் சேர்ந்தவர் என்றும் பதிந்து கொடுத்தால் நல்லது. உதாரணத்திற்கு 'திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், வயது இவ்வளவு, இவர் பள்ள சாதியைச் சேர்ந்தவர், இவர் அரிசன சாதியைச் சேர்ந்தவர், இவர் குடும்பத்தில் இத்தனை நபர்கள்





இருக்கிறார்கள்' என்று போட்டு குடும்ப அட்டை வழங்கினால் நன்றாக இருக்கும். சாதிச் சான்றிதழ் வாங்குவதில் நிறைய சிரமங்கள் இருக்கின்ற காரணத்தினால் குடும்ப அட்டையிலேயே இவர் இந்த சாதியைச் சேர்ந்தவர் என்று நாம் எழுதிக் கொடுத்துவிட்டால் சாதிச் சான்றிதழ் என்று தனியாக வாங்க வேண்டிய அவசியம் இருக்காது. சாதி அதிலேயே வந்துவிடும். குடும்ப அட்டையில் வருமானம் எவ்வளவு என்று போடுகிறீர்கள். அதிலேயே இவருக்கு இத்தனை ஏக்கர் நிலம் இருக்கின்றது. இவருக்கு நிலம் இல்லை. இவர் நிலமில்லாத ஏழை என்று குடும்ப அட்டையிலேயே போட்டுவிடலாம். நாம் பாஸ் புத்தகம் வைத்திருக்கிறோமே அதுபோல அனைத்து விவரங்களையும் பதிந்து மக்களிடம் கொடுத்துவிட்டால் சாதிச் சான்றிதழ் வாங்குவதற்கு பெற்றோர்களும், குழந்தைகளும் அலைகின்ற கொடுமையைத் தவிர்க்கலாம். சாதியையும் பதிந்து குடும்ப அட்டைகள் வழங்குகின்ற ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கி விடுவோமேயானால் அந்த மக்களுக்கு அது உதவியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** *10 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டன, விரைவில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.*

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை போன்ற துறைகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு இலவசமாக நாம் புத்தகங்கள் வழங்குகின்றோம். இலவசமாகப் புத்தகம் வழங்கும்போது ஒருவருக்கு ஒரு புத்தகம் என்று நாம் வழங்குவதில்லை. இரண்டு பேருக்கு ஒரு புத்தகம் என்று வழங்குகின்றோம். இத்தனைக் காலமாக அவர்கள் தனித்தனியாக புத்தகங்கள் வாங்கிப் படித்தார்கள். நாம் ஸ்காலர்ஷிப் கொடுத்தோம். இரண்டு பேர் சேர்ந்து ஒரு புத்தகத்தைப் படிக்கும் நிலையை நாம் உருவாக்கினால் அது நன்றாக இருக்காது. எனவே ஒவ்வொரு மாணவருக்கும் தனித் தனியாக புத்தகங்களை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது கணிப்பொறிப் பயிற்சி. இப்போது நாம் கணிப்பொறிப் பயிற்சி 1,000 பேருக்கு 6 மாதத்திற்குக் கொடுக்கின்றோம். அந்தப் பயிற்சியைப் பெறுகின்றவர்களுக்கு 6 மாதத்திற்கு நாம் ரூ. 4,500

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1998 மே 6

கொடுக்கின்றோம். அது பாராட்டுக்குரிய விஷயமாகும். அதுபோல இன்னும் நாம் என்னென்ன பயிற்சிகளை கொடுக்கின்றோமோ அவற்றைப் பயிலுகின்ற குழந்தைகளுக்கு நாம் போதுமான பணத்தையும் கொடுக்க வேண்டும். அப்படி போதுமான அளவிற்கு நாம் பணம் கொடுக்காவிட்டால் அவர்கள் சரியான முறையிலே அந்தப் பயிற்சிகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியாமல் போய்விடும்.

அடுத்து, ஓட்டுநர் பயிற்சி. லாரி, பஸ் போன்ற கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு விடுதி வைத்து நாம் ஓட்டுநர் பயிற்சி கொடுக்கின்றோம். ஓட்டுநர் பயிற்சி கொடுக்கும்போது, அந்த விடுதியில் நாம் எங்கே இடம் ஒதுக்கியிருக்கிறோமோ அங்கே தங்கிப் பயிற்சி எடுத்துக் கொள்பவர்களுக்கு உணவு, உறைவிடம் எல்லாம் நாம் கொடுக்கின்றோம். ஆனால் அங்கே இடம் கிடைக்காதவர்கள், வெளியிலே இருந்து வந்து ஓட்டுநர் பயிற்சி எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு வெறும் 193 ரூபாய் தான் நாம் கொடுக்கின்றோம். இது என்ன நியாயம்? அந்த 193 ரூபாயை வைத்துக்கொண்டு அவர்கள் எப்படி சாப்பிடுவார்கள்? எப்படி அதை வைத்துக் கொண்டு தங்குவதற்கு அறைகள் எடுப்பார்கள்? எனவே அந்தப் பணத்தை குறைந்தபட்சம் 300 ரூபாயாகவாவது உயர்த்திக் கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நான் மீண்டும் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். 356, 356 என்று குழப்புகிறார்கள். நான் வெகு நாட்களாக சட்டமன்றத்திலே உறுப்பினராக இருக்கின்றேன். அதாவது அங்கே அது சம்பந்தமாக சட்டம் கொண்டு வந்தாலும்கூட 2/3 மெஜாரிட்டி வேண்டும். மூன்றிலே இரண்டு பங்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதை ஆதரித்து ஓட்டுப் போட வேண்டும். அதன்பிறகு தான் அவர்கள் கொண்டு வருகிற சட்டம் செல்லும். அவர்கள் எதைச் செய்தாலும் அதற்கு சரியான காரணங்களைக் கொடுக்க வேண்டும். உத்தரப்பிரதேச மாநிலத்திலே இப்படித்தான் ஆட்சியைக் கலைத்தார்கள். என்ன ஆயிற்று? கோர்ட்டுக்குச் சென்றார்கள். இங்கே மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு மதிப்பிற்குரிய ஒரு பெரிய குடும்பத்திலே பிறந்த குமாரமங்கலம் போன்ற அறிவில் சிறந்த அந்த மேதையின் வயிற்றிலே பிறந்த திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் என்பவர் எல்லாம் இப்படி சின்னத்தனமாகப் பேசுவது சரியல்ல என்பதை நான் மூத்த உறுப்பினர்



1998 மே 6] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

என்ற முறையிலே இங்கே வேதனையோடு குறிப்பிட விரும்புகின்றேன். *(மணியடிக்கப்பெற்றது)*

ஓட்டு என்று கேட்டுக் கொண்டு மறுபடியும் நீங்கள் கிராம மக்களிடம் போனால் யார் கலைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டார்களோ, யார் கலைக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்கள் அத்தனை பேரையும் - மகாராஷ்டிராவிலே மேமன் என்பவரை மக்கள் கட்டி வைத்து அடித்தார்கள். மேமனைக் கட்டி வைத்து அடித்ததுபோல அடிக்கின்ற நிலைமை உருவாக வேண்டாம் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேனே தவிர, வேறு இல்லை. தேர்தலைச் சந்திப்பதற்கு மக்களுக்கு விருப்பம் இல்லை. ஐந்து ஆண்டுகளுக்குத் தானே வாக்களித்தார்கள். ஐந்து ஆண்டுகள் முடியவேண்டும். அதற்கு இடையிலே கலைப்போம், கலைப்போம் என்று பூச்சாண்டி காட்டினால் அதற்கு மக்கள் இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதையும் இந்த நேரத்திலே கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** திரு. ம. முத்துராமலிங்கம்.

*பிற்பகல் 12-30*

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்காக அள்ளிக் கொடுத்துள்ள சீர்திருத்த நலத் திட்டங்களைப்போல, இந்த பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மானியக் கோரிக்கையிலும் மிக அதிகமான நன்மைகளை இந்த நாட்டு மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். இப்போதுகூட, இந்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் தொடங்குவதற்கு முன்னால், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை முன்னேற்றுவதற்கு ஏற்ற வகையில் பேசுகின்ற உறுப்பினர்களுக்கு நேரத்தை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கல்வித் துறையிலே, தொழில் துறையிலே எல்லாம் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின மக்கள் மிகவும் நலிவடைந்த நிலையிலே இருந்து

[திரு. ம. முத்துராமலிங்கம்] [1998 மே 6

கொண்டிருக்கிறார்கள். இதை நாடு நன்றாக அறியும். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் இந்தச் சமுதாய மக்கள் முன்னேறுவதற்காக பல்வேறு நலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அதற்கென்று ஒரு தனித் துறையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்து, மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புத் துறை என்று உருவாக்கி, அதன் மூலமாக பல பள்ளிகளை உருவாக்கி, ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி என்று உருவாக்கி கல்வித் துறையில் முக்குலத்தோர் சமுதாயம் முன்னேறுவதற்கான பெரு முயற்சி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியில்தான் எடுக்கப்பட்டது என்பதற்காக அந்தப் பகுதியில் வாழக்கூடிய முக்குலத்தோர் சமுதாய மக்கள் மிகவும் பெருமையோடு பாராட்டு தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, தொழிற்பயிற்சி நிலையத்தைப் பொறுத்தவரையில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் என்னுடைய திருமங்கலம் தொகுதியில், செக்கானூரணியில் நடைபெற்று வருகின்ற தொழிற்பயிற்சி நிலையத்தில் இடம் போதாத நிலை இருக்கின்ற காரணத்தால் அங்கே குறைவான மாணவர்களே படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் அந்தப் பகுதியில் வாழக்கூடிய முக்குலத்தோர் சமுதாய மக்கள் அங்கே இடம் கிடைக்காத காரணத்தால் தனியார் பள்ளிகளுக்குச் சென்று படிக்கக்கூடிய நிலை உருவாகி இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொகுதிக்கு இரண்டு என்ற அளவில் தொழிற்பயிற்சி நிலையங்களை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி சென்னைக்கு அருகில் கொடுக்கப்படுகிறது. எங்களுடைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற பகுதிகளிலிருந்து பயிற்சி பெறுவதற்காக வரும் மாணவர்கள் இங்கே வந்து பயிலுவதற்கு மிகவும் சிரமமான நிலை இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தைப் போக்கக்கூடிய அளவுக்கு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் நடைபெறுகின்ற இந்தக் கனரக ஓட்டுநர் பயிற்சியை அப்பகுதி மாணவர்கள் பெறுவதற்கு ஏற்ப, மதுரையில் ஒரு பயிற்சி மையத்தை



1998 மே 6] [திரு. ம. முத்துராமலிங்கம்]

ஏற்படுத்தி, அவர்கள் வசதியாக பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டப் படிப்பு படிக்கின்ற மாணவர்கள் 20 பேர்களுக்கு மூத்த வழக்கறிஞர்கள் மூலமாக பயிற்சி அளிக்கப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 20 என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. அது போதாது. அதை 50 என்று உயர்த்த வேண்டும். குறிப்பாக சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த, முக்குலத்தோர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் 25 பேர்களுக்கு அதில் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கள்ளர் சீரமைப்புத் துறையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மிகவும் போராடிப் பெற்றவர், அந்தத் துறையை உருவாக்க வேண்டுமென்று குரல் கொடுத்தவர் பெரியவர் மூக்கையா தேவர் அவர்கள். எனவே, அந்தத் துறைக்கு அவருடைய பெயரைச் சூட்டி, மூக்கையா தேவர் சீரமைப்புத் துறை என்று வைக்க வேண்டுமென்ற அந்த மக்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அமைச்சரிடத்திலே வைத்து அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய திருமங்கலம் தொகுதியில் இருக்கின்ற மிகவும் பின்தங்கிய சமுதாய மக்கள் கல்வித் துறையில் முன்னேறுவதற்காக அரசு அளிக்கின்ற பல்வேறு சலுகைகளைப் பெற்று வருகின்றார்கள். இலவசப் பாடப் புத்தகங்கள் நம்முடைய அரசின் சார்பில் வழங்கப்படுகின்றன. அவை பள்ளிகள் திறக்கப்படும் நேரத்திலேயே வழங்கப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சில நேரங்களில் 6 மாதங்கள் கழித்துக்கூட புத்தகங்கள் வழங்கப்படும் நிலை இருக்கிறது. அதைப் போக்கி, பள்ளிகள் திறக்கப்படும்போதே புத்தகங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வழங்கப்படுவதன் மூலம், பின்தங்கிய சமுதாய மாணவர்கள் அந்தப் பாடப் புத்தகங்களைப் பெற்று, குடும்பக் கஷ்டத்தை உணர்ந்து பள்ளிகளுக்குச் செல்லுகின்ற வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து, கள்ளர் சீரமைப்புத் துறையின் சார்பில் என்னுடைய தொகுதியில் மேல ஓரப்பனூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், கப்பலூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செக்கானூரணியில் உள்ள மேல்நிலைப் பள்ளியில்

ஆண்களும், பெண்களும் இணைந்து படிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. அந்தப் பள்ளியில் ஏராளமான இடவசதி இருக்கின்ற காரணத்தால், பெண்களுக்கு என்று தனியாக ஒரு மேல்நிலைப் பள்ளியை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை திருமங்கலம் தொகுதியில் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நலத் திட்டங்களை இந்தத் துறையின் சார்பாக எங்களுடைய திருமங்கலம் தொகுதி போன்ற பின்தங்கிய தொகுதிகளுக்கெல்லாம் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கடந்த 5 ஆண்டு காலமாக கேட்பாரற்று, கவனிப்பாரற்றுக் கிடந்த என்னுடைய திருமங்கலம் தொகுதியில் இருந்த தொல்லைகளைப் போக்குகின்ற வகையில் நம்முடைய அரசு ஆட்சிக்கு வந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் உள்ள அமைச்சர்களின் சீரிய முயற்சியால் எனது தொகுதிக்குக் கிடைத்த நன்மைகளைச் சொல்லிவிடுகிறேன்.

*பிற்பகல் 12-35*

கள்ளிக்குடியிலே ஒரு தீயணைப்பு நிலையம், அரசு ஹோமியோபதி கல்லூரிக்கு என்று 20 ஏக்கர் நிலமும், அதில் கட்டடம் கட்டுவதற்கு 50 இலட்சம் ரூபாய் நிதி உதவியும், அதேபோல குழந்தைகள் நல பிரிவினை திருமங்கலம் தாலுகா மருத்துவமனைக்கு வழங்கியும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் கூடக்கோவிலூரில் மாணவர் விடுதியும் அதுபோல மேல ஓரப்பனூரில் ஒரு மாணவர் விடுதியும் அதுபோல மேலும் பொதுப்பணித் துறையின் சார்பில் இரண்டு கண்மாய்களுக்கு தூர் வாரும் பணி மற்றும் மதுரை வைகையிலிருந்து நிலையூர் கண்மாய் வரை வரக்கூடிய அந்தக் கால்வாயைச் சீரமைப்பதற்காக ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் வழங்கியும், அதுபோல சமத்துவபுரத்தை எனது தொகுதியில் வழங்கியும் பெருமை சேர்த்திருக்கின்ற நம்முடைய அரசு கள்ளிக்குடியிலும் ஒரு துணை மின் நிலையத்தை வழங்கி சிறப்பு செய்திருக்கின்றது.

இந்த நேரத்தில் மேலும் சில கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, நிலையூர் முதல் கம்பிக்குடி வரையிலுள்ள அந்தக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றிக்





கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய திருமங்கலம் நகரத்தில் மிக நெரிசலான சூழ்நிலையைப் போக்குவதற்கு புறவழிச் சாலையினை அமைப்பதற்கு நம்முடைய அரசின் சார்பில் ரூ. 14 கோடி ரூபாய் அளவில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தப் புறவழிச் சாலையினை உடனடியாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேநேரத்தில் கூடக்கோவிலூரில் காவல் நிலையம் வேண்டுமென்று கேட்டு இருக்கின்றோம். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு முக்குலத்தோர் சமுதாயத்தின் சார்பில் நான் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு அந்தச் சமுதாய மக்கள் மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றவற்றை இந்த மாமன்றத்தின் வாயிலாக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு போவது என்போன்றவர்களின் கடமை என்ற காரணத்தினால் தெரிவிக்க விரும்புகின்றேன். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்திலேதான் மிகப் பெரிய பெருமைகளைச் சேர்த்து, மரியாதைகளைத் தந்திருக்கின்றார்கள். மதுரையிலே அவருடைய பெயரால் ஒரு பாலம் அமைக்கப்பட்டிருக்கின்றது. மலையைப்போல உயர்ந்ததோர் சிலை அமைக்கப்பட்டிருக்கின்றது, மூன்று கல்லூரிகள் கூட முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருக்கிறது. இவை அனைத்தும் கலைஞர் ஆட்சியின் சாதனைகள் என்று முக்குலத்தோர் சமுதாய மக்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இப்போது அவர்கள் விரும்பக்கூடிய ஒரு கோரிக்கை என்னவென்றால், தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவருடைய பெயரால் பல்கலைக்கழகம் ஒன்றை அமைத்துத்தர வேண்டுமென்று விரும்புகின்றார்கள். அதேபோல மதுரையிலே திருநகரில் அவர் வாழ்ந்த இல்லத்தினை அவர்களுடைய பெயரால் நினைவகமாக அமைத்துத்தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் அதுபோல பாராளுமன்ற வளாகத்தில் தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு ஒரு சிலை வைப்பதற்கு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பரிந்துரை செய்திட வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளையெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு ஏற்று, எங்களுடைய அந்த முக்குலத்தோர் சமுதாயத்திற்கு

பெருமையைத் தேடித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** டாக்டர் க. கிருஷ்ணசாமி, ஐந்து நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நல மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி புதிய தமிழகத்தினுடைய சில கருத்துக்களை முன்வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன். பிற்பட்டோர் நலத் துறையிலே பேசுகின்றபோது அண்ணல் அம்பேத்கர் அவர்களை நினைவுகூர வேண்டிய அவசியத்திலே இருக்கின்றோம். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மட்டும் பாடுபட்டவர் அல்ல. 1956இல் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இடஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி அதன் காரணமாகவே தான் வகித்து வந்த சட்ட அமைச்சர் பதவியைக் கூடத் துறந்தவர். எனவே, அண்ணல் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்ல, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அவர் ஒரு முன்னோடி, ஒரு தலைவர், வழிகாட்டி என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய நான் விரும்புகின்றேன். இந்த நேரத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருப்பது, நான் ஏற்கெனவே பட்டியலினப் பழங்குடி மக்களுக்கான மானியத்திலே பேசுகின்றபோது, தாழ்த்தப்பட்ட கிருத்துவர்களைத் தற்போது பிற்பட்டோர் பட்டியலிலே வைத்திருக்கின்றார்கள் எனவும், தாழ்த்தப்பட்ட கிருத்துவ மக்களை பட்டியலினப் பழங்குடி மக்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று அவர்கள் நீண்டகாலமாகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் தெரிவித்திருந்தேன். ஆனால் அதை நிறைவேற்றுகின்ற கடமை மத்திய அரசின் கையிலே இருப்பதால், மத்திய அரசு அதை நிறைவேற்றுகின்ற வரையிலும் மாநில அரசு அந்தத் தாழ்த்தப்பட்ட கிருத்துவ மக்களை மிக மிகப் பிற்பட்டோர் பட்டியலில் முதலில் சேர்க்க வேண்டுமென்பதுதான் நான் இந்த மாமன்றத்திலே வலியுறுத்திக்கூற விரும்புவது. அதேபோல சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் ஆகியோர் தாங்கள் செய்கின்ற அந்தத் தொழிலின் காரணமாக சமுதாயத்திலே அவர்கள் படுகின்ற அல்லல்கள், அவலங்கள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி அவர்கள் தங்களையும் பட்டியலினப் பழங்குடி மக்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றார்கள். எனவே, சலவைத்



தொழிலாளர்களையும், சவரத் தொழிலாளர்களையும் அந்தப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, இஸ்லாமிய மக்கள் கேரளாவிலும், மற்ற மாநிலங்கள் சிலவற்றிலும் தனி இட ஒதுக்கீடு பெற்றதைப்போல, இங்கேயும் அவர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டும்.

*பிற்பகல் 12-40*

ஒட்டுமொத்தமாக நான் ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் இவர்கள் எல்லாம் ஒரு மிகப் பெரிய நோக்கத்தோடு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மிக மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீட்டை வாங்கிக் கொடுத்தார்கள். ஆனால், காலப்போக்கில் அவைகள் எல்லாம் தேய்ந்து போய், அரசியல் நிர்பந்தத்தின் காரணமாக பல முன்னேறிய சமுதாயத்தினர்கூட பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, இட ஒதுக்கீடு பெற்றதன் காரணமாக, உண்மையான பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதன் பலனை அனுபவிக்க முடியாத நிலையை நாம் இன்று காண்கிறோம். எனவே, அதை மறு ஆய்வு செய்து, ஒவ்வொரு சமுதாயத்திலும், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிக மிகப் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் என்ற பட்டியல், மாவட்ட வாரியாக, வட்டார வாரியாக எடுத்து, ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு சாதி வாரியாக, அந்த அந்தச் சமுதாயத்தினருக்கு இட ஒதுக்கீடு கொடுப்பது என்பதுதான் இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இதன் காரணமாக பல சமுதாயத்தினரிடையே மோதல்கள் ஏற்படுவதை நாம் அறிவோம்.

அதேபோன்று, முத்தரையர் சமுதாயம், யாதவர் சமுதாயம். இவைகள் எல்லாம் இப்போது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ந்து அந்த இனத்தவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் நீக்கவேண்டும் என்றால், நாம் உண்மையாக முன்னேறி இருக்கக்கூடிய சமுதாயத்தினரை இந்த பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டு, உண்மையான, பிற்படுத்தப்பட்டோர், மிக மிகப் பிற்படுத்தப்பட்டோர் யார் என்பதையெல்லாம் கணக்கு

எடுத்து, சொல்லப்போனால், சாதி வாரியாக, இட ஒதுக்கீடு கொடுப்பது என்பது ஒரு புதிய சமூக நீதியாகும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ரா. சேதுநாதன்):** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய மானியக்கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகிறபோது, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக, அவர்களுடைய வாழ்வில் உரிமை பெற்றுத் தரவேண்டுமென்ற இந்த சமூக நீதிக் கொள்கைக்காக, இதைத் தன்னுடைய உயிர்மூச்சுக் கொள்கையாக ஏற்று போராடி வரக்கூடிய மக்கள் காவலர், மனித நேயப் பற்றாளர், டாக்டர் இராமதாஸ் ஐயா அவர்களை நினைவில் கொண்டு, சமூக நீதி என்னும் இட ஒதுக்கீட்டுப் போராட்டத்திலே பல்வேறு உயிர்த் தியாகங்களைச் செய்த அந்த தியாக தீபங்களை நினைவுகூர்ந்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் என்னுடைய சில கருத்துக்களை கூற விழைகிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில், அவர்களுடைய நலனுக்காக பல்வேறு திட்டங்களை வைத்திருக்கக்கூடிய நேரத்திலே, சமூக நீதி என்று சொல்லக்கூடிய இட ஒதுக்கீட்டிலே எவ்வளவோ குறைகள் இருக்கின்றன; குளறுபடிகள் இருக்கின்றன; சட்டத்தில் ஓட்டைகள் இருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் சொல்லும்போது, ஒரு நாடு சுதந்திரம் பெற்று விட்டால் மட்டும் போதாது, அந்த நாட்டிலே என்று வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அமலாக்கப்படுகிறதோ அன்றுதான் அந்த நாடு முழுமையான சுதந்திரம் பெற்ற நாடாகும் என்று சொல்வார்கள். அப்படி, தந்தை பெரியார் அவர்கள் பிறந்த மண்ணிலே, பெரியார் வழியிலே நடந்து செல்லக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசு, இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அமலாக்குவதிலே பல்வேறு குறைகளை வைத்திருப்பதுதான் எனக்குக் கேள்விக்குறியாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக்



குறைகளை, கோளாறுகளை எல்லாம், சட்டத்திலே இருக்கக்கூடிய ஓட்டைகளை எல்லாம் களையவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயமாகும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இட ஒதுக்கீடு வழங்குகின்றபோது, மக்கள் தொகை கணக்கு எடுப்பு வேண்டும். இன்றுகூட, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு சாதிகளைச் சேர்ந்த சங்கங்கள் எல்லாம் ஆணையத்திற்குக் கடிதம் எழுதுகிறார்கள். நாங்கள் இத்தனை கோடி மக்கள் இருக்கிறோம், எங்களை கணக்கெடுப்புச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. அப்படி வலியுறுத்திக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே தமிழக அரசு சாதிவாரிக் கணக்கெடுப்பை எடுக்காமல் மூடி வைத்து இருப்பதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. இதற்கு முன்னாலே தமிழகத்தினுடைய மேதகு ஆளுநராக அலெக்சாண்டர் அவர்கள் இருந்த காலத்திலே சாதிவாரிக் கணக்கெடுப்பு எடுப்பதற்காக வெங்கடகிருஷ்ணன் கமிஷன் அமைக்கப்பட்டது. அதுவும் இன்றைய வரையிலே கிடப்பிலே போடப்பட்டு இருக்கிறது. எல்லா சாதிச் சங்கங்களின் வேண்டுதல்களுக்கு இணங்க உடனடியாக சாதிவாரி கணக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

அதேநேரத்திலே பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும்சரி, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும்சரி, தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும்கூட—அந்தச் சமுதாய மக்களிடையே பெரிய குறை இருக்கிறது. நமக்கு ஏற்ற பிரதிநிதித்துவம் அரசினுடைய எல்லாத் துறைகளிலும் இல்லை என்பது பெருத்த குறையாக இருக்கிறது. ஆகவே இந்தக் குறைகளை எல்லாம் போக்கக்கூடிய வகையிலே தமிழக அரசாங்கத்திலே இருக்கக்கூடிய எல்லாத் துறைகளிலும் சாதிவாரியாக என்னென்ன பதவிகளிலே எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று ஒரு அறிக்கையை—நம்முடைய தமிழக அரசு இந்த சாதிவாரியாக இருக்கக்கூடிய பதவிகளை எல்லாம் தொகுத்து ஒரு வெள்ளை அறிக்கையாக வெளியிட வேண்டும் என்று சொல்லி இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [1998 மே 6

இந்த இட ஒதுக்கீட்டுப் போராட்டத்திற்காக பல்வேறு உயிர்த் தியாகங்களைச் செய்தவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3 லட்சம் ரூபாய் நிதி உதவியும் அந்த குடும்பத்திற்கு பென்ஷனாக 1,500 ரூபாயும் வழங்கி வருகிறார்கள். அதேநேரத்திலே இந்த மன்றத்திலே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இறந்தவர்ளுடைய குடும்பத்திற்கு, வீட்டிற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களைப் பாராட்டி கௌரவிக்கின்ற நேரத்திலே அவர்களுக்கு சுதந்திரப் போராட்டத் தியாகிகள் என்ற பட்டயங்கள் எல்லாம் வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல் தமிழ் மொழிக்காக மொழிப் போராட்டத்திலே கலந்து கொண்டவர்களுக்கு மொழிப்போர்த் தியாகிகள் என்று சொல்லிப் பட்டயங்கள் எல்லாம் வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது. அதேபோல இந்த நாட்டிலே இருக்கக்கூடிய மிகப் பின்தங்கிய மக்களுக்காகப் போராடி உயிர் நீத்த, சிறை சென்ற, காவல்துறையினரால் அடிபட்ட அந்தத் தியாகிகளுக்கு சமூகநீதிப் போராட்ட தியாகிகள் என்ற பட்டயத்தை வழங்கிக் கௌரவிக்க வேண்டும் என்று சொல்லி இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும்கூட உயர்நீதி மன்றங்களிலே தங்களுக்குரிய பிரதிநிதித்துவம் என்று சொல்லக்கூடிய வகையிலே நீதிபதி பதவிகள் கிடைப்பது இல்லை. பல்கலைக்கழகங்களிலே துணை வேந்தர்கள் பதவிகள் கிடைக்கவில்லை என்று சொல்லி எல்லோரும் குறைபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட குறைகளை எல்லாம் போக்குகின்ற வகையிலே உடனடியாக தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என்று சொல்லி இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுடைய நலன்களைக் காக்கக்கூடிய நம்முடைய தமிழக அரசு, இருக்கும் என்று சொன்னால், இங்கே பதவி உயர்விலேகூட எல்லாத் துறைகளிலும் இடஒதுக்கீடு முறை பதவி உயர்விலே பின்பற்றப்படுவது இல்லை. அதிலும் குறிப்பாக வணிக வரித் துறை, வருவாய்த் துறை, நெடுஞ்சாலைத் துறை, பதிவுத் துறை ஆகிய 4 துறைகளில் மட்டுமே பதவி உயர்வு இட ஒதுக்கீடு அடிப்படையிலே பின்பற்றப்படுகிறது. மற்ற துறைகளிலே எல்லாம் இட ஒதுக்கீடு அடிப்படையிலே பதவி



1998 மே 6] [திரு. ஜி.கே. மணி]

உயர்வு வழங்கப்படவில்லை என்று சொன்னால், அங்கு சமூகநீதி எப்படி காக்கப்படுகிறது என்பதுதான் இன்றைய கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே, இப்படி எல்லாத் துறைகளிலும் வேலைவாய்ப்பிலும் பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு வேண்டும். அரசு துறைகளில் மட்டுமல்லாமல் போக்கு வரத்துத் துறை, மின் துறை, கூட்டுறவுத் துறை போன்ற சார்பு நிறுவனங்களில் மட்டுமல்லாமல், தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா தனியார் துறைகளிலும் அவை வேண்டும் என்று சொல்லி இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல, இங்கே கல்வித் துறை என்று சொல்கிறபோது, அரசு கல்வி நிறுவனங்களிலே மட்டும் இட ஒதுக்கீடு இருந்தால் போதாது; தனியார் கல்வி நிறுவனங்களிலும் கட்டாயம் அது வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவிகித இட ஒதுக்கீடு என்று சொல்லப்படுகிறது. 100-க்கு 20 சதவிகிதம் என்று சொன்னால், 10-க்கு 2 இடம் கட்டாயம் இருக்க வேண்டும். ஆனால், நம்முடைய இனவாரி சுழற்சி முறையை பார்க்கின்றபோது 10-க்கு 2 இடம் வருவது இல்லை; 10-க்கு ஒன்றுதான் வருகிறது. ஆகவே இந்தக் குறையையும் போக்குவதற்கு அரசு முன்வரவேண்டும். அதேநேரத்திலே உயர்ந்த பதவிகளுக்கு தேர்வு செய்கின்றபோது, 10-க்கு குறைவாக இருக்கின்ற பதவிகளுக்கு இட ஒதுக்கீடு முறை இதுவரையிலே பின்பற்றப்படவில்லை. ஆனால், கடந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் 10-க்கு குறைவான இடங்கள் இருந்தாலும்கூட இட ஒதுக்கீடு முறை பின்பற்றுவதற்கான புதிய அறிவிப்பை செய்வதாகச் சொல்லி அறிவித்தார்கள். இதை அவர்கள் கடந்த ஆண்டு அறிவித்தும்கூட, இதுவரையிலே சட்டத் திருத்தம் எதுவும் வரவில்லை என்பது வேதனையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மீண்டும் இந்த ஆண்டு அறிவிக்க வேண்டும் என்று சொல்லி நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி பொது விதி 22(பி)-ன்படி இங்கே இட ஒதுக்கீடு பின்பற்றப்படுகிறபோது, பகிரங்கப் போட்டியிலே முதலிலே வரக்கூடிய ஓ.சி. 31 சதவிகிதம்; பிற்படுத்தப்பட்டோருக்கு 30 சதவிகிதம்; அதைப்போல

மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவிகிதம், தாழ்த்தப் பட்டவர்களுக்கு 18 சதவிகிதம், மலைவாழ் மக்களுக்கு 1 சதவிகிதம் இப்படி வருகிறபோது இனவாரி சுழற்சி முறை, முறையாகப் பின்பற்றப்படுவதில்லை. ஆகவே இப்படிப் பின்பற்றப்படாத நேரத்தில், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பகிரங்கப் போட்டியில் அவர்கள் மதிப்பெண்களைப் பெற்றாலும்கூட, அந்தப் பகிரங்கப் போட்டியில் அவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு சாதிவாரியாக இருக்கிற இடங்களிலே இட ஒதுக்கீடு முறைக்கு தள்ளப்படுகின்ற காரணத்தாலே அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பங்கு அங்கே கிடைக்காமல் போகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-50*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதற்கு அடுத்தாற்போல பொது விதி 22(சி)-ன் அடிப்படையில் பணி நியமனம் செய்கிறபோது இடவாரியாகத் தெரிவு முறை செய்யப் படுகிறதா அல்லது இனவாரி முறையில் தெரிவு செய்யப்படுகிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே இந்த நேரத்தில் சாதி வாரியாக இந்த இட ஒதுக்கீட்டை நிகழ்த்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி சாதி வாரியாக இடங்களைத் தேர்வு செய்துவிட்டு இடங்களை நிரப்புகிற அதே நேரத்தில், ரிசர்வ்டு லிஸ்ட் என்ற ஒன்றை வைத்திருக்கிறார்கள். பிற்படுத் தப்பட்டவர்களோ மிகப் பிற்படுத்தப்பட்டவர்களோ தாழ்த்தப்பட்ட வர்களோ யாராவது ஒருவரோ இருவரோ பணிக்கு வரவில்லை என்றால், எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பணிக்கு வரவில்லையோ அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களைத்தான் காத்திருப்போர் பட்டியலிலிருந்து நிரப்பவேண்டுமே தவிர வேறு யாரையோ வைத்து நிரப்புவது சமூக நீதிக்கு உகந்ததாக இருக்காது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்படிக்கூட சமீபத்திலே தமிழ்நாடு தேர்வாணையத்தில் மோட்டார் வாகன இன்ஸ்பெக்டர்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 62 இடங்களிலே மூன்று இடங்கள் மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கிடைக்காமல் ஏமாற்றப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில்



சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு காலி பணியிடத்திற்கு பொதுவிதி 22(டி)-ன்படி தகுதி உள்ளவர்கள் இல்லை என்றால் மீண்டும் அது காலாவதியாகி விட்டது என்று சொல்லி அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களை விட்டுவிட்டு வேறு யாருக்காவது வழங்கப்படுகிறது. இப்படி வருகிறபோது, 1996-97-லே மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கவேண்டிய, வேளாண்மைத் துறையிலே குறிப்பாகத் தோட்டக்கலைத் துறையில் கிடைக்க வேண்டிய 6 இடங்கள் இன்றைக்கு விடுபட்டுப் போய் இருக்கின்றன.

இதுமாதிரி மக்கள் நல்வாழ்வுத் துறையில் ஹெல்த் ஆபீசர் பணியில் 9 இடங்கள் காலாவதியாகிவிட்டன என்று சொல்லி, மிகப்பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கிடைக்கவேண்டியது கிடைக்காமல் இன்றும் அந்தக் கோப்பு தமிழ்நாடு தேர்வாணையத்திலே நிலுவையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி தமிழ்நாடு தேர்வாணையம் தன்னுடைய தேர்வுகளைச் செய்கிறபோது இட ஒதுக்கீட்டு முறையைச் செய்கிற நேரத்தில் பல்வேறு குறைபாடுகள் இருக்கிற காரணத்தால் இதையெல்லாம் மாற்றிச் சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தந்தை பெரியார் பிறந்த மண்ணிலே, குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிற இந்த நேரத்திலே இப்படிப்பட்ட குறைபாடுகள் இருப்பது மிகுந்த வேதனையாக இருக்கிறது. இன்னும் கூட வடமாநிலங்களை எடுத்துக்கொண்டால் இதைவிட மிகவும் சிறப்பாக இட ஒதுக்கீட்டு முறை அங்கே அமலாக்கப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் மண்டல வாரியாக இட ஒதுக்கீட்டு முறை என்று சொல்லக்கூடிய ரீஜினல் ரிசர்வேஷன் அந்த மாநிலங்களில் அமலாக்கப்படுகிறது. அதிலும் குறிப்பாகச் சொன்னால், மகாராஷ்டிராவில் மண்டல வாரியான இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படுவதைப் பற்றி 24-4-1998 'இந்து' பத்திரிகையிலே விளக்கமாக வந்திருக்கிறது. மராட்டிய மாநிலத்தை நான்கு மண்டலங்களாகப் பிரித்திருக்கிறார்கள். (1) விதர்பா, (2) மராத்வாடா (3) மேற்கு மகாராஷ்டிரா, (4) மும்பை மற்றும் கோஸ்டல் ஏரியா என்ற கடலோரப் பகுதிகள் என்று நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு இடஒதுக்கீட்டு முறை அங்கே வழங்கப்படுகிறது.

[திரு. ஜி.கே. மணி] [1998 மே 6

அதேபோல ரீஜினல் ரிசர்வேஷன் முறை பீகார், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வழங்கப்படுகிறது. இப்போது கர்நாடகாவில் கூட இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில், இது பொருத்தமானதாக இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் பின்பற்றப்படவேண்டும் என்று அந்த மாநில அமைச்சரே சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள். இப்படி சொல்வதற்குக் காரணம் இப்படி மண்டல வாரியாக இட ஒதுக்கீட்டு முறை கொண்டு வருகின்ற காரணத்தால், அந்தந்தப் பகுதியில் மாவட்ட வாரியாக வாழக்கூடிய எல்லோருக்கும் சரியான முறையில் குறைதீர்க்கும் வகையில் சமூக நீதி கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. நம்முடைய தமிழ்நாட்டில் கூட இதற்குமுன்பு மாவட்ட வாரியாக இட ஒதுக்கீட்டு முறை இருந்தது. அது இப்போது இல்லாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட குளறுபடி எல்லாம் உருவாகிறது. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், இப்போது மருத்துவப் படிப்புக்கு அல்லது பொறியியல் படிப்புக்குத் தேர்வு முறை நடக்கிறது. சென்னையிலோ மதுரையிலோ கோவையிலோ திருச்சியிலோ இருக்கிற மாணவர்கள் மட்டும் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெறுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. பின்தங்கிய மாவட்டங்களில் இருக்கக்கூடிவர்களுக்கு இந்த வாய்ப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்...

*பிற்பகல் 12-55*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்து விளக்கப்பட்டால் நல்லது என்பதற்காக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1971, 1972, 1973-ஆம் ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கிறபோது, மாணவர்களை நேர்முகத் தேர்வு செய்கிற முறை இருந்தபோது, மாவட்ட வாரியாக மாணவர்களுடைய விகிதாச்சாரம் அந்தந்த மக்கள் தொகைக்கு ஏற்ப இருந்தால் நல்லது என்று—அம்பாசங்கர் அவர்கள் அப்போது செயலாளராக இருந்தார்கள்—கருத்துத் தெரிவிக்கப்பட்டு நடைமுறையில் அந்தக் குழுவினர் கோவை மாவட்டத்துக்கு இவ்வளவு மக்கள் தொகை, 'இவ்வளவு மாணவர்கள் என்றெல்லாம் பிரித்து எடுத்தார்கள், அது ஒரு வகையான நியாயம். இப்போது மாநிலம் முழுவதும் மிகமிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இவ்வளவு விழுக்காடு என்று, அந்த முறைப்படி அந்தச் சமூகத்தைச்



1998 மே 6] [பேராசிரியர் க. அன்பழகன்]

சேர்ந்தவர்களில் அதிக மதிப்பெண் வாங்குகிறவர்கள் மாநிலம் முழுவதும் மொத்தமாக எடுக்கப்படுகிற நிலைமை உள்ளது. பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி ஆகியவற்றில் இம்முறை இடம் பெற்றிருக்கிறது. மாவட்ட வாரியாகப் பிரிக்க ஆரம்பித்தால் இந்த விகிதாச்சாரமும் சில மாவட்டங்களிலே மாற நேரிடும். ஆகவே ஒவ்வொரு இடத்திலேயும் ஒரு விகிதாச்சாரத்தை வைத்து நடைமுறைப்படுத்துவது இயலாத ஒரு காரியம். இன்னும் சொல்லப்போனால், மலைவாழ் மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி நீலகிரி, வால்பாறை. அங்கே பழங்குடியினருக்கு எஸ்டிக்கு அதிக விகிதாச்சாரம், அதற்காக உயர்த்த முடியவில்லை. மற்ற இடங்களிலே எடுக்கிற மாணவர்களைக் குறைத்துக் கொண்டு அந்த மாணவர்களை எடுக்க வேண்டுமென்று நாங்கள் ஆலோசனைதான் சொல்லமுடிகிறதே தவிர, விகிதாச்சாரத்தை இடத்திற்கு இடம் மாற்றியமைக்க அரசாங்கத்தால் முடியாது. அப்படிச் செய்தால் அரசினால் அதிலே பல தவறுகள் ஏற்படும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மிகப் பெரிய நகரங்களில் வாழ்கின்றவர்கள் உயர்ந்த மதிப்பெண்களை பெற்று விடுகிறார்கள், பின்தங்கிய மாவட்டத்திலே...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றாக ஆழ்ந்து சிந்தித்துவிட்டு திரு. மணி அவர்கள் பேசவேண்டும். இப்போது அதற்காகத்தான் கிராமப்புறங்களிலிருந்து வருகின்ற மாணவர்களுக்கு என்று 15 விழுக்காடு ஒதுக்கி அந்த வகையிலும் நீதி வழங்குகிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீதம் வழங்கியதற்கு மிக்க நன்றி. நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், அதை வரவேற்கிறோம், அதைக் குறை சொல்லவில்லை. இருந்தாலும்கூட கடந்த காலங்களிலே, இங்கே மாவட்ட வாரியாக கல்வி நிலையங்களைப் பார்க்கிறபோதுகூட, இன்னும் தமிழ்நாடு முழுவதும் எந்தெந்த மாவட்டங்களில் கல்வித் தரத்தில் பின்தங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அப்படிப் பட்டியலைப் பார்க்கிறபோது, கல்வி அறிவிலே பின்தங்கி இருப்பது, தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், வேலூர்,

காஞ்சிபுரம், திருவள்ளூர், சேலம் மற்றும் புதுக்கோட்டை இந்த மாவட்டங்களில் எல்லாம் கல்வி நிலையில் மிகவும் பின்தங்கி இருக்கின்றார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், 1973ஆம் ஆண்டு மாவட்டத்தினுடைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, அங்கிருந்த கல்வி நிறுவனங்களைப் பார்க்கிறபோது தென்னாற்காடு மாவட்டத்திலே, அப்போது விழுப்புரம், கடலூர் பிரிக்கப்படாமல் இருந்த நிலையிலே அந்த மாவட்டத்திலே இருந்த கல்லூரிகள் 5, அப்போது மக்கள் தொகை 36 இலட்சம். இதைவிட மிகவும் குறைந்த மக்கள் தொகை கொண்ட கன்னியாகுமரி மாவட்டத்திலே கல்லூரிகளுடைய எண்ணிக்கை 13. தென்னாற்காடு மாவட்டத்தைவிட மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இருக்கக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்லூரிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இப்படிக் கல்வி நிலையங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்ட உறுப்பினர் திரு. மணி இருப்பாரானால், அரசு கல்லூரி ஒன்று கூட அங்கு இல்லை என்பார். கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லாமே தனியார் கல்லூரிகள். அவர்கள் கேட்பது அரசுக் கல்லூரி ஒன்றையாவது தொடங்குங்கள் என்று. தென்னாற்காடு மாவட்டத்தில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் இந்தக் கல்லூரிகள் எல்லாம் வந்தன. இன்னும் சொல்லப்போனால், கல்லூரிகள் வருவது மட்டும்தான் கல்வி வளர்ச்சி என்று கருதுகிற கருத்தையே நான் மறுக்க விரும்புகிறேன். 'டி.பி.இ.பி.' மாவட்டத் தொடக்கக் கல்வி வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டம் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலேதான் முதன்முதலில் எடுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு முக்கால் பங்கு நிறைவேறி இருக்கிறது. ஆகவே பிற்படுத்தப்பட்ட நிலையிலேயுள்ள, கல்வியிலே பின்தங்கி இருக்கிற மாவட்டங்களுக்கு செய்ய வேண்டிய முதல் கடமை தொடக்கக் கல்வி அனைவருக்கும் முறையாகக் கிடைக்க வழி வகுப்பதுதான். அடுத்து, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றை வளர்ப்பது, அந்தக் கடமையை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட நிலை ஒரே நாளில் மாறிவிடும் என்று கருதினால் எந்த அரசாங்க நீதியும் தேவையில்லை. சில நீதிமுறைகள் வைப்பது மூலம் மெல்ல மெல்ல படிப்படியாக நிலை மாற்றத்திற்காகத்தான்





1916-ஆவது ஆண்டு எழுந்த நீதிக் கட்சியின் குரல்தான் இன்னும் தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் எண்ணிப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டங்கள் எல்லாம் கல்வியிலே மிகவும் பின்தங்கி இருக்கின்ற காரணத்தால், நம்முடைய அரசு இப்படிப்பட்ட மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். அங்கே கல்லூரிகளும், தனியார் கல்வி நிறுவனங்களும் இல்லை என்று சொன்னாலும்கூட, அரசுக் கல்வி நிலையங்களையாவது உருவாக்கவேண்டும். அப்போதுதான் அந்த மக்கள் எல்லாம் மேலோங்க முடியும் என்ற காரணத்தாலே, நான் இதைச் சொல்கிறேன்.

இன்னொன்று. நம்முடைய இராமநாதபுரம் மாவட்டம் பெரிய மாவட்டமாக இருந்தது. அதை, இராமநாதபுரம், விருதுநகர், மற்றும் சிவகங்கை என்று மூன்று மாவட்டங்களாகப் பிரித்தார்கள். அப்படிப் பிரித்தபோது, அங்கே 3 ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் கொண்டு வரப்பட்டன. ஏறக்குறைய ஒரு ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் 50 பேர்கள் பயிற்சி பெறுகிறார்கள் என்று சொன்னாலும்கூட, 150 பேர்கள் கல்வி பயில வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால், தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தும்கூட, இன்று வடலூரிலே ஒரேயொரு ஆசிரியர் பயிற்சி நிலையம்தான் இருக்கிறது. இந்த இரண்டு மாவட்டங்களிலேயும் உள்ளவர்களில் 50 பேர்கள்தான் பயிற்சி பெற முடியும். இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் மாறவேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலையை மாற்ற அரசு மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. மத்திய அரசு இப்போதுதான் அனுமதி வழங்குகின்ற நிலைக்கு வந்திருக்கிறது. அனுமதி கிடைத்தவுடன், விழுப்புரம் மாவட்டத்திலேயும், அந்தப் பயிற்சி நிலையம் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப். (குறுக்கீடு) முடியாது. நீங்கள் 20 நிமிடங்கள் பேசி விட்டீர்கள். இப்போது மணி 1.01 ஆகிறது. (குறுக்கீடு) சரி, சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து TABCEDCO என்கிற தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் சார்பிலே தொழில் தொடங்குவதற்காகக் கடன் வழங்கப்படுகிறது; அதிலேகூட Surety கேட்கிறார்கள்; குறிப்பிட்ட காலத்திலே வழங்கப்படுவதில்லை. இதை எல்லாம் மாற்றி, மிக விரைவிலே அந்தக் கடன்களைப் பெறுவதற்கு, தொழில் தொடங்குவதற்கு அரசு வழிவகை செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, இந்த அவையில் சுட்டிக்காட்டியிருப்பதைப்போல இந்த அரசுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மானியம், இந்த மானியம் என்பதை உணர்ந்து ஒருசில கருத்துக்களை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20, 23 ஆண்டுகளுக்கு முன்பே சமுதாயத்தில் தொடர்ந்து அநீதிக்கு ஆளாக்கப்பட்ட ஒரு பிரிவினருக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற நல்லுணர்வோடு, 1973-74-லேயே இஸ்லாமியர்களில் ஒரு பிரிவு முன்னேறிய பிரிவாகவும், மற்ற பிரிவு பிற்படுத்தப்பட்ட பிரிவாகவும் கருதப்படுவது வரலாற்றில், அதற்கு சில முகாந்திரங்கள் இருந்திருந்தாலும், யதார்த்தத்தில், அதற்கு எந்தவிதமான நியாமும் இல்லை என்பதை உணர்ந்து, சட்டம் குறுக்கிட்டாலும், அனுமதித்தாலும், அனுமதிக்காவிட்டாலும் என்னுடைய உள்ளத்தில் அதற்கான விசாலமான இடம் இருக்கிறது என்பதை அறிவித்து, பிற்படுத்தப்பட்ட மக்கள் பட்டியலில் முஸ்லிம்களில் பெரும்பாலோர் இடம் பெறும் வகையில், இந்த அவையில் அறிவிப்பு செய்து, அதற்கான சட்டபூர்வமான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அது ஒரு வரலாற்று சிறப்புமிக்க முடிவு. அதற்காக நாம் அன்றைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி செலுத்தி இருக்கிறோம். தொடர்ந்து நன்றி செலுத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கும் நன்றி செலுத்துகிறோம். என்றைக்கும் நன்றி செலுத்துவோம். ஆனால் நடைமுறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாட்டு நிலையை அறிந்தவர்கள், நாட்டு மக்களை அறிந்தவர்கள். நிச்சயமாக அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன். இதனால் நடைமுறையில் இஸ்லாமியர்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட நன்மை,





வேலை வாய்ப்பிலே, கல்வித் துறையிலே பல காரணங்களினால் கிடைக்கப்பெறவில்லை. அவர்களுடைய நல்லெண்ணம் அந்த மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று இருந்தபோதிலும் இடையிலே ஏற்பட்ட பல்வேறு காரணங்களினால், அல்லது இந்த நாட்டில் தொடர்ந்து நிலைத்திருக்கிற காரணங்களினால் நன்மை எதிர்பார்க்கப்பட்ட அளவுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்வதிலே எனக்கு மெத்த வருத்தம் உண்டு.

அரசமைப்புச் சட்டம் மைனாரிட்டிகளுக்காகத் தனி ஏற்பாடு செய்து இருக்கிறது. இதை உணர்ந்துதான், மத்தியிலே இருக்கிற ஆட்சி, மற்ற மாநில ஆட்சிகள் எல்லாம்கூட 15 அம்சத் திட்டம் என்ற திட்டத்தை உருவாக்கி, இஸ்லாமியர்களுக்கு, அவர்களுடைய பொருளாதார, சமுதாய, கல்வி முன்னேற்றத்திற்குத் தனி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விதி 20-லே இருந்து 31 (ஏ) வரையிலே நம்முடைய அரசமைப்புச் சட்டம் மைனாரிட்டி மக்களுக்காக சில தனி ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அந்த அடிப்படையில் மைனாரிட்டி மக்களுடைய முன்னேற்றத்திற்காக மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பது அரசமைப்புச் சட்டம் ஏற்படுத்தியிருக்கிறது ஒரு விதியாகும், அது செய்திருக்கிற ஒரு ஏற்பாடாகும். ஆனால் 15 அம்சத் திட்டம் கூட எந்த மாநிலத்திலும் தெளிவாக, முறையாக நடைமுறைப்படுத்தவில்லை என்பது இன்றைக்கு தெளிவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, இன்றைக்கு ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஒருவேளை மத்திய அரசு எல்லா மாநிலங்களையும் கணக்கிட்டு ஒரு வெள்ளை அறிக்கை மைனாரிட்டியினுடைய பொருளாதார, சமுதாய கல்வி முன்னேற்றத்தைப் பற்றி வெளியிடுமேயானால், நிச்சயமாக அதிலே ஒரு உண்மை வெளியாகும்.

பிற்பகல் 1-05

இந்தியாவிலே இன்றைக்கு இருக்கக்கூடிய தனிப்பட்ட பிரிவுகளை—சாதிகளை நாங்கள் வற்புறுத்தவில்லை. சாதியை அழிக்கத்தான் இந்த மண்ணிலே தோன்றிய நம்முடைய வித்தகர்கள் முயன்றார்கள். அந்தச் சாதிக் கொடுமையால் சமுதாயம் அடைந்த மிகப் பெரிய பின்னடைவின் காரணமாக அந்தச் சாதியை அடிப்படையாகக் கொண்டே, அவர்களைக் கைதூக்கி விடவேண்டும். அவர்கள் கைதூக்கிவிடப்பட வேண்டுமென்ற எண்ணம் தோன்றிய மண் இந்தத் தமிழ் மண். எனவே ஒரு பக்கம் நாம் சாதியை

ஒழிக்கவேண்டும்; மத உணர்வை இல்லாமல் ஆக்கவேண்டுமென்று முயன்று கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்திலே வரலாற்றில் காலம் காலமாகச் செய்யப்பட்ட கொடுமையின் காரணமாக இந்த நாட்டினுடைய பெரும்பான்மை மக்கள், பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்கு உரிய மனித உரிமைகள் கிடைக்காத காரணத்தினால், எந்தச் சமுதாயம் அவர்களுக்கு அநீதி இழைத்ததோ, அதே சமுதாயம் அவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நினைத்த காரணத்தினால் உருவாக்கப்பட்ட சிந்தனைதான் இந்த இட ஒதுக்கீடு என்பதாகும். அதற்கு நான் விளக்கம் சொல்லத் தேவையில்லை. அதனுடைய வித்தகர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள்.

இன்றைக்கு அந்த அடிப்படையிலே பார்க்கும்போது சுதந்திரம் பெற்ற கடந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றைக்குக் கணக்கிட்டுப் பார்த்தால், கல்வியிலே மிக மிகப் பின்னடைவிலே, பொருளாதாரத்திலே மிகப் பின்தங்கிய நிலையிலே, மற்றும் எல்லா வகையிலேயும் இன்றைக்கு மிகப் பின்தங்கிய சமுதாயம் எது என்று சொன்னால், அது இஸ்லாமிய சமுதாயம் தான் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்த உண்மையை இந்த நாட்டில் இருக்கக்கூடிய நியாய உணர்வைப் பெற்ற அனைவரும் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஒரு மறுக்கமுடியாத உண்மையாக இன்றைக்கு நாட்டில் பேசப்படுவது எல்லாத் துறைகளிலும் மிக மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் யார் என்று சொன்னால் இஸ்லாமியர்கள்தான். யாரோ ஒரு சிலர், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வருகின்ற பகுதியிலே, வியாபாரிகளாக இருக்கலாம். அந்த வியாபாரிகள் எல்லாம் ஏதோ குத்துக்கல்லாக இருக்கலாமே தவிர, இந்தச் சமுதாயம் இன்றைக்கு எல்லா வகையிலும் பிற்படுத்தப்பட்டிருக்கிறது. எனவேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறுபான்மைச் சமுதாயத்தில் மிகப் பின்தங்கிய, இந்தப் பகுதிக்கு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இடம் கொடுத்தார். அதனுடைய உள் உணர்வை, எண்ணத்தை இந்தச் சமுதாயம் நீடித்து, நிலைத்து, நிலையாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறது, பாராட்டும்.

ஆனால் அதே நேரத்தில், நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது கேரளாவிலே 12 சதவிகிதம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். கேரளாவிலே ஒதுக்கீடு செய்து கொண்டு நடைமுறையிலே பல்லாண்டுகளாக இருக்கும்பொழுது அந்த



ஒதுக்கீட்டை, கேரளாவிலே 12 சதவிகிதம் என்று சொன்னால், இங்கே 12 சதவிகிதத்தை நாங்கள் கேட்கவில்லை. எங்களுடைய ஜனத்தொகை என்னவென்பதையும் நான் வற்புறுத்தி இந்த நேரத்தில் தேடச் சொல்லிக் கேட்கவில்லை. தோராயமாக, தயவுசெய்து ஒரு தொடக்கமாக, குறைந்தபட்சம் 5 சதவிகிதமாவது முஸ்லிம்களுக்கு வேலைவாய்ப்புகளிலே, அதுவும் அரசு உத்தியோகங்களிலே நீங்கள் ஒதுக்கித் தராவிட்டால், நான் தெளிவாகச் சொல்கிறேன், இந்தச் சமுதாயம் முன்னேறாது, ஏனென்றால் ஏற்கெனவே 50 சதவிகிதம் இந்தச் சமுதாயத்தில் பெண்களைப் பொறுத்தவரையில் எவ்வளவோ முயற்சிகள் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். அவர்கள் படிப்பில் முன்னேறவில்லை. சர்க்கார் அலுவலகங்களில் வேலை செய்யக்கூடிய அளவிற்கு இன்றைக்குப் பக்குவமும், துணிவும் அவர்கள் பெறவில்லை. தாமாகவே 50 சதவிகிதம் அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். மீதம் இருக்கின்ற பகுதிகளிலே இன்றைக்கு என்ன நிலைமை என்றால், வறுமையின் காரணமாக 10-ஆவது வகுப்பு வரையிலேகூட இந்தப் பிள்ளைகள் செல்வதில்லை. இன்று இருப்பது அவர்களுக்கு ஒரே ஒரு வழி. கொஞ்சம் வயது வந்தவுடனே, 10-ஆவது படித்தவுடனே ஒரு பாஸ்போர்ட்டை வாங்கிக் கொண்டு வெளிநாட்டிற்குப் போகத்தான் விரும்புகிறார்கள். அங்கே சென்று அவர்கள் மிகவும் கேவலமான வேலையை செய்து கொண்டிருக்கிறார்கள். அதை அந்த நாட்டிற்குச் செல்பவர்கள் எல்லாம் பார்க்க முடியும். சர்க்கார் உத்தியோகத்திலே எவ்வளவு பேர் இருக்கிறார்கள். நாம் கணக்கிட்டுப்பார்த்தால், இதே செக்கரட்டேரியட்டிலே இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள். எல்லாத் துறைகளிலேயும் நான் கேட்கிறேன். விரிவாகப் பேசுவதற்கு நேரம் இதுவல்ல.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களே 3 பேர் இருக்கிறார்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பற்றி எனக்குத் தெரியும். 3 மாவட்டங்களிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

போட்டிருக்கிறார்கள். தூத்துக்குடியிலே போட்டிருக்கிறார்கள். சேலத்திலேயும் ஒரு முஸ்லிம்தான். அதற்கெல்லாம் நாங்கள் நன்றி சொல்கிறோம். தலைவர் அவர்களே, காரிலே உட்கார்ந்து போகின்ற முஸ்லிம்களைவிட பசியால் வாடிக்கொண்டிருக்கிறானே அவனைப் பற்றித்தான் நான் பேசுகிறேன். எனவே உங்கள் காலத்திலே நீங்கள் ஏதாவது வழி செய்ய வேண்டும். உங்கள் காலத்திலே செய்யாவிட்டால் வேறு யாருமே செய்யமாட்டார்கள். அது எங்களுக்கு உறுதியான நம்பிக்கை. நாங்கள் உங்களிடத்தில் வாதிட்டுப் பெறாவிட்டால் வேறு எந்தக் காலத்திலே யார் செய்வார்கள். உங்களைப்போல யார் வருவார்கள்? அது எனக்கும் தெரியாது. எனவேதான், நாங்கள் இதை வற்புறுத்தி சொல்கிறோம். இது ஏதோ குறிப்பிட்ட ஜாதிக்காகப் பேசுகிறேன் என்று யாரும் கருதிவிடக் கூடாது. நான் எல்லா ஜாதிக்காகவும், எல்லா மக்களுக்காகவும் பேசக் கூடியவன். ஆனால், உண்மையைச் சொல்வது என்னுடைய கடமை. அதற்காகவே நான் இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறேன். குறைந்த பட்சம் 5 சதவிகிதம் ரிசர்வேஷன் கொடுங்கள். 12 சதவிகிதம் வேண்டாம். அல்லது நீங்கள் உங்களுடைய யோசனைப்படி ஏதாவது ஒரு ரிசர்வேஷன் என்று சொல்லுங்கள். அப்போதுதான் இந்தச் சமுதாயம் ஓரளவிற்குத் தங்களுடைய சேவையைச் சர்க்காருக்கு அளிக்கும். நாமும் இந்த நாட்டு மக்கள், சமுதாயத்திலே மதிக்கப்படுகிறோம், அங்கீகரிக்கப் பட்டிருக்கிறோம் என்ற உணர்வுதான் முக்கியம். உண்ணுகிற உணவு, உடுக்கிற உடை, கொண்டிருக்கின்ற உறைவிடம் இவற்றைவிட ஒரு சமுதாயத்திற்கு எது தேவை என்றால் நாமும் இந்த நாட்டிலே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறோம் என்பதுதான் முக்கியம். அதனாலேதான் முக்கியமாக இதை நான் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகுந்த பணிவோடு, ஒரு பொது நோக்கோடு கேட்டுக்கொள்வது 5 சதவிகிதம் நீங்கள் எங்களுக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்தியானமும் இருக்கிறது அல்லவா? கொஞ்சம் பேசவிடுங்கள். ஆகையினாலே, இன்னொரு மிக பயங்கரமான நிலைமை உருவாகிக் கொண்டு இருக்கிறது. அது ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கே ஏற்பட்டுள்ள நிலைமை. அதிலே மிக முக்கியம் என்னவென்றால்—



நம்முடைய மாண்புமிகு திரு. லட்சுமணன் அவர்கள் கூட அன்றையதினம் இதைச் சுட்டிக்காட்டினார்கள். இப்போது, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுடைய பட்டியலைப் பார்த்தால் மிக வேதனையாக இருக்கிறது. இன்னும் கொஞ்ச காலத்திற்குப் பிறகு, தமிழகம் எங்கே போய் நிற்கும், என்று எங்களுக்குத் தெரியவில்லை. கலெக்டரைப் பற்றிச் சொன்னார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். கலெக்டருடைய பட்டியலைப் பார்த்தால், எஸ்.பி-க்களுடைய பட்டியலைப் பார்த்தால் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுடைய பட்டியலைப் பார்த்தால் பலருக்கு அந்தப் பெயர்கூட தமிழ்நாட்டிலே இருப்பவர்களுக்கு வாயிலே நுழையவில்லை. அதனால் நான் அவர்களுக்கு என்று சொல்லவில்லை, அவர்களை வெறுப்பதாகவும் சொல்லவில்லை, இப்போது இருப்பவர்களை நான் விரட்ட வேண்டும் என்றும் சொல்லவில்லை; வருங்காலத்திலே இந்த நிலை தொடருமேயானால்—அது என்ன நிலைமையில் நம்முடைய பிள்ளைகளைக் கொண்டு செல்லும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். எல்லாம் ஸ்டேட் கேடர். ஒரு ஸ்டேட்டிலிருந்து இன்னொரு ஸ்டேட்டிற்கு மாற்றுவதற்கான நிலை அகில இந்திய அளவிலே எடுக்கப்பட்ட முடிவு. அதை நாம் மாற்றுவது என்பது இயலாத காரியம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், நம்முடைய பிள்ளைகள் ஏன் பின்தங்கிப் போகிறார்கள்? அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய கடமை நமக்கு வேண்டாமா? நம்முடைய பிள்ளைகளையும் அதற்குரிய தகுதியுடையவர்களாகச் செய்ய வேண்டிய கடமை நமக்கு இல்லையா? யாரோ தனிப்பட்டவர்கள் சில பேர் இன்றைக்கு அதற்கான பயிற்சி மையங்களை நடத்துகிறார்கள். இப்படி பயிற்சி மையங்கள் நடத்துவதற்கு வருங்காலத்தில் திட்டமிட்டு நம்முடைய பிள்ளைகளையும் அதற்குத் தயார் செய்ய வேண்டுமென்ற அந்த முடிவுகள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் இந்தச் சிறுபான்மை மொழி உருது மொழியைச் சில மாவட்டங்களிலே கணிசமாகப் பேசக்கூடிய மக்கள் வாழ்கிறார்கள்.

நான் தமிழன்—குறிப்பாக, சென்னையிலே உருது மொழியைப் பேசக்கூடியவர்கள் நிறைய இருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே நம்முடைய அருமை நண்பர் அப்துல் லத்திப் அவர்கள் பேசும்போது ஜாதிக்காக, மதத்திற்காகப் பேசவில்லை என்றார். அவர் பேசக்கூடியவர் அல்ல. இருந்தாலும்கூட பிற்படுத்தப்பட்டோர் துறை என்று வருகிறபோது இஸ்லாமியர் சமுதாயத்திற்காக அவர் பேசக் கடமைப்பட்டவர். பேசுகின்றார். ஆனால் தமிழகத்திலே அறவே இஸ்லாமியர்களை ஒதுக்கிவிட்டதைப் போன்ற ஒரு நிலையை உருவாக்க விரும்புவது நல்லது அல்ல. ஏனென்றால் இன்றைக்குத் தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் நான் முதலிலே சொன்னேன். 3 மாவட்டங்களிலே முஸ்லிம்கள் கலெக்டர் களாக இருக்கிறார்கள். அதைச் சொன்னால்கூட பத்திரிகையிலே 'பாக்ஸ்' போட்டெல்லாம் போடுவார்கள், இப்படிச் சொன்னதனால் அவர்கள் எல்லாம் வருத்தப்படுகிறார்கள் என்று. இப்போது இருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுடைய கோரிக்கையே தாங்கள் இடம் பெற வேண்டும்; பெரிய பதவிகளில் இடம்பெற வேண்டும் என்பதுதான். அதைச் சுட்டிக்காட்டும்போது அவர்கள் வருத்தப்படத் தேவையில்லை. அவர்கள் வருத்தப்படுவதில்லை. அவர்களை வருத்தப்படச் சொல்லி சில பேர் முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கு ஏன் அந்தக் கோபம் ஏற்படுகிறது என்று நன்றாகத் தெரியும். இதே அவையில் 1973-74 ஆம் ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேருக்கு என்னென்ன பதவிகள் வழங்கப்பட்டன என்று ஒரு பட்டியலை நான் படித்தேன். அந்தப் பட்டியலைப் படித்ததே அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டதற்குக் காரணமாக ஆயிற்று என்பதைப் பிறகு நான் உணர்ந்தேன். இப்போது நான் சொல்லவிரும்புவது, நம்முடைய லத்தீப் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது, நான் சொன்ன கலெக்டர்களைப்போல் தலைமைச் செயலகத்திலே பொதுத் துறையிலே யார் இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். பொதுத் துறைச் செயலாளராக இருக்கின்ற பரூக்கி அவர்களேகூட—பெயரைச் சொன்னபிறகு அவர் இஸ்லாமியர் என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர் இருக்கிறார். நெடுஞ்சாலைத் துறையிலே அபுல்ஹசன் ஒரு முக்கியமான பொறுப்பிலே இருக்கிறார். அதைப்போல வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தராக ரஹீம் இருக்கிறார். அவ்வளவு ஏன்? கவர்னராகவே யார் இருக்கிறார் என்பது அப்துல் லத்தீப் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.



**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவைகள் எல்லாம் இந்த ஆட்சியில் நடைபெறும் என்பது எனக்குத் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் 3 கலெக்டர்களைப் போட முடியும். வேறு யார் போடமுடியும்? கடந்த ஆட்சியிலா கேட்டோம் நாம்? கடந்த ஆட்சியிலே கேட்க முடியுமா? கேட்டோமா? அதற்கு முந்தைய ஆட்சியிலே கேட்டோமா? இப்போது எங்கே எதிர்பார்ப்பு இருக்கிறதோ, எங்கே நம்பிக்கை இருக்கிறதோ அங்கேதான் கேட்கிறோம். நான் அதைத்தான் சொன்னேன். காரிலே செல்கிற முஸ்லிம்களை விட தெரு வீதியிலே...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இருக்கிற ஆதங்கம் எல்லாம் நான் சொன்ன பிறகுதான் சரி என்று சொல்கிறீர்களே தவிர நீங்களாகச் சொல்லவில்லை என்பதுதான். உறுப்பினர் மணி பேசும்போதுகூட நான்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கலெக்டர்களாக இருப்பதை அவர் சொன்னாரா, இல்லையா; என்பது எனக்குத் தெரியாது. சொல்லவில்லை, சொல்ல மாட்டார்கள். ஏனென்றால் இட ஒதுக்கீட்டிற்கே காரணம் வேறு யாரோ என்றல்லவா சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பெரியார் பெயர் வரும்; அம்பேத்கர் பெயர் வரும்; அண்ணா பெயர் வராது; என் பெயர் வராது. நான் இதையெல்லாம் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால் ஒருமுறை பெரியாரிடத்திலே நான் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னார். இவ்வளவு செய்தும் பிற்படுத்தப்பட்ட மக்கள் நம்மீது அன்பாக இல்லையே என்ன காரணம் என்று சொன்னபோது சொன்னார், அதனால்தான் அவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று பெரியார் இறுதியாகச் சொன்னார். (சிரிப்பு) அதையும் ஞாபகப்படுத்துகின்றேன். அதைப்போல 4 மாவட்டங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், யார் என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை, கலெக்டர்களாக இருக்கிறார்கள் இப்போது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்த நேரம் போதாது. ஆனால் நீங்கள் ஒதுக்கியிருக்கிற நேரம் குறிப்பிட்ட நேரம் ஆயிற்றே என்று அதைப்பற்றி எல்லாம் நான் சொல்லவில்லையே தவிர வேறு அல்ல. எனவே, நான் தங்களைக் கேட்டுக்கொள்வது தங்கள் காலத்திலேதான் இதைப்பற்றிச் சிந்திக்க முடியும்; செயல்படுத்த முடியும் என்பதற்காக என்னுடைய வேண்டுகோளை வைக்கிறேனே தவிர, வேறு அல்ல. இந்த உருதுமொழியைப் பற்றிச் சொன்னேன். சென்னை தான் உருதுமொழி பேசப்படுகிற, அதிகமான முஸ்லிம்கள் வாழ்கிற நகரம். தயவு செய்து 1955-லேயிருந்து கணக்கு எடுத்துப் பாருங்கள். எவ்வளவு உருது, முஸ்லிம் பள்ளிகள் இங்கே மூடப்பட்டுவிட்டன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூடுவது என்று ஒரு கொள்கையோ, நடைமுறையோ எந்த அரசாங்கத்திலும் இல்லை. மாணவர்களுடைய எண்ணிக்கை அங்கே சேர்கிறவகையில் குறைந்து கொண்டே வந்து இருக்கலாம்—இப்போதுகூட திருச்சியிலே இஸ்லாமிய—உருது பேசுகிற பிள்ளைகள் படிக்கக்கூடிய ஒரு பள்ளிக்கூடத்தில் 5 பேர், 4 பேர்தான் ஒரு வகுப்பிலே இருக்கிறார்கள். அந்த இயக்கத்தையும் நாங்களா நடத்த முடியும்? ஆகவே உருது பேசுகின்ற பிள்ளைகள் வந்தால் அவர்களைப் படிக்க வைப்பதற்குரிய வசதி செய்யப்படும். எண்ணிக்கை குறைந்தால் தானாகப் பள்ளிக்கூடத்தை மூடுவது தவிர வேறு வழியே கிடையாது. இரண்டாவது, மாணவர்கள் பயில்வது குறைகிறபோது உருது ஆசிரியருடைய எண்ணிக்கையும் குறைகிறது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குக் காரணம் பாடப் புத்தகங்கள் நேரத்திலே கிடைப்பதில்லை. ஆசிரியர்கள் படித்து வந்தாலும் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இல்லை, உருது, மலையாளம், தெலுங்கு ஆகிய சிறுபான்மைச் சமூக மக்களுடைய மொழிப் பாடப்புத்தகங்களை எல்லாம் அந்த அந்த மாநிலத்திலிருந்து வரவழைத்துத் தரப்படுகின்றன.





இப்போதும் இந்த ஜூன் மாதத்தில் ஐதராபாத்திலிருந்து கேட்டு வரவழைத்து தரப்படுகின்றது. இதற்கெல்லாம் ஆசிரியர்களை வைத்து எழுத ஆரம்பித்தால் பல குறைகள் வந்து விடும். ஆகவே, இன்னொரு மாநிலத்தில் எதைப் பின்பற்றுகிறார்களோ அதை அப்படியே பின்பற்றுகிறோம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய இனமான பேராசிரியர் அவர்கள் இதில் எவ்வளவு நீதிபூர்வமாக நடந்து கொள்கிறார்கள் என்று மற்றவர்களை விட நான் மிகவும் நன்றாக அறிவேன். அதற்காக நன்றியைச் செலுத்துகிறேன். நடைமுறைச் சிக்கல்களைப் போக்கிடும் வகையில் அரசு நடந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு விண்ணப்பம். கடந்த காலத்தில் 1989ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே உருது அகாடமி ஏற்படுத்துவது என்று அரசு அறிவிப்புச் செய்தது. 1989-இல் நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்தார்கள், உருது அகாடமி ஏற்படுத்தவேண்டும் என்று. அதற்குக் கடந்த காலத்தில் சில முயற்சிகள் எடுக்கப்பட்டன. தேர்தல் காலத்திலே கூட சிலர் அதை ஒரு பிரச்சினையாக எழுப்பினார்கள். எனவே, தயவுசெய்து, அது ஒரு சின்ன வேலைதான். அரசு அங்கீகாரம் என்பது தான் பெரிது. எனவே, அதற்கான ஒரு அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

இந்த வக்ஃப் வாரியமும் இதிலே குறிப்பிடப்படிருக்கிறது வக்ஃப் வாரியம் பல ஆண்டு காலமாக நடந்து கொண்டிருக்கிறது. கடந்த காலத்தில் நடந்த பல்வேறு காரியங்களால் இன்றைக்கு வக்ஃப் வாரியம் எப்படி இருக்கிறது என்று சொன்னால் நித்தியம் நித்தியம் கடன்காரன்தான் என்பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன், அதில் இருப்பதால் சொல்லுகிறேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தயவுசெய்து அதனுடைய நிதி நிலையைச் செம்மைப்படுத்துவதற்காக எங்களுக்குச் சில வழிவகைகளைச் செய்து தாருங்கள். அதற்கு எங்களுக்கு வழி வகுத்துத் தாருங்கள். இல்லாவிட்டால் தொடக்கத்திலே கொஞ்சம் கொடுத்துக் கைத்தூக்கி விடுங்கள். அதற்குப் பிறகு Self-reliance என்ற முறையிலே ஒரு

தன்னிறைவு பெற்று முடிந்து விடும் முழுவதும். ஆகவே நான் தயவுசெய்து உங்களைக் கேட்டுக் கொள்ளுவது, அதனுடைய நிதிநிலை மிகவும் மோசமாக இருக்கிறது. இதனுடைய செலவினம் முன்பு 100 ரூபாய் என்றால் 49 ரூபாய் தான் இப்போது. நான் சென்று அதை உயர்த்திய பிறகு இந்த நிலையில் இருக்கிறது. வக்ஃப் போர்டில் இருக்கக்கூடியது இந்த ஒழுங்கீனம் என்று சொன்னால் அந்த ஒழுங்கீனத்திற்கு நான்தான் இப்போது தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறேன். அதனால் தயவுசெய்து நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு வாடகைக் கட்டடத்தில் நாங்கள் இருக்கிறோம். அதற்கு இப்போது 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம். இப்போது 25 ஆயிரம் ரூபாய் என்று பொதுப்பணித் துறை அதற்குக் கணக்குப் போட்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கிற சுவருக்குப் பக்கத்திலே யாரும் போகாதீர்கள் என்று போர்டு போட்டு இருக்கிறது. ஏன் என்றால் மனுஷன் அந்தச் சுவருக்குப் பக்கத்தில் போனால் சுவர் இடிந்துவிடும் என்ற நிலை இருக்கிறது. மீட்டிங் நடத்துவதற்கு இடம் இல்லை. ஆகவே எங்களுக்கு ஒரு இடம் இருக்கிறது. வக்ஃப் போர்டுக்கு என்று இருக்கிற அந்த இடத்தில் ஒரு கட்டடம் கட்டுவதற்கு எங்களிடத்தில் பணம் இல்லாத காரணத்தால் எவ்வளவோ செய்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கை மனுவைக் கொடுத்திருக்கிறேன். குறைந்தபட்சம் முதலீடு ஒரு 2 கோடி ரூபாய் வக்ஃப் போர்டுக்குக் கொடுங்கள். நாங்கள் Self-reliant ஆகிவிடுவோம். அதனால் வக்ஃப் போர்டுக்கு மட்டும் அல்ல, மற்றவைகளுக்கு எல்லாம் ரொம்பப் பயன் ஏற்படும். உங்களிடத்தில் ஒரு மனு கொடுத்திருக்கிறேன். அதைப் பார்க்கவேண்டும். உலமாக்களுக்கு நீங்கள் பென்ஷன் கொடுக்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் கொஞ்ச நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுவரை 22 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத் தொடரிலே, மானியத்திலே இன்றைக்குத்தான் நான் பேசுகிறேன். எந்த மானியத்திலும் நான் பேசவில்லை. ஆகவே, இதை எல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டுதான் வந்து இருக்கிறேன். ஒரு நாள் பேசுவதாக இருந்தாலும் முழுவதுமாகப் பேச வேண்டும். ஏன் என்றால் குறைந்த அளவு பேச எனக்குத் தெரியாது. மற்றவர்கள் எல்லாம் ரொம்பச் சாதுரியமாகப் பேசுவார்கள். கொஞ்சம் Concise ஆகப் பேசுவார்கள். எனக்கு அப்படிப் பேசத் தெரியாது. ஆகவே, கொஞ்சம் விரிவாகப் பேசித்தான் பழக்கம். ஏன் என்றால் நான் கூட ஒரு காலத்திலே பேராசிரியராக இருந்து இருக்கிறேன். அதனால் வந்த வினை.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படிப் பேசியே அதிக நேரம் வாங்குவதும் ஒரு சாதுரியம்தான்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் 7 நிமிடங்கள் தான் இருக்கின்றன. அதனால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தயவுசெய்து இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள், நான் முடித்து விடுகிறேன். நான் ஒன்றும் உங்களுடைய கட்டளையை மீறவில்லை. கட்டளையை மீறுகிறவன் என்ற அவப்பெயர் எனக்கு வேண்டாம். ஆகவே, நேற்றையதினம் கூட லத்தீப் Fire works என்று எல்லாம் இங்கே பேசப்பட்டது. Latheef would not - at any time and under whatever circumstances - be a fire work and he will only be a fair work. ஆகையினால்.. (குறுக்கீடு) He will not be a fire work. அதனால் நான் கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து இந்த வக்ஃப் போர்டினுடைய நிர்வாகத்திற்கு உங்களுடைய ஒரு ஆதரவு வேண்டும். அந்த ஆதரவு இருந்தால் நாங்கள் அதை மேலே தூக்கிச் சென்று விடுவோம். என்னால் முடிந்த அளவுக்கு செய்கிறேன். காலம் காலமாக நடந்து வந்தது. இப்போது அதற்கான முயற்சியை செய்து கொண்டிருக்கிறோம். பல மசூதிகள்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். ஏறக்குறைய 90 சதவிகிதம் வக்ஃப் சொத்துக்கள் இன்றைக்கு ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. எங்கிருந்தும், எந்த வருமானமும் இல்லை. வக்ஃப் சொத்துக்களிலே அங்கே இருந்து வருகிற வருமானம் 6 சதவிகிதம் என்று முன்பு இருந்தது. இப்பொழுதும், திருத்தப்பட்ட சட்டத்தில் 7 சதவிகிதம் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 7 சதவிகிதம் குறிப்பைக் குறித்துக் கொடுப்பவர்கள் கணக்கு, எப்பொழுதும் அந்தக் கணக்கு இன்கம்டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ் கணக்கு எப்படி இருக்கிறதோ, அதேமாதிரியான கணக்காக இங்கும் இருக்கிறது. எங்களுக்கு இங்கே வந்து சேருவது இல்லை.

*பிற்பகல் 1-25*

இந்தச் சூழ்நிலையில் அந்தக் கட்டடத்தைக் கட்டிவிட்டால் ஒழுங்காக இருக்கும் என்ற எண்ணத்திலேதான் நாங்கள் உங்களிடத்திலே விண்ணப்பித்துக் கொள்கிறோம். அது எனக்காக—நான் எனக்காக எப்பொழுதும், எதுவும் வந்து யாரிடத்திலும் கேட்பதும் இல்லை; உங்களிடத்திலும் நிதானமாகத்தான் இருப்பேன். எந்தவொரு விண்ணப்பத்தையும் தூக்கிக்கொண்டு, இந்த லத்தீப் தனக்காக வந்து கேட்டது இல்லை. நாட்டுக்காகக் கேட்கிறேன், சமுதாயத்திற்காகக் கேட்கிறேனே தவிர, (குறுக்கீடு) கட்சிக்காகக்கூட, கட்சிக்காக நானே அது என்ன செய்ய வேண்டுமோ செய்கிறேன்; கட்சிக்காகவெல்லாம் தலைவரிடத்திலே வந்து கேட்கக்கூடாது. ஆகையினாலே, தயவுசெய்து, (குறுக்கீடு) கட்சிக்காக என்றால் கூட்டத்திற்கு வாருங்கள் என்று கூப்பிடுவேன். அது என் உரிமை. அது வேறு விஷயம். அதை நான் வேறே இடத்திலே பேசிக்கொள்கிறேன்.

கலைஞரைப் பற்றி நான் சொல்கிறேன்; எனக்கு ஒரு தனி உரிமை உண்டு. அவர் என்னை ஏசலாம், பேசலாம், எல்லாம் செய்ய லாம். ஆனால் அவர் (குறுக்கீடு) ஏசவில்லை, நேற்றுக்கூட சொன்னார், Fire work என்றார். நான் ஏதாவது கோபித்துக் கொண்டேனா? அவர் சொன்னால் நான் அதை ஏற்றுக் கொள்வேன். மற்றவர்கள் சொன்னால்தான் கொஞ்சம் கஷ்டப்படுவேன். அதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவு செய்து இதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தனிப்பட்ட முறையிலே பல...

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக அழகாகக் கருத்துக்களை ஆழமாக, துடிப்போடு சொல்லக்கூடியவர்களை 'ஃபயர் பிராண்ட்' என்று சொல்வதுதான் வழக்கம். ஆகவே, முதலமைச்சர் ஃபயர் ஓர்க்ஸ் என்று சொல்வதுகூட மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களைப் பாராட்டுவதற்காகத்தான் சொன்னார் என்று நினைக்கின்றேனேயொழிய வேறல்ல. அதைத் திரும்பத் திரும்ப அவர் நினைத்து வருத்தப்படுவது மாதிரி தெரிகின்றது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அவர் ஏசினாலும் அதைப்பற்றி நான் மகிழ்ச்சி அடையக் கூடியவன். ஏனென்றால் கலைஞரைப் பொறுத்த வரையில் கலைஞரின் உள்ளத்தை முழுமையாக அறிந்தவன் நான் சிறுவயதிலே இருந்து. அவர் என்னைப் புரிந்துகொள்வார். அவர்



பேசியதைப்பற்றிக் கவலையேபடவில்லை. ஆனால் அதற்கு யாராவது துணையாக வந்து ஒரு கருத்துச் சொன்னால்தான் கொஞ்சம் வேதனைப்படுவேனே தவிர, வேறல்ல. அதனாலே அதை விட்டு விடுவோம். அது வேறிடத்திலே பேச வேண்டிய விஷயம். இதெல்லாம் இங்கே பேச வேண்டிய தேவை இல்லை. எனவே, நான் திரும்பத் திரும்பப் பல விஷயங்களைச் சொல்வது என்னுடைய பழக்கம் அல்ல; சொல்கின்ற விஷயத்தை ஆழமாக, அழுத்தமாகச் சொல்வேன். எனவே, ஆழமாக, அழுத்தமாக, மீண்டும் மீண்டும் கலைஞர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, தயவுசெய்து நீங்கள் இதற்கான ஒரு அபிப்பிராயத்தையும் கேளுங்கள்; ஆய்வும் நடத்துங்கள், நடத்திய பிறகு இது எல்லாவகையிலும் சமூக நீதியின்பாற்பட்டதாகும். சமூக நீதிக்கு...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, இப்பொழுது அறநிலையத் துறையின் சார்பாக—இந்து அறநிலையத் துறையின் சார்பாக—இருக்கின்ற அமைச்சர், தமிழ்நாட்டிலே எந்தெந்த ஆலயங்களினுடைய சொத்துக்கள், யார் யாரால் அபகரிக்கப்பட்டிருக் கின்றன என்ற கணக்குகளையெல்லாம் எடுத்து, அந்தச் சொத்துக்களை யெல்லாம் அந்த ஆலயங்களுக்குச் சேர்க்கின்ற முயற்சியிலே ஈடுபட்டு, அதிலே வெற்றியும் பெற்று வருகின்றார். அதற்கு அரசும் துணை நிற்கின்றது.

அதே பொறுப்பிலே, வக்ஃப் வாரியத்திலே இன்றைக்கு அப்துல் லத்தீப் அவர்கள் தலைவராக இருக்கின்றார்கள். அவர்கள் அரசினுடைய துணையைப் பெற்று, வக்ஃப் வாரியத்தினுடைய சொத்துக்கள் எங்கெங்கே முடக்கப்பட்டிருக்கின்றனவோ, யார் யாரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக் கின்றனவோ அவைகளையெல்லாம் மீட்டு, வக்ஃப் வாரியத்திற்குக் கொண்டு வருவதற்கு என்ன ஒத்துழைப்பு வேண்டுமென்று இந்த அரசிடம் கோருகிறாரோ அந்த ஒத்துழைப்பைத் தர அரசு தயாராக இருக்கின்றது. அந்த முயற்சியை — எப்படி அறநிலையத் துறை அமைச்சர் இன்றைக்கு இந்து ஆலயங்களைப் பொறுத்து எடுக்கிறாரோ, அதைப்போல—அப்துல் லத்தீப் அவர்களும் அந்த முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே, இந்த முயற்சியில் நான் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறேன். இப்பொழுதிருக்கிற சட்டப்படி வக்ஃப் நிலங்களை எல்லாம் மீட்க வேண்டும். சொத்துக்களையெல்லாம் மீட்க வேண்டுமென்று சொன்னால், இந்தச்

சட்டத்திலேயே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழுப் பங்கு கொள்ள வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வக்ஃப் வாரிய அதிகாரிகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் அதிகாரம், எங்களைப் பொறுத்தவரையில். ஆனால், இந்த மாதிரி நிலங்களை மீட்பதற்கு, கையகப்படுத்துவதற்கு அதிகாரம் இல்லை. ஆனால், இப்போதிருக்கிற புதிய சட்டத்தின்படி மாவட்ட ஆட்சித்தலைவர்கள்தான் இதை மீட்க வேண்டும்; அவர்களிடத்தில் இவர்கள் முறையிட வேண்டும். வக்ஃப் வாரிய சூப்பிரென்டென்டண்ட் போன்றவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருடைய கட்டுப்பாட்டிலே இருக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், நடைமுறையிலே அப்படிச் செய்வது மிகப் பெரிய சிக்கலாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை கூற வேண்டும். கோயில் சொத்து, மசூதி சொத்து என இந்த மாதிரியான சொத்துக்களை மீட்டு...

*பிற்பகல் 1-30*

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) மானியக் கோரிக்கை விவாதத்தின்போது உறுப்பினர்களுக்கு மதிய உணவு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை பிற்பகலில் தொடர்ந்து நடைபெறவிருப்பதால், அதிலே கலந்து கொள்வதற்கு வசதியாக உறுப்பினர்களுக்கு உணவு, ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நாமக்கல் கவிஞர் மாளிகையின் பத்தாவது மாடியில் குழுக்கள் கூடும் அறையின் பக்கத்திலே உள்ள அறையில் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சைவம், அசைவம் இரண்டும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, உணவு, உறுப்பினர்களுக்கு மட்டும்தான் என்பதையும் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 2-30 மணிக்குக் கூடும், வணக்கம்..

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 2-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன். (குறுக்கீடு) திரு. ம. அப்துல் லத்தீப், நீங்கள் அப்பொழுதே சொல்லி முடித்துவிட்டீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஐந்து நிமிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு பிற்படுத்தப்பட்டோர், சிர்மரபினர், தாழ்த்தப்பட்டோருக்காக உறுதியான அர்ப்பணத்தைச் செய்து கொண்டிருக்கக்கூடிய அரசு. எனவே, நான் இதைத் திரும்பத் திரும்பக் கேட்பதற்குரிய காரணம், இதுதான். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் வாயிலாக நான் குறிப்பிட்ட அமைச்சர் திரு. பன்னீர்செல்வம் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். தயவுசெய்து 5 சதவிகிதம் ஒதுக்கீடு என்பது எங்களுக்கு மிக மிக இன்றியமையாதது. அதுபோல, 'வக்ஃப்' வாரியத்திற்கு 30 இலட்சம் கொடுத்துள்ளதை, 40 இலட்சம் என உயர்த்த வேண்டுமென்று சொல்கிறார்கள். தயவுசெய்து கடந்த காலத்தைப்போல. ஆண்டு ஒன்றுக்கு நிருவாகச் செலவுக்காக, கொஞ்ச காலம், 5 ஆண்டு, 10 ஆண்டுக்குக் கொடுத்தால் சரியாகிவிடும். எனவே, அதற்கு ஒரு கோடி ரூபாய் என்று உயர்த்தித் தந்தால், அதனுடைய நிதிச் சிக்கல்களெல்லாம் தீர்ந்துவிட்ட பிறகு, நாங்களே அதை வேண்டாமென்று சொல்வோம். அரசாங்கத்திற்குத் தேவையான நிதியைக்கூட கொடுக்கக்கூடிய அளவிற்கு வருமானத்தைப் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவோம். எனவே, தயவுசெய்து அதைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, இந்த 5 சதவிகிதம், 5 சதவிகிதம், 5 சதவிகிதம் என்று ஐந்து முறை சொல்லிவிட்டேன். அது மிக மிக இன்றியமையாதது. முஸ்லிம்களுக்கு தற்பொழுது அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பாட்டாளி மக்கள் கட்சி—2-ன் சார்பிலே என்னுடைய கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த அவையிலே தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒருமுறை தன்னைப்பற்றி சொல்கின்றபோது, மிக மிக பிற்படுத்தப்பட்டவன் என்று எத்தனை முறை வேண்டுமானாலும் என்பெயருக்குப் பின்னாலே போட்டுக்கொள்ளலாம், அந்த அளவிற்கு மிகமிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலிருந்து வந்தவன் என்று தன்னைப்பற்றி அவர்கள் அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். ஆகவே, இன்றைக்கு பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற நேரத்தில், அத்தகைய பெருமைக்குரிய ஒருவரை முதலமைச்சராகவே பெற்றிருக்கின்ற இந்த ஆட்சியிலே இன்றைக்குப் பிற்படுத்தப்பட்டோர் பல்வேறு வகைகளிலே பயனடைந்து வருகின்ற செயலினை இங்கே தன்னுடைய திட்டங்களின் மூலமாக மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக வகுத்து எடுத்துத் தந்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக என்று தனியாக ஒரு துறையைத் தொடங்கியதே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அதுவும் இந்தியாவிலேயே முதன் முறையாக அவர்கள்தான் இந்தச் செயலைத் தொடங்கி வைத்தார்கள். அது மட்டுமல்ல, அந்தப் பெருமையை அடியொற்றி மேலும் மேலும் பல பெருமைகளை அந்த மக்களுக்காகச் செய்திருக்கிறார்கள் என்பதற்கு பல்வேறு எடுத்துக்காட்டுகளை என்னால் கூற முடியும். 1989-லே மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்தியாவிலேயே முதன்முதலாக இட ஒதுக்கீடு வழங்கிய பெருமையும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைத்தான் சேரும்.

இன்றைக்கு அந்த 20 சதவிகித இட ஒதுக்கீட்டின் மூலமாக ஆண்டுதோறும் மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மருத்துவர்களும், பல்லாயிரக்கணக்கான பொறியாளர்களும் பலனடைந்து வருவதையும் நான் இந்த நேரத்திலே நன்றியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதோடுமட்டுமல்லாமல், இந்தியாவிலேயே கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவிகித இட ஒதுக்கீட்டை முதன்முதலாக வழங்கியதன் மூலமாகவும் டாக்டர் கலைஞர் அவர்கள் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சிறப்பானதொரு சலுகையினை வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 2-35

அதேபோல, மிகப் பிற்படுத்தப்பட்ட ஒருவரை, அதிலும் குறிப்பாக, வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்தவரை இந்தியாவிலேயே முதன்முதலாக பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக ஆக்கிய பெருமையும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்குத்தான் வந்து சேருகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பெருமையாகவும், நன்றியோடும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதையெல்லாம் நான் இங்கே சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய இருபது சதவிகித இட ஒதுக்கீட்டிற்காகப் போராடி, இன்னுயிர் நீத்த தியாகிகளுடைய குடும்பங்களுக்கு, ஏறத்தாழ 30 குடும்பங்களுக்கு இன்றைய வரையிலும், மூன்று இலட்ச ரூபாய் நிதியோடு, மாதந்தோறும், சுதந்திரப் போராட்டத் தியாகிகளைப்போல, மொழிப்போர் தியாகிகளைப்போல அவர்களுக்கு பென்ஷன் உதவித்தொகை, மாதந்தோறும் ரூ.1,500/- வழங்கி சிறப்பித்திருக்கின்ற தமிழக அரசை நான் மீண்டும் மீண்டும், எத்தனை முறை பாராட்டினாலும் தகும் என்ற காரணத்தினாலே, நான் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். காரணம் என்னவென்றால்,

*"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன்தெரி வார்"*

என்று வள்ளுவர் சொல்வார். இந்தப் பயனைப் பற்றிய அனுகூலங்களை உணர்ந்தவர்களுக்குத்தான், அதனை அனுபவிக்கின்றவர்களுக்குத்தான் இந்த அரசுக்கு நன்றி சொல்ல வேண்டுமென்ற எண்ணம் இருக்கும். வேறு எண்ணம் உள்ளவர்கள், நன்றி சொன்னாலும், சொல்லாவிட்டாலும், அந்த மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள், தமிழகத்திலுள்ள அந்த கோடானுகோடி மக்கள் இன்றைக்குத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத்

தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, தமிழ்நாடு அரசு தேர்வாணையத்திலே முதன்முதலாக மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த திரு. அம்பாசங்கர் அவர்களை தேர்வாணையத்தினுடைய குழுத் தலைவராகப் நியமித்த, பெருமையும் தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களைத்தான் சாரும் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அதேநேரத்தில், இன்று காலையில் முதல்வர் அவர்கள் இங்கு இருக்கும்பொழுதே இந்தக் கோரிக்கையை வைத்திருந்தால் நலமாக இருந்திருக்கும். அவர்கள் இப்போது இல்லாவிட்டாலும், அவருடைய எதிரொலியாக இருக்கின்ற மரியாதைக்குரிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் மூலமாக நான் சில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோதுதான், இந்தத் தேர்வாணையத்திலே வன்னியர் இருவர், ஒருவர் குழுத்தலைவராகவும், ஒருவர் உறுப்பினராகவும் இருந்தார்கள். அதேபோல, எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே இரண்டுபேர் இடம் பெற்றிருந்தார்கள். ஆனால், இன்றைக்கு ஒரே ஒருவர் மட்டும்தான் இருந்துகொண்டிருக்கிறார். எனவே, அந்தக் குறையை நீக்கி, இந்தத் தேர்வாணையத்திலே ஒரு வன்னியரை தேர்வாணையக் குழு உறுப்பினராக நியமனம் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு உயர் நீதிமன்ற நீதிபதிகளிலே போதுமான அளவிற்கு மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. எனவே, உயர் நீதிமன்ற நீதிபதிகளிலே மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவத்தை வழங்க தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தேர்வாணையத்திலே ஒரு குறைபாடு இருப்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 'Open Competition' என்று சொல்லப்படுவது, பொதுத் தேர்வுப் பட்டியல். ஆனால், நம்முடைய தேர்வாணையத்திலே எப்படி எடுத்துக் கொள்கிறார்கள் என்றால், 'O.C.' என்பதை 'Other Communities' என்று தவறாகப் பொருள் கொண்டு—அவர்கள் தெரிந்து





செய்கிறார்களோ அல்லது தெரியாமல் செய்கிறார்களோ அது வேறு விஷயம், ஆனால் அந்த 'O.C.' என்பதை, - 'Open Competition'—பொதுப் பட்டியல்—பிற சமுதாயத்தவர்களுக்காக ஒதுக்கீடு செய்கின்ற அவலங்களெல்லாம் தமிழ்நாடு தேர்வாணையத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு, இன்றைக்கு அந்த தேர்வாணையத்திலே பதவிகளுக்குத் தேர்வு செய்கின்றபோது, 'O.C.' - 'Open Competition'-ல் தேர்வு செய்யப்படவேண்டியவர், அவருடைய தகுதியின் காரணமாக, ஒரு மிகப் பிற்படுத்தப்பட்டவர் என்று சொன்னால், அவருக்கு 'O.C.' - 'Open Competition'-லே இடம் தராமல், அவரைக்கொண்டுபோய், அவருக்குரிய பட்டியலாக இருக்கின்ற M.B.C.யிலே வைத்துவிடுகின்ற காரணத்தினாலே, M.B.C.யிலே வாய்ப்பை பெறக்கூடிய ஒருவர் அந்த வாய்ப்பை இழந்துவிடுகிறார். இதைத்தான் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பிற்பகல் 2-40

1995-லே, திரு. ஆர்.கே. சபர்பால் என்று சொல்லக்கூடிய ஒருவர், உச்ச நீதிமன்றத்திலே வழக்கு ஒன்று தொடுத்தபோது, அந்த வழக்கிலே அளித்த தீர்ப்பிலே, தெளிவாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அதாவது, தேர்வு முறையிலே, பொது விதி 22(அ) பிரிவை சரியாக அமல்படுத்தினால், 100 பேர்களை அவர்கள் ஒதுக்கீடு செய்கிறார்கள் என்றால், 20 இடங்களை மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்தாக வேண்டும். அதுதான் தேர்வுமுறை பொது விதி 22(அ) பிரிவு. அந்த அடிப்படையிலே ஒதுக்கீடு செய்யாததை, உச்ச நீதிமன்றம் கண்டித்து இருக்கிறது. அதை, தமிழக அரசு தேர்வாணையத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றும்கூட, அவர்கள் இன்னும் அந்தப் போக்கினைத் திருத்திக் கொள்ளவில்லை என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோலத்தான் 'Roster System'. அவர்கள் அதைக் கடைபிடிக்கிற நேரத்திலே, மொத்தம் 100 இடங்களிலே 20 இடங்கள் என்று சொன்னால், பத்துக்கு இரண்டு வீதம் என்று இருந்தால்தான், அது 100-க்கு 20 என்ற கணக்கு சரியாக வரும். ஆனால், முதல் பத்து இடங்களுக்கு மட்டும் என்ன காரணத்தினாலோ, ஒரே ஒரு M.B.C.-க்கு மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கிய காரணத்தினாலே,

பல்வேறு சூழ்நிலைகளிலே குறைவான பதவிகள் வருகிற நேரத்திலே, அது மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களைப் பாதிக்கிறது. எனவே, ஒவ்வொரு பத்து இடத்திற்கும், இரண்டு, இரண்டு M.B.C. இடங்கள் வருகிற மாதிரி, 'Roster' முறையானது மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு M.B.C.யிலே, அதாவது மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே, அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற இடங்கள் முறையாகத் தரப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க ஒரு ஆலோசனைக் குழுவை நியமனம் செய்ய வேண்டுமென்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு துறைகளிலே, குறிப்பாக, பல்கலைக்கழகங்களிலே—இன்றைக்கு சென்னை பல்கலைக்கழகத்தை எடுத்துக்கொண்டால், 200 ஆசிரியர் பணியிடங்கள், 300 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் இவையெல்லாம் காலியாக இருக்கின்றன. நிரப்பப்படாமல் இருக்கின்றன. இவையெல்லாம் நிரப்பப்படுகிறபோது, உண்மையிலேயே மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக அளிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்காகவாவது, அதேபோல, எல்லாத் துறைகளிலேயும் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்த இட ஒதுக்கீடு சரியாகப் போய் பயன்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதற்காகவாவது தமிழக அரசு உடனடியாக ஆலோசனைக் குழுவை நியமனம் செய்ய வேண்டும். அதிலே, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள், ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருந்தால், எப்படித் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 'back-log' என்ற முறையிலே நிரப்பிச் செய்வீர்களோ, அதேபோல் செய்திட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இப்போது, மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டிலே, தேர்ந்தெடுக்கிறபோது, 'Roster' முறையிலே, ஒரு நபர், தான் பணியிலே சேரவில்லை என்று சொன்னால், மறுபடியும் இன்னொரு வாய்ப்பு தரப்படுகிறபோது, 'Roster System'-ல் இருக்கக்கூடிய அடுத்த ஒரு பிரிவினருக்குத்தான் அந்த வாய்ப்பு தரப்படுகிறது. இது ஒரு தவறான அணுகுமுறை என்று பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஒரு M.B.C.-க்குரிய இடமானது, அந்த இடத்திற்கு ஒருவர் வரவில்லை என்று சொன்னால், அந்த இடம் நிரப்பப்படுகிறபோது, மீண்டும் அதே பிரிவினரைச் சார்ந்தவருக்குத்தான் வழங்கப்பட வேண்டும். அதுதான் தர்மமாக,



நியாயமாக இருக்கும் என்பதை உச்ச நீதிமன்றத் தீர்ப்பு; திரு. சபர்பால் என்பவருடைய தீர்ப்பிலும் சரி, உயர்நீதிமன்றத்தில், திரு. கே. ஆறுமுகம் என்பவர் தொடுத்த வழக்கிலேயும் சரி, அவை தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த அடிப்படையிலே, அவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தமிழக அரசானது—ஏற்கனவே நாங்கள் பலமுறை கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். எல்லோரும் சொல்கிற மக்கள் தொகைக் கணக்கை எடுத்துக்கொண்டால், அது இந்தியாவினுடைய மக்கள் தொகையைவிட மிகக்கூடுதலாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, எங்கள் கோரிக்கைகளை எல்லாம் நிவர்த்தி செய்வதற்காகவாவது—சாதி வாரிக் கணக்கெடுப்பை, செய்ய வேண்டும். இதை கலைஞர் அரசுதான் செய்ய முடியும். மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பல்வேறு சாதனைகளைச் செய்து வருகிறது இந்த அரசு. ஆகவே, இந்த அரசுதான் சாதி வாரிக் கணக்கெடுப்பை நடத்துவதற்கும் வழிவகைகளைக் காணவேண்டுமென்ற காரணத்தினாலே, தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, சாதி வாரிக் கணக்கெடுப்பினை நடத்தி, அதனுடைய அடிப்படையிலே, நீங்கள் இட ஒதுக்கீடு வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நிலப் பட்டாக்கள் வழங்குவதற்குச் செய்யப்படுகிற முறைகளிலே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலப் பட்டாக்கள் வழங்குவதற்கு தனி தாசில்தார், ஆர்.ஐ. இருக்கிறார். அதிகாரிகளும் அதற்குத் தனித்தனியாக இருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களிடத்திலே, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களும் சென்று பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நான் இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தனி தாசில்தார் மற்றும் பிற அதிகாரிகளையும் தனியாக நியமித்து, தாழ்த்தப்பட்ட மக்கள்போல பலனைப் பெறுவதற்கு வழிவகைகளைக் காண வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சலவையாளர்களுக்கு, கல் உடைப்பவர்களுக்கு, முடிதிருத்துவோருக்கு எல்லாம் கருவிகள் வாங்கிக் கொடுக்கின்ற ஒரு

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1998 மே 6

மிகப் பெரிய சாதனையை இந்த அரசானது செய்து கொண்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்டிருக்கின்ற எண்ணிக்கையானது மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால், அவற்றைக் குறைந்தது இரண்டு மடங்காவது உயர்த்தித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பெண்களுக்கான ஆயத்த ஆடைகள், தொழிற்பயிற்சி இவையெல்லாம் தருவதற்கு மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் பலபேர் தயாராக இருந்தாலும்கூட, தனியார்கள் இதிலே நிறைய கொள்ளை அடிக்கிறார்கள். அவர்களுக்குச் சரியான முறையிலே பயிற்சி தருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக, பெண்களுக்கான அந்தப் பயிற்சியினை அளிக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டயத் தொழிற் பயிற்சி படிக்கின்ற பள்ளியிலே படிக்கின்றவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஒரு வரைமுறை வைத்திருக்கிறார்கள். ஆயிரம் பேர் என்று எடுக்கிறார்கள். இது போதாது. எனவே, அந்த வரம்பை இரத்து செய்துவிட்டு, எத்தனைப்பேர் விண்ணப்பிக்கிறார்களோ, அத்தனை பேர்களுக்கும் அந்தப் பயிற்சினைத் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-45*

அதேபோல ஐ.ஏ.எஸ்., ஐபி.எஸ். போன்ற அகில இந்திய தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்ற முறையிலே நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு மீண்டும் கொண்டுவர விரும்புகிறேன். அதாவது அவர்களுக்குப் பயிற்சி தரப்படுகின்ற இடங்கள் மிக மிகக் குறைவாக இருக்கின்றன. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல பஞ்சாபிலே, இராஜஸ்தானிலே இப்படி வட இந்திய மாநிலங்களிலே ஆயிரக்கணக்கானவர்களுக்கு அத்தகைய பயிற்சிகளைத் தருகிறார்கள். அதிகமான அளவிலே அந்தப் பயிற்சியைப் பெற்றால்தான் அந்தத் தேர்வுகள் வரும்போது அதிகமான பேர்கள் அதில் வெற்றி பெற்று



1998 மே 6] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

வரக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தினால் ஐ.ஏ.எஸ். ஐபி.எஸ். தேர்வுகளுக்காகப் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கையை 200-ஆகவாவது நீங்கள் உயர்த்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதியிலே சமையலராகப் பணிபுரிகின்றவர்கள் சுமார் 2,500 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதியிலே சமையலராகப் பணிபுரிகின்றவர்கள், ஒரே தகுதியுடையவர்கள், ஒரே வேலையில் இருப்பவர்கள் 500 ரூபாய்தான் தொகுப்பூதியம் பெறுகின்றார்கள். எனவே, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதியில் பணிபுரியும் சமையலர்களுக்கு வழங்குவதைப்போலவே இவர்களுக்கும் சம்பளம் வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென்று உள்ள, அதாவது வன்னியர்களுக்கு என்று உள்ள ஒரே ஒரு அறக்கட்டளை செங்கல்வராய நாயக்கர் அறக்கட்டளை. அதிலே கோடிக்கணக்கான ரூபாய் இருந்தும்கூட, அந்த செங்கல்வராய நாயக்கர் அறக்கட்டளையினுடைய அந்தத் தொகை முழுவதும் அந்தக் கல்வி நிறுவனத்திற்குப் பயன்படுவதில்லை. பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இதுதொடர்பாக நீதிமன்றத்திற்கு எடுத்து செல்லப்பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், இன்றைக்கு 3 பேர் கொண்ட குழுவை நியமித்திருக்கிறீர்கள். அந்தக் குழு விரிவுபடுத்தப்பட்டாலும் சரி, அல்லது அதே குழுவாக இருந்தாலும் சரி, அதிலே முழுக்க வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கின்ற மாதிரி செய்ய வேண்டும் என்பதுதான். அப்போதுதான் அந்தச் சமுதாயத்திற்கு அது பயன்படும் என்ற காரணத்தால் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாமல்லபுரம் சாலையிலே செல்கின்றபோது ஆயிரம்வேலி ஆளவந்தார் என்ற ஒரு தர்மகர்த்தா இருந்தார். அவருடைய சொத்துக்கள்கூட கடந்த ஆட்சியிலே சில தனியார்களாலே குறிப்பாக ஆளும் கட்சியினுடைய செல்வாக்கு பெற்றவர்களாலே, அவர்களுடைய பினாமிகளாலே அபகரிக்கப்பட்டன. அது தொடர்பாக அன்றைக்கு

அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த வன்னியர்கள் எல்லாம் பெரிய பெரிய அரசியல் கட்சித் தலைவர்களெல்லாம் கூட்டம் போட்டு வீராவேசத்தோடு பேசினார்கள். ஆனால் இன்றைய வரையிலே அது சரிசெய்யப்படவில்லை. அந்த ஆளவந்தார் அறக்கட்டளையினுடைய சொத்துக்கள் எல்லாம் அந்த மக்களுக்கே பயன்படுகின்ற வகையிலே ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கோரிக்கை நான் பலமுறை வைத்திருக்கிறேன். வன்னிய கிருத்தவர்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து அறிவிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். பழனி இடைத்தேர்தல் நடைபெற்ற நேரத்தில் ஜெயலலிதா அம்மையார் அவர்கள் ஓட்டுக்காக அந்த மக்களை அவசர அவசரமாக, அந்த ஆணைக்குழுவின் மூலமாக ஆய்வு செய்யாமல் அவர்கள் அறிவித்துவிட்டார்கள். ப்ழனி தேர்தலிலே வெற்றிபெற்று வாக்குகள் பெற்று முடிந்தவுடன் ஆற்றோடு போச்சு அந்தப் பேச்சு என்று சொல்வதைப்போல அப்படியே அந்த மக்களை கை கழுவி விட்டுவிட்டார்கள். நான் தமிழக அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், மீனவர்களாக இருக்கக்கூடியவர்கள் கிருத்தவர்களாக மதம் மாறுகிறபோது அவர்கள் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே நாம் அறிவிக்கிறோம். அப்படி இருக்கின்றபோது, வன்னியர்களாக உள்ள மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் கிருத்தவர்களாக மதம் மாறியிருக்கிறார்கள் என்றால் ஏன் அவர்களையும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்கக்கூடாது என்பதைத்தான் கேட்கிறேன். இந்த நியாயமான வாதத்தை தங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஆதாயத்திற்காக அன்றைய முதல்வர்தான் அவசர அவசரமாக அந்த அறிவிப்பைச் செய்தார் என்றால் அடித்தள மக்களைக் கைத்தூக்கிவிட வேண்டும் என்ற இலட்சியத்தோடு இருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களாவது அந்த வன்னிய கிருத்தவர்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மருத்துவப் படிப்பிலே இட ஒதுக்கீடு செய்கின்றபோது கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு 15 இடங்களைத் தருகிறது



அரசு. அதிலே யாருக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கிறது என்றால் ஆதிதிராவிடர்களோடு மண உறவு வைத்துக்கொள்கின்ற உயர் சாதிக்காரர்களுக்குத்தான் அந்த வாய்ப்புக் கிடைக்கிறது. ஏனென்றால் ஆதிதிராவிடர்களை மணம் செய்துகொள்கிற உயர்சாதிக்காரர்களுக்குத் தான் முதலாவது முன்னுரிமை. அதற்கு அடுத்து பிற்படுத்தப்பட்டோர், அதற்கு அடுத்து மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்று முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஆனால் அந்த 15 இடங்களும் யாருக்குப் போய்ச் சேருகிறது என்று நடைமுறையிலே பார்த்தால் முழுக்க முழுக்க உயர்சாதிக்காரர்களுக்குத்தான் கலப்பு மணத்திற்காக ஒதுக்கப்படுகின்ற அந்த இடங்கள் போய்ச் சேருகின்றன. நான் தமிழக அரசை வேண்டி விரும்பிக் கேட்டுகொள்வது என்னவென்றால்......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. அதில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை இன்னொரு சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. அதனுடைய முக்கிய நோக்கம் தாழ்த்தப்பட்ட ஒரு சமுதாயத்தவரை மற்ற சமுதாயத்தவர்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பது. அந்த அடிப்படையிலேதான் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்ன கேட்கிறேன் என்றால், சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பது இந்த ஆட்சியின் இலட்சியம். எனக்கும் அதில் உடன்பாடான கருத்து உண்டு. சாதியற்ற தன்மை வருவதற்கு உயர்சாதிக்காரர்களோடு இணைந்தால்தான் சாதியற்ற தன்மை வரும் என்பதல்ல. சாதி என்பது அது மிகப் பிற்படுத்தப்பட்ட சாதியாக இருந்தாலும் சரி, பிற்படுத்தப்பட்ட சாதியாக இருந்தாலும் சரி, சாதி சாதிதான். ஆகவே, நான் என்ன வேண்டுகோள் வைக்கின்றேன் என்று சொன்னால், ஆதிதிராவிடர்களைத் திருமணம் செய்துகொண்ட உயர்சாதிக்காரர்களுக்கு 5 இடங்களை ஒதுக்குங்கள். மிகப் பிற்படுத்தப் பட்டோரைத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு 5 இடங்களை ஒதுக்குங்கள். இப்படிச் செய்தால், இதிலே என்ன குறை வந்துவிடும் என்று எனக்குத் தெரியவில்லை.

*பிற்பகல் 2-50*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களை வேறு சமுதாயத்தினர் திருமணம் செய்துகொண்டால் இந்த வாய்ப்பு முதலிலே அவர்களுக்குத் தரப்படுகிறது. அடுத்த 15 பேர் அதிலே இல்லை என்று சொன்னால், படிப்படியாக இப்படிக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு இட ஓதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே இருக்கிறது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இட ஓதுக்கீடு குறித்து அரசு மேலும் ஆய்வு செய்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழக அரசானது, காவல் துறையிலே உதவி ஆய்வாளர்களையும் காவலர்களையும் தேர்வு செய்கிற நேரத்திலே தாழ்த்தப்பட்டவர்களுக்கான வயது வரம்பை 35 என்று நிர்ணயித்திருக்கிறது. மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பொதுக் கோட்டாவிலே இருப்பவர்களைப் போல 30 வயது என்று வயது வரம்பை நிர்ணயம் செய்திருக்கிறது. மத்திய அரசு என்ன செய்கிறது என்றால், O.B.C. என்று வருகிறபோது, அவர்களுக்கு 3 ஆண்டுகளைத் தளர்த்தி அறிவித்திருக்கிறது. நான் இந்த நேரத்தில் தமிழக அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், தமிழக அரசு, காவல் துறைக்கு உதவி ஆய்வர்களை, காவலர்களைத் தேர்வு செய்கிறபோது, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வயது வரம்பைத் தளர்த்தி 35 என்று நிர்ணயம் செய்து அவர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான உதவித்தொகை ரூ.180 என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மிக மிகக் குறைவு, இன்றைய விலைவாசிக்கு அது போதாது. எனவே அதை 250 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, 'டாப்செட்கோ' என்று சொல்லப்படுகின்ற, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமானது பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்கின்ற நேரத்தில் 10 சதவீதத்தை முன்பணமாகக் கட்டவேண்டுமென்று சொல்கிறது. அதனை 5 சதவிகிதமாகக் குறைத்தால் அதிகம்பேர் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்தக் கடன்களைக் கொடுக்கின்ற நேரத்தில் மாவட்ட அலுவலர்களைக் கொண்டு பரிசீலித்த பின்னர் வழங்குகிறார்கள். அதை நேரடியாக பிற்படுத்தப்பட்டோர் நல வாரியமே வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிறுவனத்தின் மூலம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்கின்ற நேரத்திலே அதற்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். நீங்கள் வங்கிகளுக்கு அறிவுரை வழங்கி இந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'இவர்களே மிகமிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், இவர்களைக் கெடுபிடி செய்து, இவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பைத் தடுத்துவிடாதீர்கள்' என்று வங்கிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலே, செந்துறையிலே பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி ஒன்றைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டிமடத்திலே உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் தேவைப்படுகிறது. அதைக் கட்டித்தர வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைக்கிறேன்.

*"உதவி வரைத்தன்று உதவி உதவி*
*செயப்பட்டார் சால்பின் வரைத்து"*

என்று திருவள்ளுவர் பெருந்தகை சொல்லியிருக்கிறார். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் இருக்கின்ற இந்த அரசானது, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையினர் என்று அழைக்கப்படுகின்ற 85 சதவிகித மக்களுக்காகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மண்ணை நம்பி மரம் இருக்கிறது, மரத்தை நம்பி கிளை இருக்கிறது என்று சொல்வதைப்போல, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையின மக்கள் எல்லாம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக நான் சொல்லுகிறேன், இந்த அரசானது, ஒடுக்கப்பட்ட மக்களுடைய ஒப்பற்ற ஒளிநாயகனாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற கலைஞர் . அவர்களுடைய அரசானது என்றைக்கும் நீடிக்கும். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையின மக்களுக்கு இந்த அரசு கவசமாக இருந்து அவ்வப்போது ஆபத்து வருகின்ற நேரங்களில் போர் வாளாக, கேடயமாக என்றென்றைக்கும் திகழ்ந்து இந்த மக்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டித்தர, தமிழக முதல்வர்

டாக்டர் கலைஞர் அவர்களும், இந்த அரசும் நீண்ட பல காலம் நீடித்து வளரவேண்டும், வாழவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் வை. இராமசாமி.

***டாக்டர் வை. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களை வணங்கி ஒருசில கருத்துக்களை மட்டும் எடுத்துக்கூறி என்னுடைய உரையை நிறைவு செய்ய நான் விழைகிறேன்.

அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் விடுதிகளிலும், இல்லங்களிலும் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உணவு மானியம் ரூ.85-லிருந்து தலைவர் அவர்களுடைய கருணையால் ரூ.120 என்று உயர்த்தி அளிக்கப்பட்டிருக்கிறது. அதை ரூ.250 என்ற அளவுக்கு உயர்த்திக் கொடுத்தால் ஏழை, எளிய மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக இருக்கும். இக்கோரிக்கையை தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பிற்பகல் 2-55

இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்காக 1997-98-இல் ரூபாய் இரண்டு கோடியாக இருந்ததை தலைவர் கலைஞர் அவர்கள் ரூ.10 கோடியாக உயர்த்தியுள்ளார்கள். முதன்முதலாக 1997-98-இல் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் முன்னேறிய வகுப்பினர்களிடையே வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குவதற்காக பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களுக்கு ரூ.5 கோடியும், முன்னேறிய வகுப்பினர்களுக்கு ரூ.3 கோடியுமாக ஒதுக்கி தலைவர் கலைஞர் அவர்கள் ரூ.18 கோடியை இந்த இலவச வீட்டு மனைப்பட்டாக்களை வழங்குவதற்காக அளித்திருக்கிறார்கள். இதனை எல்லோரும் பாராட்டிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு,



பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் போன்ற மாணவர்களுக்கு மாவட்ட அளவில் முதலிடம், இரண்டாமிடம் பெறுபவர்களுக்குக் கிடைக்கிறது. தொழிற்கல்வியில் சேருகின்ற காலத்தில் ஆண்டிற்கு ரூ.3,000 வீதம், நான்கு ஆண்டுகளுக்கும் தரப்படுகிறது. அதே போல, தந்தை பெரியார் பெயராலே அமைந்திருக்கின்ற நினைவுப் பரிசு 10-ஆவது வகுப்பில் முதல் இரண்டு நிலையில் உள்ள மாணவர்களுக்கும், பட்டயப் படிப்பு-டிப்ளமோ படிப்பவர்களாக இருந்தால், ரூ.3,000 வீதம் மூன்று ஆண்டுகளுக்கும் ஏழை எளிய மாணவர்களுக்காக தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய கருணையால் அளித்திருக்கின்றார்கள்.

சமூக நீதிக்காக உழைத்தவர்களை கௌரவிக்கும் பொருட்டு தந்தை பெரியார் பெயராலே ஒரு விருதினை வழங்கி வருகின்ற தலைவர் கலைஞர் அவர்கள் சமூக நீதிக்காக போராட்டங்களில் ஈடுபட்டு உயிர் நீத்த வன்னியகுலத்தவர்களுக்கெல்லாம் ஒரு இலட்சம் ரூபாய் என்று தலைவர் கலைஞர் அவர்கள் முதலில் அறிவித்ததை எங்களைப் போன்றவர்களின் கோரிக்கைக்கு இணங்க அதனை மூன்று இலட்சங்களாக, ஆக்கியும், மேலும் அவர்களுக்கு பென்ஷன் தொகையை மாதம் ஒன்றிற்கு ரூ.1,500/- ஆக வழங்குவதற்கு ஏற்பாடு செய்து தந்ததற்கும் வன்னியர் சமூகம் தங்களுடைய வாழ்நாள் முழுவதுமாக கடமைப்பட்டிருக்கின்றது என்பதை அவர்களுடைய சார்பாக நான் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன்.

இலவசக் கருவிகளை வழங்குகின்ற வகையில் பித்தளை சலவைப் பெட்டிகள் இதுவரை 4,000 என்றும், முடி திருத்துகிறவர்களுடைய கருவிகள் 500 என்றும், கல்லுடைக்கும் கருவிகள் 500 என்றும் வழங்கிக் கொண்டிருப்பதை தயவுசெய்து இரண்டு மடங்குகளாக்கி எதிர்காலத்தில் வழங்கிட வேண்டுமென்று நான் தலைவர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே வாழ்கின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர் போன்றவர்களுடைய முன்னேற்றத்திற்காக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கிடவும், சமூகக் கல்வி மற்றும் பொருளாதார நிலைகளைக் கண்டறியவும் முழு அளவிலான வகுப்பு வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்துகின்ற பணியைத் தலைவர் கலைஞர் அவர்கள் விரைவுபடுத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் வை. இராமசாமி] [1998 மே 6

கிராமப்புறங்களில் வாழும் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர் மரபினர் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் ஆண்டுதோறும் இந்தத் துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகவும் விரைவாகவும் செய்வதற்குப் போதிய அதிகாரிகள் இல்லாத காரணத்தினால் இது மிகவும் தாமதப்பட்டு வருகிறது. தலைவர் கலைஞர் அவர்களால் ஒதுக்கப்பட்ட ரூ.18 கோடியானது சரியாக கடந்த காலத்தில் செலவு செய்யப்பட்டிருக்குமா என்பது ஐயத்திற்குரியதாக இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு வட்டத்திலும், எப்படி இப்போது ஆதிதிராவிடர் நலத் துறையில் வட்டாட்சியர்கள் என்று தனியாக இருக்கின்றார்களோ அதேபோல இந்தத் துறையிலும் தனியாக வட்டாட்சியர்களை நியமித்து அவர்களுக்குக் கூடுதல் பணியாளர்களை அமர்த்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வைக்கவேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே முறையிடுகின்றேன். 1969-இல் தலைவர் கலைஞர் அவர்களுடைய சிந்தனையில் உதித்தது இந்த பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை. அன்றைக்கு ஏற்படுத்தப்பட்ட இந்த இயக்குநரகமும், 1989-இல் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினருக்காக ஏற்படுத்தப்பட்ட இயக்குநரகமும் போதுமான கூடுதல் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் பணிகள் விரைவாகவும் துரிதமாகவும் நடைபெற முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. 187 கோடி ரூபாயாக இருந்த இந்த மானியக் கோரிக்கை நாளுக்குநாள், வருடத்திற்கு வருடம் உயர்ந்து தலைவர் கலைஞர் அவர்களால் இப்போது ரூ.90 கோடியாக உயர்த்தித் தரப்பட்டுள்ளது. அதற்கேற்றவாறு அந்தப் பணிகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கான அதிகாரிகளை எல்லாம் நியமிக்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட அளவிலே மாவட்ட அதிகாரிகளுக்குக் கீழ் பணியாற்றுகின்றவர்கள் எல்லாம் வருவாய்த் துறையிலே இருந்து அங்கே இதற்காகப் பணியமர்த்தப்படுகின்றார்கள். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கீழே பணிபுரிகின்ற காரணத்தினால் அவர்கள் இவர்களை நினைத்த நேரத்திலே மாற்றி விடுகின்றார்கள். எனவே, இந்தத் துறையின் மூலம் செய்ய வேண்டிய காரியங்களைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலையிலே இருப்பதால், பணியாளர்களை நியமிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1998 மே 6] [டாக்டர் வை. இராமசாமி]

பிற்பகல் 3-00

தொழில் பட்டயப் படிப்பு இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் உள்ள எண்ணிக்கை வரம்பை நீக்கி, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீரமரபினர்கள் யார் வேண்டுமானாலும் படிக்கலாம் என்ற அந்தத் திட்டத்தை தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தனிப் பயிற்சிப் பள்ளியில் இதுவரையில் 50 பேர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதை மேலும் உயர்த்தி, இரண்டு மடங்காக ஆக்க இந்த ஆண்டு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கலைஞர் அவர்களையும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

சீருடைகள் வழங்குவதிலே 10-ஆவது வகுப்பு வரை படிக்கின்ற பிள்ளைகளுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதே விடுதியில் படிக்கின்ற பிளஸ்-1, பிளஸ்-2 படிக்கின்ற பிள்ளைகளுக்குச் சீருடைகள் வழங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்குக்கிடையே மனஉளைச்சல் ஏற்படுகிறது. ஆகவே பிளஸ்-1, பிளஸ்-2 பிள்ளைகளுக்கும் அந்தச் சீருடைகள் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு வழங்குவதால் அப்படி ஒன்றும் அதிகப்படியான செலவு ஏற்பட்டு விடப் போவதில்லை. கருணை உள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள் அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பேர்ப்பெரியான்குப்பத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக இயங்கி வரும் மாணவர் விடுதி ஒன்று உள்ளது. ஆனால், இடிந்துபோன கட்டடத்திலேதான் அது இயங்கி வருகிறது. கடந்த ஆண்டிலே இதே மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது அதற்குக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டிருந்தேன். அது என்ன காரணத்தினாலோ செய்யாமல் விடப்பட்டுள்ளது. இந்த ஆண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள், அந்த விடுதிக்கான கட்டடத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பண்ருட்டி நகருக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பாக இந்த ஆண்டு மாணவர் விடுதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காடாம்புலியூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் இயங்கி வருகின்ற விடுதிக்கு ஒரு கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விடுதியிலே பணியாற்றுகின்ற காப்பாளர்களுக்கு பணி உயர்வு இல்லை என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எந்த வகையிலாவது அவர்களுக்குப் பணி உயர்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பினை நல்கியமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்துள்ள அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

இந்தியாவிலே முதன் முதலில் பிற்படுத்தப்பட்டோருக்கு என தனி இலாகாவும், தனி அமைச்சரும் நியமனம் செய்து, இந்தியாவில் புதிய வரலாறு படைத்தவர்தான் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதுமட்டுமல்ல, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையை உருவாக்கி, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த திரு. இராசாராம் அவர்களையே அதற்கு அமைச்சராக்கி, புதிய வரலாறு படைத்தவரும் கலைஞர் அவர்கள்தான்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு, நிலப் பட்டாவுக்கு மட்டும் 18 கோடி ரூபாய் ஒதுக்கியும், அதில் மிகக் குறுகிய காலத்திலே 12 கோடி ரூபாயை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்காகச் செலவு செய்து, நிலப் பட்டா தயார் செய்துள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

கனரக ஓட்டுநர் பயிற்சிக்கு 200 பேர்களுக்குத்தான் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அதை 2,000 பேர்களாக உயர்த்தியிருக்கிறார்கள்.



கணினிப் பயிற்சிக்கு 175 பேர் என்று ஒதுக்கப்பட்டிருந்தது. அதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1,000 பேர்களாக உயர்த்தியிருக்கிறார்கள். எனவே, மீண்டும் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், கனரக ஓட்டுநர் பயிற்சிக்கு 5,000 பேர்கள் என்றும், கணினிப் பயிற்சிக்கு 3,000 பேர்கள் என்றும் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இங்கே பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் 69 சதவீதம் மக்கள் இருக்கிற காரணத்தால், கடல் போல் பரந்து விரிந்து இருக்கின்ற அந்த மக்கள் தொகைக்கு இன்னும் கூடுதலாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

19 சதவிகிதம் மக்கள் தொகை கொண்ட ஆதி திராவிடர் மேம்பாட்டிற்காகத் தமிழக முதல்வர் அவர்கள் 434 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு நான் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்துவதற்கு, அவர்கள் எடுக்கின்ற முயற்சிகளைப் பாராட்டுகின்றேன். ஆனால், அதேநேரத்தில், 69 சதவிகிதம் மக்கள் தொகை கொண்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலனுக்கு 90 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது, 'யானைப் பசிக்கு சோளப் பொறி' போட்டது போல் இருக்கிறது. எனவே, 4 கோடி மக்கள் தொகை கொண்ட பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபின மக்களுக்கு, மக்கள்தொகை அடிப்படையில் ஏறக்குறைய ரூ.1,000 கோடி நிதி ஒதுக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், அந்த இன மக்கள்தான் தமிழகத்தையே அதிகமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் தொகையை சாதி வாரியாகக் கணக்கு எடுக்கவும், அதற்கு நிதி ஒதுக்கவும் வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-05

இன்றையதினம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்காக நிலப்பட்டா வழங்குவதற்கு பயனாளிகளைத் தேர்வு செய்வதற்காக அங்கே அதிகாரிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் 50 தாசில்தார்களை நியமனம் செய்ய வேண்டுகிறேன்.

50 ஜீப்புகளையும் அவர்களுக்கு வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஆர்.ஐ. போன்ற அதிகாரிகளையும் நியமிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் ஏற்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் இந்த மக்களுக்குப் பயன்கள் கிடைக்கும் என்பதையும் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றைய மதுரை மாவட்டம், இன்றைய மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்ற பிரமலைக்கள்ளர் சமுதாயத்திற்கு கள்ளர் சீரமைப்புத் துறை ஆங்கிலேயர் ஆட்சியில் அமைக்கப்பட்டது. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் குற்றப் பரம்பரை சட்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருந்த பிரமலைக்கள்ளர் சமுதாயத்தை கல்வி, சமூக, பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அந்தக் கள்ளர் சீரமைப்புத் துறை, இன்றையதினம் பல்வேறு சமூக முன்னேற்ற கடமைகளை எல்லாம் ஆற்றாமல், கிணறு வெட்டக் கடன்கள் வழங்காமல், பல்வேறு தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்யாமல் ஒரு டி.ஈ.ஓ. அலுவலகத்தைப் போலவே மாறிவிட்டது. ஆகவே, அந்தச் சமுதாயத்தை கல்வி, பொருளாதார, சமூக ரீதியாக உயர்த்துவதற்காக ஏற்பட்ட அந்தத் துறையானது, இன்றையதினம் சாதாரண டி.ஈ.ஓ. அலுவலகமாக மாற்றப்பட்டு இருக்கிறது. எனவே, அந்தச் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் De-notified Tribes என்றே அழைக்கப்பட்டு வந்தார்கள். நீங்கள் சீர்மரபினர் என்று ஆக்கி இருக்கிறீர்கள். அதனால் மத்திய அரசினுடைய சலுகை பாதிக்கப்படுகிறது என்ற அந்த நிலைமையை முதலமைச்சருடைய கவனத்திற்கு நாங்கள் சொல்லி இருக்கிறோம். எனவே, ஏற்கனவே இருந்தபடி De-notified Tribes என்று பிரமலைக்கள்ளர் சமுதாயத்தை அழைக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் வாழ்கிற பிரமலைக்கள்ளர்களுக்கு மட்டும் சலுகை என்ற நிலை இல்லை. அவர்கள் சென்னையிலே வாழ்கிறார்கள்; நாகப்பட்டினத்திலே வாழ்கிறார்கள்; விருதுநகரிலே வாழ்கிறார்கள்; இன்னும் பல்வேறு இடங்களிலே வாழ்கிறார்கள். எனவே, எல்லா மாவட்டங்களிலும்



வாழ்கிற பிரமலைக்கள்ளர் சமுதாயத்திற்கு அவர்களுக்குரிய சலுகைகளை அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கள்ளர் சீரமைப்புத் துறைக்கு ஆண்டுதோறும் 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வல்லரசு அவர்கள் பிரமலைக்கள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்களை De-notified Tribes என்று அழைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். De-notified Tribes என்று சொன்னால், குறிப்பிடத்தக்க குற்றச்சாட்டுக்கு உரியவர்கள் என்ற ஓர் அர்த்தம் அதிலே தொக்கி நிற்கிறது. அந்த அர்த்தத்தோடு ஒரு சொல் வழங்கப்பட வேண்டுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. பி.என். வல்லரசு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்களுடைய மேன்மையான உயர்ந்த எண்ணத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால், மத்திய அரசிடமிருந்து சில சலுகைகள் பெற வேண்டி இருக்கின்ற காரணத்தினாலே, De-notified Tribes என்று இருந்தால்தான் அந்தச் சலுகைகளைப் பெற முடியும் என்று சமுதாயம் கருதியதால்தான், முதலமைச்சரிடம் சமுதாயத் தலைவர்கள் அத்தனை பேரும் அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள் என்பதை நான் கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றப் பரம்பரை என்ற அந்தப் பெயரே இழிவாக இருக்கிறது என்று சொல்லி, குற்றப் பரம்பரை சட்டத்தையே இராஜாஜி காலத்தில்—1952 ஆம் ஆண்டு வாக்கில் என்று கருதுகின்றேன், அப்போது இராஜாஜி அவர்கள் அதை இரத்து செய்தார்கள்; அதையும் மறந்துவிடக் கூடாது.

**திரு. பி.என். வல்லரசு:** துணைத் தலைவர் அவர்களே, பிரமலைக்கள்ளர் சமுதாயத்தை முன்னேற்றுவதற்குப் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஒன்றை நிறுவிட வேண்டுகிறேன். மதுரையில்

இருக்கிற கள்ளர் சீரமைப்புத் துறைக்கு ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமனம் செய்ய வேண்டுகிறேன். காலமெல்லாம் அந்தத் துறைக்கு ரிடையர் ஆகிற அதிகாரிகளையே போட்டு, அவர்கள் வசூல் செய்துவிட்டு, அந்தத் துறையையே கவனிக்காமல் விட்டுவிடுகிற காரணத்தால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போட வேண்டும் என்று தொடர்ந்து மூன்று முறை வலியுறுத்திக் கொண்டு இருக்கிறேன்; 4-ஆவது முறையாக இப்போதும் வலியுறுத்துகிறேன்.

மற்ற இடங்களில் திண்டுக்கல், தேனி போன்ற இடங்களில் மாவட்ட அலுவலகங்களில் கள்ளர் சீரமைப்புத் துறை போர்டு மட்டும்தான் தொங்குகிறது; அதற்குரிய அதிகாரிகள் இல்லை. அதற்குரிய அதிகாரிகளை நியமித்து, தாசில்தார்களை நியமனம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே பிரமலைக்கள்ளர் சமுதாயத்திற்கு பல்வேறு சமூகக் கடமைகள் ஆற்றிவந்தது. காங்கிரஸ் ஆட்சியிலும், கலைஞர் ஆட்சியிலும், அவை செய்யப்பட்டன. ஆனால், இப்போது அந்த அலுவலகங்கள் வெறும் கல்வி அலுவலகங்களாக மாறிவிட்டன. எனவே, தொழிற்சாலைகள், அமைப்பதற்கு சிறு தொழில் செய்வதற்கு, கிணறு வெட்டுவதற்கு, மாட்டு வண்டிகள் வாங்குவதற்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட கடன்கள் மீண்டும் வழங்கப்படவேண்டும்; அது மானியத்துடன் வழங்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியில் கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலம் ஐடிஐ., பாலிடெக்னிக் உருவாக்கித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளில் 'டீச்சர் டிரெயினிங்' பிரிவு இருந்தது. அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற பல்வேறு கள்ளர் மேல் நிலைப் பள்ளிகளில் 'டீச்சர் டிரெயினிங்' பிரிவு இருந்தது. செக்கானூரணி, நாட்டாமங்கலம், பாப்பாபட்டி, ராஜதானி போன்ற அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சிப் பிரிவு இருந்தது. அதை மீண்டும் அங்கே அரசு உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-10

கள்ளர் சீரமைப்புத் துறையில் கல்வி அலுவலர்களை நியமனம் செய்ய வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான்





பலமுறை கேட்டிருக்கிறேன். கள்ளர் சீரமைப்புத் துறையில் 200 ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. 10 ஆசிரியர்கள் பார்க்க வேண்டிய வேலையை 3 ஆசிரியர்கள் பார்க்கிறார்கள். கல்வியின் தரம் சீர்கேடு அடைந்து இருக்கிறது. எனவே, 200 ஆசிரியர்களையும் நியமனம் செய்யவேண்டும். பிரமலைக் கள்ளர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற அரசாணைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறேன். அதை விரைவில் வெளியிடவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மறவர் சமுதாய மக்களுக்கு மறவர் சீரமைப்புக் குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. எனவே, விரைவில் மறவர் சமுதாய மக்களுக்கு கல்வி, சமூக, பொருளாதார ரீதியான முன்னேற்றத்திற்கு மறவர் சீரமைப்பு மூலம் ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும், அழகப்பா பல்கலைக் கழகத்திலும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆராய்ச்சி மையம் இருக்கிறது. அதற்கு ரூ.15 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுத்து, தனி இலாகாவாக அதை உருவாக்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கமுதியில் பசும்பொன் தேவர் சொத்துக்களை மீட்கவும் பராமரிக்கவும் ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் கமிட்டி ஒன்று அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது. இன்றுவரை அது செயல்படாமல் இருக்கிறது. தமிழக முதல்வர் அவர்கள் அதற்குரிய ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமனம் செய்து, அது விரைவாகச் செயல்பட நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

பசும்பொன் தேவர் வாழ்ந்த திருநகர் வீட்டை அரசு நினைவுச் சின்னமாக ஆக்கவேண்டும். முத்துராமலிங்கத் தேவர் பெயரால் பல்கலைக்கழகம் அமைக்க நான் வலியுறுத்துகிறேன். தேவர் இன மக்களின் நீண்ட நாள் கோரிக்கை இது. இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் இரண்டு கோடி தேவர் இன மக்கள் புறக்கணிக்கப்படுவதாக ஓர் எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இரண்டு கோடி தேவர் இன மக்களிடம் ஒரு வேதனையும் அச்சமும் இருந்து

கொண்டிருக்கிறது. அதை நான் மனம் திறந்து முதல்வர் கலைஞர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கிறேன். இதே இரண்டு கோடி தேவர் இன மக்கள்தான் ஆரம்பம் முதல் கலைஞருக்கும், அவருடைய ஆட்சிக்கும் காவலர்களாக இருந்தவர்கள். ஆனால், இன்று அந்த தேவர் இன மக்களிடையே ஏதோ ஒரு மனக்குறை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஜாதிக் கலவரத்தில் காவல் துறையின் ஒருசில உயர் அதிகாரிகள், அவர்களுக்கு எதிராகப் பல்வேறு பொய் வழக்குகளைப் போட்டு விட்டார்கள் என்ற மன வேதனை இருக்கிறது. ஜாமீனில்கூட வெளியில் வரமுடியாத அளவுக்கு அவர்கள் செய்தார்கள் என்ற நிலை இருக்கின்ற காரணத்தால் அதையெல்லாம் விசாரிக்க உயர்மட்டக் குழு அமைக்கவேண்டும் என்று சொன்னார்கள். நீங்கள் கிருத்துதாஸ் காந்தி என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் உயர்மட்டக் குழு போட்டீர்கள். அந்தச் சமுதாய மக்களின் வேதனைகளை, நஷ்டங்களை அறியச் செய்தீர்கள். அதேபோன்று, மிகப் பின்தங்கிய தேவர் இன மக்களுடைய மன வேதனைகளை நஷ்டங்களை கண்டறிவதற்கு, ஜாதிக் கலவரத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பை அறிவதற்கு ஓர் உயர்மட்டக் குழுவை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். *(மணி அடிக்கப்பெற்றது).*

இன்றையதினம், தேவர் இன மக்களிடம் எப்படிப்பட்ட எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்றால், இன்றைக்கு ஒரு அன்பில் தர்மலிங்கம் இல்லை, இன்றைக்கு ஒரு மன்னை நாராயணசாமி இல்லை, இன்றைக்கு ஒரு பி.கே. மூக்கையா தேவர் நம்மிடையே இல்லை. ஆகவே, தமிழக முதல்வர் அவர்களின் கவனம் வேறு திசைக்குச் செல்கிறதோ என்று அச்சப்பட்டுக் கொண்டு இருக்கிற காரணத்தால், நீங்கள் 1969 ஆம் ஆண்டிலிருந்த கலைஞராக, தேவர் இன மக்களுக்கு ஆதரவாக விளங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைமைச் செயலகம், உயர்நீதிமன்றம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் தேவர் இன மக்களுக்கு உரிய முக்கியத்துவம் இல்லை என்று சொல்கிறார்கள். எனவே தேவர் இன ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற உயர் அதிகாரிகளுக்கு நல்ல பதவி வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதை



மனதாரப் பாராட்டுகிறேன். ஆனால், மற்ற சமுதாய மக்களிடையே எப்படிப்பட்ட எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்றால், இவர் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்குத்தான் அனைத்துச் சலுகைகளையும் வழங்குகிறார் என்ற எண்ணம் ஏற்பட்டு, இன்றைக்கு அரசுக்கு எதிராக பல சமுதாயங்கள் உருவாகிக் கொண்டிருப்பதைத் தோழமைக் கட்சியின் உண்மையான தோழன் என்ற வகையில் மனம் திறந்து சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் தூத்துக்குடியில் சுந்தரலிங்கனார் கோட்டை ஒன்றைத் திறந்து வைத்தீர்கள். அதனால் தென் மாவட்டத் தேவர் இன மக்கள் கேட்கிறார்கள், வெள்ளையத் தேவனுக்கு கோட்டை எங்கே, அவனுடைய வாரிசுகளுக்கு வீடுகள் எங்கே என்று கேட்கிறார்கள். பூலித்தேவனுக்கு கோட்டை எங்கே, அவனுடைய வாரிசுகளுக்கு வீடுகள் எங்கே என்று கேட்கிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூலித்தேவனுடைய கோட்டையைப் புதுப்பிக்க பல இலட்ச ரூபாய் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கி அந்தப் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. தயவுசெய்து வல்லரசு அவர்கள் அதைப் போய்ப் பார்த்துவிட்டு வந்து, பிறகு பேசவேண்டும்.

திரு. **பி.என். வல்லரசு:** அதை நான் வரவேற்கிறேன். ஆனால், மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பாராளுமன்றத் தொகுதி தேர்தலின்போது நிலக்கோட்டையில் தாங்கள் பேசினீர்கள். அப்போது குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் மட்டும் வரவில்லை. பல சமுதாயங்களைச் சேர்ந்த மக்களும் அங்கே கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அந்தப் பேச்சு பல எதிர் விளைவுகளை ஏற்படுத்தி விட்டது. தென்காசியிலே பேசினீர்கள். ஆர்வத்தின் காரணமாக ஒரு சமுதாயத்திற்கு கை கொடுத்து உயர்த்த வேண்டும் என்பதற்காகச் சொன்னீர்கள். அங்கே இருக்கிற பல்வேறு சமுதாய மக்கள் எதிர் விளைவுகளை ஏற்படுத்துகிறார்கள். அதனால் நான் பணிவோடு, அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம்....

*பிற்பகல் 3-15*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 100 அடி ஆழக் கிணற்றிலே

விழுந்தவர்களுக்கு, 100 அடி கயிற்றைப் போட்டுத்தான் அவர்களைத் தூக்க வேண்டும். 10 அடி அல்லது 50 அடி ஆழத்திலே இருப்பவர்களுக்கு 50 அடி கயிறு போதும். எனவேதான், தாழ்த்தப்பட்ட மக்களைச் சீர்திருத்த, அவர்களை முன்னேற்ற கொஞ்சம் அதிகப் பயன், நாமெல்லாம் பணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கடுத்து, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், அதற்கடுத்து பிற்படுத்தப்பட்டவர்கள் நிலையிலே அவர்களை எல்லாம் கை தூக்கி விடவேண்டியிருக்கிறது. ரொம்ப ஆழத்திலே இருப்பவர்களைக் கொஞ்சம் கையை நீட்டித்தான் மேலே தூக்க வேண்டியிருக்கிறது. நாம் இருவரும் சேர்ந்துதான் அவர்களைத் தூக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) அதை விட்டுவிட்டு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மாத்திரம்தான் இதைச் செய்கிறோம் என்று எண்ணுவது தவறு.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுபோன்ற உணர்வுகள் பிற சமுதாய மக்களிடையே ஏற்படுகிறது. அரசுக்கு விரோதமான எண்ணங்களை ஏற்படுத்துகிறது. நமக்கு சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தல்களிலே சில சிக்கல்களை உருவாக்குகிறது என்பதற்காக மனம் திறந்து சில பிரச்சினைகளைச் சொல்ல விரும்புகிறேன். அதனால்தான் இதை இன்றையதினம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 16 நிமிடங்கள் நீங்கள் பேசியிருக்கிறீர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர் ஏன் இதைச் சொல்கிறார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அன்று நான், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொன்னேன். அவர்களுடைய பெயர்களை எல்லாம் சொல்லிச் சொன்னேன். அதற்குப்பிறகு சில கடிதங்கள் எனக்கு வந்திருக்கின்றன. அவர்களைத்தவிர, வேறு யாரை எந்தப் பதவியிலே வைத்திருக்கிறாய் என்று எனக்குச் சில கடிதங்கள்கூட வந்திருக்கின்றன. ஒருவேளை வல்லரசு அவர்களே அந்தக் கடிதங்களைத் தயாரித்திருப்பார்கள் என்று இப்போது அவர் பேசியதிலிருந்து தெரிகிறது. (சிரிப்பு) இருந்தாலும், நான் அதற்கு ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். இப்படி ஒவ்வொரு ஜாதியைப்பற்றியும் சொல்வது எனக்குப் பிடித்தமில்லாத ஒன்று. தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றிப்



பேசுகிறோம் என்றால், உத்தமர் காந்தியினுடைய காலத்திலிருந்து இதுவரையிலே அந்த ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காக, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எல்லோரும் அவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும், அவர்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கடமை. எனவே, தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றி நாம் பேசுகிறோம். அவர்கள் முன்னேற வேண்டும் என்ற அக்கறையோடு பாடுபடுகிறோம். ஆனால், இந்தப் பிரச்சினை எழுந்ததன் காரணமாக, நான் விரும்பாத, ஆனால் சொல்லித் தீரவேண்டிய நிலையில் யார் யார், பெரிய பெரிய பதவிகளில் இருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையராக பி.எஸ். பாண்டியன், ஐ.ஏ.எஸ்., அவர் நாடார் கிறிஸ்துவர்; கைத்தறித் துறைச் செயலாளர், திருமதி ஜெயந்தி, ஐ.ஏ.எஸ்., வன்னியர் கிறிஸ்துவர்; வருவாய்த் துறைச் செயலாளர், ஆர். செல்லமுத்து, ஐ.ஏ.எஸ்., உடையார்; இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர், மெய்கண்டதேவன், ஐ.ஏ.எஸ்., கருணீகர்; மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர், டாக்டர் சுந்தரதேவன், ஐ.ஏ.எஸ்., படகர்; தூத்துக்குடி போர்ட் டிரஸ்ட் தலைவர், மச்சேந்திரநாதன், ஐ.ஏ.எஸ்., நாடார்; முதலமைச்சருடைய சிறப்புச் செயலாளர்களில் ஒருவர், டி.ஆர். இராமசாமி, செங்குந்தர்; செய்தி மற்றும் சுற்றுலாத் துறைச் செயலாளர், இராஜரத்தினம், ஐ.ஏ.எஸ்., அகமுடையார்; தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர், தேவராஜ், ஐ.ஏ.எஸ்., படகர்; தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாக இயக்குநராக இருந்து ஓய்வு பெற்ற பின்பு, தமிழ்நாடு விற்பனை வரி மேல் முறையீட்டுச் சிறப்புத் தீர்ப்பாணையத்தின் உறுப்பினர் பழமலை, ஐ.ஏ.எஸ்., செட்டியார்; சமூக நலத் துறைச் செயலாளர், காசிநாதன், ஐ.ஏ.எஸ், அகமுடையார்; முதல்வருடைய மற்றொரு சிறப்புச் செயலாளர், இராமன், உடையார்; டிட்கோ நிறுவனத்தின் செயல் இயக்குநர், கணேசன், ஐ.ஏ.எஸ்., கள்ளர்; சர்க்கரைத் துறை ஆணையாளர், பிச்சாண்டி, ஐ.ஏ.எஸ்., அகமுடையார்; பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைச் செயலாளர் முருகன், ஐ.ஏ.எஸ். நாடார்; தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர், ஜெயக்கொடி, ஐ.ஏ.எஸ்., நாயுடு; கைத்தறித் துறை இயக்குநர், குணாளன், ஐ.ஏ.எஸ்., செட்டியார்; பதிவுத் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் சாவர்க்கர், ஐ.ஏ.எஸ்., நாடார்; வேளாண்மைத் துறை இயக்குநர், டாக்டர் அருள்மொழி, ஐ.ஏ.எஸ்., கருணீகர்; சுற்றுலாத் துறை இயக்குநர், டி இராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்.,

தேவர்; கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர், சண்முக ராஜேஸ்வரன், தேவர்; சமூக நலத் துறை இயக்குநர், விஜயகுமார், ஐ.ஏ.எஸ்., கவுண்டர்; தோட்டக்கலைத் துறை இயக்குநர் வாசுதேவன், ஐ.ஏ.எஸ்., யாதவர்; செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், முத்துசாமி, செங்குந்தர்; காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர், இறையன்பு, வெள்ளாளர், பிற்படுத்தப்பட்ட சமுதாயம்; தொழில் வணிகத் துறை இயக்குநர், ஜோதி ஜெகராஜன், கருணீகர்; திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர், பிரபாகர், நாயுடு; கரூர் மாவட்ட ஆட்சியர், ஐயர், பெயர்தான் ஐயரே தவிர, அவர் தேவர்; திருவாரூர் மாவட்ட ஆட்சியர், மோகன், செட்டியார், வணிக வரித் துறை இணை ஆணையர், திருமதி நிர்மலா, நாயுடு; சென்னை மாவட்ட ஆட்சியர், சுகுமாரன், செங்குந்தர்; தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர், இராமநாதன், சௌராஷ்டிரா; சிவகங்கை மாவட்ட ஆட்சியர், தங்கவேல், செட்டியார்; வேலூர் மாவட்ட ஆட்சியர், சிவகுமார், கவுண்டர்; கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் பாண்டியன், செட்டியார்; இன்றைய சம்பளக் கமிஷன், ஊதிய உயர்வுகளிலே உள்ள முரண்பாடுகளைக் களைய அமைக்கப்பட்டுள்ள ஒரு நபர் கமிஷனுடைய தலைவர், சிவசுப்பிரமணியம், முக்குலத்தோர்.

*பிற்பகல் 3-20*

இதைத் தவிர நான் வேறு என்ன சொல்ல முடியும் என்பதை நம்முடைய வல்லரசு அவர்களைத்தான் கேட்கவேண்டும். இவைகளை எல்லாம் புரிந்து கொள்ளவேண்டுமேயல்லாமல், வேண்டுமென்றே சில சமுதாயங்கள் என்மீது தூண்டிவிடப்பட்டு, ஏதோ தேவையில்லாத காரணங்களை எடுத்துச் சொல்லி, தி.மு.க. ஆட்சிமீதுள்ள வெறுப்பின் காரணமாக சிலபேர் செய்கின்ற சதி வேலைகளேதவிர, எல்லாச் சமுதாயத்தையும் சம நோக்கத்தோடு பார்க்கின்ற அரசுதான் இந்த அரசு என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இதில் இன்னும் பல பேர், பல சமுதாயங்களினுடைய பெயர்கள் பட்டியலிலே விடுபட்டுப் போய் இருக்கக்கூடும்; இருந்தாலும் இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து, இதிலே ஜாதி வாரியாக, இந்த ஜாதி உயர்வு, இந்த ஜாதி தாழ்வு என்கிற அளவிலே ஓரவஞ்சனை செய்கின்ற அரசாக இந்த அரசு இல்லை என்பதையும், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், மற்றவர்களும் எடுத்துக்காட்டியதைப்போல, நாம் அனைவரும் தமிழர் என்ற அந்த உணர்வோடு நாம் இன்றைக்கு நடைபோட்டாலும்கூட, இருக்கின்ற சூழ்நிலையிலே ஒவ்வொரு



சமுதாயமும் முன்னேறி, எல்லாச் சமுதாயமும் சமத்துவ நிலையைப் பெற்று, அந்தச் சமுதாயம் தமிழ்ச் சமுதாயமாக மலரவேண்டும் என்ற அந்த நோக்கத்தோடு, அந்தக் குறிக்கோளாடு நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நம்முடைய வல்லரசு அவர்களுக்கு நான் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வல்லரசு அவர்கள் ஒரு அரிசனுக்காக, ஒரு ஆதிதிராவிட சமுதாயத்திற்காக இவ்வளவு பணமா என்று கேட்டார். நான் மிகவும் வேதனைப்படுகிறேன். மகாத்மா காந்தி சொன்னார், எனக்கு மீண்டும் ஒரு பிறவி இருக்குமானால், நான் அரிசனாகப் பிறக்கவேண்டும் என்று சொன்னார். காரணம், அந்தச் சமுதாயம் பள்ளத்திலே இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, இந்தச் சமுதாயத்தில் உள்ள மக்களை மேலே உயர்த்தவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் மகாத்மா காந்தி அவர்கள் அப்படிச் சொன்னார்கள். ஆகையினாலே, ஒரு அரிசனுக்காக இவ்வளவு பணமா என்று கேட்பதை நான் மிகவும் வேதனையோடு மாண்புமிகு உறுப்பினர் வல்லரசு அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். வல்லரசா இப்படிப் பேசுகிறார், வல்லரசு தம்பியா இப்படிச் சொல்கிறார் என்று நான் என் மனவேதனையை அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வரவேற்றேன். 434 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்தவேண்டும் என்பதற்காக அளித்திருக்கிறார்கள் என்று நான் மனதாரப் பாராட்டியிருக்கிறேன். இதை அம்மையார் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. பிற்படுத்தப்பட்ட மக்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால், மக்களினுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலே கூடுதலாக நிதி கொடுங்கள் என்று சொல்கிறேன். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வதெல்லாம், இன்றையதினம் தேவர் இன மக்கள், நீங்கள் 1969-லே இருந்த கலைஞராக ஆக வேண்டும்

என்கிறார்கள். *1969*. ஆம் ஆண்டு நீங்கள்தான் தேவர் இனத்திற்கு பாதுகாவலராக இருந்தீர்கள் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்,- அந்தக் கலைஞராக இருக்கவேண்டும் என்று அவர்கள் மீண்டும் விரும்புகிறார்கள். எனக்குள்ள ஆசையெல்லாம் பல்வேறு சமுதாய மக்கள் உங்களுக்குப் பின்னணியாக இருக்கவேண்டும், உங்களுக்கு ஆதரவாக இருக்கவேண்டும், சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களிலே தொடர்ந்து தி.மு.க. மாபெரும் வெற்றிக் கொடியை நாட்ட வேண்டும் என்பதற்காகத்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேனே தவிர, வேறு அல்ல; நான் யாரையும் தூண்டிவிட மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆதிதிராவிட நலத் துறையாக இருந்தாலும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையாக இருந்தாலும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையாக இருந்தாலும், அதிலே இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்திருக்கிற, இந்த தேசத்திற்காக, இந்த நாட்டிற்காக உழைத்தத் தலைவர்களைப் பற்றி இந்த மாமன்றத்திலே புகழ்ந்து பேசி, அவர்களை கௌரவிப்பதிலே, அவர்களை நினைவுபடுத்திப் பேசுவதிலே தப்பு கிடையாது, தவறும் கிடையாது. அதேபோன்று, ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும், இந்த தேசத்திற்காக, இந்த நாட்டிற்காகப் பாடுபட்ட தூய்மையான அரசியல்வாதிகளை நாம் நினைவுகூர்வதிலே தவறு கிடையாது. இருந்தாலும், தமிழ்நாட்டிலே சமீபத்திலே நடந்து இருக்கிற துயரமான சம்பவங்களை நாம் பார்க்கிறபோது, அதைப்பற்றி சட்டமன்றத்திலே விவாதிக்கிறபோது, ஜாதி உணர்வுகளைத் தூண்டுகிற விதத்தில் விவாதம் அமைவது சரிதானா? இது உண்மையிலேயே வேதனையளிக்கிறது. அணைகிற விளக்கிற்கு இது எண்ணெய் ஊற்றுவது போல, இன்றையதினத்திலே அந்த விவாதம் அமைந்திருப்பதாக நான் கவலைப்படுகிறேன். (குறுக்கீடு) அணைகிற தீக்கு இது எண்ணெய் ஊற்றித் தூண்டுவதுபோல அமைகிற ஒரு கவலையான சம்பவம் என்பதை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவருகிறேன்.

*பிற்பகல் 3-25*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினை வேறு திசைக்குத்



திரும்பிவிட்ட காரணத்தால் மேலும் சில கருத்துக்களை நான் கூற விரும்புகின்றேன். ஏனென்றால், இந்தத் துறையை - அரிசன நலத் துறையை இரண்டாகப் பிரித்து, அரிசன நலத் துறை என்று ஒன்றும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்றும் இரண்டு துறைகளாக ஆக்கியது நான் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்ற பிறகுதான். அப்போது பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையைக் கொஞ்ச காலம் நானே வைத்திருந்தேன். பிறகுதான் மறைந்த தலைவர், என்.வி. நடராஜன் அவர்கள் இந்தத் துறையை நிர்வகித்தார்கள். அதற்குப்பிறகு இராஜாராம் போன்றவர்கள் எல்லாம் இந்தத் துறையிலே நிர்வாகம் நடத்தியிருக்கின்றார்கள். இந்தத் துறைகள் இரண்டும் ஒன்றாக இருந்தபொழுது இருந்த சங்கடம் என்னவென்றால், இரண்டு துறைகளின் சார்பாகவும் நடைபெற்ற காரியங்கள் இரண்டு பகுதி மக்களையும் திருப்திபடுத்தவில்லை. இரண்டும் ஒன்றாக இருந்த காரணத்தால் பிற்படுத்தப்பட்ட மக்களும், உரிய பயன்களைப் பெறமுடியவில்லை. அதைப்போலவே அன்றைக்கு அரிசன மக்கள் என்று அழைக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது பட்டியல் இன மக்கள், அவர்களும் உரிய பயன்களைப்பெற முடியவில்லை. எனவேதான், அதை இரண்டாகப் பிரித்து இரண்டு துறைகளாக ஆக்கி, அப்போது பிற்படுத்தப்பட்டோருக்கு - இப்போது வல்லரசு வேதனைப்பட்டாரே- அப்போதெல்லாம் *1* இலட்சம், *2* இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கீடு. அது ! கோடியாகி, இரண்டு கோடியாகி, இன்றைக்கு கிட்டத்தட்ட *100* கோடியைத் தொடுகின்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இப்பொழுதும் நான் அவருக்கு உறுதியளிக்கின்றேன். இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்க அவருக்கு உரிமை இருக்கிறது. ஆனால், இதை ஒப்பிட்டுக்காட்டி, தாழ்த்தப்பட்ட சமுதாயத் துறைக்கு இவ்வளவு கொடுக்கிறீர்கள். எனவே, எங்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது என்று ஒப்பிட்டுக் காட்டியதால்தான், நம்முடைய நண்பர் பழனிசாமி அவர்கள் சொன்ன அந்தப் பிரச்சினை உருவாகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதிகமாக வேண்டுமென்று கேட்டால், இப்பொழுதே அவருக்கு உறுதியளிக்கிறேன். அடுத்த நிதிநிலை அறிக்கையில் நிச்சயமாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி இந்த ஒதுக்கீட்டைவிட உங்களுக்கும் ஒரு மடங்கு அதிகமாக ஒதுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் அவருக்கு உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக அவர்களுக்கு ஏன் அதிகம் என்று கேட்டு, இன்னொரு சாராருக்கு தேவையற்ற மனக்கிலேசத்தை ஏற்படுத்தத் தேவையில்லை என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்

கொள்கிறேன்.

அவர்கள் தேவர் இன மக்கள் வாக்களிக்கவில்லை, வன்னியர் இன மக்கள் வாக்களிக்கவில்லை, அவர்கள் வாக்களிக்கவில்லை, இவர்கள் வாக்களிக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நான் ஒருமுறை சொன்னேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்டித்தந்தபோது, அப்போது அந்தத் துறையின் அமைச்சராக இருந்த சத்தியவாணிமுத்து அவர்கள் வேடிக்கையாகத்தான் சொன்னார்கள். 'நீங்கள் இப்படி வீடு கட்டித் தருகிறீர்களே இலவசமாக, அவர்கள் அந்தச் சுவரிலே கருணாநிதி ஒழிக என்று எழுதுகிறார்கள். எங்கே நன்றி இருக்கிறது' என்று கேட்டார்கள். நான் உரையாற்றும்போது சொன்னேன். பரவாயில்லை. கடமையைச் செய்யும்போது நன்றியை எதிர்பார்த்துச் செய்யக் கூடாது. பெரியார் அடிக்கடி சொல்வார், கைமாறு கருதிக் கடமையைச் செய்யாதே என்று. நான் என் கடமையைச் செய்து கொண்டிருக்கிறேன், கைமாறு கருதாமல், அம்மையார், கருணாநிதி ஒழிக என்று, நான் கட்டிக் கொடுத்த வீட்டிலே எழுதுகிறார்களே என்று கேட்டார்கள். எனக்கும் அதிலே மகிழ்ச்சிதான். வாழ்க என்று எழுதினாலும், ஒழிக என்று எழுதினாலும், என் பெயரை மறக்காமல், கருணாநிதி ஒழிக என்று எழுதுகிறார்கள், என் பெயரை மறக்காமல் எழுதுகிறார்களே, அது வரையிலே எனக்கு மகிழ்ச்சிதான் என்று சொன்னேன். எனவே, வாக்குகளுக்காக அல்ல, ஓட்டுகளுக்காக அல்ல, தேர்தல் வெற்றிகளுக்காக அல்ல, ஒரு அரசியல்வாதி அடுத்த தேர்தலைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பான். ஆனால், ஒரு சமுதாயத் தலைவன் அடுத்த தலைமுறையைப் பற்றித்தான் சிந்திப்பான். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் வெற்றி தோல்விகளைப்பற்றியோ அல்லது இந்த ஆட்சிப் பொறுப்பைப் பற்றியோ நான் கவலைப்படவில்லை. அண்ணா சொல்வதைப்போல, இது தோளில் போடப்பட்டிருக்கின்ற துண்டு. நல்லவேளை பாருங்கள், இப்போதேகூட துண்டு இல்லாமல் பேசிக் கொண்டிருக்கின்றேன். (சிரிப்பு) எனவே, கொள்கைதான் வேட்டி போன்றது. அதை இழக்க மாட்டோம். துண்டு பறிகொடுத்தால் எங்களுக்குப் பரவாயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வி.ஆர். கிருஷ்ண ஐயர் சுப்ரீம் கோட்டிலே நீதிபதியாக இருந்தார். அவர்கள்கூட ஒரு ஜட்ஜ்மெண்டை சொல்லியிருக்கிறார்கள். அதாவது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு புரமோஷன் கொடுப்பதிலே கூடவா சலுகை கொடுக்க வேண்டுமென்று ஒருவர் வழக்குத் தொடர்ந்தார். அதற்கு வி.ஆர். கிருஷ்ணயர் 5,000 ஆண்டுகள் இந்தத் நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி, ஒடுக்கி வைத்திருந்த பாவத்திற்காக 50 ஆண்டுகாலம் எல்லா வசதிகளையும், வாய்ப்புகளையும், வேலை வாய்ப்புகளையும் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கே கொடுத்தால்கூட நான் ஏற்றுக்கொள்வேன் என்று ஒரு தீர்ப்புச் சொன்னார்.

பிற்பகல் 3-30

இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவுதான் நாம் வசதி செய்து கொடுத்தாலும், இன்னும் அவர்களுடைய வாழ்வில் ஒரு முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வல்லரசு அவர்கள் இதுபோன்ற பிரச்சினைகளைப் பேசி, ஏற்கெனவே ஜாதிப் பிரச்சினை நாட்டில் நடந்துகொண்டிருக்கிற நேரத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஒரு மோதலை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நாம் அனைவருமே போராட வேண்டும், அவர்களுக்காக உழைக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். விவாதம் நீடித்துக்கொண்டே போகிறது. நேரம் இல்லை. (குறுக்கிடு) சொல்லுங்கள்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், முதலமைச்சர்

அவர்களும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களும் ஏதோ தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை ஒப்பிட்டு நான் நிதி கேட்டதாக, தவறான அர்த்தத்தில் சொல்கிறார்கள். நான் இன்னும் 1,000 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு அரசு உயர்த்திக் கொடுக்கவேண்டும், கலைஞர் ஒதுக்க வேண்டும் என்று சொல்வதில் முதல்தரமானவன் என்று தெரிவித்துக் கொண்டு, இந்தப் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் அதிகமாக இருப்பதால்தான் அவ்வாறு குறிப்பிட்டேனே தவிர, நீங்கள் தவறான எண்ணத்தில் அதை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மானியக் கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பேச வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நாங்குநேரி தொகுதியில் தொழில்வள பூங்கா மூலம் ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தை உருவாக்கித் தந்த மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், வடக்கு பச்சையாறு அணைத் திட்ட வேலையை ஆரம்பித்த மதிப்பிற்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தாமிரபரணியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வழங்கிய, திசையன்விளை பகுதிக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றித் தந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், வள்ளியூரிலே ஆர்.டி.ஓ. அலுவலகத்தை பகுதி நேர அலுவலகமாகத் தந்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் பொருளாதார வாழ்வில், சமூக வாழ்வில் மாற்றம் ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொண்டு இந்த மானியக் கோரிக்கை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று, மத்திய அரசாங்கத்தை ஆளுகின்றவர்கள் மனித சமுதாயத்தில் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று பல்வேறு பகுதிகளாகப் பிரித்து, ஜாதி சண்டைகள் காரணம்ாகவும், மதச் சண்டைகள் காரணமாகவும், ஆட்சியிலே அவர்கள் அமர்ந்து இருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர்களுக்கான 60 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை



அவர்கள் இரத்து செய்து, இந்த அடிப்படையை அரசியல் சட்டமாக மாற்றி, இந்தச் சலுகையை இரத்து செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். புதியதாக அரசியல் சட்டத்தை உருவாக்கி பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கப்பட்டு, கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் அவர்கள் பெறுகின்ற சலுகைகளைப் பறித்துவிட நினைக்கிறார்கள். ஆகவே, கோடிக்கணக்கான பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, அவர்கள் செய்கின்ற சதிகளுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நீதியை நிலைநாட்டுவதற்காகவும், இந்தியாவிலேயே முதன் முதலாக வெற்றி கண்ட மாநிலம் தமிழ்நாடு ஆகும். அதற்கு தந்தை பெரியார் முழுமையாகப் பாடுபட்டார் என்ற பெருமையும் நமக்குண்டு. இந்தியா முழுவதற்கும் சிந்தனைச் சிற்பியாக முதன் முதலாக விதை போட்டது நம்முடைய தமிழகம். பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க சுமார் 123 சாதியினரிடமிருந்து 3,072 முறையீடுகள் தமிழகத்தில் பிற்பட்டோர் ஆணையத்திற்கு வந்திருப்பதாக கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. பெரும்பகுதி முறையீடுகளுக்கு விசாரணை நடத்தி முடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. விசாரணை முடிவுகள் தெரிவிக்கப்படவில்லை. 1971 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சட்டநாதன் கமிஷனில் 71 சாதிகள் பிற்படுத்தப்பட்ட சாதிகளாகத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. அதற்குப் பிறகு 1982 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அம்பாசங்கர் கமிஷனிலே 753 சாதிகள் பிற்படுத்தப்பட்ட சாதிகள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது எத்தனை சாதிகள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்கவில்லை என்பதைக் சுட்டிக்காட்டவிருக்கிறேன்.

பிற்பகல் 3-35

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான நிதி, மாவட்டம் ரீதியாக வழங்கப்பட்டிருக்கிறது. மாவட்டம் முழுவதுமே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு இருக்கிறதா அல்லது அந்தப் பணம் திரும்பத் தரப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கொண்டும்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தினர் கல்வி, வேலைவாய்ப்பிற்கு 69% இட ஒதுக்கீடு 1994 ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 45-ஆவது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டு உள்ளது. இந்தச் சட்டத்தைச் செயல் இழக்கச் செய்ய வேண்டுமென்று சில பேர் கங்கணம் கட்டி வருகிறார்கள். ஆகவே, இந்த முடிவை எடுக்கின்றவர்களுக்கு தமிழக அரசும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், தமிழகத்திலே இருக்கின்ற தெலுங்கு படித்தவர்கள், ஆதிதிராவிடர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு தனியாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுடைய மாணவர் விடுதியிலும், பிற்படுத்தப்பட்டவர்களுடைய மாணவர் விடுதியிலும் பணிபுரிகின்ற சமையல்காரர்களுக்கு - இரண்டு பேருக்கும் - ஒரே ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பை அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள், போன ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே என்ன காரணத்தைச் சொல்லி முடித்தாரோ அதுபோல், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலிருந்து தோன்றிய நான் என்கிற முறையிலே, இந்த நிதிநிலை அறிக்கையை ஆரம்பித்தார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இந்த மானியம் இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்திலேயே மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றது. இட ஒதுக்கீடு என்ற பிரச்சினையிலே 69% எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறது என்பதையும் இந்த நாடு அறியும். ஆகவே, நம்முடைய கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிற காலத்திலேதான் இந்த பிற்படுத்தப்பட்ட துறையை - இலாகாவை - ஏற்படுத்தி முதன்முதலாக



அதற்கு அமைச்சரை ஏற்படுத்தித் தந்தார்கள். ஆகையினால்தான், இன்றைக்கு டெல்லி நாடாளுமன்றத்திலே பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்கிறபோது நாடாளுமன்றத்திலே நம்முடைய சமூக நீதிக் காவலர் என்று பெயர் பெற்ற முன்னாள் பிரதமர் வி.பி. சிங் அவர்கள், பெரியார் அவர்களை நினைவுகூர்கிற வகையிலே அந்த மாமன்றத்திலே அறிவித்தார்கள் என்பதை நாடு மறக்காது. காரணம், தந்தை பெரியார் அவர்கள்தான் இதற்கு வித்திட்டவர் என்பதை டெல்லியினுடைய நாடாளுமன்றத்திலே வி.பி. சிங் அவர்கள் அறிவித்த பின்னாலேதான் இந்த இட ஒதுக்கீட்டை அன்றைக்கு செய்து காட்டினார்கள். அதுமட்டுமல்ல, இதற்கு முன்னால் இருந்த டெல்லிப் பட்டணத்தை ஆண்டவர்கள் பலர், மண்டல் கமிஷன் அறிக்கையை நாடாளுமன்றத்திலே வைக்காமல் வைத்திருந்தார்கள். ஆனால், 1989-லே கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்த பின்னாலேதான் அந்த மண்டல் கமிஷனுடைய அறிக்கையை இந்த மன்றத்திலே வைத்து, அதற்கு ஒரு தீர்மானத்தைப் போட்டு, டெல்லி நாடாளுமன்றத்திற்கு அனுப்பி, அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்ட அரசு கலைஞருடைய அரசுதான். அதற்கு பின்னாலேதான் முன்னாள் பிரதம அமைச்சர் திரு. வி.பி. சிங் அவர்கள் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று டெல்லியினுடைய பாராளுமன்றத்திலே அன்றைக்கு அறிவிக்க வைத்த பெருமை தமிழகத்தினுடைய கழகத் தலைவர் கலைஞர் முதலமைச்சர் அவர்களுக்குத்தான் சாரும்.

இன்றைக்கு இந்த பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலே பேசுகிறபோதுகூட பல கருத்து வேறுபாடான சூழ்நிலைகளை ஏற்படுத்தினார்கள். நான் எல்லாம் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், போன ஆண்டு எனக்குக் கொடுத்த 25 இலட்சத்தை ஆதிதிராவிட மக்களுக்குத்தான் கொடுத்து இருக்கிறேன். அதை வெளிப்படையாகவே எல்லோருக்கும் சொல்லிவிட்டுத்தான் கொடுத்தேன். நான் எனக்கு கொடுக்கிற 25 இலட்சத்தை ஆதிதிராவிட மக்களுக்குத்தான் சாலை அமைப்பது, கட்டடம் கட்டுவதற்கு கொடுப்பேனே தவிர, வேறு யாருக்கும் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி கொடுத்தேன். காரணம், எத்தனை ஆண்டுகாலம் நமக்கெல்லாம் ஊழியம் செய்தவர்களாக, அடிமைப்பட்டவர்களாக இருந்தவர்கள், இன்றைக்கு இந்த நாட்டிலே அவர்கள் வர வேண்டும் என்று கழகத்

[திரு. மா. இராமச்சந்திரன்] [1998 மே 6

தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரான பின்னாலேதான் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் எல்லாம் வைத்து இட ஒதுக்கீடு என்ற முறையிலே இன்றைக்கு ஊராட்சி மன்றத் தலைவராக மாவட்டக் குழு உறுப்பினர்களாக, மாவட்டக் குழுத் தலைவராக இன்றைக்கு ஆதிதிராவிடர்கள் எல்லாம் ஆகியிருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்குக் காரணம் கலைஞர் அவர்கள்தான்.

பிற்பகல் 3-40

காரணம், நீங்கள் எல்லாம் அடி மட்டத்திலிருந்து ஆதி காலத்திலிருந்து, கஷ்டப்பட்ட மனிதர்கள், நீங்கள் எல்லாம் உயரவேண்டும் என்பதிலேதான் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பதைச் சொல்லவேண்டும். எனக்கு ஒதுக்கப்பட்ட 25 இலட்சம் ரூபாயை ஆதிதிராவிட மக்களுக்குத் தரவேண்டும் என்று நான் சொன்னேன். அந்த வகையில்தான் இன்றைக்கு இந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயம் முன்னேற வேண்டும் என்ற நிலை இருந்தாலும், 90 கோடி ரூபாய் இந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு கொடுத்திருந்தாலும், அதுமட்டுமல்லாமல், கல்வியினுடைய மானியத்தில் 3,600 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே வருகிறபோது பெரும்பாலும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு ஒதுக்கப்படுகிற தொகை கல்விக்காகத்தான். ஏன் என்றால், ஒரு சமுதாயம் முன்னேற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு கல்வியிலே முன்னேறுகிறபோது அந்த சமுதாயம் முன்னேறுகிறது. பொருளாதாரத்தில் முன்னேறுவது அல்ல, ஒரு சமுதாயம் முன்னேறுவது என்பது கல்வியிலே முன்னேற வேண்டும். அதற்காகத் தான் கல்விக்கு இன்றைக்கு அதிகமான செலவினங்களை நம்முடைய பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கான இந்த மானியத்திலே ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், காரணம், கல்வியில் முன்னேற வேண்டும் இந்த சமுதாயம் என்ற காரணத்தால்தான். ஆகவே அதற்காக மறுபடியும்கூட நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் இப்போதுகூட அறிவித்தார்கள், அடுத்த ஆண்டு இதற்குக் கூடுதலாகத் தொகையை அறிவிக்கிறேன் என்றுகூடச் சொன்னார்கள். ஆனாலும் அதைச் சொல்லும்போது உதாரணமாக சொன்னார்கள், ஒரு 100 அடி ஆழத்தில் இருக்கிறவனை எப்படி மேலே தூக்க வேண்டும் என்பதைப்போல சொன்னார்கள். ஆகவே, இன்றைக்கு இந்தச் சமுதாயம் முன்னேறுகிற நிலையில் இருக்கிறது என்றால், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை முன்னேற்றத்திற்கு கொண்டு வந்தவர் முதன் முதலில் நம்முடைய நாட்டில் இந்தப் பெருமையை உண்டாக்கித் தந்தவர் கலைஞர்



1998 மே 6] [திரு. மா. இராமச்சந்திரன்]

அவர்கள்தான். காரணம் இவர் சொன்னதன் பேரில்தான் டெல்லியில் நாடாளுமன்றத்தில் திரு. வி.பி. சிங் அவர்கள், பெரியார் பெயரைச் சொல்லித்தான் அந்தத் தீர்மானத்தை அங்கே நிறைவேற்றினார்கள்.

இன்னும் ஒன்றைச் சொல்லவேண்டும் என்று சொன்னால், நம்முடைய மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட நல அதிகாரி ஒருவர் நிர்வாக அலுவலராக இருக்கிறார். அதற்காக, அவர் ஒருவர்தான் அந்த மாவட்டத்தில் பணியாற்றுகிறார். ஆனால், அவருக்குத் துணையாக யாராவது இருக்கிறார்களா என்று சொன்னால், யாரும் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார், அதற்குப் பின்னால் மாவட்ட பிற்படுத்தப்பட்ட நல அலுவலர் என்று ஒருவர் இருக்கிறார், அதற்குப் பின்னால் தாசில்தார், ஆர்.ஐ. போன்ற யாரும் துணையாக இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால், ஆதிதிராவிட மக்களுக்கு என்று தனியாகத் தாசில்தார் போடப்பட்டிருக்கிறார். இவர்களுக்குத் தனியாக தாசில்தார், ஆர்.ஐ. என்ற ஒரு பிரிவினர் இல்லாத காரணத்தால், இவர்களுக்குச் செய்யவேண்டிய வேலையைத் துரிதமாகச் செய்வதற்கு அலுவலர்கள் இல்லாத சூழ்நிலையில், இந்த இலாக்கா, மாவட்டங்களில் இருக்கிறது என்பதை நாம் எல்லாம் உணரத்தான் வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்ட அந்தச் சமுதாயத்தில் உள்ள மாணவர்கள் படிக்கிறபோது அவர்களுக்குப் பெரும் பகுதி கட்டடங்கள் இல்லை. 150 கட்டடங்கள்தான் இருக்கின்றன, 792-க்குக் கட்டடங்கள் இல்லை என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 150 மாணவர் இல்லங்களுக்குத்தான் கட்டடங்கள் இருக்கின்றன. 792 மாணவர் இல்லங்களுக்குக் கட்டடங்கள் இல்லை. கட்டடங்கள் மிக, மிக அவசியம். இதற்குக் கூடுதலாகச் செலவு ஆகும் என்ற காரணத்தால் தான் இவைகளுக்குக் கட்டடங்கள் கட்டப்படவில்லை. ஒரு கட்டடத்திற்கு 15 இலட்ச ரூபாய் செலவாகிறது என்ற முறையில் இதை நாம் தவிர்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், மாணவர் இல்லங்களுக்கு கட்டடங்கள் அவசியம் என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து, கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு நிறைய ஒதுக்கீடு செய்யவேண்டும். இன்றையதினம் 15 கட்டடங்கள் கட்டித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மேலும், 15 விடுதிகளுக்கு கட்ட இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இவைகளை எல்லாம் செய்து கொடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, என்னுடைய திருவோணம் தொகுதியில் அரசினர் பிற்படுத்தப்பட்ட மகளிர் இல்லம் இருக்கிறது. அந்த மாணவியர் இல்லத்திற்கு கட்டடங்கள் இல்லை. அதைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியில் பாச்சூரில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்ட மாணவர் நல விடுதி இல்லை. அதையும் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, எனக்குப் பேச வாய்ப்பு இல்லாத காரணத்தால், நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் முதலைமுத்து வாரித் திட்டத்தை இந்த ஆண்டு அறிவித்திருக்கிறார்கள். அதற்காக, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, தஞ்சையில் புறவழிச் சாலை என்று இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் ஒரு பாதியைப் போட்டுவிட்டு, மறு பாதியை நிறுத்தி விட்டார்கள். புறவழிச்சாலை ஒருபாதி இருக்கிறது, மறு பாதி இல்லை. அந்தப் பாதியைப் போட்டு தருவேன் என்று அந்தக் காலத்திலே சொல்லிவிட்டு அவர் அப்படியே போய் விட்டார்கள். ஆனால், நம்முடைய அரசு வந்ததற்குப் பிறகு அந்தப் புறவழிச் சாலையை ஏற்படுத்தித் தந்தால் நன்றாக இருக்கும் என்பதை நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் ஆசைப்படுகிறேன். நம்முடைய விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. குழந்தை தமிழரசன் அவர்கள் ஒரு வேண்டுகோளைச் சொல்கிறார், விருத்தாசலம் தொகுதியில்... (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

*பிற்பகல் 3-45*

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சிறுபான்மை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி சொல்லி, நம்முடைய தமிழக முதலமைச்சரவர்களுக்கு என்னுடைய



பணிவான வேண்டுகோளாக இந்த மானியக் கோரிக்கையில் சில கருத்துக்களைச் சொன்னால் பொருத்தமாக இருக்குமென்று எண்ணுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், சீர் மரபினர் பட்டியலிலுள்ள முத்தரையர், வலையர் என்று சொல்கிற பெரும்பான்மை சமுதாயம் என்று சொல்லுகிற இந்தச் சமுதாயம், நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, எம்.ஜி.ஆர். கழகத்தினுடைய தலைவர் நம்முடைய அருமை அண்ணன் ஆர்.எம்.வீ. அவர்கள் டி.வி.-யிலே பேட்டி கொடுக்கிறபொழுது, தமிழகத்தில் இரண்டாவது பெரும்பான்மை சமுதாயமாக இருக்கிற முத்தரையர் சமுதாயம் இந்தத் தேர்தலில் முறையாக வாக்களிக்கவில்லை என்ற குற்றச்சாட்டோடு, தமிழகத்தில் முத்தரையர், வலையர் என்று சொல்லுகிற பல பிரிவுகளில் இருக்கிற பெரும்பான்மை சமுதாயம், இரண்டாவது சமுதாயமாக இன்றைக்கு அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், அதிகாரிகள் சரியான தகவலை இன்று வரையிலும் கொடுப்பது கிடையாது. இன்றைக்கு நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்வது, மாவட்ட வாரியாக அந்தந்த மக்கள் தொகை ஜாதிக் கணக்கெடுப்புக்களை எடுத்து, இன்றைக்குத் தமிழகம் பூராவும் எத்தனை ஜாதிகள், எத்தனை விகிதாச்சாரத்தில் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு, ஜாதிவாரி அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதன் மூலம்தான் இந்த முத்தரையர் சமுதாயத்திற்கு நிச்சயமாக ஒரு விடிவு காலம் ஏற்படும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையைத் தந்தது நம்முடைய முதலமைச்சரவர்கள் என்பதை எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஆனால், 1989-லேயிருந்து இன்றைக்கு 1998 வரையிலும் கணக்கெடுத்துப் பார்க்கிறபொழுது, நம்முடைய முதலமைச்சரவர்களே இங்கே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., படித்தசெயலாளர்களை, பணியில் இருக்கக்கூடியவர்களைப் படித்து காண்பித்தார்கள். ஆனால், இன்றைக்கு 60 தொகுதிகளுக்கு மேல் தமிழகத்தில் 65 ஆயிரம், 70 ஆயிரம் வாக்குகள் இருக்கக்கூடிய

முத்தரையர் சமுதாயத்தில் 20 தொகுதிகளுக்கு மேல் 25 ஆயிரம் வாக்குகளுக்கு மேல் இருக்கக்கூடிய இந்தச் சமுதாய மக்கள் சார்பாக, தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் இன்னும் ஒரேயொரு ஐ.ஏ.எஸ். ஆபீசர்கூட வர முடியவில்லை என்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, இன்றைக்கு ஒரு டி-ஆர்.ஓ. பதவியில்கூட யாரும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்வாணைக் குழுவில் இந்தப் பிற்பட்டோர் நலத் துறையில் இந்த முத்தரையர் சமுதாயத்திற்குத் தேர்வாணைக் குழு மெம்பர் வேண்டுமென்று சொல்லியபொழுது, இதே அவையிலேயே அவர்கள் எழுந்து, தருகிறேன் என்று சொல்லி, அந்த வாக்குறுதியையும் இன்றைக்கு நிலைநாட்டி இருக்கிறார்கள். ஆகவேதான்,

*காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மானப் பெரிது*

என்று வள்ளுவர் அவர்கள் சொல்லியதைப்போல, இது காலத்தினாற் செய்த நன்றி என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, நம்முடைய முதலமைச்சரவர்கள் காலையிலே வேதனையோடு ஒரு செய்தியைச் சொல்லியபொழுது, எனக்கு மிக, மிக வேதனையாக இருந்தது. இந்தச் சமுதாயத்தைப் பொறுத்தவரையிலும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் இராமதாஸைப் போலவோ அல்லது புதிய தமிழகம் கிருஷ்ணசாமியைப் போலவோ இந்தச் சமுதாயத்திற்கு வழி காட்டக்கூடிய தலைவர்கள் யாருமில்லை. பெரும்பான்மை சமுதாயமாக இருந்தாலும், இன்றைக்கு வழிகாட்டக்கூடிய தலைவர்கள் நிச்சயமாகத் தமிழகத்தில் யாருமில்லை. இன்றைக்கு அரசியல் தலைவர்கள்தான் அரசியல் போர்வையோடு, அரசியல் வெறிகளைத் தூண்டி, இந்தச் சமுதாயத்தைப் பல கூறுகளாகப் பிரித்து, இந்தச் சமுதாயத்திற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான நன்மைகள் இன்னும் கிடைக்கச் செய்யவில்லை என்பதை நம்முடைய முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

ஆகவே, இன்றைக்கு உங்களுடைய அமைச்சரவையிலே மற்ற சமுதாயத்திற்கெல்லாம் 2 அமைச்சர்கள், 3 அமைச்சர்கள், 4





அமைச்சர்கள் வழங்கியிருக்கிறீர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தச் சமுதாயத்திற்கு முதன்முதல் அமைச்சர் கொடுத்ததற்குப் பிறகு, இன்று வரையிலும் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள், இந்தச் சமுதாயம் தமிழகத்தில் இரண்டாவது பெரும்பான்மை சமுதாயம் என்று எண்ணி, கூடுதலாக ஒரு அமைச்சரைத் தந்திருக்கிறார்களா என்று சொன்னால், யாரும் தரவில்லை என்பதை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

ஆகவே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியதைப்போல, வறுமையிலும், ஏழ்மையிலும் இருக்கிற மக்கள்தான் புரட்சிகளைச் செய்ய முடியும்; மாற்றத்தைச் செய்ய முடியும். அந்த அடிப்படையில் பார்க்கிறபொழுது, வறுமையிலும், ஏழ்மையிலும், வறுமைக் கோட்டிற்குக் கீழாக இருக்கக்கூடிய இந்த முத்தரையர் சமுதாயம் இன்றைக்கு ஒரு புரட்சியைச் செய்ய முடியாத அளவிற்கு, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயங்களைத் கேட்க முடியாத அளவிற்கு, தமிழகத்தில் தள்ளப்பட்டிருக்கிறது என்ற அவல நிலையை உங்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 3-50

இன்றைக்கு, முத்தரையர் சமுதாயம் எங்கே இருக்கிறது என்றுகூட சில பேர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் சொல்லிக் கொள்வதோடு, castes and Tribes of South India, 1906—தென்னிந்திய சாதிகள் என்ற நூலை எழுதிய தர்ஸ்டன் என்பவர் மிகத் தெளிவாக தமிழகத்தில் இருக்கக்கூடிய சாதிகளைப்பற்றி குறிப்பிடுகிறபோது வளையர், அம்பலக்காரர், முத்தரையர் நாயுடு, முத்தரையர், சேனை . வளையர், வன்னியர், இப்படிப்பட்ட ஜனத்தொகைகள் எந்தெந்த மாவட்டத்தில் இருக்கிறார்கள் என்பதை மிகத் தெள்ளத்தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் அன்றைக்கு 1926-லே திருமயத்தில் Kallar reclamation என்ற ஓர் அமைப்பினை ஏற்படுத்தி, குற்றப் பரம்பரையாகக் கருதக்கூடிய அந்தப் பிரமலைக்கள்ளர் பட்டியலிலிருந்து கந்தர்வக்கோட்டை கள்ளருக்கு எல்லாம், ஆலங்குடியிலே இருந்த கூத்தப்பக் கள்ளர், புதுக்கோட்டையிலிருந்த கூத்தப்பக் கள்ளர் ஆகிய இவர்களுக்கு எல்லாம் அன்றைக்குச் சலுகைகளை வழங்கினார்கள். இப்பொழுது மதுரையிலே எப்படி பிரமலைக் கள்ளருக்குப் பள்ளியும்,

அதாவது மேல்நிலைப் பள்ளியும், நடுநிலைப் பள்ளியும் வழங்கி, சலுகைகளை வழங்கி அந்தச் சமுதாயத்தைக் கைதூக்கி விடுகிறீர்களோ, அதைப்போலவே புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை பகுதியிலே இருக்கக்கூடிய கந்தர்வக்கோட்டை கள்ளருக்கும், பிரமலைக் கள்ளருக்கும் வழங்கக்கூடிய அந்தச் சலுகைகளை, பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளை உருவாக்கித்தர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவிப்பது என்னவென்றால், இன்றைக்கு 20 பிரிவுகளுக்கு மேல் இருக்கக்கூடிய இந்த முத்தரையர் சமுதாயத்தை, முத்தரையர் என்ற ஒரே பெயரின் கீழ் வைத்து அரசாணையைத் தாருங்கள் என்பதுதான்.

அன்றைக்கு எம்ஜிஆர். காலத்திலிருந்து இன்று உங்களுடைய ஆட்சிக் காலம் வரையிலும், 20 பிரிவுகளுக்கு மேல் இருக்கக்கூடிய இந்த முத்தரையர் சமுதாயத்தை ஒன்றாக இணைத்து, முத்தரையர் என்ற ஒரே பெயரில் அரசாணையைத் தரவேண்டும் என்று பல முறை, பல முதல்வர்களிடத்திலே கேட்டிருக்கிறோம். ஆகவே, நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைப் பார்த்துப் பணிவோடு கேட்டுக்கொள்வது, நீங்கள் 20 பிரிவுகளுக்கு மேல் இருக்கக்கூடிய இந்த முத்தரையர் சமுதாய மக்களுக்கு, முத்தரையர் என்ற ஒரே பெயரில் அரசாணையைத் தருவதோடு, அவர்களுக்குப் புனரமைப்பு ஏற்படுத்தி, தொழில் ரீதியாக, கல்வி, வேலைவாய்ப்பு ரீதியாக அவர்களுக்கு நல்லதொரு சலுகையினை வழங்கக்கூடிய அளவிற்கு தனி ஒதுக்கீடாக, நம்முடைய திரு. லத்திப் அவர்கள் சொன்னதைப்போல, இந்தச் சமுதாயத்திற்கு தனி ஒதுக்கீடாக ஒரு விழுக்காடோ அல்லது 2 விழுக்காடோ அல்லது 3 விழுக்காடோ அல்லது 5 விழுக்காடோ தருகிறபோதுதான், இந்தச் சமுதாயத்தில் இருக்கக்கூடிய மக்களை நிச்சயமாகக் காப்பாற்ற முடியும் என்றும், அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த முத்தரையர் சமுதாயத்தை (மணியடிக்கப் பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.



இந்த முத்தரையர் சமுதாயத்தைப்பற்றி நெல்சன் எழுதிய மதுரை மேனுவல், 1868, கே.வி. வெங்கடராமன் எழுதிய புதுக்கோட்டை ஸ்டேட் மேனுவல், 1919, தர்ஸ்டன் எழுதிய தென்னிந்திய சாதிகள், 1906, நம்முடைய இராதாகிருஷ்ணன் எழுதிய புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு, கால்டுவெல் எழுதிய திருநெல்வேலி வரலாறு, பிரான்ஸ் அறிஞர் டுப்ரேல் எழுதிய விசயாலய சோழிச்சுரம், சதா சிவ பண்டாரத்தார் எழுதிய பிற்காலச் சோழ வரலாறு, பாண்டிய வரலாறு, எம். ஆரோக்கியசாமி, எம்.ஏ., எழுதிய வெள்ளாற்றுச் சமவெளி, 1954, 1892-லே செந்தலைக் கல்வெட்டு, எம்.எஸ். கோவிந்தசாமி எழுதிய....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சதாசிவ பண்டாரத்தார்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மன்னிக்கவும், சதாசிவ பண்டாரத்தார் எழுதிய பிற்காலச் சோழ வரலாறு, பாண்டிய வரலாறு, எம். ஆரோக்கியசாமி, எம்.ஏ., எழுதிய - வெள்ளாற்றுச் சமவெளி, 1954, 1892-லே செந்தலைக் கல்வெட்டு, எம்.எஸ். கோவிந்தசாமி எழுதிய பல்லவர் கால முத்தரையர், சோழர் கால முத்தரையர் ஆகியவை வாயிலாக முத்தரையர் வாழ்ந்த, சிற்றரசர்களாக நாட்டை ஆண்ட வரலாற்றை இந்தப் புத்தகங்கள் மூலம், கல்வெட்டுக்கள் மூலம் காண முடிகிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரேயொரு எடுத்துக்காட்டை மட்டும் எடுத்துச் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 3-55*

4-4-1998 அன்று சனிக்கிழமை இரவு சன் டிவி. பேட்டியில் இராமநாதபுரத்தைச் சேர்ந்த முத்தரையர் சமுதாயத்துப் பெண்கள் படகில் சென்று, கடலில் மூழ்கி, முத்துச் சிப்பி, பாசி போன்றவற்றை எடுத்து வந்து தொழில் செய்வதாகவும், அந்தத் தொழிலை மூன்று மாதத்திற்கு மட்டும்தான் அவர்கள் செய்வதாகவும், அதனால் அவர்களுக்கு வெறும் 25 ரூபாய்தான் கிடைக்கிறது என்றும் கூறினார்கள். அதை வைத்துத்தான் அவர்கள் குடும்பத்தை நடத்த வேண்டியிருக்கிறது என்றும் சொன்னார்கள். இதை வைத்துப் பார்க்கும்போது எவ்வளவு மோசமான வறுமையில், அந்தச் சமுதாயத்தில் இருக்கக்கூடிய மக்கள் இருக்கிறார்கள் என்பதை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் நம்முடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்கு இந்தியாவைப் பொறுத்தவரையில் 36 கோடி பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளனர். ஒரு நாளைக்கு 9 ரூபாய் பெறுகின்ற வருமானத்தில் இருக்கிறார்கள். அப்படிப் பார்க்கின்றபோது, தமிழ்நாட்டில் புதுக்கோட்டையில், திருமயம் தொகுதியில் கரம்பக்குடி, கல்லுக்குடியிருப்பு, கந்தர்வக்கோட்டை பகுதி, அன்னவாசல் பகுதி என்று இப்படிப்பட்ட பகுதியில் இருக்கக்கூடிய முத்தரையர் ஒரு நாளைக்கு 9 ரூபாய் வருமானம்கூட இல்லாத நிலையில் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் புதிய மாணவர் விடுதி வேண்டுமென்று சென்ற ஆண்டே கேட்டிருந்தேன். சென்ற ஆண்டு கிடைக்கவில்லை. ஆகவே, இந்த ஆண்டு அனவயல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு மகளிர் விடுதியை அருள்கூர்ந்து நீங்கள் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு. (குறுக்கீடு) திரு. அ. வெங்கடாசலம். இன்னோர் உறுப்பினர் பேசி முடித்து, அமைச்சர் பதில் சொல்லவேண்டும். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. அ. வெங்கடாசலம்:** அதைப்போல, ரகுநாதபுரம் மேல்நிலைப் பள்ளிக்கு சீர்மரபினர் விடுதி ஒன்று வேண்டுமென்று கேட்டிருந்தேன். மிகவும் வறுமையிலும், ஏழ்மையிலும், வறட்சியிலும் வாடுகின்ற இந்த முத்தரையர் சமுதாய மக்களுக்கு சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையில் நீங்கள் தேர்வாணைக் குழு உறுப்பினர் பதவியை தந்தீர்கள். அந்த மக்களை பூரிப்படையச் செய்தீர்கள். இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் 20 பிரிவுகளுக்கு மேல் இருக்கக்கூடிய அந்த முத்தரையர் சமுதாய மக்களை ஒரே பிரிவாக சாதியை ஒழிக்கின்ற வகையில் ஒன்றாக இணைத்து முத்தரையர் என்ற அர்சாணையை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.. 20 பிரிவுகளாக இருக்கின்றவர்களை ஒரே பிரிவாக, ஒரே சாதியாக முத்தரையர் என்ற அந்த அமைப்பை அரசாணை மூலம் வெளியிட வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.





**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மர்ண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை முத்தரையரை ஒரே பிரிவாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையைச் செயல்படுத்த வேண்டுமானால், அவரே குறிப்பிட்டதைப்போல, 20 பிரிவுகளாக இருக்கிறார்கள் என்று சொன்னார். அந்த 20 பிரிவினரும், அவர்களுடைய பிரதிநிதிகளை வைத்துக்கொண்டு, 'நாங்கள் எல்லோரும் ஒரே பிரிவாக முத்தரையர் என்ற தலைப்பிலே இருக்கிறோம்' என்று; எழுதித் தருவார்களானால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

> "சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
> நீதி வழுவா நெறிமுறையில் மேதினியில்
> இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
> பட்டாங்கில் உள்ளபடி"

என்று பள்ளியில் பாடத்தைச் சொல்லிக் கொடுத்திருக்கிறோம். ஆனால், இங்கே சட்டமன்றத்தை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவரும் பேசும்பொழுது, ஒவ்வொருவரும் அவரவர்களுக்குரிய சாதியைப் பற்றிப் பேசவில்லையென்றால், அங்கே தொகுதி பக்கமே போக முடியாதோ என்ற நிலையில் பேசுவதைப்போல இங்கே தெரிகிறது. ஒவ்வொருவரும், அவரவர் பங்குக்குப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சரவையை எடுத்துக் கொண்டோமானால், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பழங்குடியினர் போன்றவர்கள்தான் கிட்டத்தட்ட 90 சதவீதத்திற்கு அதிகமானவர்கள் இந்தச் சபையை நடத்திக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், இங்கே பேசிக் கொண்டிருப்பவர்கள் குறிப்பிட்ட ஒரு சாதியைப்பற்றி பேசும்போது, இந்தந்த மாவட்டத்திலே, இந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தச் சாதியைச் சேர்ந்தவர் என்று கூறும்போது, அதுவே அவர்களுக்கு ஒரு குறைபாடாகவும் இருக்கிறது. ஒருவர் ஏதாவது தவறு செய்துவிட்டு, அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நீதி கிடைக்கவில்லை, இவர் அந்தச் சாதியைச் சேர்ந்தவர், ஆகவே, எனக்கு விரோதமாகச் செய்துவிட்டார் என்று

[திரு. மு. அப்பாவு] [1998 மே 6

சொல்லக்கூடிய நிலைகூட எல்லா இடத்திலும் இருந்து கொண்டிருக்கிறது. பள்ளிகளில் சேர்க்கும்பொழுது, முதல் வார்த்தை சாதியைப் பற்றித்தான் கேட்கிறார்கள். ஆகவே, சாதியை ஒழிக்க வேண்டுமென்று சொன்னால், நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தால்தான், இந்தச் சாதிப் பிரச்சினைக்கு ஒரு முடிவு வரும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

*பிற்பகல் 4-00*

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, முதன்முதலாக பரமேஸ்வரன் என்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரை அறநிலையத் துறை அமைச்சராக்கி, தமிழகம் முழுவதும் அனைத்து ஆலயங்களுக்கும் செல்ல முடியாமல் இருந்த நிலையை மாற்றி அமைத்தார்கள். அந்த அடிப்படையிலே, இன்றும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் பரமேஸ்வரன் அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்திச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். 1981-82 ஆம் ஆண்டு முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளி போன்றவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, 1997-98ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், அதேபோன்று, முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்தால் அவர்களுக்கும், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்ற நல்ல திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். அதற்காக, நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.



1998 மே 6] [திரு. மு. அப்பாவு]

அடுத்து, மதுரை, தேனி, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் சுமார் 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இருக்கின்றன. தயவுசெய்து, அந்த 'கள்ளர்' என்ற பெயரை மாற்றினால் நன்றாக இருக்கும் என்று நினைக்கின்றேன். ஆகவே, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் என்ற பெயரை மாற்றி, அவர்களுக்குத் தொடர்ந்து அந்தச் சலுகைகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பத்தாம் வகுப்பு முதல் பட்டதாரி வரை படிப்பதற்கு, சீர்மரபினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு, இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. ஆனால், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு, அவர்கள் வீட்டிலே பட்டதாரிகள் எவரும் இருக்கக்கூடாது; 25,000 ரூபாய்க்கு மேல் வருமானம் இருக்கக்கூடாது என்றெல்லாம் நிபந்தனைகள் இருக்கின்றன. அவர்கள் பட்டதாரியாகப் படித்துவிட்டாலும், அவர்களுக்கு வேலையில்லை. ஆகவே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், வருமானம் ரூ. 25,000/-தான் இருக்க வேண்டும் என்பதை மாற்றி, இரண்டு, மூன்று பட்டதாரிகள் இருந்தாலும், தொடர்ந்து, அவர்களுக்கு அந்த;ச் சலுகைகளை வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அரசு அனுமதி பெற்ற விடுதிகளில், அங்குள்ள மாணவர்களுக்கு உணவிற்காக ரூ. 85/- கொடுக்கப்பட்டது. தற்போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதனை ரூ.120/-ஆக உயர்த்தியிருக்கின்றார்கள். மேலும் ரூ.80/- சேர்த்து ரூ. 200/-ஆகக் கொடுத்தால், அவர்கள் நல்ல உணவை அருந்துவார்கள் என்பதை மெத்தப் பணிவோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம், இரண்டாம் இடம் பெற்று தொழிற் படிப்பில் சேருகின்ற மாணவர் இருவர், மாணவியர் இருவருக்கு, ஒவ்வொருவருக்கு, ஆண்டொன்றுக்கு ரூ.3,000/- வீதம் நான்கு ஆண்டுகளுக்கு பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. (மணியடிக்கப் பெற்றது) மூன்று நிமிடம்தானே பேசியிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் எவ்வளவு நேரம் பேசியிருக்கின்றீர்கள் என்பது எனக்குத்தானே தெரியும். ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளவும்.

[1998 மே 6

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, பத்தாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் இரண்டு இடங்களைப் பெற்று, பல்தொழில் பயிற்சி நிலையத்தில் பட்டயப் படிப்பில் சேர்ந்துள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும், தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. அதேபோன்று, பத்தாம் வகுப்பிலும், ப்ளஸ்-2-விலும் மாநில அளவில் தேர்வு பெற்ற மாணவ மாணவியர்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ரூ. 1,500/-ம், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ரூ. 3,000/-ம் வழங்குகின்றீர்கள். அப்படி வழங்கப்படுகின்ற பரிசுகளுக்கு, பெருந்தலைவர் காமராஜருடைய நினைவுப் பரிசு என்று பெயரிட்டு நீங்கள் அதைக் கொடுக்க வேண்டுமென்று உங்க்ளை மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், வடக்கன்குளம், காவல்கிணறு, கள்ளிக் குளம் போன்ற பகுதிகளில் மிக அதிகமான எண்ணிக்கையில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஆனால், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு, ஆதிதிராவிடர்களுக்கு எந்தவிதமான மாணவர் விடுதியும் இல்லை. ஆகவே, அந்த இடங்களில் மாணவர் விடுதிகளை அமைத்துத் தரும்படி உங்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற உயர்ந்த படிப்பிற்கு சென்னையில் மட்டும் 50 மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்றீர்கள். மதுரையிலே 75 மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்றீர்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் கூறியதைப்போன்று, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் குறைந்தது 100 மாணவர்களுக்காவது நீங்கள் பயிற்சி கொடுத்து, நம்முடைய தமிழகத்தில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். படிப்பில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் தேர்ச்சிப் பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பனையேறும் தொழிலாளர்கள், பனையேறும்பொழுது, தவறி கீழேவிழுந்து கை, கால்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், அவர்களுக்குச் சொந்தமாக வீடு இருந்தால், அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் இல்லை என்று இருக்கிறது. ஆகவே, அதை மாற்றியமைக்க வேண்டும். வறுமையிலே இருக்கின்றவர்கள்தான் இந்தத் தொழிலைச்



1998 மே 6] [திரு. மு. அப்பாவு]

செய்கின்றார்கள். அவர்கள் பனையேறும்போது கீழேவிழுந்து, அவர்களுடைய கை, கால்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், அவர்களுக்கு வீடு இருந்தாலும், அவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும் என்ற ஓர் உத்தரவை நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 4-05*

வனத் துறையிலே மிகப் பெரிய பதவியான Principal Conservator of Forests என்ற பதவிக்கு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்கள் யாருமே இதுவரை நியமிக்கப்படவில்லை. ஆகவே, அந்தப் பதவியை பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்தவருக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த நான்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களை, நீங்கள் பணியமர்த்தி இருப்பதாகக் கூறி இருக்கிறீர்கள். இன்னும் கொஞ்சம் அதிகமாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களை, அந்த இனத்தைச் சார்ந்தவர்களை — மன்னிக்கவும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களாக 4 பேரை நியமித்திருக்கிறீர்கள் — இன்னும் அதிகமாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களை அந்தப் பதவியில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாடார் நல மகாநாட்டிற்கு வரும்போது, எங்களுடைய ஒட்டுமொத்தக் கோரிக்கையான நாடார் சமூகத்தை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து, ஏற்கெனவே கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யோசித்து ஒரு நல்ல முடிவைச் சொல்வேன் என்று கூறினார்கள். ஒரு வருடம் ஆகிவிட்டது. ஆகவே, எங்களுடைய சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டும்: ஒருவகையில் உறவினராகவும் இருக்கிறீர்கள்; நீங்கள் கண்டிப்பாக எங்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

[1998 மே 6

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழ்நாட்டில், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் விட்டுச் சென்ற கொள்கைகளை, பணிகளைத் தொடர்ந்திட, அருமருந்தாய் தோன்றிய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், தனது அமைச்சரவையில் என்னையும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக்கி, இந்த மாமன்றத்திலே, இந்த மானியக் கோரிக்கைக்கு பதிலுரைக்கின்ற வாய்ப்பினை நல்கியமைக்காக, மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று தனித் துறையை உருவாக்கியவர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். 1969 ஆம் ஆண்டு முதன்முதலாக, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு, பிற்பட்டோர் நலத் துறை என்று உருவாக்கி, அந்தத் துறைக்கு ஒரு இயக்குநரையும் நியமித்து, அதன் மூலமாக, இந்த மக்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்று இருந்த நிதியைத் தொடர்ந்து ஒரு கோடி ரூபாய் என்று உயர்த்தி, அதற்குப் பின்னால் மீண்டும் 1990 ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்று உருவாக்கி, அதன் மூலமாக இன்றையதினம் கிட்டத்தட்ட 90 அல்லது 95 கோடி ரூபாய் அளவை நெருங்குகின்ற வகையில், பல நல்ல திட்டங்களை இந்த நாட்டிற்கு அர்ப்பணித்தவர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறை மானியத்தின்மீது கிட்டத்தட்ட 12 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே கூறியிருக்கிறார்கள். அவ்வப்போது, அந்தக் கருத்துக்களுக்கெல்லாம், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் தகுந்த பதிலுரைகளை எல்லாம் கொடுத்து, என்னுடையச் சுமையைக் குறைத்ததற்காக, இந்த மாமன்றத்தின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பல நல்ல திட்டங்களை எல்லாம் நீங்கள் படித்திருப்பீர்கள். அந்தத்



1998 மே 6] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

திட்டங்களுக்கெல்லாம் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் அளித்ததுடன், இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்ட சில கோரிக்கைகளுக்கும் இந்தச் சட்டமன்றத்திலேயே உத்தரவிட்டிருக்கிறார்கள்.

படிக்கின்ற மாணவர்களுக்கு உதவித் தொகையும் அதேபோல் வீடின்றி வாழ்கின்ற நாதியற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைப் பெட்டிகளும், கல்லுடைக்கும் தொழிலாளிகளுக்கு கல்லுடைக்கும் இயந்திரங்களும், அதேபோல முடிதிருத்தும் தொழிலாளிகளுக்கு முடிதிருத்தும் கருவிகளும் கொடுத்து, பல திட்டங்களை இங்கே நாட்டிற்கு அர்ப்பணித்துள்ளார்கள்.

அதேபோல, இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு என்று கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அளித்த 18 கோடி ரூபாயை, மீண்டும் இந்த ஆண்டும் 18 கோடி ரூபாயை வாரி வழங்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-10

தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு வரலாறு என்பது நீண்ட நெடுங்காலமாக 1921ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது என்பது நம் அனைவருக்கும் தெரிந்ததே. தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் சுமார் 67 விழுக்காடு உள்ளனர். இப்பெரும்பான்மை மக்களின் தேவைக்கேற்பவும், அவர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்தும்பொருட்டும், கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் இடஒதுக்கீடு வழங்க வேண்டியது அவசியமானது ஆகும்.

எனவே, தமிழ்நாட்டில் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 30 விழுக்காடும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடும், ஆதிதிராவிடர் வகுப்பினருக்கு 18 விழுக்காடும், பழங்குடியினர் வகுப்பினருக்கு 1 விழுக்காடும் என மொத்தம் 69 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது.

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [1998 மே 6

மண்டல் குழு வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் காரணமாக, தமிழ்நாட்டில் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினைத் தொடர்ந்து செயல்படுத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன. இந்த 69 விழுக்காடு இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க 1994ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, அனைத்து அரசியல் கட்சிகளின் ஒருமித்த ஆதரவுடன் சட்டமொன்றை இயற்றியது.

அச்சட்டம், தமிழ்நாடு சட்டம் 45/94 ஆகும். இந்த தமிழ்நாடு சட்டமானது, நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் அரசியலமைப்புச் சட்டத்தின் 9-வது விவர அட்டவணையிலும் சேர்க்கப்பட்டுள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இந்த தமிழ்நாடு சட்டம் 45/94-ஐ எதிர்த்து பல்வேறு ரிட் மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட நீதிப் பேராணை மனுக்களை விசாரணைக்கு அனுமதித்து, அவற்றை உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்புச் சட்ட நீதியர் ஆயத்திற்கு 1-8-1994-இல் அனுப்பி வைத்தது. அரசியலமைப்புச் சட்ட நீதியர் ஆயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இவ்வழக்குகளை விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோரி, விரைவுபடுத்தும் மனுவினை 6-9-1996-ல் இவ்வரசு தாக்கல் செய்தது. ஆனால், இவ்வழக்குகள் இதுவரை அரசியலமைப்புச் சட்ட நீதியர் ஆயத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிலுவையில் இருந்து வருகின்றன. மாநிலத்தில் நடைமுறையிலுள்ள 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை பாதுகாத்திட அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திட அரசு உறுதி பூண்டுள்ளது.

மேலும், மாநிலத்தின் தேவைக்கேற்ப கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் கடைபிடிக்கும் இடஒதுக்கீட்டின் அளவினை மாநில அரசுகளே நிர்ணயித்துக்கொள்ளும் வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை மைய அரசு திருத்த வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு அவசியம் என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. இப்போது இதர



1998 மே 6] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு மத்திய அரசின் வேலைவாய்ப்புகளில் மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்த 27 விழுக்காடு இடஒதுக்கீடு, மத்திய அரசின் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் வழங்கப்படவில்லை. மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்கும் 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டு, மத்திய அரசுக்கு கடிதமும் எழுதப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் மைய அரசு தெரிவித்துள்ளது.

சமுதாயத்தை மேம்படுத்த வேண்டும் என்றால், மக்கள் எண்ணத்தில் மாற்றத்தை உண்டாக்க வேண்டும் என்றால், கல்வி அவசியமாகும். மாற்றத்தை உண்டாக்குவதற்கும், தன்மானத்தை உண்டாக்குவதற்கும், இந்தச் சமுதாயத்திற்கு மக்களிடையே மதிப்பு ஏற்படுவதற்கும், கல்வி மிகவும் அவசியமாகும். இதை உணர்ந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தத் துறையின் மூலமாக கல்வி வளர்ச்சிக்காக ரூ. 61.79 கோடி நிதியை ஒதுக்கியுள்ளார்கள். மேலும், இத்துறையின்கீழ் கல்வி உதவித் தொகை அளித்தல், இலவசக் கல்வி, இலவச பாடநூல்கள், இலவச எழுது பலகைகள் வழங்குதல், இலவசமாக சீருடைகள் வழங்குதல், சீர்மரபினருக்கென தனியாகப் பள்ளிகள் நடத்துதல் ஆகிய திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 265 பள்ளிகள் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 218 ஆரம்பப் பள்ளிகளும், 10 நடுநிலைப் பள்ளிகளும், 23 உயர்நிலைப் பள்ளிகளும், 14 மேல்நிலைப் பள்ளிகளும், ஆக மொத்தம் 265 பள்ளிகள் இந்தத் துறையின் மூலமாக சிறப்பாகப் ப்ராமரிக்கப்பட்டு வருகின்றன.

இப்பள்ளிகளில், ஆண்டுதோறும் 55,346 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

1996-97ஆம் ஆண்டில் இப்பள்ளிகளை நிர்வகிக்க ரூ. 9 கோடியும், 1997-98ஆம் ஆண்டு ரூ. 11.95 கோடியும் செலவிடப்பட்டது. 1998-99ஆம் ஆண்டுக்கு மட்டும் 14.45 கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [1998 மே 6

பிற்பகல் 4-15

கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக, ஏழை எளிய மக்களுடைய பிள்ளைகள் எல்லாம் போதிய அளவுக்கு உடுக்க உடை இல்லாமல், உண்ண உணவு இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் தகுதியான கல்வியைப் பெறவில்லை என்ற நோக்கத்தோடுதான், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த ஆண்டு 62 புதிய விடுதிகளைத் தொடங்கினார்கள். இலவச பஸ் பாஸ் திட்டத்தின் காரணமாக, மாணவர்கள் எல்லாம் இலவசமாக பேருந்துகளில் பயணம் செய்து கல்வி பெறுகின்ற காரணத்தால், விடுதிகள் ஆரம்பிக்கப்படுவதைக் குறைத்துக்கொண்டு, பழைய விடுதிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த ஆண்டு 25 புதிய விடுதிகள்தான் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் 1996-97-இல் 45 விடுதிகளும், 1997-98-இல் 62 விடுதிகளும் திறக்கப்பட்டன. 1998-99-க்கு 25 விடுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. குறுகிய காலத்தில், அதிகமாக புதிய விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தத் துறையின் மூலமாக மொத்தம் 942 விடுதிகள் தொடங்கப்பட்டு, இயங்கி வருகின்றன என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கெல்லாம் இலவசமாக சீருடைகள் வழங்கப்பட்டு வந்தன. கடந்த ஆட்சிக் காலத்தில் சீருடைகள் முறையாக வழங்கப்படவில்லை. ஆனால், கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், கடந்த ஆண்டு பொங்கல் திருநாளுக்கும், தீபாவளிக்கும் வழங்கப்படுகின்ற சீருடைகள் எல்லாம் உடனடியாக வழங்கப்படுவதற்கு உத்தரவிடப்பட்டு, வழங்கப்பட்டன.

இந்த ஆண்டு, 1998-99ஆம் நிதியாண்டில் பள்ளிகள் திறக்கப்படும்போதே, அந்த இரண்டு சீருடைகளும் உடனடியாக வழங்கப்படவேண்டும் என்பதற்கான உத்தரவுகள் இடப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, வருகின்ற ஆண்டில் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும்போதே உடனடியாக சீருடைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்திற்கென 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ.127.43 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மே 6] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

அடுத்து, படிப்பு உதவித்தொகை, இலவச புத்தகங்கள், பல்வேறு கட்டணங்கள், கல்வி நிறுவனங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் படிப்பவர்களுக்கு வழங்கப்படும் உண்டி, இருப்பிட வசதி கட்டணங்களுக்காக இத்துறையால் செலவிடப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.17.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்து, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் எல்லாம் நல்ல முறையில் படிக்க வேண்டும், அவர்கள் நல்லக் கல்வியைப் பெறவேண்டும், அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, அந்த மாணவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் கல்விக்கென ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் 12ஆம் வகுப்பில் முதலிடம் பெறும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருப்பின் ரூ. 3,000 எனவும், மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினராயிருப்பின் ரூ. 5,000 எனவும் வழ்ங்கப்படுகிறது. மாநில அளவில் 10ஆம் வகுப்பில் முதலிடம் பெறும் ஒரு மாணவருக்கும், ஒரு மாணவிக்கும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராயிருப்பின் ரூ. 1,500 எனவும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினராயிருப்பின் ரூ. 3,000 எனவும் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோன்று, மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மாணவ மாணவியருக்கும் பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன. இதற்கென ரூ. 1.67 இலட்சம் நிதி ஒதுக்கீடு இந்த ஆண்டு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு. மாவட்ட அளவில் 12ஆம் வகுப்பில் முதலிடம்/இரண்டாம் இடம் பெற்று, பொறியியல்/மருத்துவம் போன்ற தொழிற் கல்வி படிப்பில் சேர்ந்து பயிலுகின்ற பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

அதேபோல், மாவட்ட அளவில் 10ஆம் வகுப்பில் முதல் இரண்டு இடங்களைப் பெற்று, பல்தொழில் பயிற்சி நிலையத்தில் சேர்ந்து

பயில்கின்ற பிற்படுத்தப்பட்ட/மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும், ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றிற்கு ரூ. 3,000 வீதம் மூன்றாண்டுகளுக்கு தந்தை பெரியார் பெயரால் பரிசுத் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்திற்கென இந்நிதியாண்டிற்கு ரூ.16.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் பயிற்சி திட்டங்கள். பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ/மாணவியர்கள் வாழ்வில் வளம் பெற்றிடவும், முன்னேற்றம் அடைந்திடவும், தொழில் சார்ந்த பயிற்சி அளிக்க பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

அடுத்து, 20 சட்டப் பட்டதாரிகளுக்கு சிறப்புப் பயிற்சி. சட்டப் பட்டதாரிகள் தமது துறையில் சிறந்து விளங்கிட 20 நபர்களுக்கு மூத்த வழக்குரைஞர்களின் கீழ் 3 ஆண்டுகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்படும் சட்டப் பட்டதாரிகள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 750 வீதம் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி அளிக்கும் மூத்த வழக்குரைஞருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 5,001 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. 1998-99ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.4.60 இலட்சம் செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-20

வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில், இந்தச் சமுதாயத்தைச் சார்ந்த பட்டம் பெற்ற மாணவர்களுக்கு எல்லாம் எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு அதிகரிக்கும்பொருட்டும், அந்த மாணவர்கள் சமுதாயத்தில் சிறந்த நிலையை எட்டுவதற்காகவும், இந்தத் துறையின் மூலமாக, கணிப்பொறி பயிற்சி அளிக்கப்படுகிறது. 175 மாணவர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டு வந்த இந்தக் கணினிப் பயிற்சி கடந்த நிதியாண்டு முதல் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் அனுமதியின் பேரில் 1,000 மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது என்பதை நான் பெருமையுடன்



தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பயிற்சியை தனியார் கணினிப் பயிற்சி நிலையத்தின் மூலமாக அளிக்கப்படவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பயிற்சி எல்லாம் முறையாக 5 பல்கலைக்கழகங்களின் மூலமாக அதாவது 'அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகிய 5 பல்கலைக்கழகங்களின் மூலமாக இந்தப் பயிற்சி முறையாக நடத்தப்படுகின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக இந்த ஆண்டிற்கு ரூ.59.34 இலட்சம் செலவிடப்படும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனரக வாகன ஓட்டுநருக்கான பயிற்சி. போக்குவரத்துக் கழகங்களுக்கெல்லாம் ஐ.ஆர்.டி.-யில் பயிற்சி பெற்றவர்களைத்தான் ஓட்டுநர்களாகத் தேர்வு செய்யவேண்டும் என்று கலைஞர் அவர்கள் உத்தரவிட்டதின் அடிப்படையில், இந்தச் சமுதாய மக்கள் அதிகமான பயனைப் பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் கடந்த காலத்தில் எல்லாம் 250 நபர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த இந்தப் பயிற்சியானது கடந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் மூலமாக இப்போது 2,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1.93 கோடி ரூபாய் செலவில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டிலும் 2,000 நபர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்திந்திய பணிகளைப் (ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பொறுத்தவரையில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் அனைத்திந்திய பணிகளான ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். போன்ற பணிகளுக்கான தேர்வில் வெற்றி வாய்ப்பினை பெறும் நோக்கத்துடன் அவர்களுக்கு சென்னை, மதுரை ஆகிய இடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். தேர்வுகளில் இந்தச் சமுதாயத்தினர் கலந்து கொண்டு ஏனையோருக்குச் சமமாகப் போட்டியிடும் தகுதியினைப் பெற இயலும். இந்தத் திட்டத்திற்கென ரூ.39.44 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இங்கே சென்னையில்

இருக்கின்ற சிறப்புப் பயிற்சி மையம் ஒரு வாடகைக் கட்டடத்திலே இருக்கின்ற காரணத்தினால், இன்றையதினம் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு கட்டடத்திற்கு இடமெல்லாம் இத்துறையால் தேர்வு செய்யப்பட்டு ரூ.50 இலட்சம் அதற்கென்று நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில் கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் தங்களுக்குத் தாங்களே உறைவிடத்தை அமைத்துக்கொள்ளும் வகையில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1996-97 வரையில் மிகவும் பிற்பட்டோர், சீர் மரபினர் ஆகியவர்களுக்கு மட்டும்தான் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1997-98 முதற்கொண்டு வறுமைக் கோட்டிற்குக்கீழ் கிராமத்திலே வாழும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 1997-98ஆம் ஆண்டு ரூ.6.87 கோடியில் 25,303 மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கும்; ரூ3.52 கோடி செலவில் 18,237 பிற்படுத்தப்பட்டவர்களுக்கும்; ரூ.64.53 இலட்சம் செலவில் 1,189 முன்னேறிய வகுப்பினர்களுக்கும், ஆகமொத்தம் 44,729 நபர்களுக்கு ரூ.11.04 கோடி செலவில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சமத்துவபுரம் திட்டத்திற்காகவும் ரூ.15.74 இலட்சம் செலவிடப்பட்டது. 1998-99 ஆண்டிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்திற்குத் தேவையான நிதியாக ரூ.18.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இத்தொகையினைத் தங்கள் தொகுதி வளர்ச்சிப் பணிக்காக முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-25

இந்த ஆண்டு புதிய திட்டங்களாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், யாரும் எதிர்பார்க்காத வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்காத கோரிக்கைகளையும் நிறைவேற்றுகிற





வகையில், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இத்துறைக்கு நிதியாக ரூ.18 கோடி ஒதுக்கிக் கொடுத்துள்ளார்கள். ஆனால், இந்தப் பணியை நிறைவேற்ற களப் பணியாளர்கள் இல்லை என்ற குறை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் இருந்தது. இந்தக் குறையைப் போக்குகின்ற வகையில், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த ஆண்டு 15 புதிய தனி வட்டாட்சியர் பதவிகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்தான் இருக்கிறார் இந்தத் துறைக்கு. வேறு பணியாளர்கள் யாரும் இல்லை. மாவட்ட ஆட்சியரைச் சார்ந்துதான் இந்தத் துறையின் பணிகளை நாம் நிறைவேற்றிக் கொண்டிருந்தோம். அந்தக் குறையினைப் போக்குகின்ற வகையில், இந்த ஆண்டு 15 புதிய தனி வட்டாட்சியர் பதவியிடங்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். மேலும் இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு வட்டாட்சியருடன் ஒரு நில அளவையாளர், ஓர் உதவியாளர், ஒரு வருவாய் ஆய்வாளர், ஒரு சங்கிலியாளர் ஆகியோரும் இத்துறையில் நியமனம் செய்யப்பட உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால், விரைவாக நிலங்களைக் கையகப்படுத்தி, மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும். இதற்கென ஆகும் செலவினம் ரூ.35.42 இலட்சமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை விடுத்தார்கள். பாட்டாளி மக்கள் கட்சி-2-ன் உறுப்பினர் திரு. தீரன் அவர்கள் ஒரு கோரிக்கையை விடுத்தார்கள். சமையல்காரர்களுக்கு சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமென்று இந்த அவையிலே சொன்னார்கள். அதைக் கேட்டவுடன், நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு அதிகாரிகளுடன் கலந்து பேசி, நிறைவேற்றப்படும் என்று கூறினார்கள். ஆதி திராவிடர் நல விடுதிகளில் சமையல்காரர்களுக்குத் தருகின்ற அதே சம்பளம், பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் வேலை பார்க்கும் சமையல்காரர்களுக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நெடுங்காலமாக, சமையல்காரர்கள் கோரிக்கை விடுத்தார்கள். ஆனால், கடந்த

ஆட்சியாளர்கள் அதைக் கண்டு கொள்ளவேயில்லை. இங்கே சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்தவுடனே, அதைப் பெரிய மனதோடு நிறைவேற்றித் தந்துள்ளார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அலங்கார ஆடை வடிவமைப்புக் கல்வி. மகளிர் மேம்பாட்டிற்காக, பிளஸ்-2 தேர்வில் தேர்ச்சி பெற்ற 30 பெண்களுக்கு, சென்னையில் உள்ள National Institute of Fashion Technology என்ற நிறுவனத்தின் மூலமாக 3 ஆண்டுகளுக்கு அலங்கார ஆடை வடிவமைப்புப் பட்டயப் படிப்பு இவ்வாண்டு முதல் தொடங்கப்பட உள்ளது. இதற்கென ஆகும் செலவு ரூ.5.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென்று ஒரு மாணவருக்கு செலவு செய்கின்ற தொகை 57,900 ரூபாய்.

அதேபோன்று, இளங்கலைப் பட்டம் படித்த 30 பெண்களுக்கு, மேற்சொன்ன நிறுவனத்தின் மூலமாக ஆடைகள் தயாரிக்கும் தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு 2 ஆண்டுகளுக்கு இலவசமாக இந்த ஆண்டு முதல் அளிக்கப்படவுள்ளது. இதற்கென ஆகும் செலவு ரூ.6.4 இலட்சமாகும். இதனால் மகளிருக்கு, படித்து முடித்தவுடனேயே அரசுத் துறை நிறுவனத்திலோ, தனியார் நிறுவனத்திலோ வேலைவாய்ப்பு கிடைக்கும். சுயதொழில் தொடங்கவும் இது வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-30

விடுதியில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவர்களின் உணவுக் கட்டணமாக தற்போது மாணவ மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வழங்கப்படுகிறது. இத்தொகை நடப்பு நிதி ஆண்டில் இருந்து ரூபாய் 225 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதற்காக அரசுக்கு ஆகும் செலவு ரூ.2.14 கோடி.

சென்னையில் உள்ள தனி பயிற்சி நிலையத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவர்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பணி இடங்களுக்கு தேர்வுகள் எழுத இதுநாள் வரையில் இலவசமாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. நடப்பு நிதி ஆண்டில் 50 மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பயிற்சி வருகிற நிதி ஆண்டு முதல்



100 மாணவர்களுக்கு அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு ஆகும் செலவினம் ரூ.7.93 இலட்சம் ஆகும்.

தொழில் பட்டயப் படிப்பு இலவசக் கல்வித் திட்டத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஆயிரம் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் சீர்மரபினர்களுக்கும் ஆயிரம் என்றும் இதுவரை இருந்து வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை நடப்பு நிதி ஆண்டிலிருந்து நீக்கப்படுகிறது. அதாவது, பாலிடெக்னிக் படிக்கின்ற மாணவர்கள் முதல் பட்டதாரி மாணவர்கள் வரை தகுதி உடைய மாணவர்கள் அனைவருக்கும் இச்சலுகைகள் வரம்பின்றி அளிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூ.8 இலட்சம் ஆகும்.

கூட்டுறவு, தொழில் பேட்டை வளாகம். கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர் பயன் அடையும் வகையில் புதிதாக ஒரு கூட்டுறவுத் தொழில் பேட்டை வளாகம் அமைக்கப்பட உள்ளது என்பதைத், தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் அப்பகுதியில் வாழும் 2,911 பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோரும், 59 மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோரும் பயன் அடைவர். இதற்காக ரூ.20 இலட்சம் பங்குத் தொகையாக அரசால் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலவசக் கருவிகள். ஆண்டு தோறும் 4 ஆயிரம் பித்தளை சலவைப், பெட்டிகள் வழங்கப்பட்டு வருவது இவ்வாண்டு முதல் 6 ஆயிரம் ஆகவும், 500 முடிதிருத்தும் கருவிகள் இவ்வாண்டு முதல் 2 ஆயிரம் ஆகவும், 500 கல் உடைக்கும் கருவிகள் இவ்வாண்டு முதல் 2 ஆயிரம் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக கூடுதலாக ரூ.37.76 இலட்சம் செலவாகும். பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு 75 இலட்சம் செலவில் புதிதாக 25 பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் பள்ளி மாணவ மாணவியர்களுக்காக ரூ.496.10 இலட்சம் செலவில் 15 பள்ளி மாணவ மாணவியர் விடுதிகளுக்குச் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [1998 மே 6

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர்களுக்கான 200 விடுதிகளுக்கு ரூ.10 இலட்சம் செலவில் பாத்திரங்கள் வழங்கப்படும்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு ரூ.14 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புகள் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் விடுதிக் கட்டடங்களும், கள்ளர் சீரமைப்புப், பள்ளிக் கட்டடங்களும் ரூ.36 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

50 பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளுக்கு ரூ.2.50 இலட்சம் செலவில் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினரைச் சேர்ந்த 150 விண்ணப்பதாரர்களுக்கு ரூ.7.63 இலட்சம் செலவில் தானியங்கி பொறியியல், குளிர்சாதன இயந்திரவியல், குளிர்சாதனப் பெட்டி இயந்திரவியல் ஆகியவற்றில் வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரூ.50 இலட்சம் செலவில் சென்னையில் சிறப்புப் பயிற்சி நிலையத்திற்கென சொந்தமாகப் புதியக் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரூபாய் 62.89 இலட்சம் செலவில் 10 கள்ளர் தொடக்கச் சீரமைப்புப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளி ஒன்று உயர்நிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளி ஒன்று மேல்நிலைப் பள்ளியாகவும் நிலை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவியருக்காக 17 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ரூ.14.11 இலட்சம் செலவில் கழிவறைகள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ரூ.30 இலட்சம் செலவில் கூடுதலாக 10 வகுப்பு அறைகள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மே 6] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 4-35

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரைச் சேர்ந்த மகளிருக்கு ரூ.3.16 இலட்சம் செலவில் செவிலியர் உதவியாளர் பயிற்சி அளிக்கப்படும். 11 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளில் ரூ.16.50 இலட்சம் செலவில் ஆய்வுக்கூட வசதி செய்து கொடுக்கப்படும். 3 கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிகளில் ரூ.4.50 இலட்சம் செலவில் ஆய்வுக்கூட வசதிகள் செய்து கொடுக்கப்படும். கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ரூ.1.90 இலட்சம் செலவில் புத்தறிவுப் பயிற்சி அளிக்கப்படும். புதிதாக ஏற்படுத்தப்பட்ட 4 மாவட்டங்களுக்கு ரூ.11.24 இலட்சம் செலவில் ஈப்புகள் வாங்கப்படும்.

தமிழ்நாட்டில் பெரும்பான்மை மக்களின் முன்னேற்றம் தொடர்புடைய இந்த மானியக் கோரிக்கைமீது சிறந்த கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த நல்ல கருத்துக்கள் அவையின் நடவடிக்கைக் குறிப்புகளில் இடம் பெற்றிருக்கின்றன. எனவே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மூலம் அவற்றின்மீது கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்கு ஏற்புடைய விளக்கங்கள் அளித்துள்ளேன் எனக் கருதுகிறேன். வெட்டுத் தீர்மானங்களின் மூலம் சுட்டிக்காட்டியவற்றை நன்கு பரிசீலித்து உரிய வகையில் விடையளித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை அளித்த உறுப்பினர்கள் அவைகளைத் திரும்பப்பெறுவதுடன் மானியக் கோரிக்கையை ஏற்று முழுமையாக நிறைவேற்றித் தரும்படி கேட்டு என் பதிலுரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 31-பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

[1998 மே 6

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இல்லை.



1998 மே 6]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

திரு. பி. வெங்கடசாமி இருக்கையில் இல்லை. திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை சிவபுண்ணியம்

திரு. வை. சிவபுண்ணியம். இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.89,44,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

[1998 மே 6

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் குறித்த விதி 32-ஐ, 11-5-1998 அன்று தளர்த்துவதற்குரிய தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 11-5-1998 திங்கட்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (11-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

ஏதுமில்லை



1998 மே 6]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

158. மானியக் கோரிக்கை எண் 31 - பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

159. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

160. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

161. மானியக் கோரிக்கை எண் 32 - வீட்டுவசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

162. மானியக் கோரிக்கை எண் 33 - நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

163. மதிப்பீட்டுக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை, 1997-98.

# இணைப்பு

**[103-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]**

## மானியக் கோரிக்கை எண் 31

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

## 1998-99

### அ. முகவுரை

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரது மேம்பாட்டிற்குரிய நலத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு தனித்து விளங்குகிறது. நீண்டகாலமாக இவ்வகுப்பினர் சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கியே வைக்கப்பட்டிருந்ததோடு, முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளும் இவர்களுக்கு மறுக்கப்பட்டு உள்ளன. சமூக நிலையில் இவர்களை முன்னேற்றுவதையும், பொருளாதார நலிவிலிருந்து இவர்களை விடுவிப்பதையும் உறுதி செய்யும் பொருட்டு, இவர்களுடைய கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றம் குறித்து அதிகக் கவனம் செலுத்தி பல்வேறு நலத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவதற்கு அரசு அதிக முன்னுரிமை அளித்துள்ளது. அவர்கள் சமூக பொருளாதார நிலையில் சமுதாயத்துடன் ஒருங்கிணைந்து வாழ்வதை உறுதி செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### ஆ. கொள்கை

#### (அ) இடஒதுக்கீடு

2. 1921ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கொண்டு வந்ததன் மூலம் தமிழ்நாடு இதில் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்குக்கு அதிகமானவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்புகள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள்

மற்றும் சீர்மரபு ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இட ஒதுக்கீடு அளவு, பெரும்பான்மை மக்களின் தேவைக்கு ஏற்ப, படிப்படியாகத் தொடர்ந்து அதிகரித்துள்ளது. தற்போது இது, 69 விழுக்காடு என்ற நிலையை அடைந்துள்ளது. தற்போதைய கொள்கையின்படி, ஆதி திராவிடர்களுக்கு 18 விழுக்காடும், பழங்குடியினருக்கு 1 விழுக்காடும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 30 விழுக்காடும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடும் இடஒதுக்கீடு நிர்ணயிக்கப்படுகிறது. மாநிலத்தில் வேலைவாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும் தொடர்ந்து 69 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய அரசு, தமிழ்நாடு 1994ஆம் ஆண்டு 45ஆம் சட்டத்தை இயற்றியுள்ளது. இது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 9ஆம் விவர அட்டவணையிலும் சேர்க்கப்பட்டது. தமிழ்நாடு 1994ஆம் ஆண்டு 45ஆம் சட்டத்தின் செல்திறனை எதிர்த்து இந்தியத் தலைமை நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் செல்திறனைப் பாதுகாக்கவும், அதன்மூலம் இம்மாநிலத்தில் தற்போதுள்ள 69 விழுக்காடு இடஒதுக்கீட்டைப் பாதுகாக்கவும் வேண்டி பயனுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இவ்வரசு தீர்மானித்துள்ளது.

**(ஆ) கல்வி**

3. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சமூகப்பொருளாதார பின்னடைவைப் போக்குவதற்கு கல்விதான் நிரந்தரத் தீர்வு என்பதால், இவ்வகுப்பினருக்கு குறைந்தபட்சமாவது அடிப்படைக் கல்வி வசதியை அளிப்பது, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த கோட்பாடுகளில் முக்கியமான ஒன்றாகும். 1998-99ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கான மொத்த வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 76 விழுக்காட்டினை ஒதுக்குவதின் மூலம் அரசு, கல்விக்கு அதிக முன்னுரிமை அளிக்கிறது. இவ்வகுப்பினரிடையே குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வசிப்பவர்களில், எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகக் குறைவு என்பதையும், இடையில் படிப்பை நிறுத்திவிடுபவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதையும் கருத்திற்கொண்டு, மாணவரில்ல வசதிகள், படிப்புதவித் தொகைகள், இலவசக் கல்வி, இலவசமாகப் பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள், சிறந்த மாணவர்களுக்குப் பரிசுகள் ஆகியவற்றை வழங்குவதற்கு அரசு தனி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.





மேலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களிடையே கல்வி நிலைமை மிகவும் மோசமாக உள்ள சீர்மரபைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தனிப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டதுடன், இவ்வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் அனைத்திந்திய அரசுப் பணிகள் தேர்வை எழுதுவதற்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**(இ) பொருளாதார நிலையை உயர்த்துதலும், வேலைவாய்ப்பும்**

4. சாதாரண மக்கள், வாழ்க்கையின் அடிப்படை வசதிகளைப் பெறுவதற்கும், அவற்றை அனுபவிப்பதற்கும் வறுமை ஒரு தடையாக உள்ளது. இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களில் குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் பெரும் சிக்கலான பொருளாதாரப் பிரச்சினை வறுமையாகும். வறுமையும், வேலைவாய்ப்பின்மையும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையாதலால், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், போயர்கள் ஆகியோர்களுக்கு இலவசமாகக் கருவிகள் வழங்கியும், முடிதிருத்தகம், சலவையகம், நடமாடும் சலவையகம் ஆகியவற்றை அமைப்பதற்கான உதவித்தொகை மற்றும் நிதி உதவி அளித்தும், அவர்களுக்கு சுய வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்குரிய திட்டங்களை வகுப்பதில் அரசு மிகவும் கவனம் எடுத்துக் கொண்டுள்ளதுடன், அவ்வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான தனி தொழிற்பயிற்சி நிறுவனம் நடத்தி, வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சியையும் அளிக்கிறது. இத்தகைய நடவடிக்கைகள் போட்டியிட்டு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு உதவியாக இவ்வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் திறமையைப் பெரிதும் உயர்த்தும்.

**(ஈ) வீட்டுவசதி**

5. குடியிருக்க வீடில்லாத ஏழை மக்கள் அனைவரும் வீடு கட்டிக் கொள்வதற்கு உதவி வழங்குவது அடிப்படை நலப் பணிகளில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய ஒன்றாகக் கண்டறியப்பட்டுள்ளது. மிகவும் பிற்படுத்தப்பட்டோரில் குறிப்பாக (1) முடிதிருத்துவோர் (2) சலவைத் தொழிலாளர் (3) போயர் (4) நரிக்குறவர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த நிலமற்ற குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தை அரசு 1981-82ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

[1998 மே 6

மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் இத்திட்டம், 1990-91ஆம் ஆண்டில் அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1997-98 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட உரையில் தெரிவித்ததற்கிணங்க, ஊரகப் பகுதிகளில், வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் முற்பட்ட வகுப்பினர் அனைவருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு செயலாக்கப்பட்டு வருகிறது.

### (உ) சிறுபான்மையினர் நலம்

6. சிறுபான்மையினர், மாநிலம் மற்றும் சமுதாயத்தின் பண்பாடு மற்றும் நெறிமுறை ஆகியவற்றில் தாங்களும் ஒருங்கிணைந்த அங்கம் என்று உணரச் செய்யும் வகையில் சிறுபான்மையினர் நலனுக்குரிய நலத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. சிறுபான்மையினரின் கல்வி மற்றும் வேலை வாய்ப்பிற்குச் சிறப்புக் கவனம் செலுத்துவதுடன், அவர்களது சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் இஸ்லாமியர், கிருத்துவர், சீக்கியர், புத்த மதத்தவர், பார்ஸிகள் ஆகியோர் சிறுபான்மையினராகக் கருதப்படுகிறார்கள். சமய, மொழி வகையில் சிறுபான்மையினரின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு சிறுபான்மையினர் நல ஆணையம் ஒன்றை அரசு உருவாக்கியுள்ளது.

### இ. திட்டங்கள்

### 1. கல்வி

#### பள்ளிகள்

7. சீர்மரபினர், அதிலும் குறிப்பாக பிரமலைக் கள்ளர் சமுதாயத்தினரின் கல்வித் தரம், ஏனைய சமுதாயத்தினரின் கல்வித் தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. பிரமலைக் கள்ளர் வகுப்பினருக்குச் சிறப்பு கவனம் செலுத்துவதுடன் சீர்மரபினர் கல்வித் தரத்தைத் திறம்பட மேம்படுத்தும் பொருட்டு, பிரமலைக் கள்ளர் அதிகமாக வாழும்



1998 மே 6]

இடங்களான மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை மூலம் 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 1997-98 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 55,346 ஆகும்.

8. இப்பள்ளிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, இவ்வரசு, பல்வேறு நலத் திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இவற்றில், பள்ளிகளின் நிலை உயர்த்துதல், ஆய்வுக்கூடக் கருவிகள் வழங்குதல், ஆய்வுக்கூடங்களைக் கட்டுதல், மாணவியர்களுக்கு கழிப்பிடத் தொகுதி கட்டுதல், படிப்படியாக மின் வசதி மற்றும் குடிநீர் வசதிகளுக்கு வகை செய்தல் ஆகியவை அடங்குகின்றன.

9. 1997-98 ஆம் ஆண்டில் மூன்று நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், மூன்று உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டன. இத்திட்டத்திற்காக 1997-98 ஆம் ஆண்டில் 24.55 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 5 இலட்சம் ரூபாய் செலவில் ஆய்வுக்கூட சாதனங்கள் 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன. 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ரூ.27.20 இலட்சம் செலவில் 10 வகுப்பு அறைகள் கூடுதலாகக் கட்டப்பட்டன. 20 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் மாணவியர்களுக்காகக் கழிப்பிடத் தொகுதிகள் கட்டுவதற்காக ரூ.8.80 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் குடிநீர் வசதி வழங்க ரூபாய் 5.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. 20 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் மின் இணைப்பு வசதி வழங்க ரூ.2.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. மேலும், 1997-98-இல் கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களைப் பராமரிக்க ரூ.20.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

10. பயன் மறுக்கப்பட்ட பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குச் சிறந்த கல்வி அறிவை அளிப்பதற்கு ஏதுவாக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒவ்வோராண்டும் கணிசமான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் மேம்பாட்டிற்காக 1998-99 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்களின் விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பின்

[1998 மே 6

இறுதியில் வரும் 'புதிய திட்டங்கள்' என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

**பாடப்புத்தகங்கள் மற்றும் எழுதுபலகைகள் வழங்குதல்**

*11.* சீர்மரபினர் வகுப்பினரின் கல்வி மேம்பாட்டிற்காக சிறப்புக் கவனம் செலுத்துவதற்காகவும் உதவித் தொகை அளிப்பதற்காகவும் வேண்டி செயற்படுத்தப்படும் திட்டங்களில் இது ஒன்றாகும். கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 3-ஆவது வகுப்பு வரை பயிலும் மாணவர்களது எழுது பலகைகளும், 10-ஆவது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக, 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.35.83 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சீருடை வழங்கல்**

12. சீர்மரபினர் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கும் ஒவ்வோராண்டும் இரண்டு தொகுதி சீருடைகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர் மாணவ இல்லங்களைச் சேர்ந்த 18,280 மாணவ மாணவியரும், மிகப் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் மாணவ இல்லங்களைச் சேர்ந்த 20,475 மாணவ, மாணவியரும், சீர்மரபினர் பள்ளிகளைச் சேர்ந்த 44,384 மாணவ, மாணவியரும் இத்திட்டத்தினால் பயன்பெறுகின்றனர். 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு தற்காலிக நிதி ஒதுக்கீடாக ரூ.127.43 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**படிப்புதவித் தொகை**

13. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.25,000/- என்ற வரம்பிற்குட்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு பல்வேறு படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

**பள்ளிப் படிப்பு உதவித் தொகை**

14. பள்ளிப் படிப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ், ஒன்பதாம் வகுப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட



1998 மே 6]

மாணவ, மாணவியருக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட பாடப்புத்தகங்களும், பத்தாம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்து பாடப்புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு அனைத்துப் புத்தகங்களும் தமிழ்நாட்டு பாடநூல் கழகத்தின் மூலமாக இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்துறை நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மாணவர் இல்லங்களில் தங்கிக் கொண்டு, 4ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையில் பயிலுகின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியர்களுக்கு அனைத்துப் பாடப்புத்தகங்களும், 1997-98 ஆம் ஆண்டிலிருந்து இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும் மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கல்விக் கட்டணங்கள் கல்வி நிறுவனங்களுக்கு ஈடு செய்யப்படுகின்றன. பத்தாம் வகுப்பு மாணவ, மாணவியர் செலுத்த வேண்டிய பொதுத் தேர்வு கட்டணமும், மாணவ, மாணவியர் சார்பாக, அரசுத் தேர்வுகள் துறை இயக்குநருக்கு ஈடுசெய்யப்படுகிறது. ஆண்டு வருமானம் ரூ.25,000/-க்கு மிகைப்படாத, பட்டதாரி அல்லாத குடும்பத்தைச் சேர்ந்தவருமான பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனைகளும் வரையறையும் இன்றி, கல்விக் கட்டணம் ஈடுசெய்யப்படுகிறது. அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியரும் இச்சலுகை பெறத் தகுதியுள்ளவர்கள். அந்நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் அரசுக் கல்வி நிறுவனங்களில் கட்டவேண்டிய கட்டணத்திற்கு இணையாக வரையறுக்கப்படுகிறது. 1998-99 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.354.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை**

15. இத்திட்டத்தின் கீழ், கல்வி உதவித்தொகை மேல்நிலை வகுப்பில் தொடங்கி ஆராய்ச்சிப் படிப்பு வரை வழங்கப்படுகிறது . இத்திட்டத்தின் கீழ் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாக மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. கல்விக் கட்டணம் மற்றும் புத்தகக் கட்டணம் ஆகியவற்றின் ஒரு பகுதி இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட படிப்புதவித் தொகையைக் கொண்டு ஈடுசெய்யப்படுகிறது.

[1998 மே 6

16. +2 பாடங்களை ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்கும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அவர்களது கல்விக் கட்டணத்தை திரும்பப் பெறுவதற்கு அவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.25,000க்கு உட்பட்டிருக்க வேண்டும். அவர்களுடைய குடும்பத்தில் பட்டதாரிகள் இருக்கக்கூடாது என்ற நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. ஆங்கிலம் வழி கற்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபு மாணவ, மாணவியர்கள் நிபந்தனைகள் ஏதுமின்றி மேற்கூறிய சலுகைகளை அடையலாம். கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு "உதவித் தொகை அறிக்கையில்" குறிப்பிட்டுள்ளபடி உணவு மற்றும் உறையுள் கட்டணம், படிப்புதவித் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மெட்ரிக் படிப்புக்குப் பிந்தைய படிப்புக்குரிய படிப்புதவித் தொகை வழங்குவதற்காக, 1998-99 ஆம் ஆண்டில் ரூ.574.91 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**இலவசக் கல்வி**

17. பத்தாம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபு மாணவ, மாணவியருக்கு அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானத்தை கணக்கில் கொள்ளாமல் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியரைப் பொறுத்தமட்டில், (அ) அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.25,000/-க்கு மேல் இருக்கக் கூடாது மற்றும் (ஆ) அவருடைய குடும்பத்தில் பட்டதாரிகள் இருக்கக் கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, பத்தாம் வகுப்பிலிருந்து, பட்டப் படிப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

18. மேற்சொன்ன மூன்று தொகுதிகளைச் சேர்ந்தவர்களில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளோடு, அக்குடும்பத்தில் அம்மாணவர் தொழிற் கல்வி பயிலும் முதல் நபராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் மற்றும் சட்டம் போன்ற தொழில் பட்டப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இலவசக் கல்வி வழங்கும் இத்திட்டம், 1997-98 ஆம் ஆண்டு முதல், பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் பட்டயப்படிப்பு



1998 மே 6]

பயிலும் மேற்சொன்ன மூன்று தொகுதிகளைச் சேர்ந்த 2000 மாணவ, மாணவியருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.25,000/-க்கு மேற்படக்கூடாது மற்றும் அவர்தம் குடும்பத்தில் பட்டயப்படிப்பு பயின்றவர்களோ அல்லது பட்டதாரிகளோ இருக்கக்கூடாது என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

19. இந்த இலவசக் கல்வி திட்டங்களின்கீழ் பயின்று வரும் மாணவ/மாணவியருக்கு அரசு ஏற்பளித்துள்ளவாறு அரசுக் கல்லூரிகளுக்கும், அரசு மானியம் பெறும் கல்லூரிகளுக்கும், பொருந்தத்தக்க வீதங்களில் கல்விக் கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய திரும்ப பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது. இக்கட்டண விலக்களிப்பினால், கல்வி நிறுவனங்களுக்கு ஏற்படும் நிதி இழப்புத் தொகை, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறைகள் மூலம் இக்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது. இத்திட்டங்களின்கீழ், 1998-99 ஆம் ஆண்டிற்கு 1,30,000 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.784.92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**உணவு மானியம்**

20. ஏழைக், குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காகப் பராமரிக்கப்பட்டுவரும், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் விடுதிகள், இல்லங்கள் ஆகியவற்றிற்கு, அவ்வில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000-க்கு மிகாமலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் உணவு மற்றும் உறையுள் கட்டணம் தொடர்பான செலவுகளை ஏற்பதற்கு உணவு மானியம் என்ற வகையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. 1997 ஆம் ஆண்டு வரையில், ஓராண்டில் 10 மாதங்களுக்கு, உணவு, உறையுள் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு ரூ.85 வழங்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டில், மாதம் ஒன்றுக்கு இத்தொகை ரூ.85/-லிருந்து ரூ. 120/- ஆக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 39 தனியார் இல்லங்கள் உள்ளன. 1997-98 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ், மொத்தம் 2,900 மாணவ, மாணவியர்கள் பயனடைந்தனர். 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.15.49 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1998 மே 6

## பரிசுகள் வழங்குதல்

### (1) மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள்

21. இத்திட்டத்தின்கீழ், ஆண்டுதோறும், மாநில அளவில், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கான அரசுத் தேர்வுகளில் திறமை காட்டியதற்காக இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) வழங்கப்படுகின்றன. பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.3,000/-மும், மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.5,000/-மும் வழங்கப்படுகிறது. பத்தாம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.1500/-ம் மிகப்பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.3,000/- மும் வழங்கப்படுகிறது.

22. இதுபோலவே, மாவட்ட அளவில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) வழங்கப்பட்டு வருகின்றன. பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராகயிருப்பின் ரூ.1,500/-ம், மிகப்பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராகயிருப்பின் ரூ.3,000/-மும் வழங்கப்படுகின்றன.

23. பத்தாம் வகுப்பு மாணவ/மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள், இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராய் இருப்பின், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளுக்கு முறையே ரூ.500/-, ரூ. 250/- மற்றும் ரூ.150/- வழங்கப்படுகின்றது. மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராகயிருப்பின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளுக்கு முறையே ரூ.1000/-, ரூ. 500/- மற்றும் ரூ.300/- வழங்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டிற்கு, இத்திட்டத்திற்காக ரூ.1.67 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



1998 மே 6]

### (2) பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு (12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்)

24. பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம், இரண்டாம் இடம் பெற்று, தொழிற்படிப்பில் சேருகின்ற மாணவர் இருவர், மாணவியர் இருவருக்கு, ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.3,000/- வீதம் நான்கு ஆண்டுகளுக்கு பேரறிஞர் அண்ணா நினைவு பரிசு வழங்கப்படுகிறது.

### (3) தந்தை பெரியார் நினைவுப் பரிசு (10ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்)

25. பத்தாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதல் இரண்டு இடங்களைப் பெற்று பல்தொழில் பயிற்சி நிலையத்தில் பட்டயப்படிப்பில் சேர்ந்துள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த/ மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த / சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும், ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.3,000/-வீதம் மூன்றாண்டுகளுக்கு தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

அண்ணா, பெரியார் நினைவுப் பரிசுகளுக்காக 1998-99-ம் ஆண்டிற்கென ரூ.16.32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## அரசு மாணவர் இல்லங்கள்

26. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, 1996-97 வரையில் 880 மாணவர் இல்லங்களை நடத்தி வந்தது. 1997-98 ஆம் ஆண்டில் புதிதாக 62 மாணவர் இல்லங்கள் தொடங்கப்பட்டன. இன்றைய நிலையில் 942 மாணவர் இல்லங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 512 மாணவர் இல்லங்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் நல இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன. எஞ்சியுள்ள 430 மாணவர் இல்லங்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நல இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் மொத்தம் 48,819 மாணவ/மாணவியர்கள் மாணவர் இல்ல வசதிகளைப் பெற்றுள்ளனர். மாணவர் இல்லங்களில் சேர அனுமதி பெற, விண்ணப்பதாரரின் பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு,

ரூ.15,000-ஆக இருந்தது. 1997-98 ஆம் ஆண்டில் இந்த உச்சவரம்பு, ஆண்டொன்றுக்கு ரூ.50,000/- ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. 942 மாணவர் இல்லங்களில், 150 மாணவர் இல்லங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்படுகின்றன. எஞ்சியுள்ள 792 மாணவர் இல்லங்கள் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. 1996-97 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கான இல்லம் ஒன்றைக் கட்டுவதற்கான ஒட்டுமொத்தச் செலவு ரூ.16.24 இலட்சமாக இருந்தது. ஆனால், மாணவியர் இல்லம் ஒன்றைக் கட்டுவதற்கான மொத்தச் செலவு ரூ.18.09 இலட்சம் ஆகும். மாணவர் இல்லங்களில் தங்கி இருப்பவர்களுக்குப் போதிய அளவு அதிக இடவசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும், அவர்கள் படிப்பதற்கான நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் கட்டுமானப் பணிகள் தொடர்பாக அதிக நிதி ஒதுக்கீடு செய்வதின் மூலம் 1997-98 ஆம் ஆண்டிலிருந்து கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படும். அனைத்து மாணவர் இல்லங்களுக்காகவும் பெரிய அளவிலான வடிவமைப்பைத் தயாரிக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.407 இலட்சம் செலவில் 13 மாணவர் இல்லக் கட்டுமானப் பணிகளை நிறைவேற்ற ஆணையிடப்பட்டது.

மாணவர் இல்லக் கட்டடங்களைப் பராமரிப்பது தொடர்பாக ரூ.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது, 40 மாணவர் இல்லங்களின் கட்டடங்களைக் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது. இந்த மாணர் இல்லங்களுக்கு, மாவு அரவை இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (கல்லூரி மாணவர் இல்லங்களுக்கு மட்டும்), நூலகங்கள் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. மாணவர் இல்லங்களில் தங்கிப் படிப்பவர்களின் பொது அறிவை மேம்படுத்தும் வகையில், இந்த மாணவர் இல்லங்களுக்கு ஆங்கில நாளிதழ் ஒன்றும், தமிழ் நாளிதழ்கள் இரண்டும் வழங்கப்படுகின்றன. இந்த மாணவர் இல்லங்களின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு மாணவர் இல்லத்திற்கும் மாணவர் இல்ல நிருவாகக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் புதிதாக தொடங்கப்படவுள்ள மாணவர் இல்லங்கள், கட்டப்பட வேண்டிய மாணவர் இல்லக் கட்டடங்கள், செய்து கொடுக்கப்பட வேண்டிய ஏனைய வசதிகள் ஆகியவை பற்றிய விவரங்கள், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில் உள்ள ‘புதிய திட்டப் பணிகள்’ என்ற தலைப்பின் கீழ் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன.



**உணவுக் கட்டணங்கள்:**

27. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை நடத்தும் மாணவர்இல்லங்களில் தங்கிப் பயிலுபவர்களுக்கு அரசு அனுமதிக்கும் வீதங்களில் உணவுக் கட்டணங்கள் அனுமதிக்கப்படுகின்றன. 1997ஆம் ஆண்டு வரையில் சென்னை மாநகரைப் பொறுத்த வரையில், கல்லூரி மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலுபவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவுக் கட்டணம் மாதமொன்றுக்கு ரூ.198 ஆகும். அது, மாவட்டங்களில் மாணவர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.193 ஆகும். கல்லூரி மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலுபவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவுக் கட்டணங்கள், 1-6-97 ஆம் நாள் முதற்கொண்டு மாதமொன்றுக்கு ரூ.250 ஆகவும், மீண்டும் 1-10-97 ஆம் நாள் முதற்கொண்டு மாதமொன்றுக்கு ரூ.300 ஆகவும் உயர்த்தப்பட்டது. இன்றுள்ள நிலவரப்படி அனுமதிக்கப்பட்ட உணவுக் கட்டணங்கள் வருமாறு:—

| தொடர் எண். | மாணவரில்லம். | மாணவர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு கட்டண வீதம் ரூபாய் |
|---|---|---|
| 1. | கல்லூரி | 300 |
| 2. | தொழிற்பயிற்சி நிலையம் | 300 |
| 3. | உயர்நிலைப்பள்ளி | 180 |

1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை உரையில் **மாண்புமிகு முதல் அமைச்சர்** அவர்கள் கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியரின் உணவுக் கட்டணத்தை மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300-லிருந்து ரூ.400 ஆக உயர்த்தி உள்ளார்கள். 1998-99 ஆம் ஆண்டில் இந்த மாணவர் இல்லங்களை நடத்துவதற்கு ரூ.2,823.14 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

28. மலைப் பகுதிகளில் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மாணவர் இல்லங்களில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு ஒவ்வோராண்டும் குளிர் காலத்தில் (நவம்பர் முதல் பிப்ரவரி வரை) வெந்நீர் வசதி அளிக்கப்படுகிறது.

## 2. பொருளாதார மேம்பாடு

### கருவிகளை இலவசமாக வழங்குதல்:

29. சமுதாயத்தில் மிகவும் வறிய நிலையிலுள்ள பிரிவினருக்கு, குறிப்பாக, ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கும் குறைவாக உள்ள சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், போயர்கள் ஆகியோரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையிலும், சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதற்கும் கீழ்க்கண்ட வீதத்தில் அவர்களுக்கு பணிக் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

| கருவிகளின் பெயர். | ஆண்டுதோறும் வழங்கப்படும் எண்ணிக்கை. |
|---|---|
| துணி தேய்ப்புப் பெட்டிகள் | 4000 |
| முடிதிருத்துவோர் கைப்பெட்டிகள் | 500 |
| கல்லுடைக்கும் கருவிகள் | 500 |

இருப்பினும், 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் பயனீட்டாளர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட துணி தேய்ப்புப் பெட்டிகளின் எண்ணிக்கை 4,000-லிருந்து 6,000-ஆகவும், முடிதிருத்துவோர் கைப்பெட்டிகள், கல்லுடைக்கும் கருவிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை 500-லிருந்து 1,000-ஆகவும் அதிகரிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் ரூ.59.46 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### முடிதிருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஏற்படுத்துதல்:

30. முடிதிருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு அரசு பின்வருமாறு நிதியுதவி அளிக்கிறது:—



| திட்டத்தின் பெயர். | பயனடைவோரின் எண்ணிக்கை. | அரசு உதவித் தொகை. | வங்கிக்கடன் உதவி. | ஒவ்வொரு பயனீட்டாளருக்கான மொத்தச் செலவு. |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| முடிதிருத்தகம் | 200 | 1.500 | 3.500 | 5.000 |
| சலவை நிலையம் | 150 | 1.500 | 3.500 | 5.000 |
| நடமாடும் சலவை நிலையம் | 50 | 600 | 1.400 | 2.000 |

பயனடைவோர் 400 பேருக்கு நிதியுதவி அளிப்பதற்காக 1998-99 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. பயிற்சியும் வேலைவாய்ப்பும்

### அனைத்திந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்:

31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த திறமையான மாணவர்களும் மாணவியர்களும் அனைத்திந்திய சிவில் பணிகள் தேர்வுகளில் வெற்றிபெற இயலும் வகையில், அவர்களுக்குப் பயிற்சி அளிக்க 1971 ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் சிறப்புப்பயிற்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் ஐம்பது பேருக்கு இந்நிறுவனத்தின் மூலம் சிறப்புப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இலவச இடவசதி, தனிப்பயிற்சி, நூல் நிலைய வசதி ஆகியவற்றுடன் மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ.500 வீதம் உணவுக் கட்டணமும் அளிக்கப்படுகிறது. வருமான வரம்பு நிபந்தனை இன்றி பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த அனைத்து மாணவ மாணவியருக்கு இவ்வசதி அளிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.38.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வட்டாரப் பயிற்சி மையம் ஒன்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில், 75 மாணவ மாணவியருக்கு பயிற்சி அளிக்கும் வகையில் இயங்கி வருகிறது.

[1998 மே 6

**தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல்**

*32. கிராமப் பகுதிகளிலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர்மரபினர் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களை ஊக்கப்படுத்த, இத்துறை, தொழில் கல்வி நுழைவுத் தேர்வை எழுதுகின்ற இப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 72 மையங்கள் மூலம் ஒவ்வோராண்டும் சிறப்புப் பயிற்சி அளிக்கிறது. மாவட்டங்களிலுள்ள அரசு மற்றும் அரசு மானியம் பெறும் மேனிலைப் பள்ளிகளில் 15 நாட்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேருவதற்கு வருமான வரம்பு ஏதுமில்லை. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.94 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.*

**சட்டப்பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்**

*33. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர், வகுப்பைச் சேர்ந்த 20 சட்டப்பட்டதாரிகளுக்கு ஒவ்வோராண்டும் மூத்த வழக்குரைஞர்களின்கீழ் மூன்றாண்டுகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்றுக்கு அரசு அனுமதியளித்துள்ளது. இப்பயிற்சிக்கால அளவில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ.750 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சேர ஆண்டு வருமான வரம்பு ரூ.25,000 ஆகும். பயிற்சி அளிக்கும் மூத்த வழக்குரைஞருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.5001 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.4.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

**வாழ்க்கைத் தொழில் பயிற்சி மையங்கள்**

*34. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முதுகுளத்தூரில் ஒன்றும், மதுரை மாவட்டத்திலுள்ள செக்காணூரணியில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வீரகேரளம்புதூரில் ஒன்றும் ஆக மூன்று தொழில் பயிற்சி நிறுவனங்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் துறையின் நிதியுதவியுடன் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் மூலம் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வோராண்டும் இந்தப் பணிமனைகளில் 208 மனுதாரர்களுக்கு வெவ்வேறு தொழில்களில்கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு பயிற்சி அளிக்கப்படுகிறது:*



1998 மே 6]

| தொடர் எண். | தொழில் பெயர் | பயனடைவோரின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | பொருத்துபவர் | 96 பேர் |
| 2. | பற்றவைப்பவர் | 48 பேர் |
| 3. | உலோகத் தகட்டுப் பணியாளர் | 64 பேர் |

*1998-99 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.39.21 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.*

*35. 220 பெண்கள் பயனடையும் வகையில், திருநெல்வேலி, மதுரை, கன்னியாகுமரி, இராமநாதபுரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் ஏழு தையற் பயிற்சி மையங்களையும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குழித்துறையில் நாரிழைத் தயாரிப்புப் பயிற்சி மையம் ஒன்றையும் அரசு நடத்தி வருகிறது. 1998-99 ஆம் ஆண்டிற்காக இத்திட்டத்தின் கீழ் ரூ.12.55 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.*

**வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம்**

*36. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ மாணவியர், வேலைவாய்ப்பு பெறுவதில் மற்றவர்களுடன் போட்டியிடத் தகுதி பெற, இந்த வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் வகை செய்கிறது. இந்தப் பயிற்சித் திட்டங்கள் மாணவ மாணவியர் தகுதியினை உயர்த்துவதுடன் வேலைவாய்ப்பினைப் பெறவும் உதவுகின்றன. பெரும்பாலும் வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம் அரசு நிறுவனங்களாலும், அத்தகைய வசதி இல்லாத இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களாலும், இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் கட்டணத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது. கணினி பாடத்திட்டங்கள், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் தொலைபேசி இயக்கம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. கணினி பாடத்திட்டம், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, தொலைபேசி இயக்கம் ஆகிய, பயிற்சிகளில் பங்கு பெறுவோர்க்கு உணவுக் கட்டணம் அளிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.128.74 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்,*

சீர்மரபினர் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கு அளிக்கக் கருதியுள்ள புதிய பயிற்சித் திட்டங்கள் குறித்த பட்டியல், கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில், 'புதிய திட்டங்கள்' என்னும் தலைப்பின் கீழ் விரிவாக அளிக்கப்பட்டுள்ளது.

## 4. நிலம் கையகப்படுத்தல்

37. இலவச வீட்டுமனைகளை ஒதுக்கீடு செய்வதன் மூலம் இந்த வகுப்புகளைச் சேர்ந்த குடும்பங்கள் தங்களுக்குத் தாங்களே உறைவிடத்தை அமைத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு உதவ வேண்டியது அவசியமாகும். 1996-97 ஆம் ஆண்டு வரையில், ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு கீழ் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சீர்மரபினர் ஆகியவற்றைச் சேர்ந்த குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் 3 சென்ட் பரப்பளவு உள்ள நிலம் வழங்கப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை உரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு இத்திட்டத்தின்கீழ் அதிக எண்ணிக்கையிலான மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியவற்றைச் சேர்ந்த குடும்பங்கள் பயன் பெற, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையை 1997-98-இல் ரூ. 2.00 கோடியில் இருந்து ரூ. 10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டு இத்திட்டம் கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் பிற்படுத்தப்பட்டோருக்கும் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக, 5 கோடி ரூபாயும், முன்னேறிய வகுப்பினருக்காக 3 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டது. 1997-98-ல் மொத்தத்தில் 18,920 பட்டாக்கள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.18.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. ஏனைய திட்டங்கள்

38. சமூக நீதிக்காகப் போராடியவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு, அரசு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை வழங்கி வருகின்றது. 24-12-1997 ஆம் நாளன்று நடைபெற்ற அரசு விழா ஒன்றில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 1997-98 ஆம் ஆண்டுக்கான, வெள்ளிக் கேடயம், 3 சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம், 20,000



ரூபாய் ரொக்கம் அடங்கிய இந்த விருதினை திரு. தவமணி ராஜன் அவர்களுக்கு வழங்கினார்கள். 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.47,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறுபான்மையினரின் நலன்

39. சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு மாநிலத்தில், மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் இயங்கி வருகிறது. சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ஆராயவும், உரிய குறைதீர் நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கவும் இந்த ஆணையம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைப் பார்வையிடுகிறது.

40. தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகம் ஆகியவற்றின் வழிமுகமையாக பணியாற்றும் பொருட்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பெயர் 'தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்' என்று மாற்றப்பட்டுள்ளது.

41. 1997ஆம் ஆண்டு வரை 'வக்பு' மற்றும் 'ஹஜ் புனித யாத்திரைக் குழு' ஆகியவை சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தலைமைச் செயலகத்திலுள்ள வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறை கவனித்து வந்தது. சிறுபான்மையினர் நலனை, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககம் கவனித்து வருகிறது. 'வக்பு' மற்றும் 'ஹஜ் புனித யாத்திரைக் குழு' ஆகியவற்றின் மீது தனிக்கவனம் செலுத்துவதற்காக இவை குறித்த விஷயங்கள் 18-8-1997 ஆம் நாளிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளன. பிரதமரின் 15 அம்சத் திட்டத்தின்கீழ், சிறுபான்மையினரின் நலனுக்காக, கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(அ) காவல் துறைப் பணியாளர்கள் நியமனத்தில் சிறுபான்மையினருக்கு தனிச் சலுகை அளித்தல்.

(ஆ) மேம்பாட்டுத் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு நியாயமான வாய்ப்புகள் அளித்தல்.

(இ) சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் அவர்களுடைய தாய் மொழியில் கல்வி பயில வசதிகள் செய்து கொடுத்தல்.

(ஈ) மொழிவாரிச் சிறுபான்மையினருக்குத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் பாடநூல்கள் வழங்குதல்.

(உ) சென்னை, கிருஷ்ணகிரி, தேசூர் ஆகிய இடங்களில் முறையே உருது, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நடத்துதல்.

**வக்பு வாரியம்**

42. 1995ஆம் ஆண்டு வக்பு சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 43/1995) தமிழ்நாடு 1997ஆம் ஆண்டு வக்பு வாரிய (உறுப்பினர்கள் தேர்தலை நடத்துதல்) விதிகள் இயற்றப்பட்டுள்ளன. 1995 ஆம் ஆண்டு மத்தியச் சட்டத்தின் (43/1995) விதித்துறைகள் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றின் கீழ், தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினர்கள் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு வாரியத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்கிணங்க, புதிய தமிழ்நாடு வக்பு வாரியம் 10-6-1997 ஆம் நாளன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் அதன் தலைவரை 25-6-1997 ஆம் நாளன்று தேர்ந்தெடுத்துள்ளது.

43. வக்பு அல்லது வக்பு சொத்து தொடர்பான எந்தவொரு தகராறையும் முடிவு செய்வதற்கு, 29 மாவட்டங்களில் அதிகார வரம்பைப் பெற்றுள்ள 23 வக்பு நடுவர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வக்பு சொத்துக்களைப் பொறுத்தவரையில் நில அளவை-நிலவரி ஏற்பாட்டு ஆணையாளர்-இயக்குநர், தேவையான துணைப் பணியாளர்களுடன், நில அளவை ஆணையாளராக அறிவிக்கப்பட்டு நியமிக்கப்பட்டு உள்ளார். வக்பு சொத்துக்களின் நில அளவைப் பணி, சுமார் ஆறு மாதங்களுக்குள் முடிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டு வரை நிருவாக மானியமாக 30 இலட்சம் ரூபாயை, தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு, அரசு வழங்கியது. இந்த நிருவாக மானியம், 1997-98 ஆம் ஆண்டிலிருந்து 30 இலட்சம் ரூபாயிலிருந்து 45 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ.30.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பழுதுபார்ப்பு-சீரமைப்பு மானியம்**

44. மசூதியை புதுப்பித்தல், சுற்றுச்சுவர் கட்டுதல், அல்லது இஸ்லாமியர் இடுகாட்டிற்கு முட்கம்பி வேலி அமைத்தல் ஆகிய





வகையில் ஒவ்வோராண்டும், வக்பு வாரியத்திற்கு, அரசு மானியம் வழங்கி வருகிறது.

**உலமா ஓய்வூதியம்**

45. முவாஜின், பேஷ் இமாம் மற்றும் அராபிய மொழி ஆசிரியராகப் பணியாற்றி பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும், பதிவுபெற்ற வக்புகளில் 20 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் 60 வயது அடைந்தவர்களுக்கும் எவ்வித நிதி ஆதரவும் இன்றி வாழ்பவர்களுக்கும் மாதமொன்றுக்கு ஓய்வூதியமாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் மூலம் 2,000 உலமாக்கள் பயனடைந்துள்ளனர். 1998-99 ஆம் ஆண்டில் இந்தப் பயன் பெறுவோர் பட்டியலில் புதிதாக 200 உலமாக்கள் சேர்க்கப்படுவர். இது தொடர்பாக, ஆண்டொன்றுக்கு கூடுதலாக 12 இலட்சம் ரூபாய் செலவாகும்.

சென்னையிலுள்ள வக்பு வாரிய அலுவலகம், மதுரையிலுள்ள வக்பு வாரியக் கல்லூரி ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக, உருவாக்கப்பட்ட புதிய திட்டங்கள் குறித்த விவரங்கள், கொள்கை விளக்கக் குறிப்பின் இறுதியில் 1998-99 ஆம் ஆண்டுக்கான 'புதிய திட்டங்கள்' என்னும் தலைப்பின் கீழ் அளிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு மாநில ஹஜ் புனித யாத்திரைக் குழு**

46. ஹஜ் குழு, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரைத் தலைவராகவும், 15 பேர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு 18-3-1997 ஆம் நாளன்று அமைக்கப்பட்டுள்ளது. 7 பேர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளவும் அரசு இசைவு அளித்துள்ளது. இக்குழுவின் பதவிக்காலம் 3 ஆண்டுகள் ஆகும். நிருவாகச் செலவுகளைச் செய்வதற்காக, ஒவ்வோராண்டும், தமிழ்நாடு மாநில ஹஜ் புனித யாத்திரைக் குழுவிற்கு 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

47. தமிழ்நாடு ஹஜ் குழுவின் முக்கியமான செயல்பாடுகள் யாதெனின் ஹஜ் புனிதப் பயணத்தின் போது, ஹஜ் பயணிகளுக்குத் தேவையான உதவிகள் செய்வதன் மூலம் ஹஜ் புனிதப் பயணிகளின் நலன்களைக் கவனித்தல், வெளியூர்களிலிருந்து வரும் பயணிகளுக்கு சென்னையில் தங்குவதற்கான இடவசதிகள் செய்து கொடுத்தல், தங்கியிருக்கும் இடத்திலிருந்து சென்னை விமான நிலையத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்தல், சென்னையிலிருந்து

[1998 மே 6

விமானத்தில் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுத்தல் ஆகியனவாகும்.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு நிருவாக மானிய வகையில், 1998-99 ஆம் ஆண்டில் ரூ.1.95 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**முஸ்லிம் மகளிருக்கு உதவும் சங்கம்**

48. முஸ்லிம் மகளிருக்கு உதவும் சங்கம், சென்னையில் 1-10-1892 அன்று தொடங்கப்பட்டது. இச்சங்கம், சங்கங்களைப் பதிவு செய்வதற்கான சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் முக்கியமான நோக்கங்கள் யாதெனில், ஆதரவற்ற முஸ்லிம் விதவைகளுக்கு மாதாந்திரப்படி அளித்து உதவுதல், தகுதியுடைய முஸ்லிம் மகளிர் மற்றும் பெண்களுக்கு உதவிகள் செய்தல், ஆதரவற்ற முஸ்லிம் மகளிருக்கு, கதர், கைவினைப் பொருள்கள் மற்றும் சிறு தொழில்கள் கைத்திறத் தொழில்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்கான இல்லம் ஒன்றை அமைத்தல், தொண்டர்களிடமிருந்து பெறும் நன்கொடைகளை ஏற்றுக் கொள்வதன் மூலம் இச்சங்கம் அதன் நிதியைத் திரட்டுகிறது. இச்சங்கம், திரட்டியுள்ள நிதியில், பாதித் தொகை அரசு மானியமாக அளிக்கப்பட்டதாகும். இச்சங்கத்திற்கு மானியமாக 1997-98 ஆம் ஆண்டில் அரசு ரூ.45,463/- வழங்கியுள்ளது.

இந்நோக்கத்திற்காகவே 1998-99 ஆம் ஆண்டில் ரூ.46,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம்**

49. மண்டல் ஆணைய வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்திரவையொட்டி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைப் பரிசீலித்து, பரிந்துரைப்பதற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் என்னும் நிரந்தர ஆணையத்தை அரசு 15-3-1993 அன்று அமைத்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை திருத்தும் பணியும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தங்கள் வகுப்புகளைச் சேர்க்குமாறு பல்வேறு



1998 மே 6]

வகுப்பினரிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் குறித்தும், அவை மீதான மறுப்புகள் குறித்தும் ஆணையம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது. 31-12-1997-ன் நிலவரப்படி 123 வகுப்புகளிடமிருந்து 3,072 முறையீடுகள் ஆணையத்திற்கு வரப்பெற்றுள்ளன. 119 வகுப்புகள் தொடர்பாக வரப்பெற்ற 3,068 முறையீடுகளைப் பொறுத்தமட்டில் விசாரணைகள் முடிக்கப்பட்டுள்ளன.

50. இவ்வாணையத்தின் முந்தைய தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 14-3-1997 அன்று நிறைவு பெற்றதால், இந்த ஆணையம் ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு. கே.எம். நடராசன் அவர்கள் தலைமையில் எட்டு உறுப்பினர்களுடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

51. இந்நிறுவனம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசால் 16-11-1981ஆம் நாளன்று நிறுவப்பட்டு 22-5-1982-லிருந்து செயல்படத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

(அ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அச்சங்கங்களுக்கு தொடக்க நிதியுதவி வழங்குதல்.

(ஆ) தமிழ்நாடு அரசு, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், புதுடில்லி, தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகம் ஆகியவற்றிலிருந்து நிதி உதவி பெற்று மேற்சொன்ன வகுப்பினர்க்கு பொருளாதார மேம்பாட்டிற்கு அவசியம் என்று கருதக்கூடிய வழிகளில் எல்லாம், பொதுவான நடவடிக்கைகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேற்கொள்ளுதல்.

52. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகம் ஆகியவற்றின் வழி முகமையாக 1993-94 ஆம் ஆண்டிலிருந்து நிதி உதவியைத் தவணைக் கடனாக வழங்கி வருகிறது.

*53.* தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தற்போது 125 நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியின் 29 கிளைகள், கைத்தறி மேம்பாட்டுக் கழகத்தின் 10 கிளைகள் ஆகியவற்றின் மூலமும், நகர்ப்புற வங்கிகள் இல்லாத பகுதிகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமும் செயல்படுத்தி வருகிறது.

*54.* ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ், ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு, கடன் விண்ணப்பங்களைத் தீர்வு செய்து அவற்றை சம்பந்தப்பட்ட நிதியுதவி அளிக்கும் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் இதுவரையில், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ.1784.36 இலட்சமும், புதுடில்லியிலுள்ள தேசிய சிறுபான்மையோர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ.464.00 இலட்சமும் நிதியுதவி பெற்றுள்ளது. இதுவரையில், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் ஆகியோருக்கு தவணைக் கடன் வகையில் நிதியுதவியாக ரூ.1219.89 இலட்சமும், சிறுபான்மையினர்களைப் பொறுத்தவரையில், இத்தகைய தவணைக் கடன் ரூ.105.42 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

*55.* இதுவரையில், இக்கழகம், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனி நபர் கடன்களைப் பொறுத்தவரை, 30,535 நபர்கள் பயன் பெறும் வகையில், ரூ.1325.31 இலட்சம் வழங்கியுள்ளது.

**56. 1998-99 ஆம் ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள 'புதிய திட்டங்களின்' விவரங்கள்:**

1. பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த பள்ளி மாணவ, மாணவியருக்காக ரூ.75.00 இலட்சம் செலவில் 25 பள்ளி மாணவ, மாணவியர் இல்லங்கள் தொடங்குதல்.
2. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினர்களைச் சேர்ந்த பள்ளி மாணவ, மாணவியருக்காக ரூ.496.10 இலட்சம் செலவில் 15 பள்ளி மாணவ, மாணவியர் இல்லங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்.



3. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினர்களைச் சேர்ந்த மாணவ மாணவியர்களின் 200 மாணவர் இல்லங்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் பாத்திரங்கள் வழங்குதல்.
4. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர் இல்லங்களுக்கு ரூ.14 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புகளுக்கு வகை செய்தல்.
5. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினர்களைச் சேர்ந்த மாணவர் இல்லங்களையும், கள்ளர் சீரமைப்பு பள்ளிக் கட்டடங்களையும் ரூ.36 இலட்சம் செலவில் புதுப்பித்தல்.
6. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் அலுவலகத்தில் ரூ.1.04 இலட்சம் செலவில் நகலிக்கு (Xerox Machine) வகை செய்தல்.
7. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் 5 மாணவர் இல்லங்களுக்கு ரூ.2.50 இலட்சம் செலவில் குடிநீர் வசதிகளுக்கு வகை செய்தல்.
8. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த 150 விண்ணப்பதாரர்களுக்கு ரூ.7.63 இலட்சம் செலவில் தானியங்கி பொறியியல், குளிர் சாதன எந்திரவியல், குளிர் சாதனப் பெட்டி எந்திரவியல் ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்.
9. ரூ.50 இலட்சம் செலவில், சென்னையில் சிறப்புப் பயிற்சி நிலையத்திற்கென கட்டடம் கட்டுதல்.
10. சென்னை, சிறப்புப் பயிற்சி நிலையத்தில், ரூ.0.87 இலட்சம் செலவில் நூலகர் பதவி ஒன்றை உருவாக்குதல்.
11. சென்னை, சிறப்புப் பயிற்சி நிலையத்திற்கு ரூ.3.70 இலட்சம் செலவில் மேசை நாற்காலிகளுக்கு வகை செய்தல்.
12. சென்னை, சிறப்புப் பயிற்சி நிலையத்தில் ரூ.1.00 இலட்சம் செலவில், பிரிண்டருடன் கூடிய கணினி ஒன்றுக்கு வகை செய்தல்.

13. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த 25 பெண்களுக்கு ரூ.5.04 இலட்சம் செலவில், பிளாஸ்டிக் செய்முறைப்படுத்தும் எந்திரத்தை இயக்குவதற்கான தொழில் நுட்பத்தில் பயிற்சி அளித்தல்.

14. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த 130 மகளிருக்கு ரூ.9.23 இலட்சம் செலவில், காலணிகள் தயாரிப்பு தலைமை தொழில் நுட்பப் பணியாளராகத் தொழில் நுட்பப் பயிற்சி அளித்தல்.

15. 27 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.13.50 இலட்சம் செலவில், குடிநீர் வசதிகளுக்கு வகை செய்தல்.

16. ரூ.62.89 இலட்சம் செலவில், 10 கள்ளர் தொடக்கச் சீரமைப்புப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், நடுநிலைப்பள்ளி ஒன்றை உயர்நிலைப்பள்ளியாகவும், உயர்நிலைப்பள்ளி ஒன்றை மேனிலைப்பள்ளியாகவும் நிலை உயர்த்துதல்.

17. மாணவியருக்கான 17 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ரூ.14.11 இலட்சம் செலவில் கழிவறைகள் கட்டுதல்.

18. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில், ரூ.30 இலட்சம் செலவில், கூடுதலாக 10 வகுப்பறைகள் கட்டுதல்.

19. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த மகளிர் விண்ணப்பதாரர்களுக்கு, ரூ.3.16 இலட்சம் செலவில், செவிலியர் உதவியாளராக பயிற்சியளித்தல்.

20. கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப்பள்ளிகள் 11இல் ரூ.16.50 இலட்சம் செலவில், ஆய்வுக் கூடத்திற்கான கட்டடம் கட்டுதல்.

21. கள்ளர் சீரமைப்பு மேனிலைப்பள்ளிகள் 3இல் ரூ.4.50 இலட்சம் செலவில் ஆய்வுக் கூடத்திற்கான கட்டடம் கட்டுதல்.

22. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு, ரூ.1.90 இலட்சம் செலவில் புத்தறிவுப் பயிற்சியளிக்க வகை செய்தல்.





23. புதிதாக ஏற்படுத்தப்பட்ட நான்கு மாவட்டங்களுக்கு ரூ. 11.24 இலட்சம் செலவில் ஈப்புகள் வழங்குதல்.

24. தமிழ்நாடு ஹஜ் குழுவின் அலுவலகத்தில், ரூ.1.13 இலட்சம் செலவில், தொலையச்சு சாதனத்திற்கான தனிப்பட்ட தொலைபேசி ஒன்றுக்கு, நகல் எடுக்கும் எந்திரத்திற்கும் வகை செய்தல்.

25. மதுரை, வக்பு வாரியக் கல்லூரிக் கட்டடத்தை ரூ.5.95 இலட்சம் செலவில் புதுப்பித்தல்.

26. வக்பு வாரியத்தின் அலுவலகத்திற்கு ரூ.1.00 இலட்சம் செலவில், கணினிக்கு வகை செய்தல்.

27. தற்போதுள்ள 2000 உலமாக்களோடு மேலும் 200 புதிய உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்க, ரூ.12 இலட்சத்திற்கு அனுமதியளித்தல்.

**ஈ. முடிவுரை**

57. இந்த அரசு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதையும், அவர்களின் நலன்களைக் கட்டிக் காப்பதையும் முதன்மையான கடமையாகக் கருதுகிறது. இந்தப் பிரிவு மக்களின் முன்னேற்றத்தையும், உயர்வையும் கருத்திற்கொண்டு அரசு வேலை வாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களில் மாணவர்களைச் சேர்ப்பதிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை இவ்வரசு திறம்படப் பின்பற்றுவதுடன், இந்தப் பிரிவினரின் நலனுக்கென எண்ணற்ற நலத்திட்டங்களையும், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையும் செயல்படுத்தி வருவதில் இம்மாநிலம் மற்ற அனைத்து மாநிலங்களைவிட முன்னணியில் உள்ளது.

# இணைப்பு

## 1998-99 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| நிருவாகம் | | | மொத்த ஒதுக்கீடு | | |
|---|---|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | | 45372 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 349846 | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | | 1254 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 478851 | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | | 2403 | வக்பு வாரியம் | 4896 | |
| மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | | 6689 | ஹஜ் குழு | 408 | |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை. | | | முஸ்லிம் பெண்கள் சங்கம். | 46 | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 1910 | | | | |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 2770 | | | | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 9 | | | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 11 | 4700 | | | |
| மொத்தம் | .. | 60418 | | 834047 | 894465 |



(ரூபாய் ஆயிரத்தில்)

| தொடர் எண் | திட்டங்கள் | திட்டப்பணிகள் | | | திட்டத்தில் சேரா பணிகள் | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பிவ. | மிபிவ. | சீம. | பிவ. | மிபிவ | சீம. | பிவ. | மிபி.வ, சீம. |
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. | 9. | 10. |
| 1. | படிப்புதவித்தொகை | 5467 | 6242 | 1118 | 50728 | 22215 | 7135 | 56195 | 36710 |
| 2. | இலவசக்கல்வி | 27340 | 43787 | .. | 4775 | 2590 | .. | 32115 | 46377 |
| 3. | பள்ளிகள் | .. | .. | 9031 | .. | .. | 135455 | .. | 144486 |
| 4. | புத்தகங்களும் எழுது பலகைகளும் | .. | .. | .. | .. | .. | 3583 | .. | 3583 |
| 5. | உடைகள் | 1128 | 1250 | 6600 | 1615 | 705 | 1445 | 2743 | 10000 |
| 6. | உணவு மானியம் | 150 | 200 | .. | 802 | 390 | 7 | 952 | 597 |
| 7. | மாணவர் இல்லங்கள் | 53253 | 25393 | 1701 | 107729 | 50546 | 43692 | 160982 | 121332 |
| 8. | பல்கலைக்கழகத்திற்கு மானியம் | .. | .. | .. | 27 | 13 | .. | 27 | 13 |
| 9. | சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | .. | 15 | .. | .. | .. | .. | 15 |
| 10. | பல்நோக்கு பொறியியல் பட்டறைகள் | .. | .. | .. | .. | .. | 3921 | .. | 3921 |
| 11. | குடிசைத் தொழில்கள் | .. | .. | .. | 1074 | .. | 181 | 1074 | 181 |
| 12. | இலவசக் கருவிகள் | .. | 500 | .. | .. | 5946 | .. | .. | 6446 |

(ரூபாய் ஆயிரத்தில்)

| தொடர் எண் | திட்டங்கள் | திட்டப்பணிகள் | | | திட்டத்தில் சேரா பணிக | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பிவ. | மிபிவ. | சீம. | பிவ. | மிபிவ. | சீம. | பிவ. | மிபிவ, சீம. |
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. | 9. | 10. |
| 13. | சலவைத் துறை | .. | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 14. | சிறப்புத் தனிப்பயிற்சி நிலையம் | 1082 | .. | .. | 2862 | .. | .. | 3944 | .. |
| 15. | வீட்டு மனை கையகப் படுத்துதல் | 80000 | 100000 | .. | .. | 350 | .. | 80000 | 100350 |
| 16. | சீர்மரபினர்களுக்கு வீடுகள் | .. | .. | 1 | .. | .. | .. | .. | 1 |
| 17. | மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி | .. | .. | .. | 29 | .. | .. | 29 | .. |
| 18. | பட்டயக்கணக்கர் படிப்பு | .. | .. | .. | 3 | 2 | .. | 3 | 2 |
| 19. | பரிசுகள் வழங்குதல் | 1799 | .. | .. | .. | .. | .. | 1799 | .. |
| 20. | வேலைவாய்ப்புத் திட்ட மாணவர் இல்லம் | 1284 | .. | .. | .. | .. | .. | 1284 | .. |
| 21. | பணிசார்ந்த பயிற்சிகள்* | 2190 | 316 | .. | 4764 | 4320 | .. | 6954 | 4636 |
| 22. | சட்டப்பட்டதாரி களுக்குப் பயிற்சி | 460 | .. | .. | .. | .. | .. | 460 | .. |
| 23. | பள்ளி மாணவர் இல்லங்கள் கட்டுதல் (பழுது பார்த்தல்) | .. | 10 | .. | 10 | .. | .. | 10 | 10 |
| 24. | சமூக நீதிக்காக தந்தை பெரியார் விருது | .. | .. | .. | 47 | .. | .. | 47 | .. |
| 25. | கள்ளர் சீரமைப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தனி நினைவுகூர் சிறப்பு பயிற்சி | .. | .. | 190 | .. | .. | .. | .. | 190 |
| 26. | புதிய ஈப்பு மற்றும் நகல் அச்சு | 1228 | .. | .. | .. | .. | .. | 1228 | .. |
| | மொத்தம் .. | 175381 | 177699 | 18656 | 174465 | 87077 | 195419 | 349846 | 478851 |

*(சுருக்கெழுத்து, கனரக வாகன ஓட்டுநர், கணினிப் பயிற்சி, தொலைபேசி, தொலையச்சு, உதவி செவிலியர் பயிற்சி, குளிர் சாதனப் பெட்டி, சீர்வளி சாதனம், மோட்டார் வண்டி, பழுது பார்ப்புப் பணி, பிளாஸ்டிக் தொழில் நுட்ப செய்முறை எந்திர பணிப் பயிற்சி)

## வக்பு வாரியம் மற்றும் ஹஜ் குழு

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | திட்டங்கள். | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேரா பணிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | வக்பு வாரிய நிருவாக மானியம் | .. | 3000 | 3000 |
| 2. | வக்பு சொத்துக்கள் புதுப்பித்தல் | .. | 1 | 1 |
| 3. | உலமா ஓய்வூதியம் | .. | 1200 | 1200 |
| 4. | வக்பு கல்லூரி புதுப்பித்தல் | 595 | .. | 595 |
| 5. | வக்பு வாரியத்திற்கு கணினி | 100 | .. | 100 |
| 6. | ஹஜ் குழு (நிருவாகம்) | .. | 195 | 195 |
| 7. | ஹஜ் குழுவிற்கு நகலி (Xerox Machine) | 113 | .. | 113 |
| 8. | ஹஜ் குழு தொண்டர்கள் | - | 100 | 100 |
| 9. | முஸ்லிம் பெண்கள் சங்கம் | .. | 46 | 46 |
| | மொத்தம் | 808 | 4542 | 5350 |



| மொத்தம் 1997-98 | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை | 269011 | | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 1018 | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 1541 | 271570 | |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை | 360484 | | |
| சத்துணவு | 6557 | 367041 | 638611 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | | | 4621 |
| மொத்தம் | | | 643232 |

| மொத்தம் 1998-99 | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை | 395218 | | |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | 1254 | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 2403 | 398875 | |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை | 485540 | 485540 | |
| வக்பு வாரியம் | 4896 | | |
| ஹஜ் குழு | 408 | | |
| முஸ்லிம் பெண்கள் சங்கம் | 46 | 5350 | 889765 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | | | 4700 |
| மொத்தம் | | | 894465 |

2/9 095